எதிர்வு

378.6
எதிர்
SLIPR

சாதிர்கு

10வது ஆண்டு
சிறப்பு மலர்

1997 - 2007

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு,
இலங்கை.



எதிர்வு

முழுமைக்கும் **எதிர்வு** சொல்வோம் – சுய
முயற்சியில் **கவர்வு** கொண்டு – வாழ்வு
செழுமைக்கும் **நிகர்வு** கொள்வோம்
செந்தமிழால் **உயர்வு** கொள்வோம்
பழமைக்கு **உதிர்வு** சொல்லா – நற்
பண்புடன் **நிமிர்வு** கொண்டு
இளமைக்குப் **பகிர்வு** செய்து – கல்வி
இனித்திட **அதிர்வு** செய்வோம்.

நிர்வாக உத்தியோகத்தர்கள்



திரு. S. சதீஸ்குமார் B.Sc.
முகாமைத்துவப் பணிப்பாளர், விரிவுரையாளர், கணிதம்
ஆசிரியர் மட்/கித்துள் ஸ்ரீகிருஷ்ணா வித்தியாலயம்



திரு. N. யோகேந்திரராஜா B.A., M.A.
இணைப்பாளர், கி.வெ.பாட கல்லூரி.
ஆசிரியர், அக்கரைப்பற்று



திரு. L.தேவஅச்சுதன்
நிதி உதவியாளர்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரி

10வது ஆண்டு சிறப்பு மலர்
1997 - 2007

சிறப்பு மலர் வெளியீட்டுக்குழு

தலைவர்:
திரு. P. பத்மநாதன் B.A (அரசறிவியல் சிறப்பு)

செயலாளர்:
திரு. K. விஜயநாயகம்
BA.(Hons.), Dip.in.Edu.

பொருளாளர்:
திரு. S. சதீஸ்குமார் B.Sc

உப தலைவர்:
திரு. M. தயாநிதி
B.A.(Hons), PGDE, M.A.

உப செயலாளர்:
திரு. K. நிதிகரன்
B.A.(Hons)

இதழாசிரியர்:
திரு. S. துளசிநாதன் B.A.(Hons.), Dip.in.Edu.

மலர்க்குழு உறுப்பினர்கள்:

திரு. E. ஜெயராஜ் B.A.(Hons.)
திரு. S. சந்திரகுமார் B.A.(Hons.)
திருமதி. நிரேகா தயாபரன் B.A.(Hons.) Dip. in.Edu.
திரு. T. திவ்யராஜ் B.Econ (Hons.), PGDE
திரு. E. சர்வேஸ்வரன் B.A.
திரு. V. நவீரதன் B.Econ. (Hons.)
திரு. M. யோகேந்திர ராஜா M.A.
திரு. M. வசந்தராஜ் B.A.
திரு. M. வரதராஜன் B.A.(Hons.)
ஜனாப். C. தௌபீக் B.A.
திரு. L. தேவஅதிரன்

தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

கல்லூரி கீதம்

கீழ்த்திசை ஈழமண்ணதில் துலங்கிடும்
ஏழ்கடலென அறிவொளியினைத் தந்திடும் - எம்
மேல்நிலைக் கல்லூரி மேன்மைகள் பெற்றிட
வாழ்த்துகின்றோம் என்றும் வாழிய வாழிய

பல்கலைக் கழகத்தில் பட்டங்கள் பெறுவதும்
பாரினிலே உயர்ந்த பண்புடன் வளர்வதும்
கல்வியுடன் அறிவும் அனுபவ ஆற்றலும்
உள்ளவராய் உயர வாழிய வாழிய

கடமையிலே தவறா கருத்துடன் பயில்வதும்
மடமையினைப் போக்கி நல்மனிதராய் வாழ்வதும்
அடிமை விலங்கதனை அறுத்தே கல்வியில்
ஆல்போல் பரந்திட வாழிய வாழிய

வாழிய வாழிய கிழக்கிலங்கை வெளி
நிலைப் படிப்புகள் கல்லூரி வாழிய
வையம் போற்ற வளமுடன் வளர்ந்தோங்கி
கல்வி மணம் பரப்ப கல்லூரி வாழ்கவே



இராமகிருஷ்ணமிஷன் (இலங்கைக்கிளை)

மட்டக்களப்பு

சுவாமி அஜராத்மானந்தாஜீ

அவர்களின்

ஆசிச் செய்தி

"மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே கல்வி ஆகும்" என்று சுவாமி விவேகானந்தர் கல்விக்கு கொடுத்த வரைவிலக்கணத்திற்கு அமைவாக கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி தனது பணியினை பத்தாண்டு காலமாக செவ்வனே நிறைவேற்றி வருவதை யாவரும் அறிவர்.

பல்கலைக்கழகக் கல்வியை எதிர்பார்த்து ஆண்டுதோறும் சுமார் இரண்டரை இலட்சம் மாணவர்கள் பரீட்சையை எதிர்கொள்ளுகின்றனர். அவர்களில் சுமார் பதினாறாயிரம் மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதையும் பெரும்பாலானோருக்கு இந்த அரிய வாய்ப்பு இல்லாமல் போவதையும் நாம் அறிவோம்.

இந்நிலையில் பரீட்சையில் சித்தியெய்தியும் பல்கலைக்கழக வாய்ப்பு இல்லாமற்போன மாணவர்களை ஒன்று சேர்த்து பட்டப்படிப்பை மேற்கொள்ளச் செய்யும் உன்னத பணியை வெளிவாரி பட்டப்படிப்புக் கல்லூரிகள் மேற்கொண்டு வருகின்றன. இன்று எமது பகுதிகளில் உயர் பதவிகளில் இருப்பவர்களில் பெரும்பாலானோர் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களே என்றால் மிகையாகாது.

இத்தகைய பணியினை கடந்த பத்தாண்டு காலமாக மேற்கொண்டு அதனை நினைவுகூரும் வகையில் உதயமாகும் இச்சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் அகமகிழ்வு கொள்வதோடு இப்பணியினை முன்னெடுத்துச் செல்லும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியின் பணிகள் மென்மேலும் வளரவும், அதன் வளர்ச்சிக்காக உழைக்கும் அன்பர்கள் அவைருக்கும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் பேரருள் தாராளமாகக் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்திப்போமாக.

இறைபணியில்,

சுவாமி அஜராத்மானந்தா

சுவாமி அஜராத்மானந்தாஜீ



திருகோணமலை - மட்டக்களப்பு

மறைமாநில ஆயர்

அதிவண.கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

அவர்களின்

ஆசிச் செய்தி

கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் கடந்த ஒரு தசாப்த கால மகத்தான சேவையைப் பாராட்டி மகிழ்வுடன் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினும் கற்கை நன்றே"

என்கின்ற தமிழ்ப்புலவர் ஔவையாரின் வார்த்தைக்கொப்ப காலத்தால் அழிவுறாத செல்வமாகிய கல்வியினை அதிலும் விசேடமாக உயர்கல்வியினை கிழக்கு வாழ் மக்களுக்கு வழங்குவதில் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி கடந்த பத்து ஆண்டுகளாக முன்னின்று செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதிலும்
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே சிறந்தது"

என்கின்ற தமிழ்க்கவி பாரதியின் சிந்தனைக்கேற்றவாறு பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பினை ஓரிரு புள்ளிகளால் தவறவிட்ட மாணவர்களை வெளிவாரியாகத் தயாரித்து அவர்களையும் பட்டதாரிகளாக உருவாக்குவதில் இந்நிறுவனம் கடந்த காலங்களில் இமாலயச் சாதனை புரிந்து வருவது அனைவருக்கும் கண்கூடு.

இத்தகைய இவர்களது பாரிய பணியினைப் பாராட்டுகையில் சுவாமி விவேகானந்தர் கூறுவது போல "மாணவர்களைப் பிறருக்காக வாழவும், பணியாற்றவும். சமூகமாற்றத்திற்கான கருவியாக உருவாக்குவதே கல்வியின் தலையாய பணி" என்பதை இவர்களும் உணர்ந்து அத்தகைய பணியினை முன்னெடுத்துச் சென்று வீரியம் கொண்ட சமூகத்தினை நம்மத்தியில் படைத்திட வாழ்த்தி, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

பேரருட்திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

திருகோணமலை - மட்டக்களப்பு
மறைமாநில ஆயர்

மட்டக்களப்பு

பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் பேஷ் இமாம்

மௌலவி ஏ.எம்.எம் முஜீப் (ஷர்கி)

அவர்களின்

ஆசிச் செய்தி

கல்வி என்பது மனித சமுதாயத்தின் உயிர்நாடி: அழியாச் சொத்து அது எமது நாட்டில் சகலருக்கும் இலவசமாக வழங்கப்படுவது, நம் நாட்டு மக்கள் பெற்றுக் கொண்ட வரப்பிரசாதமாகும். ஆரம்பக் கல்வி சகலருக்கும் வாய்ப்பளித்த போதிலும் உயர்கல்வி ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் செயல்படுவதையே நாம் அவதானிக்கின்றோம். இதற்கு நமது நாட்டில் ஏற்பட்டுள்ள உயர்கல்வி வசதி வளப் பற்றாக்குறையே காரணம். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு ஆர்வம் கொண்டிருந்தும் இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத காலகட்டத்திலேதான் கிழக்கிலங்கை வெளிவாரிப்பட்டப்படிப்புகள் கல்லூரியை உருவாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகளையும், கல்விமான்களையும் உருவாக்கி இன்று நாட்டின் பல பாகங்களிலும் அரச உயர் பதவிகளிலும் மற்றும் கல்விக் கூடங்களின் முதல்வர்களாகவும் பலரை உருவாக்கியுள்ளதை நாடு அறியும்.

இக்கல்வி நிறுவனம் மிகவும் சிரமமான ஒரு காலகட்டத்தில் நமது பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது என்பதையும், இதன்மூலம் சாதி, சமூக வேறுபாடும் முரண்பாடுகளும் மலிந்திருந்த காலகட்டத்தில் இக்கல்வி நிறுவனம் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு தனது இலக்கை அடைந்து ஒரு தசாப்த கால கல்வி வரலாற்றைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளது என்பதையும் நினைக்கும்போது மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

புனித இஸ்லாத்தின் சன்மார்க்கப் போதகர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உலகுக்கு அனுப்பப்பட்டு நபித்துவம் வழங்கப்பட்டபோது அன்னாருக்கு இறைவன் முதன்முதலில் "ஓதுவீராக: கற்றுக் கொடுப்பீராக" என்ற கட்டளையையே அருளினான். எனவே எல்லாச் சமயங்களும், சமயத் தலைவர்களும், போதகர்களும் உலகில் உள்ள மனித சமுதாயத்திற்கு கல்வியின் முக்கியத்துவத்தையே முதலில் அறிவறுத்தினார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இவ்வகையில் பத்தாண்டு காலப் பகுதியைப் பூர்த்தி செய்து அதன் நினைவாக சிறப்பு மலர் வெளியிட்டு கொண்டாடும் இத்தனியார் உயர்கல்வி நிலையத்தின் உயர் கல்விச் சேவைக்கு எனது சமூகத்தின் சார்பில் எனது நல்லாசிகளை வழங்குகின்றேன். இஸ்லாமிய மாணவர்களும் இக்கல்வி நிலையத்தில் கல்வி பயின்று பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்துள்ளமையை அறிந்தும், இந்நிறுவனம் சமூக உறவையும் வளர்த்துள்ளது என்பதைக் காணும்போதும் மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் வருகின்ற காலங்களில் இக்கல்வி நிறுவனம் வளர்ச்சியடைந்து இன்னும் பல்லாயிரக்கணக்கான கல்விமான்களை உருவாக்கி எமது பிரதேசத்தில் ஒற்றுமை, சகோதரத்துவம், சமாதானம் என்பன வளர உதவ வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நிறுவத்தைத் தோற்றுவித்த தியாகிகளுக்கும், இக்கல்லூரிக்காக உழைத்த உழைக்கின்ற நிருவாகத்தினர், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் நல்வளம் பெற்று வாழ இறைவன் நல்லருள் புரிவானாக.

மௌலவி ஏ.எம்.எம் முஜீப் (ஷர்கி)
பேஷ் இமாம்
மட்டக்களப்பு பெரிய ஜும்ஆ பள்ளிவாயல்



கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்
கலாநிதி என்.பத்மநாதன்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி தனது சேவையில் 10வது ஆண்டு நிறைவினை எய்தியதையிட்டு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

எமது நாட்டிலே உயர் கல்வி கற்கும் மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதி பெறும் மாணவர்களில் மிகவும் சொற்ப அளவிலான விகிதத்தினரே இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உள்வாரியாக உள்ளீர்க்கப்படுகின்றனர். ஏனைய மாணவர்கள் பட்டப்படிப்பிற்கான தகுதி பெற்றும் அவர்களுக்கான சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. எமது பல்கலைக்கழகமானது இப்பிரதேச சமூகம்சார் கல்வி மேம்பாட்டிற்காக பல வெளிவாரி கற்கை நெறிகளை ஆரம்பித்து நடாத்திவருகின்றது. அதில் கலை, கலாசார பீடத்தினால் வழங்கப்படும் கலைப்பட்டத்திற்கான வெளிவாரி கற்கைகளுக்கு உறுதுணையாக நின்று அம்மாணவர்கள் நல்ல பெறுபேற்றினை அடைவதற்காக பல தனியார் கல்வி நிறுவனங்களும் தங்கள் பங்களிப்பை நல்கி வருகின்றமை கண்கூடு. அந்த வகையில் தங்கள் நிறுவனம் ஆற்றிவரும் சேவைக்காக இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துறையில் தங்கள் நிறுவனம் கடந்த ஒரு தசாப்த காலமாக ஆற்றிய சேவை இப்பிரதேச மாணவர்கள் பலர் தங்கள் உயர்கல்விக் கனவினை நனவாக்கிட உதவியிருக்கும் என்பது திண்ணம். உங்கள் பணி மேலும் வளர வாழ்த்துக்கள்.

கலாநிதி என். பத்மநாதன்
பதில் உபவேந்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்
மாவட்ட செயலாளர் திரு.சு. அருமைநாயகம்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி தனது சீரிய கல்விச்சேவையின் 10 வருட நிறைவு விழாவை கொண்டாடுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர் கல்வியினை உள்வாரியாக பல்கலைக்கழகங்களில் சகலரும் பெறமுடியாத நிலையில் கணிசமான மாணவர்கள் தமது பட்டப்படிப்பினை வெளிவாரியாகத் தொடர்கின்ற இவ்வேளையில், மட்டக்களப்பில் இயங்கும் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரியானது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலை கலாசார பீடத்தில் பதிவு செய்துள்ள மாணவர்களின் நலன் கருதி 1997ம் ஆண்டு தொடக்கம் ஒரு தசாப்த காலமாக தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களைக் கொண்டு மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்தி அவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் உறுதுணையாக திகழும் இந்நிறுவனம் மென்மேலும் எமது மாவட்டத்திற்கு கல்விச் சேவையினை வழங்க வேண்டுமென பிராத்திக்கும் அதேவேளை, இந்நிறுவனத்தினால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இம்மலர் வெளியீட்டினை முன்னின்று நடாத்தும் முகாமைத்துவத்திற்கும் எனது விசேட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.சு. அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்
மட்டக்களப்பு மாவட்டம்.

கிழக்குப் பல்கலைக்கழக
கலை கலாசாரபீட பீடாதிபதி
செல்வி.எஸ். பொன்னையா
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் அவ்வத் துறையில் தகுதி பெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கு ஏற்புடையதாக 1997 ஆம் ஆண்டு கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இவ் வருடம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை நினைவு கூருமுகமாக "எதிர்வு" எனும் சஞ்சிகையை வெளியிடுகிறது, என்பதில் பெருமை அடைகின்றேன்.

இந் நிறுவனம் சிறிய தொகை மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 500க்கும் மேலான மாணவர்களுக்குத் தனது சேவையினை வழங்கிக் கொண்டிருப்பது இதன் மாணவர் தொகை ரீதியான வளர்ச்சியினைக் காட்டுகின்றது. அத்துடன் பட்டதாரிகளை உருவாக்குவதிலும் தொடர்ந்து சாதனைகளைப் படைத்து வருகின்றது.

நாட்டின் அமைதியற்ற சூழ்நிலையிலும் கூட தளராது கல்வியினை ஊட்டுகின்ற ஒரு நிறுவனமாக இது விளங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"எதிர்வு" எனும் இச் சஞ்சிகை பல ஆக்கங்களைக் கொண்ட தொகுப்பாக இன்று வெளிவருகின்றது. மாணவர்களிடையே காணப்படும் ஆக்கத்திறனை வெளிப்படுத்திக் காட்டுகின்ற ஒரு சஞ்சிகை என "எதிர்வு" கூறுகின்றது. இவ் ஆக்கங்கள் பட்டப்படிப்பை மேற் கொள்ளும் மாணவர்களுக்கு மட்டுமல்ல உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஏற்புடையதாகும். நல்ல பல பட்டதாரிகளை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கும் இந் நிறுவனம் எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று எதிர்வு கூறுவதுடன் தொடர்ந்து இயங்குவதற்கு உறுதுணையாக இருப்பவர்களையும், கடல் கடந்து வாழும் நிலையிலும் இந் நிறுவனத்திற்கு ஆதரவு வழங்குபவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் மறக்க முடியாது. அவர்களுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள். இச் சஞ்சிகையுடன் நிறுத்தி விடாது தொடர்ந்து வரும் காலங்களிலும் "எதிர்வு" வெளிவர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்; வாழ்த்துகின்றேன்.

செல்வி. எஸ். பொன்னையா
பீடாதிபதி, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

கிழக்குப் பல்கலைக்கழக அரபுத்துறை
பதில் தலைவர்

கலாநிதி திருமதி. அ. முருகதாஸ்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி தனது 10ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக 'எதிர்வு' என்ற இதழை வெளியிடுகிறது. முக்கியமாக உள்வாரி மாணவர்கள் தமது கற்கை நெறியின்போது வருடா வருடம் மலரொன்றை வெளியிடுவது வழக்கம். இந்த 'எதிர்வு' வெளிவாரி மாணவர்களின் ஆக்கங்களையும், தமது சாதனைகளையும் வெளியிட முன்வந்திருப்பது மிகவும் சிறப்பாகக் குறிப்பிடற்குரியதாகும்.

இந் நிறுவனத்தின் நிறுவகரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிகள் கற்கை நெறி முதலாவது தொகுதி மாணவர்களுள் ஒருவர். அவர் மிகவும் ஊக்கமும், உற்சாகமும் உடையவர். இந்த நூலை வெளியிடுவதில் மிகவும் ஆர்வமுடையவராக உள்ளார் என அறிகிறேன்.

நாம் என்னதான் சாதனைகளைச் செய்தாலும் அவை எழுத்தில் வெளிவருமிடத்தேதான் வரலாற்றில் நிமிர்ந்து நிற்கும். இல்லையெனில் பாரதி சொன்னதுபோல,

"பொய்யாய்ப் பழங்கதையாய் கனவாகிப் போய்விடும்."

எனவே இந் நிறுவனத்தைத் திறம்பட நடத்தி நூலை வெளியிடும் திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்களுக்கும் அவரது நிறுவனத்திற்கும் மாணவர்களுக்கும் இவ்வெளியீடு தொடர்ந்தும் வெளிவர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி திருமதி. அ. முருகதாஸ்
பதில் தலைவர், அரபுத் துறை,
முன்னாள் பீடாதிபதி,
கலை கலாசாரபீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலைய பணிப்பாளர்

திரு. த.பிரபாகரன்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி, கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட வெளிவாரி மாணவர்களின் நலன்கருதி திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்களின் முயற்சியால் 1997 இல் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஒரு தசாப்த காலமாக, வெளிவாரியாக கலைப்பட்டதாரிகளை உருவாக்குவதில் எமது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் பக்க துணையாக இந்த நிறுவனம் பேருதவி புரிந்து வருகின்றது.

இந்த நிறுவனம் தனது பத்தாண்டு நிறைவையொட்டி வெளியிடும் 'எதிர்வு' என்னும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகை பல கல்வி சார்ந்த, கல்விசாரா, சமூக கலாசார விழுமியங்களை மக்களுக்கு வெளிப்படுத்தும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்த நிறுவனத்தின் கல்விப்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

திரு. த. பிரபாகரன்
பணிப்பாளர்,
வெளிவாரி கற்கைகள் நிலையம்
கிழக்குப் பல்கலைக்கழகம்



கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசாரபீட
வெளிவாரி இணைப்பாளர்

திரு. R.கிருபைராஜா
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

இன்று பல தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலை மாணவர்கள் முதல் வெளிவாரியாகப் பட்டப்படிப்புக்களைத் தேடும் மாணவர்கள் வரை தமது சேவையினை கல்விச் சமூகத்திற்கு அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றன.

தனியார் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவர்களது சேவையினை 03 வகையாகப் பிரித்து நோக்கலாம். ஒன்று பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்ட சேவை. இரண்டாவது பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கான தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சேவை. மூன்றாவது பட்டப்படிப்பு மாணவர்களுக்கான சேவை. இந்த அடிப்படையில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்புத் தொடர்கின்றன.

அந்த வகையில் கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையமாகக் கொண்டு வெளிவாரியாக மாணவர்கள் பட்டம் பெற வழி காட்டுகின்ற பாரிய பொறுப்பை கடந்த ஒரு தசாப்த காலமாகச் சிறப்புடன் ஆற்றி வருகின்றமை பராட்டப்பட வேண்டிய ஒன்று.

இந் நிறுவனம் தனது கற்றல், கற்பித்தல் ஆகிய செயற்படுகளோடு மட்டும் நின்று விடாது அதற்கும் அப்பால் நூல் ஒன்றினை வெளியிட முன்வந்திருப்பது கல்வி உலகில் அது கொண்டிருக்கும் சிரத்தையை மேலும் கோடிட்டுக் காட்டுகின்றது. அத்தோடு மட்டுமன்றி நூல் ஒன்றினை வெளியிடுவதன் மூலமாக இந் நிறுவனம் அங்கு சேவை புரியும் ஆசிரியர்கள், கற்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களின் மறைந்து கிடக்கும் திறன்களை வெளியுலகிற்கு எடுத்து வர களம் அமைத்தும் கொடுக்கின்றது எனலாம்.

எதிர்காலத்தில் பட்டப்படிப்பைத் தொடர்கின்ற மாணவ சமூகத்திற்கு இந்நூல் பெரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. காரணம் சில நூல்கள் வெளியீட்டுடன் உறங்கி விடுவதுண்டு. ஆனால் இந்நூலைப் பொறுத்த வரையில் அதன் வடிவமைப்பு மூலம் உறங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றே குறிப்பிடலாம். காரணம் விளம்பரத்தை மையமாகவன்று மாணவர் நலன்களை மையமாகக் கொண்டு சிறந்த திட்டமிடலுடன் மலர்க்குழு தனது பங்களிப்பைக் காட்டியிருக்கின்றது.

இவ்வாறு உயர் நிலையிலிருந்து சிந்தித்து மாணவ சமூகத்திற்கு வழங்கும் இந் நிறுவனத்தின் சேவையை மனமாரப் பாராட்டுவதுடன், இதன் பணி நூல் உருப்பெற உழைத்த நிறுவன உரிமையாளர் உட்பட கல்விமான்கள் அனைவரையும் வாழ்த்தி இச்சேவை மேலும் தொடர இறை ஆசியையும் வேண்டுகின்றேன்.

திரு. R. கிருபைராஜா
இணைப்பாளர், வெளிவாரி பட்டப்படிப்புகள்
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



கிழக்குப் பல்கலைக்கழக
கலை கலாசாரபீட வெளிவாரி கற்கைகள்
பிரிவின் முன்னாள் இணைப்பாளர்

திரு. வெ.அழகரெத்தினம்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கல்வி பல்பெறுமானப் பண்டமாகக் கணிக்கப்படுகிறது. அது மூலதனமாகையில் பணப்பெறுமானங் கொண்டதாக, மனிதனை நெறிப்படுத்துகையில் ஒழுக்கப் பெறுமானங் கொண்டதாக, ஒருவனை கற்றறிவானாக்குகையில் கல்விப் பெறுமானம் கொண்டதாக என பல்வேறு வகைகளாகவும் அதன் பெறுமானங் கணிக்கப்படுகிறது. இவ்வாறு பெறுமான அடிப்படையில் கல்வியை அளவிடுவது அதன் உண்மையியல்பைக் குறைப்பதாகவிருக்கின்றது என வாதிடுவோரும் உளர். எனவேதான் கல்வியூட்டல் மிகவும் பயன் மிக்கதொரு பணியாகக் கொள்ளப்படுகிறது. 'அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல் - ஆலயம் பதினாயிரம் கட்டுதல், அன்ன யாவையிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' எனும் அறவுரை இதனையே சுட்டுகிறது. ஏழை என்பது ஒரு விடயத்தில் குறைபாடுள்ளமையைக் குறிக்கும். கிழக்குப்பல்கலைக்கழக கலைகலாசார பீடம் 1996 இல் வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் கற்கை நெறியை அறிமுகப்படுத்திய போது வெளிவாரி மாணவர்கள் பாடங்களை கேட்டுப் படிப்பதற்கு ஒருவரும் அல்லது ஒரு நிறுவனமும் இல்லை என்ற நிலை காணப்பட்டது. அப்போதுதான் கிழக்கு வெளிவாரி கற்கைகள் நிறுவகம் (மட்டக்களப்பு) உருவாகி இப்பணியைச் செய்தது.

அவ்வாண்டு முதலாம் ஆண்டில் அண்ணளவாக ஐம்பது மாணவர்கள் மாத்திரமே பதிவு செய்திருந்தனர். இவர்களுள் அதிகமானோர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அதேநேரம் அரச தொழில் செய்பவர்களுமாயிருந்தனர். இவர்களுள் இந்நிறுவனத்தின் ஸ்தாபகராகிய பிரான்சிஸ் சேர் அவர்களும் ஒருவராவார். பிரான்சிஸ் சேர் எனக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணமுள்ளது. 1985, 86களில் நான் செட்டிப்பாளையம் இளைஞர் கழகத் தலைவராக இருந்த காலத்தில் இவர் இளைஞர் சேவை அதிகாரியாக கடமையாற்றியிருந்தார். அப்போது எங்களுள் ஒரு அன்பான உறவிருந்தது. எக்காரியத்திற்கும் சிரித்தபடி தம்பி என, உரையாடும் பாங்கு இளைஞர்களாகிய எங்களை சேர் எனப் பணிவோடு பழகும் வாய்ப்பை ஏற்படுத்தியது. பின்னர் அவர் ஆசிரியத் தொழிலுக்கு மாற்றமுற்று சேவை செய்துகொண்டிருந்த பொழுது இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்து பல்கலைக்கழகம் வரும்பொழுதில் இந்நிறுவனத்தை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அதன் முக்கியத்துவத்தையும் நட்பான முறையில் கூறியது நினைவிற்கு வருகிறது. இந் நிறுவனத்தின்

ஆரம்பமும் வளர்ச்சியும் அதிக மாணவர்கள் கிழக்குப்பல்கலைக்கழக கலைகலாசார பீடம் வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் கற்கை நெறியை தொடர்வதற்கு ஏதுவாக இருந்தது. இன்று வருடா வருடம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பதிவு செய்து கற்பதற்கு ஊக்குவிப்புக் காரணியாக இந்நிறுவனம் தனது பங்களிப்பை வழங்கியிருக்கிறது.

இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற வேளையில் அதன் ஒரு வேலைத்திட்டமாக ஞாபகார்த்த பத்தாண்டு மலரினையும் வெளியிடுவது கல்விப்புலம் சார்பாக அதன் ஆழமான ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது. இந் நிறுவனம் தனியார் நிறுவனமாகத் தொழிற்படாது, இளைஞர் குழாம் ஒன்றின் கூட்டு முயற்சியாக இயங்குகின்றது என்பதையும் நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன். இது வேறு கல்வி நிலையங்களுக்கில்லாத தனிச்சிறப்பு. இது மென்மேலும் வளர்ச்சிகண்டு கற்றோரை உருவாக்க வேண்டுமென வாழ்த்துவதுடன் பத்தாண்டு மலர் சிறப்புற மலர வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

திரு. வெ.அழகரெத்தினம் B.A (Hons), PGD (Edu), M.phil
சிரேஸ்ட விரிவுரையாளர் - மெய்யியல்
முன்னாள் இணைப்பாளர் - வெளிவாரி கற்கைகள் அலகு
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

திருமதி. எஸ். பவளகாந்தன்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியின் 10வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் ஓர் மைக்கல்லாக விளங்கும் இந்நிறுவனம், ஒரு தசாப்தமாக மிகவும் சிறப்புடனும், அர்ப்பணிப்புடனும் தொழிற்பட்டு பல பட்டதாரிகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியுள்ளது.

க.பொ.த (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி தகுதிக்கான புள்ளிகளைப் பெற்றும், பல்கலைக்கழகம் செல்லமுடியாத மாணவர்களும், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் தமது தொழில் காரணமாகப் பல்கலைக்கழகம் செல்லமுடியாத மாணவர்களும் வெளிவாரி மாணவர்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தம்மைப் பதிந்து பட்டங்களைப் பெறுவதற்கு இக்கல்லூரி ஊன்றுகோலாகப் பணியாற்றுகின்றது. இவர்களது சேவையின் பிரதிபலிப்பாக இன்று நமது பிரதேசத்தில் பல பட்டதாரிகள் உருவாகியுள்ளனர்.

இக்கல்லூரியின் 10வது ஆண்டு நிறைவையொட்டி அதன் செயற்பாடுகளை வெளிக்கொணரும் முகமாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

"கல்விப் பணி அறப்பணி"

இப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. எஸ். பவளகாந்தன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
பட்டிருப்பு கல்வி வலயம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர்

திரு. வே. லஷ்மிசுந்தரம்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழகக் கலை கலாசார பீட வெளிவாரி மாணவர்களின் நலன் கருதி திரு. ஆ. கி. பிரான்சிஸ் அவர்களினால் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி 1997 ல் ஆரம்பிக்கப்பட்டது. திரு. ஆ. கி. பிரான்சிஸ் அவர்களை மிக நீண்ட காலமாக நான் அறிவேன். சமூகநோக்கும், தீர்க்க சிந்தனையும் உடைய அவர் சுறுசுறுப்பாக இயங்குபவர்.

கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசாரபீட வெளிவாரிப் பட்டப்படிப்பினை மட்டுமே நோக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டதும், இன்று வரை அதற்காக மட்டுமே இயங்கி வருவதுமாக இக் கல்வி நிறுவனம் விளங்குவதை அறிகிறேன்.

பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களைப் போன்றே பல ஒன்று கூடல் நிகழ்வுகளையும் இவர்கள் நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியினை முடித்து வெளிவருவோருள் பலர் தமது கல்வி மற்றும் தொழில் தகமைகளை மேம்படுத்துவதற்காக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து இக்கல்வி நிறுவனத்தில் இணைந்து பட்டப்படிப்பினை மேற்கொள்கின்றனர்.

எனவே, பத்தாண்டு நிறைவையொட்டி வெளிப்படும் 'எதிர்வு' என்னும் இச் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதிலும், கிழக்குப் பிரதேசத்தின் கலங்கரை விளக்கமாக அமைந்து கல்விப் பணிபுரியும் இந்நிறுவனம் தொடர்ந்தும் தன் பணியினைச் சிறப்பாக ஆற்ற வேண்டுமென வாழ்த்துவதிலும் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. வே. லஷ்மிசுந்தரம்
முதல்வர்,
மட்/அரசினர் பயிற்சிக் கலாசாலை

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள்
கல்லூரியின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப்
பணிப்பாளருமான

திரு. ஆ.கி. பிரான்சிஸ்

அவர்களின்

வாழ்த்துச் செய்தி

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை"

தமிழர்கள் தம் வாழ்வியல் இருப்புக்களைத்தொலைத்து தாய்நாட்டிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் அகதிகாளக அலைந்து திரிகின்ற இவ்வேளையிலும் வள்ளுவப் பெருந்தகையின் இக்குறட்பாவிற்கமைய அழிவில்லாததும் சிறப்பு வாய்ந்ததுமான கல்வியைத் தம் எதிர்கால சந்ததியினர் பெற்றுக் கொள்வதற்குச் செய்யும் அர்ப்பணிப்புக்களைக் கண்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இக்குறிக்கோளுடன் 1997ம் வருட இறுதிப் பகுதியில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட எமது கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரியும் எம் அடுத்த தலைமுறையினருக்கான சிறந்த கல்வியை வழங்குவதில் பத்தாண்டு கால நிறைவினை அடைந்த பெருமிதத்தில் 'எதிர்வு' எனும் சிறப்பு மலரினை வெளியிடவும் அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்கவும் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு அகமகிழ்கின்றேன்.

'எதிர்வு' கூறுவதற்கான என் 'பின்நகர்வு' பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

மட்டக்களப்பு நகரில் அப்போது பாடசாலைக் கல்விக்கு வெளியே தனியார் கல்வி நிலையங்கள் இல்லாத ஒரு காலம்..... 1973ம் ஆண்டு தற்போதைய சார்ள்ஸ் மண்டபம் அமைந்துள்ள பழைய கட்டிடத்தில் புளியந்தீவு கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தினரால் (C.L.C) நடாத்தப்பட்ட இரவுநேர இலவசப் போதனை வகுப்புகளில் நானும் ஒரு ஆசிரியனாக,

பின்னர் 1975இல் மட்/ வாகரை மகாவித்தியாலயத்தில் முதலாவது தொண்டர் ஆசிரியராக,

மட்டக்களப்பு நகரில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட 'யோகா அக்கடமி' (Yoga Academy) எனும் தனியார் கல்வி நிறுவனத்தில் 1976-1977ம் ஆண்டுகளில் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான தமிழ், அரசியல் பாடங்களுக்கான ஆசிரியனாக நான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள்.

'தான் கற்றலும் கல்வியில் சிறந்தோரை உருவாக்குவதுமே ஒருவன் தன் தாய்நாட்டுக்குச் செய்யக்கூடிய மிகப் பெரிய சேவை, என்பதை என்னுள் ஆழமாகப் பதியவைத்தன.

எனினும் காலத்தினதும், சூழ்நிலையினதும் உதைப்புக்கள் என்னைத் தொடர்ந்து ஒரு ஆசிரியனாக உருவாகி அரச சேவையில் இணைய விடாமல் தடுத்தன. வெவ்வேறு அரச உத்தியோகங்களில் இணைந்து பணிபுரிந்த போதிலும் ஆரம்பத்தில் நான் பெற்ற ஆசிரிய அனுபவங்களினூடான திருப்தி அவற்றின் மூலம் எனக்குக் கிடைக்கப் பெறவில்லை.

எனினும் நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் அரசாங்க ஆசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தபோது எனது கனவுகள் நிறைவேறும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைக்கப் பெற்றமையையிட்டு மகிழ்ந்தேன்.

இவையே 1997இல் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரியை நான் ஆரம்பிக்க என்னைத் தூண்டிய பின்னணிகளாக அமைந்தவை.

கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடம் வெளிவாரி மாணவர்களுக்கான கற்கை நெறியினை 1996இல் தொடங்கியபோது அங்கு பதிவு செய்த வெளிவாரி மாணவர்களின் நன்மை கருதி இக்கல்லூரியை நிறுவ வேண்டியதாயிற்று.

அவ்வேளை எனக்கு ஆலோசனை வழங்கிய முன்னாள் பொருளியல் துறைத் தலைவர் அமரர்.கு.தம்பையா, கலைப்பீடாதிபதிகளாகப் பணிபுரிந்த கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் திரு.பால சுகுமார், மொழித்துறைத் தலைவராகத் தற்போது பணிபுரியும் திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் எனது முயற்சிக்கு உரமூட்டுவது போல அவ்வேளை என்னோடு இணைந்து பணியாற்றிய எனது நண்பனும் இக்கல்லூரியின் முன்னாள் நிதிப் பணிப்பாளருமாகிய திரு.வீ.க.அருள்நேசன் (படவரைஞர், நிலஅளவைத் திணைக்களம், திருகோணமலை) அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ஒரு பல்கலைக்கழகத்தில் பெறக்கூடிய கல்வியை, அனுபவத்தை, சமூக விழுமியங்களை, சமூகப் பொறுப்புக்களை வெளிவாரி மாணவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கோடு ஒரு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு செயற்பாடுகளையும் நாமும் இக்கல்லூரியில் அறிமுகப்படுத்தி அவற்றை ஆக்கபூர்வமான முறையில் நெறிப்படுத்தியும் வந்தோம்.

எனினும் அவற்றில் கடந்த மூன்றாண்டுகளாக சில பின்டைவுகள் ஏற்பட்டுள்ளமை துரதிஷ்டமானதே. இருந்தபோதிலும் இனிவரும் காலங்களில் அவற்றை எதிர்கொண்டு உயர்ந்த சிறந்த கல்வியை எமது எதிர்கால சந்ததியினர் பெறுவதற்கான பௌதிக மற்றும் மனித வளத்துடன் கூடிய வளர்ச்சியில் தனது பதினோராவது ஆண்டில் இக்கல்லூரி காலடி எடுத்து வைக்க முயற்சிக்கின்றது.

ஆரம்பம் முதல் இன்று வரை எமது முயற்சிகளுக்குத் துணை நிற்கும் விரிவுரையாளர்கள், பழைய புதிய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தொடர்ந்தும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அழைப்பு விடுத்து,

"தேடு கல்வியில்லாதோர் ஊரை
தீயினுக்கிரையாக மடுப்போம்"

என்னும் பாரதியின் அறைகூவலுடன் என் வாழ்த்துக்களை அர்ப்பணம் செய்கின்றேன்.

நன்றிகளுடன்,

திரு. ஆ.கி. பிரான்சிஸ்

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரி,
மட்டக்களப்பு.

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரியின்
முன்னாள் நிதிப்பணிப்பாளர்

திரு. V. K. அருள்நேசன்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு, கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி தனது பத்தாண்டு கல்விச் சேவையை நிறைவு செய்தமை தொடர்பாக வெளியிடும் 'எதிர்வு' எனும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

1997ம் ஆண்டு இக் கல்லூரியை ஆரம்பித்தபோது இதன் நிதிப்பணிப்பாளராக இருந்து செயலாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இக்காலகட்டத்தில் அதன் வளர்ச்சி மிகக் குறைந்தளவாக இருந்த போதிலும், இக்காலத்தில் இக்கல்லூரியில் பயின்ற மாணவர்களும் இங்கு கற்பித்த விரிவுரையாளர்களும் கல்லூரி நிருவாகத்திற்கு வழங்கி வந்த ஒத்துழைப்புக்கள் இன்றும் என் நினைவில் நிழலாடுபவைகளாகவே இருக்கின்றன.

நிறைந்த அறிவுத்திறனும் ஆற்றலும் பெற்ற விரிவுரையாளர்களையும், சிறந்த ஒழுக்கமும் விவேகமும் ஆளுமையுமுடைய மாணவர்களையும் ஆரம்ப காலங்களில் இக் கல்லூரி தன்னுள் ஈர்த்துக் கொண்டதனாலேயே இன்று அது பெருவளர்ச்சி பெற்று பல நூற்றுக்கணக்கான மாணவர்களை கிழக்கு மண்ணில் பட்டதாரிகளாக உருவாக்கி உயர்கல்விச் செயற்பாடுகளில் ஒரு முதன்மைக் கல்வி நிறுவனமாக மிளிர்கின்றது என்பது எனது நம்பிக்கையாகும்.

பத்தாண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளையில் 'எதிர்வு' என்னும் இந் நினைவு மலர் மூலம் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில"

திரு. V. K. அருள்நேசன்
முன்னாள் நிதிப்பணிப்பாளர்,
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.

படவரைஞர்
நில அளவைத் திணைக்களம்
திருகோணமலை.



கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள்
கல்லூரி முகாமைத்துவப் பணிப்பாளர்
திரு. S. சதீஸ்குமார்
அவர்களின்

வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைவதன் நினைவாக 'எதிர்வு' என்னும் இச்சஞ்சிகையை வெளியிடுவதை எண்ணிப் பெருமையும், அகமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்நிறுவனமானது எமது பேரன்புமிக்க திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்களினால் 1997இல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு சிறு ஆலம் விதையிலிருந்து எவ்வளவு பெரியதொரு ஆலவிருட்சம் தோன்றி நாற்புறமும் தன் பெருமையைப் பறை சாற்றித் தலை நிமிர்ந்து நிற்கின்றதோ அவ்வாறே இன்று எமது கல்லூரி தலைநிமிர்ந்து, பல்லாயிரம் பட்டதாரிகளை இப்பாரினிலே தலைநிமிர்த்தி வாழ வழிவகுத்துள்ளது. "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்பதற்கிணங்க யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மாணவர்கள், கல்வி கற்றாவது தலை நிமிர்ந்து நிற்பதற்கு வழி கோலியது இக்கல்லூரி என்றால் அது மிகையாகாது.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நடுநிலையாம் கல்வியழகே அழகு"

என்னும் நாலடியாரின் கூற்றிற்கிணங்க எமது மாணவர்கள் கல்வியினாலேயே அழகு பெறுவர் என்பதை திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்கள் ஒரு தீர்க்கதரசி போல் அறிந்ததாலேயே இந்நிறுவனத்தை உருவாக்கியிருப்பார் போலும். "கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது'' என்பதற்கிணங்க இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலான மாணவர்களே இங்கு கல்வி கற்றனர். ஆனால் இன்றுவரை ஒன்பது தொகுதி மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பதோடு அவர்களுள் ஆறு தொகுதி மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தொகுதியிலும் 98% சதவீதத்தினர் சித்தியடைந்துள்ளமை இக்கல்வி நிறுவனத்தின் தரத்தைப் பறைசாற்றுகின்றது.

இங்கு 'மாணவர் ஒன்றியம்' அமைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றமையும் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். தனியே கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மாத்திரமின்றி புதிய மாணவர்கள் வரவேற்பு, இறுதி வருட மாணவர்களுக்கான பிரியாவிடை முதலான பல்வேறு நிகழ்வுகளும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வுகளில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், கலைப் பீடாதிபதி, வெளிவாரி உதவிப் பதிவாளர், கலைப்பீட வெளிவாரி இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டமை சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். அவர்களது ஆலோசனைகளும், பங்குபற்றுதல்களும் எம்மை மென்மேலும் ஊக்கப்படுத்தி இச்சேவை நாற்றிசையும் பரவ வழிகோலியது. இவ்வேளை அவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது கல்லூரியின் தந்தையாகப் போற்றப்படும் திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்களின் துணைவியாரும், மாணவர்களின் பெருமதிப்பைப் பெற்றவருமான திருமதி.றூபி பிரான்சிஸ் அவர்களும் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர். தாய் போலிருந்து அறிவுரையும் ஆலோசனையும் வழங்கி உதவுகின்றார்.

இந்நிறுவனத்தின் கல்விப்பணியுடன் என்னையும் இணைத்ததோடல்லாமல் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் நியமித்தமைக்கு இந்நிறுவனத்தின் ஸ்தாபகரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வட கிழக்கு மாணவர்களின் குறிப்பாக கிழக்கு மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் கலங்கரை விளக்கமாகத் திகழும் இக்கல்வி நிறுவனம், அனைவராலும் மதிக்கப்படும் சிகரமாகத் தலைநிமிர்ந்து இதன் பேரும் புகழும் எல்லை கடந்து வரலாற்றில் நிலைபெற வேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

திரு. S. சதீஸ்குமார் B.Sc
முகாமைத்துவப் பணிப்பாளர்,
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி,
மட்டக்களப்பு.

இதழாசிரியரின் உரை

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் ஆரம்பம், ஈழத்துக்கல்வி வரலாற்றில் தமிழ் பேசும் மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இக்கல்லூரியின் இயக்குனர் திருவாளர் ஆ.கி. பிரான்சிஸ் அவர்களின் தூர நோக்குள்ள எதிர்வுகூறலாக விளங்கும் இக்கல்லூரி, 1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு சமுதாயத்தின் எண்ணங்களைப் பொறித்து வைப்பதில் சஞ்சிகையின் பணி கணிசமானது. அந்த வகையில் இக்கல்லூரியின் 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'எதிர்வு' என்னும் இச்சஞ்சிகையினை வெளியிட்டு வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியின் வரலாற்றில் இது ஒரு கன்னி முயற்சியே ஆகும். அதேவேளை வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் வரலாற்றில் இது முதன்மையும் முன்னோடியுமான முயற்சியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

எதிர்வு என்பது சவால்களை எதிர்கொள்ளல், எதிர்காலம், தீர்க்கதரிசனம் முதலான பல பொருள்களையுடையது. உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய பணிகளை இக்கல்லூரி ஆற்றுவதனால் இச்சஞ்சிகைக்கு 'எதிர்வு' என நாமமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களின் ஆக்கத்திறமைகளையும், ஆளுமையினையும் வெளிப்படுத்த பல்கலைக்கழக மட்டத்தில் பல சஞ்சிகை வெளியீடுகள் களமமைத்துக் கொடுப்பது தெரிந்ததே. வெளிவாரிபட்டப்படிப்பு மாணவர்களின் ஆக்கத்திறன்களையும், ஆளுமைகளையும் வெளிப்படுத்த 'எதிர்வு' போன்ற சஞ்சிகை வெளியீடுகள் நற்களமாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த எதிர்வு சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சஞ்சிகை வெளியிடல் பற்றி இயக்குனர், விரிவுரையாளர்களாகிய எங்களிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார். அவர் ஐரோப்பாவிற்குச் சென்ற பின்னரும் சஞ்சிகை வெளியீட்டுப் பணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல தடவைகள் தொலைபேசியில் ஆலோசனை கூறி ஊக்கப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். அவரது கனவு இன்று நனவாகின்றது. அத்துடன் அவரது துணைவியார் றூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்கள் மிகுந்த கரிசனையுடன் இந்த விடயத்தில் செயற்பட்டார். பல கட்டுரைகளை அவரே கணனியில் பொறித்தும் தந்தார். இதனைவிட நூலாக்கக் குழுத்தலைவர் திரு. பா. பத்மநாதன், செயலாளர் திரு. கு. விஜயநாயகம் போன்ற விரிவுரையாளர்களும் அடிக்கடி இந்த விடயம் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கிச் செயற்பட்டனர். இதனைவிட ஏனைய விரிவுரையாளர்களும், மாணவர்களும், பழைய மாணவர்களும் உதவிபுரிந்தனர்.

நிறைவாக 'எதிர்வுக்கு' ஆசியுரைகள், வாழ்த்துரைகள், ஆலோசனைகள், ஆக்கங்கள் தந்தோர் மற்றும் மலர் மணம் பரப்ப உதவிய அனைவருக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

வாழ்க தமிழ்! வளர்க இக்கல்லூரியின் பணி!!

திரு. சோ.துளசிநாதன் B.A(Hons), Dip.in. Edu.

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரியின்
ஸ்தாபகர், நிறைவேற்றுப் பணிப்பாளர்



திரு. ஆ. கி. பிரான்சிஸ்

B.A.Dip.in.Edu.S.L.T.S-II

விரிவுரையாளர்கள்
கிழக்கிலங்கை வெளிவாரிப் படிப்புகள் கல்லூரி



திரு. P. பத்மநாதன் B.A.
அரசறிவியல், சிறப்பு
சமூர்த்தி முகாமையாளர், பட்டிப்பளை பி.செ.



திரு. E. ஜெயராஜ் B.A. (Hons.) Dip.in.Edu.
முகாமைத்துவம்
வெளிக்கள உத்தியோகத்தர் UNDP



திரு. K.விஜயநாயகம் B.A.(Hons.)
மெய்யியல்,
ஆசிரியர், மட்/ முதலைக்குடா ம.வித்தியாலயம்

திரு. S.துளசிநாதன் B.A.(Hons.),Dip.in.Edu.
தமிழ்
ஆசிரியர், மட்/முறுத்தானை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்



திரு. M.தயாநிதி B.A.(Hons.) PGDE, M.A.
விரிவுரையாளர், இந்து கலாசாரம்
ஆசிரியர், மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்



திரு. P.திவ்வியராஜ் B.Econ (Hons.) PGDE
பொருளியல்
இலங்கை கற்கைகள், இணைந்த பாடநெறி



திரு. E. சர்வேஸ்வரன் B.A.
கல்வியியல்
ஆசிரியர் மட்/முறுத்தானை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்



திரு. S. சந்திரகுமார் B.A. (Hons.)
நுண்கலை, நாடகமும் அரங்கியலும்
இலங்கை கற்கைகள் இணைந்த பாடநெறி
அக்/தம்பிலுவில் ம.ம.வி. ஆசிரியர்

திரு. V. நவீரதன் B.Econ (Hons.)
விரிவுரையாளர், பொருளியல்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரி



திரு. K.நிதிகரன் B.A.(Hons.)
கல்விமியல்
ஆசிரியர் மட்/வாகரை ம. வித்தியாலயம்

திருமதி. நிரேகா தயாபரன்
B.A. (Hons.) Dip.in.Edu.
சமூகவியல்
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (சமூகசேவை)
கோறளைப்பற்று தெற்கு பிர.செயலகம் கிரான்.



திரு. S. சதீஸ்குமார் B.Sc.
கணிதம்
ஆசிரியர் மட்/கித்துள் ஸ்ரீகிருஷ்ணா வித்தியாலயம்

முன்னாள் விரிவுரையாளர்கள்



திரு. T. விஸ்வலிங்கம் SP.Trd.English
ஆங்கிலம்
ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரும்
கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் ஆங்கிலப் பிரிவு
போதனாசிரியரும்



திரு. க. நவீந்திரன் B.A.(Hons.)
மெய்யியல்
கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர், மட்டக்களப்பு

திரு. K.திலகநாதன் B.A.(Hons.) Dip.in Edu.
நாடகமும் அரங்கியலும்
விரிவுரையாளர்
தேசிய கல்வியியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

செல்வி. K.தங்கேஸ்வரி B.A.(Hons)
இலங்கைக் கற்கைகள்
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட
கலாசார உத்தியோகத்தர்.

திருமதி கண்ணம்மா தம்பையா
B.A.(Hons.) Dip.in.Edu.
தமிழ்
விரிவுரையாளர் மட் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி



திரு. சத்தியசேகர் B.A.(Hons.)
சமூகவியல்
விரிவுரையாளர் சமூக விஞ்ஞானத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்



திரு. அன்பழகன் B.A.
நுண்கலை
கலாசார உத்தியோகத்தர், திருகோணமலை.

திருமதி வானதி பகீரதன் B.A. (Hons.)
தமிழ்
ஆசிரியை மட்/செங்கலடி. ம.ம.வி.



திரு. N. கணேசலிங்கம்
Bcom.Dip.in. Educatition
இலங்கைக் கற்கைகள்
ஆசிரிய ஆலோசகர், சமூக விஞ்ஞானம்

திருமதி. ஜெயசக்தி ரவீந்திரன்
B.A. (Hons.) PGDE(ou)
புவியியல்
CCF மட்டக்களப்பு



திருமதி. பாக்கியவதி அன்ரனி B.A.
சமூகவியல்
ஆசிரியர் மட்/கோப்பாவெளி GTMS



செல்வி. A. ரஜனிதேவி
B.A.(Hons.) PGE.M.A
சமூகவியல்
செயற்றிட்ட உத்தியோகத்தர்
Save the Children in Sri Lanka.



திரு. S.ஸ்ரான்லி பிரபாகரன் B.A.
நுண்கலை



திரு. R. கிருபைராஜா B.A. (Hons.)
புவியியல்
விரிவுரையாளர், புவியியல்துறை கிழக்குப் பல்கலைக் கழகம்



திரு. குகதாசன் B.A.(Hons.)
சமூகவியல்
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு

செல்வி. R. சுதர்சினி B.A.
சமூகவியல்
உதவிப் பிரதேச செயலாளர் பட்டிப்பளை.

திருமதி. குணலஷ்மி சந்திரகுமார்
B.A. (Hons.) Dip.in.Edu.
சமூகவியல்
மட்/மணிபுரம் விக்னேஸ்வர வித்தியாலயம்

திரு. S. சசிதரன் B.A.(Hons.)
சமூகவியல்
வருகை விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம்



திரு. A.S. யோகராஜ்
SLPS, SLTES, B.A. PGDE (Pis) M.Ed. A in T.ed.(Cef)
விரிவுரையாளர், தேசிய கல்வியியல் கல்லூரி, மட்டக்களப்பு



திரு. E. மகேசன்
B.A. PGDE (Merit NIE) PGDE (ousl) M.Ed.(NIE)
விரிவுரையாளர், கல்விப் பிரிவு கிழக்குப் பல்லைக்கழகம்



திரு. T. இளங்கோவன்
B.A.(Hons.) Dip.in.Edu
புவியியல்
ஆசிரியர்

திரு. V. ஜீவநாதன்
(SLEAS) B.Com (Hons.) Dip.in.Edu(Merit)
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண கல்வித் திணைக்களம் (கிழக்கு)
திருகோணமலை

செல்வி G. வாசுகி B.A. (Hons.)
மெய்யியல் சிறப்பு
ஆசிரியை மட்/அமிர்தகழி ஸ்ரீசித்தி விநாயகர் வித்.



திரு. S. நவநீதன் B.A.(Hons.)
புவியியல்



திரு. C. சசிகரன் B.Econ.
பொருளியல்



திரு. P.L. சகாயராஜ் B.A.
முன்னாள் நிதி உதவியாளர்
ஆசிரியர்



திரு. பிரகாஸ் B.A.
முன்னாள் நிதி உதவியாளர்
ஆசிரியர்

ஆழிப்பேரலை (26-12-2004) காவு கொண்ட

முன்னாள் தமிழ் விரிவுரையாளர்

(கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி)

அமரர். திருமதி. சியாமளாதேவி பிரபாகரன்

அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலிகள்

	பொருளடக்கம்	பக்கம்
1.	சமூக அடுக்கமைவு	01 - 06
2.	மனிதம் (கவிதை)	07
3.	மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலுடன் இணைந்த மரபுகளும் கலாசார அம்சங்களும்	08 - 10
4.	அது ஒரு பொற்காலம்	11 - 12
5.	அகதியின் அவலம்	13
6.	வகுப்பறை கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களின் வகிபாகமும் புதிய 5E அணுகு முறையும்	14 - 19
7.	மரணப் படுக்கையில் மனிதம் (கவிதை)	20
8.	அளவையியலில் நியமமில் போலிகள் ஓர் அறிமுகம்	21 - 27
9.	புகழ் பரவட்டும்	28
10.	வெளிச்சம் (கவிதை)	29
11.	உலகில் மிகப் பெரியவைகள்	30
12.	கலை பற்றிய எண்ணக்கரு	31 - 37
13.	சுனாமி அனர்த்தத்திற்குப் பின் இலங்கையின் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்ட துரித மாற்றங்கள்	38 - 47
14.	நீங்கா நினைவு	48
15.	என் கண்ணான பெண் இவள் (கவிதை)	49
16.	ஈழத்தில் எழுந்த முதல் அம்மானை அர்ச்.யாகப்பர் அம்மானை குறித்த நோக்கு	50 - 58
17.	கல்லூரி நினைவுகள் (கவிதை)	59
18.	மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாரியம்மன் வழிபாடு சுப்பிரமணியவால பத்ததியை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு	60 - 66
19.	உலகில் மனித, இயற்கை செயற்பாடுகளும் காலநிலையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் மாற்றங்களும்	67 - 74
20.	இலங்கையில் 1977இன் பின்னர் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்	75 - 78
21.	ஈழத்து நவீன தமிழ்க் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்	79 - 85
22.	சிறப்புத்தன்மை கொண்ட சுவிஸ் சமஷ்டி அமைப்பு	86 - 91
23.	பாடசாலைக் கல்வியில் மாணவர் இடைவிலகல் ஒரு நோக்கு	92 - 98
24.	காலனித்துவத்திற்குப் பின்னரான வாதம் - ஒரு சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டம்	99 - 102
25.	மலராதோ புதுவாழ்வு? புலராதோ சமாதானம்	103 - 104
26.	ஞாபகம் தாலாட்டும் (சிறுகதை)	105 - 109
27.	உயிர் வாழும் உரிமையைப் பாதிக்கின்ற சூழல் உரிமை மீறல்கள்	110 - 113
28.	நெறியாள்கையும் நெறியாளரும்	114 - 117
29.	போசிப்பதல்லவா உன் வேலை (கவிதை)	118
30.	காலத்தின் கவலை இல்லாமல் (கவிதை)	118
31.	நினைவின் நிழல்கள்	119 - 123

சமூக அடுக்கமைவு (SOCIAL STRATIFICATION)

மனித சமூகத்தின் அனைத்து வகைகளிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்க சமூகவியலாளர்கள் "சமூக அடுக்கமைவு" எனும் கலைச் சொல்லைப் பயன்படுத்தினர். ஏற்றத்தாழ்வு என்பது ஒவ்வொரு மனித வரலாற்றுக் காலகட்டத்திலும் பிரதான பிரச்சினையாக இருந்து வருகின்றது. யாவரும் சமமாக வாழக்கூடிய, சமத்துவச் சமூகம் என்பது மனித சமூகத்தின் கனவாகவே இருக்கின்றது. ஏனெனில் எளிமையான சிறிய சமூகங்கள் முதல் நவீன சிக்கலான சமூகங்கள் வரை மக்கள் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், சந்தர்ப்பத்திலும் சமத்துவ நிலையை எதிர்கொள்கின்றனர். இவ் வகையில் உலகின் முழுமையான தன்மையினை எடுத்து நோக்கும் போது விருத்தியடைந்த நாடுகள், விருத்தியடையாத நாடுகள் எனவும், இதில் விருத்தியடைந்த நாடுகள் பொருளாதாரம், தொழிநுட்பம், கருத்தியல் சார்ந்தும் உயர்வான நிலையில் காணப்பட ஏனைய விருத்தியடையாத நாடுகள் பொருளாதாரம், தொழில்நுட்பம், கருத்தியல் சார்ந்தும் பின்தங்கிய நாடுகளாகக் காணப்படுவது போல் இன்றைய உலகம் பலருக்குத் தோற்றமளிப்பதாகவும் உள்ளது.

தனிநபர்களுக்கிடையேயும் குழுக்களுக்கிடையேயும் நிலவும் ஏற்றத்தாழ்வினைச் சுட்டிக் காட்ட பல்வேறு அறிஞர்களும் அடுக்கமைவு, சமத்துவமின்மை என்னும் எண்ணக்கருக்களைப் பயன்படுத்துகின்றனர். இதில் சமூக சமத்துவமின்மை என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வு நிலைகளைச் சுட்டி நிற்கின்றது. சமூக அடுக்கமைவு என்பது வருவாய், செல்வச் செழுமை, அதிகாரம், சமூக மதிப்பு நிலை, அந்தஸ்து என்பவற்றின் காரணமாக சமூகக் குழுக்கள் தரப்படுத்தப்பட்ட நிலையினைக் குறித்து நிற்கின்றது.

சமுதாயங்களில் அவரவர் செய்யும் தொழிலின் உட்பிரிவுகளின் தன்மைக்கேற்ப சமநிலையின்மையும், உயர்வு தாழ்வும் நிலவுகின்றன. ஒத்த தன்மையுடைய தொழிலைச் செய்வோர் அனைவரும் சமுதாயத்தில் ஒரு தனிக்குழுவாக மதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சமுதாயக் குழுவிற்கென்றும் ஒரு தகுதி (Status) நிர்ணயிக்கப்படுகின்றது. இத் தகுதி சமுதாயக் குழுக்களுக்கிடையே உள்ள வேறுபாட்டைப் பொறுத்து அமைகின்றது. இவ்வாறு மக்கள் அவரவருக்கென்று ஏற்படுத்திக் கொள்ளும் தகுதியானது சமுதாய அங்கத்தவர்களைப் பலதரப் பிரிவுகளாகப் (Ranks) பிரித்து அதன் மூலம் ஏற்றத்தாழ்வுடைய பல படிநிலைகளை (Hierarchy) ஏற்படுத்துகிறது. இதுவே சமூக அடுக்கமைவு (Social Stratification) என்னும் நிலையை ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றது. சமூகத்திலுள்ள உடைமைகள், மனவெழுச்சிகள், சமூக நிலைகளின் படி நிலை உருவ அமைப்பையும் சமூக அடுக்கமைவு என பொதுவாகக் குறிப்பிடலாம்.

சமூக அடுக்கமைவு தொடர்பாக கிட்டென்ஸ் குறிப்பிடும் போது "பல்வேறு மக்கள் குழுவமைப்புக்களிடையே நிலவும் கட்டமைப்புசார் சமமின்மை அல்லது ஏற்றத் தாழ்வையே இது குறித்து நிற்கின்றது" என்கின்றார். (Giddens 1989) சமமின்மைக்கு காரணமாக உண்மையாக உணரப்படுவது வருவாய், செல்வச் செழுமை, அதிகாரம், சமூக மதிப்பு நிலை, வயது, மக்களின் பண்பு, சமூக சார்பான (சில வேளைகளில் பௌதிகச் சார்பான) பிற சிறப்பியல்புகள் என்னும் பரிமாணங்களின் குறிப்பிட்ட இணைப்பின் அடிப்படையில் சமூகத்திலுள்ளே காணப்படும் படிநிலை வரிசையமைப்பே "சமூக அடுக்கமைவு" என டிரொங்கர்ஸ் (1985) குறிப்பிடுகின்றனர். குறிப்பாக இக்கருத்தானது சமூகத்தில்

சலுகைகள் குறைந்தவர்களை அடிமட்டத்திற்கு அண்மையிலும், சிறப்புரிமைகள் பெரிதும் பெற்றவர்களை உச்சியிலும் வைத்து ஏறு நிலையமைப்பின் அடுக்குகள் கொண்டவையாகவே நோக்கப்படுகின்றன.

இவ்வாறான சமூக அடுக்கமைவானது வேறுபாட்டினை மட்டுமன்றி அதனை வெளிப்படுத்தும் வகையிலும் செயற்படுகின்றது. ஏனெனில் அடுக்கமைவு தனிவகைப்பாடாக இருந்த போதிலும் சமூக ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்துகின்ற பொழுது பல்வேறு பரிமாணங்களையும் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக சாதி முறைமை சமூக அடுக்கமைவில் ஒரு முக்கியமான வடிவமாகும். இது தொழில், பால், சடங்கு முறைகள் எனும் வடிவங்களோடு இணைந்து நின்று செயற்படுகின்றது. இவற்றோடு சமூகங்களின் உயர்நிலை ஒழுங்கமைப்பினையும் குறித்துக் காட்டுகின்றது. ஏனெனில் குறித்த ஒரு படி நிலையில் உள்ள அங்கத்தவர்கள் தங்களுக்கிடையே சில பொதுவான அடையாளம், வாழ்க்கை முறைகள், செயற்பாடுகள் என்பவற்றைப் பகிர்ந்து தமக்குக் கிடைத்திருக்கும் உயர்வான வெகுமதிகளைக் கொண்டு வேறுபட்ட படிநிலையில் இருக்கும் அங்கத்தவர்களின் தாழ்வான வெகுமதிகளை ஒப்பிட்டு மகிழ்வதுடன், அதிகமான சலுகைகளையும் இதன் மூலம் அனுபவிக்கின்றனர்.

வயது, உடல்நலம், உடலியற்பலம், மனோபலம், ஆட்பலம் போன்றவை இயற்கையின் சமத்துவமின்மையால் உருவாக்கப்பட்டவை என ரூசோ குறிப்பிடுகின்றார். இவையாவும் சமூகரீதியாக, பண்பாட்டு ரீதியாக, பரிமாண வளர்ச்சி அடைந்து சமூகத்தில் வலுப்பெற்றன என்பதை நாம் ஏற்றுக் கொண்ட போதும் இதனால் மக்கள் எதிர்கொள்ளும் நேர், எதிர் விளைவுகளுக்கும் காரணம் இயற்கை அன்று சமூகமே என்பதனை உணரக்கூடியதாக உள்ளது.

இது பற்றி துர்க்கைம் குறிப்பிடும் போது கூட்டுப் பிரதிநிதித்துவம் (Collective representation) என்பதே அனைத்துச் சமூகங்களுக்குமுரிய தனித்துவ இயல்பாகும். நம்பிக்கை, கருத்துக்கள், விழுமியங்கள் போன்ற கூட்டு உணர்வுகள் குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கும் பொதுவானமையாகக் காணப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சூழவுள்ள உலகினை நேரடியாகவே உணர்ந்து கொள்கின்றான். இவ்வுணர்வு நிலை மனிதனுக்கும் அவன் சார்ந்த சமூகத்திற்கும் இடையே சமரச நிலையினை உருவாக்கும் அதேவேளை ஏற்றத்தாழ்வினை உள்வாங்கிக் கொள்வதற்கும், அவற்றினை நிலை நிறுத்துவதற்கும் துணை செய்வதாகவும் உள்ளது என்கின்றார்.

மார்க்சியவாதிகள் அடுக்கமைவு பற்றிக் குறிப்பிடும் போது அனைத்துச் சமூகங்களிலும் இரு வேறுபட்ட குழுக்கள் காணப்படும் எனவும், இதில் ஒரு குழு ஆளும் குழுவாகவும், இன்னோர் குழு ஆளப்படும் குழுவாகவும் காணப்படும் எனவும் உற்பத்திச் சாதனங்கள் மீதான உரிமையானது ஆளும் குழுவுக்கு வேண்டிய வலுவினை வழங்குகின்றத எனவும், இவ்விரு குழுக்களும் இடையே அடிப்படையில் முரண்பாடானது ஏற்படும் எனவும் குறிப்பிடுவதுடன் உற்பத்திச் சாதனங்களோடு மக்கள் கொண்டுள்ள தொடர்புகளின் வழியே சமூக அடுக்கு முறை, என்பது தோற்றம் பெறுகின்றது எனவும் குறிப்பிடுகின்றனர். மார்க்சிய வாதியான கார்ல்மாக்ஸ் அனைத்துச் சமூகங்களிலும் நிலவுகின்ற அடுக்கமைவு நிலையினை விளக்குவதற்கு வர்க்கம்(Class) என்னும் சொற்பதத்தினைப் பயன்படுத்துகின்றார்.

இதுபற்றி மேலும் அவர் குறிப்பிடும் போது, ஓர் உற்பத்தி நிறுவனத்தில் ஒரே மாதிரிவகையான செயல்களை செய்பவர்களின் கூட்டமைப்பே வர்க்க அமைப்பு எனவும். இது தொழில், வருமானம், ஒரு மனிதன் சமூகத்தில் பெற்றுள்ள நிலை என்பவை மட்டுமல்லாது மக்களின்

நெருக்கம், அவர்களிடையே அதிக தொடர்பு, அதனால் ஏற்படும் வர்க்க உணர்வு, பொருளாதார வெகுமதி பெறுவதில் ஏற்படும் முரண்பாடு என்பனவும் வர்க்க அமைப்பு உருவாகுவதற்குக் காரணமாக அமைகின்றது என்கின்றார். இவ்வாறான காரணங்களால் உருவாக்கப்படும் வர்க்கங்களுள் ஒன்றான முதலாளித்துவ வர்க்கத்தினரிடமே பொருளாதாரம் அரசியல் கருத்தியல், அதிகாரம் என்பன காணப்படுவதுடன் இவற்றின் துணையுடனேயே உற்பத்திச் சாதனங்கள், உற்பத்தியாளர்கள் சமூகத்தின் மேல் கட்டுமானங்கள், அடிக்கட்டுமானங்கள் போன்ற அனைத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமையினையும் பெற்றுக் கொள்கின்றனர். இவற்றின் அடித்தளத்தினை பொருளாதார மேலாதிக்கமும், அரசியல் மேலாதிக்கமும் நிர்ணயம் செய்கின்றன. இங்கு கருத்தியல் மேலாதிக்கமானது மனோ நிலை ரீதியாக நியாயப்படுத்தலினை வழங்குவதாக உள்ளது.

மர்க்கஸ்வெபரின் அடுக்கமைவு தொடர்பான பார்வைக்கு கார்ல்மாக்சின் கருத்துக்கள் ஆதாரமாக இருப்பினும் வெபரின் சமூக அடுக்கமைவு பற்றிய பார்வையானது பின்வரும் பரிமாணங்களுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

1. வர்க்கம் (Class) - பொருளாதார ரீதியானது
2. தகுதி / அந்தஸ்து (Status) - சமூக கௌரவம் சார்ந்தது
3. அதிகாரம் (Power) - அரசியல் ரீதியானது.

வெபர், சந்தைப் பொருளாதார அமைப்பு முறையில் தனிநபர்கள் போட்டியிடுகின்ற பொழுது வேறுபட்ட வர்க்கங்கள் விருத்தியடையும் எனவும், சந்தை நிலையானது வர்க்கங்களின் நிலைப்பிற்கு காரணமாக அமைகின்றது எனவும் குறிப்பிடுவதுடன் சந்தைசார் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் வேறுபட்ட வர்க்கங்களினால் மாறுபட்ட முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன எனவும் விளக்குகின்றார். எனவே வர்க்க அமைப்பினை குழுக் கருத்தில்தான் கொள்ள வேண்டுமேயொழிய தனிமனிதக் கருத்தில் பார்க்கக்கூடாது.

ஒரு வர்க்க அமைப்பினுள் வர்க்க உணர்வு தோன்றும் பொழுது அது ஒரு தகுதிக் குழுவாகக் கருதப்படுகின்றது. இக்குழு உறுப்பினர்களிடையே பொது கலாசாரம், அவர்களது பொருள் மற்றும் கருத்துக்களில் காணும் பொழுது இது தகுதி (அந்தஸ்து) குழுவாகக் கருதப்படுகின்றது. இக் குழுவினர் தங்களது தகுதியினை தாங்கள் கொண்டுள்ள பொருட்களின் மூலம் வெளிப்படுத்துவர். இது அவர்களது அடையாளமாக இருப்பதுடன், இத்தகைய செயலை அனைத்து வர்க்கங்களிலும் காணலாம் எனவும் வெபர் கூறுகிறார். வர்க்கத்திற்கும் தகுதிக்கும் உள்ள தொடர்பை முதலாளித்துவ சமூகத்தில் வெளிப்படையாகக் காணலாம், எனவும் இத்தகைய சமூகத்தில் பொருளாதார நிலையில் உயர்ந்துள்ளவர்கள் உயர்ந்த தகுதியை அடைகின்றார்கள் எனவும், ஆனால் அதே வர்க்கத தகுதியை சொத்தில்லாத குழுக்களும் பெறுகின்றனர் எனவும் கூறும் மக்ஸ்வெபர் இதற்கு உதாரணமாக இந்தியாவில் ஒரு உயர்ந்த சாதி மனிதனும், சொத்துடைய நடுத்தரவர்க்க மனிதனின் தகுதியையே பெறுகின்றான் என எடுத்துக் காட்டுகின்றார்.

சமூக அடுக்கமைப்பானது அசாதாரணமானது, மற்றும் சமுதாயத்தை பல குழுக்களாக வகைப்படுத்தி அவற்றிற்கென தனிப்பட்ட வாழ்க்கை முறையையும் கண்ணோட்டத்தையும் தருகின்றது எனவும் இது பற்றி மேலும் வெபர் விளக்குவதுடன் இத்தகைய வகுப்பு குழுக்களும், தகுதி குழுக்களும் மேல்நிலை, மற்றும் கீழ்நிலை என்ற நிலையான அந்தஸ்து வகையையும் வெளிப்படுத்துகின்றது எனவும் குறிப்பிடுகின்றார்.

வெபர் அடக்கு முறையைப் பற்றி ஆராயும் பொழுது, பலம் பற்றிக் குறிப்பிடுகிறார். பலம் என்பது மனிதனுக்கு பலவழிகளில் இருந்து கிடைப்பதால் அதை பன்மைத் தன்மையில் விளக்குவதுடன், இவற்றுக்கு பொருளாதார உறவு மேலான காரணியாகக் காணப்பட்டாலும் மனிதனின் தகுதியை நிர்ணயிப்பதில் சமூக சமுதாய, அரசியல் மற்றும் மத பலமும் முக்கியபங்கு வகிக்கின்றன என்றும் வெபர் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக பொருளாதார நிலையில் இருக்கும் நிலவுடமையாளர்கள், கோயில் குருக்கள், உயர் அதிகாரிகள், தொழிலதிபர் ஒரே வகையான தகுதியைப் பெறுகின்றார்கள்.

சமூகவியலாளர் அடுக்கமைவு தொடர்பான பின்வரும் நான்கு ஆதார ஒழுக்கங்களை இணங்கண்டுள்ளனர். அவை முறையே அடிமைமுறை, சாதிமுறை, சொத்துமுறை அல்லது பண்ணைமுறை, வர்க்கமுறை என்பனவாகும்.

அடிமை முறை

இம்முறையின் கீழ் தனிநபர்கள் பலமுள்ள நபர்களினால் அவர்களது உடமைகளாக அல்லது சொத்தாகக் கருதப்படுகின்றார். குறிப்பாக இம்முறையை வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகவும், வீட்டு வேலையாட்களாகவும் முழு உரிமையுடன் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமையிற் காணலாம். ஆனால் இன்றைய நிலையில் இந்த அடிமைத்தன்மை என்பது உலகிலிருந்து முற்றாக ஒழிந்துவிட்டது என்பதை அறியலாம்.

சாதி முறை

இம்முறையானது பொதுவாக தென்னாசியப் பண்புகளுடனேயே தொடர்புபடுத்தப்பட்டுப் பார்க்கப்படுகின்றது. இந்தியாவில் சாதித் தன்மையைக் குறிக்க "வர்ணம்" "ஜாதி" எனும் இரு சொற்களைப் பிரயோகிக்கின்றனர். இந்த சாதித் தன்மையானது இந்து நம்பிக்கைகளோடு நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இம்முறை இந்தியச் சமயச் செல்வாக்கிற்கு உட்பட்ட அயல் நாடுகளுக்கும் பரவியுள்ளது. எனவே சாதி என்பது அகமனமுறையைக் கொண்ட ஓர் அமைப்பாகவும் காணப்படுவதுடன், பிறப்பின் அடிப்படையிலும் இதன் தகுதி தீர்மானிக்கப்படுகின்றது. சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்குமெனத் தனித் தகுநிலை நிர்ணயிக்கப்பட்டு பின் அனைத்துச் சாதிகளும் ஒரு படிநிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான படிநிலையில் மேலுள்ள சாதி உயர்ந்ததென்றும், அதற்கடுத்துள்ள சாதி தாழ்ந்ததென்றும், அதற்கடுத்தது மேலும் தாழ்ந்தது என்றும் படிநிலை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு உயர்ந்த சாதியினர் தூய்மை (Purlty) தீட்டு (Pollution) ஆகிய வேறுபாடுகளை தடுப்புச் சுவர்களாக ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் சமுதாய பொருளாதார ஆதாயத்தை நிலைப்படுத்திக் கொண்டுள்ளனர். குறிப்பாக தீண்டத்தகாதவர்கள் (ஹரிசனங்கள்) சாதி படிநிலையில் கீழ் மட்டத்திலேயே வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான சாதியமைப்பு முறையானது சில சமூகங்களில் சிதைக்கும் காரணியாக அமைய ஏனைய சமூகங்களில் இது வாழ்க்கை வாய்ப்புக்களைத் தீர்மானிக்கும் காரணியாக இப்போதும் தொடர்ந்தும் செயற்படுகின்றது.

சொத்து முறை

இம்முறை வேறுபடும் கடமைகளையும், உரிமைகளையும் கொண்டதாகும். இதில் சில வேறுபாடுகள் சட்ட பூர்வமாக நிறுவப்பட்டதுடன் தனக்கேயுரிய அடுக்குகளையும் கொண்ட அமைப்பாகவுள்ளது. எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் பிரபுக்களும், மேற்குலத்தோரும் உச்ச சொத்து நிலையினராய் இருக்க கிறிஸ்தவ மதகுருமார் அவர்களிலும் தாழ்ந்த அந்தஸ்தை பெற்றிருந்தாலும் தமக்கேயுரிய சிறப்புரிமைகளைப் பெற்றுள்ளனர். மூன்றாம்

சொத்து நிலையில் பொதுமக்கள், ஒப்பந்தக்காரர்கள், சுதந்திர வேளார்கள், வணிகர்கள், கைப்பணியாளர்கள் அடங்குகின்றனர்.

வர்க்க முறை

வர்க்கம் என்பது வாழ்க்கை நடைமுறைகளின் மீது கடுஞ் செல்வாக்குச் செலுத்தும். பொதுவாக பொருளாதார வளங்களின் பங்காளிகளான பேரளவு மக்கள் தொகுதியென வரைவிலக்கணம் கூறலாம். வர்க்க வேறுபாடுகளின் பிரதான அடிப்படை சொத்துரிமையும், தொழிலும் ஆகும். பின்வருவன இனங்காணப்பட்ட ஏ க அமைப்புகளாகக் காணப்படுகின்றன.

1) மேல் வர்க்கம் (Uper Class) செல்வந்தர்கள், தொழில்வழங்குனர்கள், தொழிலதிபர்கள், நிறைவேற்று நிருவாகிகள்.

2) நடுத்தர வர்க்கம் (Middle Class) பெரும்பாலான வெள்ளாடைப் பணியாளர்கள், உழவுத் - தொழிலாளர்கள்.

3) உழைப்பாளர் வர்க்கம் (Working Class) நீல உடைத் தொழிலாளர்கள். (Blue Colour Job) இதனை 3ஆகப் பிரிக்கலாம்.

1. புதிய தொழிலாளர் வர்க்கம் (New Working Class) சுயமாக கைத்தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள்.

2. பாரம்பரியமான தொழிலாளர் வர்க்கம் (Traditional Working Class)

3. குறிநிலை / தாழ்வான வர்க்கம் (Under Class) தரம் குறைவான வேலையில் ஈடுபடுபவர்கள் உதாரணம் பிச்சைக்காரர்கள், வேலையில்லாதவர்கள்.

எனவே சாதி என்பது மிகவும் இறுக்கமானதாகவும், ஒப்பீட்டளவில் அரிதாகவும் காணப்பட வர்க்க அமைப்பானது நெகிழ்ச்சி மிக்கதாகவும், ஒப்பீட்டளவில் பெரும்பான்மையான சமூகங்களில் நிலை பெறுவதாகவும் காணப்படுகிறது. நவீனமயமாக்கம், கல்வி விரிவாக்கம் என்பன காரணமாக இலங்கையில் சாதி முறையின் படிநிலையமைப்பானது படிப்படியாகத் தேய்வடைந்து வர்க்க முறைக்குள் தங்களது நிலையினை நிலை நிறுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுபவர்களாக உள்ளனர்.

தற்போதைய நிலையினை எடுத்து நோக்கின் சமத்துவமின்மையின் அடித்தளங்களாக இனம் (Race), இனத்துவம் (Ethnicity), பால்நிலை (Gender) என்பனவும் காணப்பகின்றன. இன ரீதியாக அடுக்கமைக்கப்பட்டுள்ள சமூகங்களில் மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் தொழில், வருமானம், என்பதற்கு மாறாக தோலின் நிறமே ஒருவரின் தகுதியைத் தீர்மானிப்பதாக இருப்பதுடன் பிற்படுத்தப்பட்ட இனங்கள் இச் சமூகங்களிலும் இழிவான நிலையிலும், முன்னுரிமை பெற்ற இனங்கள் உயர்நிலையிலும் வாழ்கின்றன.

இதேபோல் இனத்துவம் என்பது ஏற்றத்தாழ்வினை வெளிப்படுத்தும் பிரதான காரணியாகக் காணப்படுவதுடன், தேசிய பிரிவுணர்வு வாதத்திற்கும், அரசியல் சார்பு நிலை என்பனவற்றுக்கும் காரணமாக அமைகின்றது. இதற்கு இலங்கை சிறந்ததொரு உதாரணமாகும். இனத்துவம் என்பது மக்களுக்கிடையில் இருக்கின்ற உணர்வு நிலை, மொழி, மதம், பிறப்பிடம், வரலாறு, ஐதீகம் (Myth) என்பன போன்ற பல அம்சங்களைத் தீர்மானிப்பதாக உள்ளது.

பால் நிலை வேறுபாடானது சமூகக் காரணிகளால் உருவாக்கம் பெற்றதாக-

வுள்ளது. இன்றைய நிலையில் பெண்களுக்கு எதிரான அடக்கு முறை என்பது சமத்துவமின்மை தொடர்பான பகுப்பாய்வில் முக்கியம் பெறுகின்றது. தனிச் சொத்துரிமையின் விளைவாக பெண்கள் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. அது போல் முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி முறையானது இல்ல உற்பத்தி முறையினை அடையாளம் கண்டுகொள்ள முயலவில்லை. இதன் அடிப்படையில் டெல்பி (Delphy) இது பற்றிக் குறிப்பிடும்போது இல்லத்து உற்பத்தி முறையில் பெண்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. மாறாக அவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள் என்கின்றார். இதேபோல் இயற்கைவாதக் கோட்பாட்டாளர்கள், இயற்கையின் குணாதிசயங்கள் காரணமாக பெண்கள் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் எனவும், இயற்கையாகவே பெண்கள் தகுதி நிலை தாழ்வாகவும் காணப்படுவதன் காரணமாகவே பெண்களின் சார்பு நிலை தோன்றி நிலை பெறுகின்றது எனவும் குறிப்பிடுகின்றனர். பெண்கள் தொடர்பான அடக்கு முறை நிலையின் கருத்துருவாக்கமானது பால் நிலையினை அரசியல் எல்லைக்குள் கொண்டு வந்திருப்பதுடன், பெண்ணுரிமைக் கோட்பாடானது பெண்களின் விடுதலையினை கோரிநிற்க, பெண்ணியவாத விஞ்ஞானமானது பெண்கள் சார் அடக்கு முறையினை விளக்கி நிற்கின்றது.

எனவே சமூக அடுக்கமைவு என்பது சமூகத்தின் மத்தியில் வேறுபாட்டினை வெளிப்படுத்துவதாக இருப்பதனை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். அடுக்கமைவு, படிநிலை ஒழுங்கு, சாதி, வர்க்கம், வலு, இனம், இனத்துவம், பால்நிலை போன்ற பல்வேறு அறிஞர்களும் பயன்படுத்துகின்றனர். எனினும் ஏற்றத்தாழ்வு என்பது அனைத்து சமூகங்களிலும் வியாபகத்தன்மையைக் கொண்டிருக்கின்றது. ஆக சமூகங்களில் பாகுபாடு என்பது நிலைக்கும் வரை சமூகத்தில் அடுக்கமைவும் நிலைபெறும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

Bibliography

01. Gupta D (1991) - Social stratification, Delhi, Oxford University Press

02. Dumont L (1966) - Homohierarchius : the caste system and its Implications, Chicago, Chicaco University Press.

03. Robinson A (2006) Essays in : Social stratification and inequality Sri Lanka Boobalasingham Book Depot.

04. Coser LA (1971) Master of Social Thought Harcourt Brace Lavarno Vich, U.S.A

திருமதி நிரேகா தயாபரன்
B.A.(Hons.Dip.in.Edu
விரிவுரையாளர்,
சமூகவியல், கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி.

****

மனிதம்

நாங்கள் எல்லோரும் யார்?
நலம் நாடும் மனிதர்கள்
நலிவின்றி வாழ நினைக்கும்
நாற்றிசை வாழும் மக்கள்

தினம் தினம் மாறும் நாளில்
திருப்பமுள்ள வாழ்க்கைப் பாதையில்
திருந்தி வாழ வழி சமைப்போம்
திருப்தியுடன் இணைந்து வாழ்வோம்

தூய மனத்துடன் ஒன்று சேர்ந்து
துணிந்து சேவை செய்து
துயரமதை விலக்கிட முயன்றிடின்
தூர ஓடிவிடும் துன்பங்கள்

நாமெல்லாம் ஒரு தாய் மக்கள்
நமக்கில்லை வேறுபாடு
நான்கு கரங்கள் இணைந்திடின்
நமக்குள்ளே ஒற்றுமை உண்டு

வாழ்வினில் உயர்ந்து நிற்க
வகையாய் கை கொடுத்துதவிடும் கல்வி
வளமாக நற்பாதையில் வாழ்ந்து
விழி நீரின்றி பிறருக்கு வழிகாட்டிடுவோம்

சாதனைகள் பல படைக்க
சண்டைகள் எமக்கு வேண்டாம்
சாந்தோடு இன்பம் யாவும்
சார்ந்துமே மனிதரைக் காக்கும்

ம. லாவண்யா
1ம் வருடம் (B)

மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலுடன் இணைந்து மரபுகளும் கலாசார அம்சங்களும், சமகாலத்தில் அதன் மீதுள்ள தாக்கமும்

சமுதாயத்தில் பல்வேறு வகைப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். பிரதேச ரீதியாகவும், இன ரீதியாகவும் இம் மக்கள் தனித்துவம் பெறுகின்றனர். அந்த வகையில் மட்டக்களப்பு வாழ்மக்கள் பிரதேச ரீதியாக சில தனித்துவங்களைப் பெற்றுள்ளனர். அவை கலாசார மரபுகளாகவும் பண்பாடுகளாகவும் அமைகின்றன. இவற்றை ஒரு சமூகம் பண்பாட்டு ரீதியாக தலைமுறை தலைமுறை ரீதியாக பேணிப்பாதுகாத்து வருகின்றது. கிராமப் புறங்களில் இத்தகைய வாழ்க்கை நெறி முறைகளைக் காணலாம்.

அவற்றை பின்வருமாறு சுருக்கமாக வகைப்படுத்தலாம்.

01.	கலாசார மரபுகள்	02.	கலை வடிவங்கள்
03.	சம்பிரதாய நடைமுறைகள்	04.	பழக்கவழக்கங்கள்
05.	சமய நம்பிக்கைகள், அனுஷ்டானங்கள்	06.	வாழ்க்கை நெறிமுறைகள்
07.	ஒழுக்க விழுமியங்கள்	08.	ஆசாரங்கள்
09.	சமய சமூகக் கட்டுப்பாடுகள்	10.	வணக்க முறைகள்

இவை ஒவ்வொன்றும் ஒரு சமூகத்தின் தனித்துவ அடையாளங்களாகும். இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது தற்காலத்தில் அவசியமான ஒன்றாக இருக்கின்றது. இளைய தலைமுறையினரின் போலித்தனமான வாழ்க்கை முறை மேற்படி நடைமுறைகளில் இருந்து விலகி அன்னிய கலாசாரத்தில் மூழ்குவதற்கு ஏதுவாய் அமைகின்றது. இவை ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்வதன் மூலமே இதன் தாற்பரியங்களை அறியக்கூடியதாக இருக்கும்.

இக்கட்டுரை கலாசார மரபுகளையும், பண்பாடுகளையும் விரிவாக ஆராய்வதனை விடுத்து, சமகாலத்தில் அதன் தாக்கம் எந்தளவுக்கு உள்ளது என்பதை பற்றியே நோக்குகின்றது.

"கலாசாரம் என்பது காலத்தால் சிதைத்துவிட முடியாதது காலத்தால் மெருகூட்டப்பட்டால் அதன் கனதி குறைந்து விடுமே அன்றி சிறந்து நிற்கும்" என்பது மரபுவழிப் பண்புகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்போரின் கருத்தாகும். மறுபுறம் மாறிவரும் சமூகக்கட்டமைப்புக்கேற்ற தன்னை மாற்றிக் கொள்ளாத ஒரு சமூகம், நாகரிகமும் அபிவிருத்தியும் அடைய முடியாது என்பது முற்போக்கு வாதிகளின் கருத்து. இதற்கிடையே மாற்றமே நிகழாத அடிப்படையில் மாண்பிற் சிறந்த சில பண்பாட்டு மரபுகளையும், கலை வடிவங்களையும், சம்பிரதாயங்களையும் தன்னகத்தே கொண்டு மட்டக்களப்பு இன்னும் சிறப்புற்று விளங்குகின்றது. மட்டக்களப்பில் இன்னும் சில மரபுகளும், கலை அம்சங்களும் மாறாதவையாக மாற்ற முடியாதவையாகக் காணப்படுகின்றன. இதற்குப் பிரதானமான காரணம் கிராமப்புற மக்கள் மரபுரீதியான சில அம்சங்களை கவனத்திற் கொண்டு வருகின்றமை அல்லது பின்பற்றுகின்றமையாகும். இதனால்தான் நாம் அடையாளப்படுத்தக் கூடியளவுக்கு கலாசாரம் நிலைத்து நிற்கின்றது. இல்லாவிட்டால் அவை அழிந்துவிடும்.

ஈழத்துத் தமிழர்களுக்கு உரித்தான அடையாளங்களை நெறிப்படுத்த முனைந்த பேராசிரியர். சி. மௌனகுரு அவர்கள், "பிராமணிய சடங்கிற்கு மாற்றாக கோயில் பூசாரிகளின் சடங்கும், பரத நாட்டியத்திற்குப் பதிலாகக் கூத்தும், தவிலுக்குப் பதிலாக பறை மேளமும் அடையாளமாக இருக்கின்றது" எனக் குறிப்பிட்டார். இந்த அடிப்படையில் பார்க்கும் போது சடங்கு சம்பிரதாயங்களுக்கும் கூத்து, பறை மேளம் போன்ற கலை வடிவங்களுக்கும் உரிய தளம் மட்டக்களப்புப் பிரதேசம் எனத் தெளிவாகக் கோடிட்டுக் காட்ட முடியும். அந்தளவிற்கு கலை மரபுகளும் சம்பிரதாயங்களும் மட்டக்களப்பு மக்களின் வாழ்வியல் முறைகளோடு இரண்டறக் கலந்து விட்டன. இக் கலை மரபுகளும் சம்பிரதாயங்களும் பல்வேறுபட்ட காரணிகளால் பாதிப்படைந்து வருகின்றன. கடந்த 50 ஆண்டு காலத்தில் இப் பாதிப்புக்கள் துலாம்பரமாகத் தெரிவதுடன் அவை தீவிரமடைந்தும் வருகின்றன.

இக் காரணிகள் பலவாறாக இருப்பினும் முக்கியமாக சிலவற்றை நாம் பின்வருமாறு இனம் காணலாம்.

01. அந்நிய மோகம்

அந்நிய கலாசாரங்களின் மேல் நம்மவர் கொண்டுள்ள அதீத நம்பிக்கையும், அசையும் எமக்குரிய கலாசார மரபுகளை விட்டு வழிவிலகி அந்நிய கருத்தியல்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ள முனைகின்றனர். குறிப்பாக 1980இன் பின் அதிதீவிரமடைந்த பெண்ணிலைவாத சிந்தனை இன்று பெண்கள் ஆடை அணிவதில் இருந்த கலைமரபை மாற்றியுள்ளது. இதேபோல் "கொக்ககோலா" கலாசாரம் இன்று மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களில் இருந்த மரபை மாற்றியுள்ளது.

02. ஊடகங்களின் தாக்கம்

இன்று எந்த சிரமமும் இன்றி இலகுவான பொழுது போக்கு சாதனங்களின் ஊடுருவல் மக்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டுள்ளன. உதாரணம்: சினிமா வானொலி, குறுந்திரைப்படம் போன்றன அதிகளவு தாக்கத்தை மக்கள் மத்தியில் செலுத்தியதன் விளைவாக பாரம்பரிய கலைமரபுகளின் பால் மக்களுக்கு இருந்த ஈடுபாடு இயல்பாகவே குறையத் தொடங்கியது.

03. உலகமயமாதலும், அதன் ஊடுருவலும்

இன்றைய உலகமயமாதலின் போக்கு கீழைத்தேய கலாசாரத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியதெனலாம். உதாரணமாக 1965களின் பின் மேலைத்தேய கலாசார முறையான "பொப் கலாசாரத்தை" (Pop Culture) குறிப்பிடலாம். இக்கால கட்டங்களில் மக்கள் மத்தியில் இக்கலாசாரம் நடைமுறையில் சுதந்திரமான காதல் உறவுகள் (Free Lovers) கிப்பி ஸ்டையில், சுதந்திரமான நட்பு போன்ற பண்புகளை எமது மக்களின் கலாசாரத்தில் உட்புகுத்தின. இதனால் மரபு வழியாகப் பேணப்பட்டுவந்த சமூகக் கட்டுக்கோப்புக்கள் சீர் குலைக்கப்பட்டன.

04. நமது பண்பாட்டு விழுமியங்களின் மேல் பற்றின்மை

இன்றைய இளைய தலைமுறையினரின் போலித்தனமான வாழ்க்கை முறைகள் அவர்களை எமது பாரம்பரிய பண்பாடுகளின் மேல் பற்றுக் கொள்ள செய்யவில்லை. பணப் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சி மனித வாழ்வியல் முறையில் மனிதனை

"Busy" மனிதனாக்கி விட்டது. ஓய்வு நேரங்களில் பொழுது போக்குக்காக இருந்த கலைகள் இன்று அவசியமற்ற ஒன்றாக மாறிவிட்டன.

05. நமது பாரம்பரிய பெருமை பற்றிய அறியாமை

எமது மரபுரீதியான அம்சங்களின் சிறப்புக்களை எமது மக்களின் அறியாமை காரணமாக அவைகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பொதுமக்கள் ஒன்று சேரக்கூடிய இடங்களில் மரபுக்கலை நிகழ்வுகள் அவசியமற்றதாகக் காணப்பட்டது. ஆரம்ப நாட்களில் திருவிழாக்கள், விசேட தினங்கள், திருமண கொண்டாட்ட தினங்கள் போன்ற இடங்களில் கூத்து, கரகம், கும்மி, கோலாட்டம் போன்ற கலைகள் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் இன்று அவ்வகையான மேடைகளில் சினிமாக் காட்சிகள் இடம்பெற்றன. இவ்விதமாக மக்கள் தொடர்ந்து அறியாமையின் வழியில் செல்வதானால் பாரம்பரிய கலைகள் மக்கள் அறியப்படாமலே மறைந்து செல்கின்றன.

06. வெளிநாட்டுத் தொடர்புகள்.

வெளிநாட்டுத் தொடர்புகளின் பால் நாகரிகத்தின் வளர்ச்சி அதிகரித்துள்ளது. கிராம மட்டத்தில் இந்தக் கட்டுக்கோப்புகள் சீர்குலைந்து நகரம், பட்டணம், மாவட்டம், மாகாணம், நாடு, சர்வதேசம் என்ற அடிப்படையில் தொடர்புகள் விரிவாக்கம் அடைந்தன. ஆரம்ப காலத்தில் மக்கள் முகாமைத்துவ நிர்வாகத்தின் கீழ் இருந்தனர். இன்று அந்த கிராம நிர்வாக கட்டமைப்பில் இருக்கத் தயாரில்லாதவர்களாய் மாறினர்.

07. வெளிநாட்டு அகதிவாழ்க்கை முறை

1980களின் பின் அதி தீவிரமடைந்த நாட்டின் பாதுகாப்பற்றதும், அமைதியற்றதுமான சூழ்நிலை ஒருபுறம் மக்களை வெளிநாட்டு அகதிவாழ்க்கைக்கு மாற்றியது. இதனால் கிராமமட்டத்தில் இருந்த மக்கள் தமது வாழ்க்கை முறையை வெளிநாட்டு வாழ்க்கை முறைக்கேற்க மாற்ற வேண்டிய தேவைக்கும், கட்டாயத்திற்கும் தள்ளப்பட்டனர். இதன் நிமித்தம் அக்கலாசார பண்புகள் இயல்பாக அவர்களது வாழ்க்கையை ஆக்கிரமித்தது. மறுபுறம் அமைதியற்ற சூழ்நிலையும், நாட்டில் இருந்த அவசரகால நிலமையும், மக்கள் ஒன்றுகூடுவதற்கான தடையையும் ஏற்படுத்தின. இதனால் கலை நிகழ்ச்சிகளையும் ஒன்று கூடல்களையும் நடத்தமுடியாமல் போயின.

இவ்வாறு கட்டாற்று வெள்ளம் போல இக்காரணிகளின் மரபுவழி வாழ்க்கையை மூழ்கடிப்பதனால் சமூகத்தில் கலாசார சீரழிவுகள் ஏற்படுவதுடன் ஒழுக்க விழுமியங்களும் பாதிப்படைகின்றன. ஒரு சமூகத்தின் தனித்துவ அடையாளமும் இல்லாமல் போகின்றது. இத்தகைய ஒரு பேராபத்தை தடுத்து நிறுத்தவேண்டியது அச்சமூகத்தின் தலையாய கடமையாகும்.

கே. ரவீந்திரன் B.A (Hons)
கலாசார மேம்பாட்டு அலுவலர்,
கலாசார அலுவல்கள் அமைச்சு.
(முன்னாள் விரிவுரையாளர் - மெய்யியல்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு)

அது ஒரு பொற்காலம்

1998ம் ஆண்டு என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு காலகட்டத்தில் ஓர் ஆரம்பப் பகுதியாகும். 1998 - 01 - 01 தொடக்கம் 2000 - 07 - 16 வரையிலான காலப்பகுதி என் வாழ்வினில் ஒரு பொற்காலம் என்று கூறிக் கொள்வதில் நான் இன்னும் பெருமையடைகின்றேன்.

கடந்த காலத்தில் என் வாழ்நாளில் பல இன்னல்களை எதிர்நோக்கி அனுபவித்துக் களைத்திருந்த நேரம் அது. அந்த நேரத்தில் தான் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் வெளிவாரி பட்டப்படிப்புநெறி ஆரம்பிக்கப்பட்டது. அங்கு முதல் தொகுதி மாணவருள் ஒருவனாகப் பதிவு செய்துவிட்டு (1997) அதற்கான வகுப்புகள் எங்கு நடக்குமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

அவ்வேளை பல மாதங்களாக மழையின்றி வரண்டிருந்த பூமியில் மழை பொழிந்தால் அதில் வாழும் உயிரினங்கள் எவ்வளவு சந்தோசப்படுமோ அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சி, கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட வெளிவாரி மாணவர்களுக்காக ஓர் கல்வி நிறுவனம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (1997 இல் இக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் நான் 1998 தை மாதத்திலேயே இணைந்து கொண்டேன்.) என்னும் இனிய செய்தியால் ஏற்பட்டது.

ஆனாலும் சிறு கலக்கம். அங்குள்ள கல்வி நிறுவனத்தின் நிருவாகிகள் எப்படியோ? சக மாணவர்கள் எப்படியோ? என்பதுதான் அது. ஆனால் என் கலக்கம் அர்த்தமற்றது என்பதை அங்கு சென்ற முதல்நாளே உணர்ந்து கொண்டேன். என்னை இன்முகத்துடன் வரவேற்று நலம் விசாரித்தார் ஒருவர். அவர் வேறு யாருமில்லை, அந்நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான பிரான்சிஸ் ஐயா அவர்கள்.

அவர் என்னை அணுகிய விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை எங்கள் உறவு நீடிக்கின்றது. நாங்கள் பிரிந்து இருந்தாலும் உறவு கனக்கிறது. இந்நிறுவனத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் அவரது துணைவியார். திருமதி. றூபி பிரான்சிஸ் அவர்கள் ஆவார். அவர் எங்களால் மறக்க முடியாத ஆசான். அவர் எங்களோடு பழகிய விதம் ஆசிரியர் - மாணவர் எனும் தோரணையிலிருந்து தாய் - பிள்ளைகள் எனும் உறவாக மாறியது. இவர்களின் வழி நடத்துதல்களும் ஆலோசனைகளும் தான் என்னை இன்று ஒரு கலைத்துறை பட்டதாரியாக்கி தொழில்துறை உத்தியோகத்தராக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்ற வைத்துள்ளது.

இக்கல்வி நிறுவனத்தில் கற்பித்த ஆசிரியர்களையும் மறக்க முடியாது. கிழக்குப்பல்கலைக்கழக கலைப்பீடத்தில் சிறப்புப்பட்டம் பெற்று வெளியேறிய முதல் தொகுதி மாணவர்களில் சிலர் பெரும்பான்மையான பாடங்களுக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டமை இதன் சிறப்பம்சங்களுள் ஒன்று. அவர்களுக்கு வேலை வாய்ப்பையும் இது வழங்கியது. ஏனைய தனியார் கல்வி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் இந்நிறுவனத்தில் மிகக் குறைந்த கட்டணமே மாணவர்களிடம் அறவிடப்பட்டது. அனைத்து விரிவுரையாளர்களும் நிர்வாகத்துடன் ஒத்துழைத்து அர்ப்பணிப்புடன் நிறைவான சேவையை எமக்கு வழங்கினர்.

எமது கல்வி நிறுவனம் கல்வி கற்பிப்பதோடு மாத்திரமின்றி மாணவர்களது கருத்துக்களை மதிப்பதிலும், அவர்களின் விருப்பங்களுக்கு செவிசாய்ப்பதிலும் கவனமாக இருந்தது. இந் நிறுவனப் பணிப்பாளர், தான் கிறிஸ்தவ மதத்தவராக இருந்தபோதும் அனைத்து மத உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பவராக இருந்தார். கல்விச் சுற்றுலாக்கள், புதிய மாணவர்களுக்கான வரவேற்பு, இறுதி வருட மாணவர்களுக்கான பிரிவுபசாரம் போன்றவை சிறந்த திட்டமிடலுடன் நடத்தப்பட்டன. சில நிகழ்வுகளுக்கு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், கலைப்பீடாதிபதி, வெளிவாரி கற்கை நெறிக்கான உதவிப் பதிவாளர், கலைப்பீட வெளிவாரிக் கற்றை நெறி இணைப்பாளர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தமை மற்றுமோர் சிறப்பம்சம் என்பதுடன் எமக்கு ஊக்கமும், புத்துணர்வும் தந்தவையுமாகும்.

எமது கல்விக் காலத்தில் 1999இல் கல்விச் சுற்றுலா சென்றோம். இச்சுற்றுலாவானது மாணவர்களிடையே காணப்பட்ட வேறுபாடுகளை இல்லாதொழித்தது. கருத்து முரண்பாடுகளின்றி எல்லோரும் ஒரே குடும்பமாக இயங்க இத்தகைய நிகழ்ச்சிகள் உதவின. அந்த மூன்று ஆண்டுகளும் வெளிவாரி மாணவர்களாக அன்றி உள்வாரி மாணவர்களாகவே எம்மை நினைக்க வைத்தது இந்நிறுவனம்.

இத்தகைய பெருமையும், சிறப்பும் மிக்க இந்நிறுவனம் பத்து ஆண்டு காலச்சேவையினைப் பூர்த்தி செய்யும் இச் சந்தர்ப்பத்தில் உரிய காலத்தில் எமக்குக் கைகொடுத்துக் கரை சேர்த்தமைக்கு நன்றி கூறுவதுடன், அதன் சேவை இன்றும் பல்லாண்டுகாலம் சிறக்க நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பது, கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி பெற்றெடுத்த ஒரு தனயன்.

திரு. S. மணிவண்ணன் B.A.
(பழைய மாணவன், கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி)
தொழில்துறை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று.

அகதியின் அவலம்

திக்கற்று நிலை தடுமாறித் திரியும்
மானிடர்க்கு கொடுக்கும் பட்டமதோ அகதி
வக்கற்று வாழ வைத்ததுவோ யுத்தம்
பேணி வந்த பெரும் செல்வம் எங்கே?

உண்டு உடுத்து உரிமை பலபேசி
கண்டுகளிக்க காட்சி பல
செய்து வைத்து என்ன லாபம்
கூடாரத்தின் கீழ் ஓர் குட்டி வாழ்க்கை

ஊரெல்லாம் உறங்குகிறது ஊர்மக்களின்றி
பாரெல்லாம் பயங்கரம், செல்லடியால்
வயலெல்லாம் பூவல் தோண்டி வைத்திருக்கு
பேய் குடிப்பதற்காக்கும்

செல் வீதியில் விழுந்ததனால் விஷப்புகை மணக்க
பருந்து சிறகுணர்த்த
மழைக் கண்ணி தான்குளிக்க
மானிடமே இல்லாம வருந்துதடா நமதூர்

காரறுக்க வழியில்லை
கழனியெல்லாம் வீசும் கணை
வீழ்ந்து வெடித்து விரட்டுகிறது
'வெட்டவேணாம் போ நீ ஒரு தழிழன் தானே'

யுத்தம் என்ற போர்வையில்
சத்தங்களுடன் வெளியேறி
நித்தம் அழிகிறது எம்மினத்தின்
சகல வளங்களும்

பட்டியிலே மாடிருக்க
பெட்டியிலே பணமிருக்க
வீட்டினிலே நெல்லிருக்க
நாமிருக்கும் நடுத்தெருவில்

கட்டிய மனைவி யெங்கே
கதறி அழும் குழந்தை எங்கே
மற்றுமுள்ள சுற்றம் எங்கே
கானகத்தில் உயிரிழக்கேன் கட்டியழ யாருமில்லை

செந்நெல் விளையும்
செழிப்பு மிக்க எம்மூரைவிட்டு
பட்டணத்தில் இருந்தாலும்
பதிலாகா எம்மூர்க்கு

ஜனனம் முதல் மரணம் வரை
எம்மினத்தின் துயரம்
என்றுதான் தீரும் என்று
ஏங்கி இறையருளை நாடுகிறோம்.

T. விநாயகமூர்த்தி
மூன்றாம் வருடம்.

வகுப்பறை கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களின் வகி பாகமும், புதிய 5E அணுகுமுறையும்

ஆசிரியர்களின் சமூகத் தொழிற்பாடுகளின் வேகம், தன்மை, போக்கு என்பவற்றை நிர்ணயிப்பவர்கள். எல்லாக் குடும்பங்களின் நீண்ட கால குறுங்கால முன்னேற்றங்களின் வழிகாட்டிகள். அவர்கள் கல்விச் சேவையினை வழங்குவதன் மூலம் சமூக மாற்றத்தினைத் தீர்மானிப்பவர்களாகவும், வளர்ச்சிப் போக்கினை நிர்ணயிப்பவர்களாகவும் உள்ளனர்.

கல்விச் செயலொழுங்குகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் அடைவு மட்டம் ஏற்படுவது ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் முறைகளிலே தங்கியுள்ளது. இன்று மிக வேகமான மாற்றங்கள் இடம்பெறுகின்றன. மாற்றமுறும் புதிய சூழலுக்கு ஏற்றாற் போல் ஆசிரியர்களின் வகிபாகமும் கற்றல் கற்பித்தல் நுட்பங்களும் மாறிவருகின்றன. புதிய உலக மாற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்பவற்றுக்கமைய ஆசிரியர்கள் கற்பித்தல் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளமையால் அவர்களுக்கு விடயங்களிலும், எண்ணக்கருக்களிலும் புதிய அறிவும் புதிய கல்வித் தொழில்நுட்பக் கருவிகளைக் கையாள்வதில் பயிற்சியும் வழங்கப்பட வேண்டியுள்ளது. மாற்றமடையும் மாணவர் அறிவு, நோக்கு, சுதந்திரம் என்பவற்றுக்கமைய ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு மாற வேண்டியுள்ளது. சுயநெறிப்பாடு, தற்புலக்காட்சியை மேம்படுத்தல், சுயபடிமத்தை உயர்த்துதல், வாண்மை நிலை நெகிழ்ச்சியை ஏற்படுத்துதல், சர்வதேச மட்ட இடமாற்றத்திற்கும், நிலை மாற்றங்களுக்கும் ஏற்றவாறு வாண்மைத் திறன்களை உயர்த்துதல் முதலியவற்றை நோக்கிய ஒன்றிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல் சமகால கல்வி வளர்ச்சிக்குரிய தேவைகளாகின்றன. இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இதனால் ஆசிரியர்களது வகிபாகமும் காலத்திற்கு காலம் மாறி வளர்ச்சியடைந்து வந்துள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில ஆசிரியர் நடிபங்கானது வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறான நிலைகளைப் பெற்று நிலைமாற்றம் அடைந்து வந்துள்ளது. இதனை ஆங்கிலத்தில் 3T Model என அழைப்பர். ஒன்றிலிருந்து ஒன்றாக ஆசிரியர்களது வகிபாகம் மாறிவந்துள்ளது. இவை அங்கிலத்தில் T என்ற எழுத்தில் ஆரம்பிப்பதால் 3T Model என்கின்றனர். அவை வருமாறு.

01. Transmission role (கடத்தல் வகிபாகம்)
02. Transaction role (கொடுக்கல், வாங்கல் வகிபாகம்)
03. Trans Formation role (நிலை மாற்று வகிபாகம்)

கடத்தல் வகிபாகம் (Transmission Role)

இதில் ஆசிரியரது நடிபங்கானது மரபுரீதியான கடத்தல் வகிபாகமாகவுள்ளது. இதில் ஆசிரியரின் செயற்பாடு அவரை மையமாகக் கொண்டதாகக் காணப்படும். ஆசிரியர் அறிவின் உறைவிடமாகவும், அனைத்தும் தெரிந்தவராகவும், எல்லாம் வல்லவராகவும் விளங்குகின்றார். ஆசிரியர் அதிகளவு மேலாதிக்கமும் அதிகாரமும் கொண்டவர். இந்த நடிபாங்கில் தமக்கு எல்லாம் தெரியுமென்றும், மாணவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் கருதும் ஆசிரியர், மாணவர்களை வெற்றுக்கோப்பையாகவும் தன்னை நிறைகுடமாகவும் கருதுகிறார். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் வெற்றுக் கோப்பையினுள் நீரை நிரப்புவதாகத் தன் செயற்பாட்டினை அமைக்கிறார். இந்த நடிப்பங்கினை Jug - Mug role அல்லது

Chalk and talk Method என அழைப்பர். இந்த நடிப்பங்கில் கற்பித்தலானது கற்றலை விட மேலானது என ஆசிரியர் கருதுகிறார். இது பண்டைய கல்வி முறையிலே காணப்பட்டது. இத்தகைய நடிபங்கு இன்றைய சூழலுக்குப் பொருத்தமற்றதாகவுள்ளது.

கொடுக்கல் - வாங்கல் வகிபாகம் (Transaction role)

இதில் ஆசிரியரது வகிபாகம் Transaction role ஆக மாறுகின்றது. கடத்தல் வகிபாகத்தில் காணப்பட்ட ஒருவழித் தொடர்பான கற்பித்தலுக்குப் பதிலாக இருவழித் தொடர்பாடல் காணப்படுகின்றது. இது முன்னைய முறையினையையும் விடச் சிறப்பானது. இங்கு ஆசிரியர் நடிப்பாங்கானது இருவழித் தொடர்பில் அமைகின்றது. இங்கு கற்றலும் கற்பித்தலும் முக்கியம் பெறும். இங்கு ஆசிரியரது நடிப்பங்கு ஓர் உதவுபவர் போல மாற்றமடைகின்றது. பிள்ளைகளின் கற்றல் இடர்பாடுகளுக்குக் கைகொடுத்துதவும் நண்பராகவும், கற்றலுக்கான சூழலை வழங்கும் ஏற்பாட்டாளராகவும் ஆசிரியர் செயற்படுவார்.

பிள்ளையின் அருகிலிருந்து தெரிந்ததிலிருந்து தெரியாததிற்கும், எளிமையிலிருந்து கடினமானதிற்கும், உருவத்திலிருந்து அருவத்திற்கும் பிள்ளைகளை இட்டுச் செல்வார். இங்கு ஆசிரியர் வகிபாகமானது ஆரம்பத்தில் இருவழித் தொடர்பானதாக அமைந்தாலும் அது படிப்படியாக பல வழித் தொடர்பு கொண்டதாகவும் வளர்ச்சியடையும். இந்த 2வது T Model ஐப் பின்பற்றுபவர்கள் ஜனநாயகத்தன்மையை வகுப்பறையில் நிலவச் செய்பவராகவும், பிள்ளை மையக் கற்பித்தலை மேற்கொள்ளுபவராகவும் காணப்படுவார்கள்.

நிலை மாற்று வகிபாகம் (Transformation role)

கற்றல் கற்பித்தலில் இவ்வகிபாகமே இன்று முதன்மைப்படுத்தப்படும் ஒன்றாகவுள்ளது. 3வது T Model வகிபாகத்திலே ஆசிரியர் ஒரு வளவாளராக மாறுகின்றார். மரபுரீதியான நடிபங்கிலிருந்து மாற்றமடைகின்றார். மற்றமடைவது மட்டுமல்ல மாற்றத்திற்கான ஒரு முகவராகவும் செயற்படுவார். ஆசிரியர் ஒரு வளவாளர் என்ற அடிப்படையில் மாணவனுக்குத் தேவைப்படும் இடங்களில் மட்டுமே ஆசிரியர் தலையீடு செய்வார். குறைந்த தேர்ச்சி மட்டத்தினைக் கொண்ட பிள்ளைகளை அண்மிய தேர்ச்சி மட்டத்திற்கு மாறுவதற்கு உதவி புரிவார். இங்கு பிள்ளைகள் தாமே செயல்பட்டுத் தேர்ச்சியைப் பெறுவர். இதனைத் தேர்ச்சி மட்டக்கல்வி என்பர்.

இந் நிலைமாற்று வகிபாகத்திலே பின்வரும் அம்சங்கள் காணப்படும்.

* மாணவர் மையமானது
* தேர்ச்சி மைய அணுகுமுறை
* செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல்

இங்கு அமைப்பியல்வாத அணுகுமுறை கையாளப்படும். இங்கு கற்பித்தலை விட மாணவரது கற்றலே முக்கியப்படுத்தப்படுவதால் ஆசிரியரது பணி கற்றலை மையமாகக் கொண்டதாகக் காணப்படும். இதற்காக ஆசிரியர் பிள்ளைகள் தாமாகக் கற்பதற்கும், கற்றலுக்குக் கற்பதற்கும் (Learing to learn) ஏற்ற சூழலை ஏற்படுத்துவார். இத்தகையதோர் முறையின் கீழே இன்று வகுப்பறைச் செயல் முறை இடம்பெற வேண்டியது வலியுறுத்தப்படுகின்றது.

ஆசிரியரது வகிபாகமானது மேலேயுள்ளவாறு படிப்படியாக மாற்றமடைந்து புதிய சூழலில் புதிய தேவைகளுக்கேற்ப இடம்பெற வேண்டியுள்ளது. கல்வி என்பது வெறுமனே

அறிவை மட்டும் புகுத்தும் ஒரு செயற்பாடல்ல என்பது இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். இன்று கற்பித்தலில் முக்கியமாகக் கருதப்படுவது மாணவர் மையக் கல்வியாகும். சகல பிள்ளைகளுக்கும் கற்றலுக்கு உதவி செய்பவர், கற்றலைச் சாத்தியப்படுத்துபவர், கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பவர் போன்றவற்றை ஏற்று நவீன ஆசிரியர் செயற்பட வேண்டியுள்ளது. இங்கு மாணவர் தொழிற்படும் அளவுக்கேற்பவே கற்றல் நிகழும். இதற்குப் பொருத்தமாக ஆசிரியர் தாம் நிலை மாற்று வகிபாகத்திலே தமது வகுப்பறை செயல் ஒழுங்கை அமைப்பது கற்றல் கற்பித்தல் வினைத்திறனையும் விளைதிறனையும் அதிகரிக்கும்.

புதிய கல்வி சீர்திருத்தத்தில் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் புதிய 5E அணுகுமுறை

ஆசிரியர்களின் வகிபாகத்தில் மூன்றாவதாக முக்கியம் பெறும் நிலைமாற்று வகிபாகத்திலே ஆசிரியர் ஒரு வளவாளராக அனுபவங்களின் அடிப்படையில் கற்பித்தலை மீள் ஒழுங்குபடுத்துனராக செயலறிவை கோட்பாட்டறிவாகவும், கோட்பாட்டறிவை செயலறிவாகவும் நிலைமாற்றம் செய்பவராகக் குறிப்பிடப்படுகின்றார். இங்கு பயன்மிக்க வளவாளராகச் செயற்படுதலும், பயனுள்ள தலையீடுகளை மேற்கொள்வதும் ஆசிரியரது பொறுப்பாகும். ஒவ்வொரு பாடம் தொடர்பான சிறப்புத் தேர்ச்சிகளையும், பொதுத்தேர்ச்சிகளை இனங்கண்டு அவற்றை உரிய முறையிலும் உன்னதமாக வளர்க்கக் கூடியதும், காட்சிப்படுத்தக்கூடியதுமான செயற்பாடுகளை ஆசிரியர் மாணவரிடத்திலே கட்டியெழுப்புதல் வேண்டும்.

நிலைமாற்றம் செய்யும் பாத்திரமேற்றலை மேற்கொள்ளும் ஆசிரியர், வெற்றிகரமாக தனது பணியினைச் செய்ய கட்டுமானவியலும் அதன் கீழான 5E மாதிரியும் பொருத்தமானது எனக் கூறப்படுகின்றது. கற்றல் தொடர்பான தத்துவார்த்த சிந்தனையாக கட்டுமானவியல் சிந்தனை காணப்படுகின்றது. மாணவர்கள் புதிய கருத்துக்கள், விடயங்கள் பற்றித் தாமாகவே விளங்கிக் கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதே இதன் அடிப்படையாகும்.

றொகர் வைபீ (Roger Bybee) என்பவரின் தலைமையிலான உயிரியல் விஞ்ஞான கலைத் திட்டக் கற்கைக் குழுவினரால் கட்டுருவாக்க வாதத்திற்கான 5E எனும் கற்றல் மாதிரியுரு உருவாக்கப்பட்டது. 5E மாதிரி, ஒரு கற்றல் அணுகுமுறையாகும். கற்பித்தலில் மாணவர்கள் சுயமாகப் பட அலகுகளையும், புதிய விடயங்களையும் விளங்கிக் கொள்வதற்கான ஒரு பயனுறுதிமிகு மாதிரியுருவாக இது காணப்படுகின்றது. இதனை வகுப்பறை கற்றல் கற்பித்தலில் பிரயோகித்து சாத்தியப்படுத்துவதென்பது முற்றுமுழுதாக ஆசிரியரின் கரங்களிலே தங்கியுள்ளது. கற்றல் சூழலானது பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதனை கட்டியெழுப்பக் கூடியதாகவும் பாடவிடயங்களுடன் தொடர்புபடும் வகையிலான நிகழ்ச்சிகளையும், சந்தர்ப்பங்களையும் மேம்படுத்துவதாகவும் இருத்தல் அவசியமாகின்றது. கட்டுருவாக்கவியல் சிந்தனையின் அடிப்படையில் அமைந்த 5E கற்றல் அணுகு முறை வருமாறு.

5E Model

01. Engagement - ஈடுபடல் (ஈடுபடுத்துகை)
02. Exploration - கண்டறிதல் (தேடுகை)
03. Explanation - விளக்குதல் (விளக்குகை)
04. Elaboration - விரிவுபடுத்தல் (விரிவுபடுத்துகை)
05. Evaluation - மதிப்பிடல் (மதிப்பிடுகை)

Engagement - ஈடுபடல்

கற்பிக்கப்படவுள்ள பாடவிடயத்தில் மாணவர்களின் கவனத்தையீர்ப்பதே இதன் பிரதான நோக்கமாகும். புதிதாக கற்பிக்கப்படவுள்ள பாடம் தொடர்பாக நன்கு ஆர்வத்துடன் எதிர்நோக்கும் தன்மையினையும் அவற்றை இனங்காண்பதற்கும், தூண்ட வேண்டியிருக்கும் மாணவர்களின் கடந்த கால, தற்போதைய கற்றல் அனுபவங்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டிய விடயத்திற்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்தி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக மாணவர்களில் தூண்டல்களை ஏற்படுத்த வேண்டியிருக்கும். இதற்காக செய்து காட்டல்கள், வாசிப்பு, சுயாதீன எழுத்து வேலைகள், பகுப்பாய்வு செய்தல், சிந்தனைக் கிளறல், வரைவிலக்கணம் செய்தல் முதலானவற்றை மேற்கொள்ளலாம். மேலும் ஆசிரியர் இதன் போது பின்வரும் செயற்பாடுகளைச் செய்யலாம்.

* மாணவர்களின் பாடம் தொடர்பான ஆர்வத்தைத் தூண்டுதல்.
* மாணவர்களின் இடையீடு செய்யும் ஆர்வத்தை அதிகரித்தல் / உருவாக்குதல்.
* மாணவர்களிடையே வினவுதல்.
* மாணவர்களின் முன்னைய அனுபவங்களைக் கிளறுதல்.
* நடித்துக் காட்டுதல்.
* பாடம் அல்லது செயற்பாடு தொடர்பாக மாணவர்களின் அபிப்பிராயம் கேட்டல்.
* மாணவர்களிடையே இணைப்பை ஏற்படுத்துதல்.

Exploration - கண்டறிதல்

மாணவர்களை பாட அலகுடன் தொடர்பான செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுத்தும் கட்டம் இதுவாகும். இதற்கான பொருத்தமான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருத்தல் அவசியம். இச்செயற்பாடுகளில் மாணவர்கள் தாமாகவே ஈடுபட்டு குறித்த விடயங்கள் தொடர்பாக அனுபவங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன்போது மாணவர்களை அணிகளாக / குழுக்களாக ஈடுபடுத்துதல் சிறந்தது. இவ்வாறான குழுச்செயற்பாட்டை மேற்கொள்ளும் போது அவர்களுக்குள் தொடர்புறுதல் ஏற்பட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதனால் பொதுவானதோர் கற்றல் அனுபவங்களை அவர்களுக்குள் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

இக்கட்டத்தில் ஆசிரியர், சாத்தியப்படுத்துவராக (Facilitatior) இலகுபடுத்துவராக இருக்க வேண்டும். ஆசிரியர் செயற்பாடுகளுக்குத் தேவையான சாதனங்களை வழங்கியும் தேவையானபோது மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் வழங்கியும் செயற்படுத்துவார். இக்கட்டத்தின் போது செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களின் விசாரணைச் செயன் முறையே கற்பித்தலுக்கு வழி வகுப்பதாக இருக்கும். இவற்றைக் கட்டியெழுப்பும் வகையில் ஆசிரியர் செயற்படல் வேண்டும். மேலும் இதில் ஆசிரியர் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

* நேரடியான அறிவுறுத்தல்கள் இன்றி மாணவர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
* மாணவர்கள் தொடர்ச்சியாக செயற்படும் வண்ணம் அவர்களை இயக்குதல்.
* மாணவர்களிடையேயான இடைத்தாக்கத்தினை அவதானித்தல், கேட்டறிதல்.
* தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையில் வினாக்களை வினாவுதல்.
* மாணவர்கள் செயற்பாடுகளின் நோக்கத்தை விட்டு விலகும் சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் மூலம் மீளவழிப்படுத்தல்.

* நேர முகாமைத்துவம் பற்றி அறிவுறுத்தல்.
* பிரச்சினைகளை மாணவர்கள் சவாலுடன் அணுக ஊக்குவித்தல்.

Explanation - விளக்குதல்

இரண்டாவது கட்டத்தின் மூலம் கருத்தியல் ரீதியாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்களைத் தொடர்பாடல் முறைக்குள் உட்படுத்துவதனூடாக மாணவர்கள் பல்வேறு வழிகளில் விபரிப்பர். இதற்காகக் கருத்தியல் ரீதியாகப் பெற்றுக் கொண்ட கற்றல் அனுபவங்களை, தர்க்க ரீதியான வடிவமைப்புக்குள் நிகழ்வுகளை ஒழுங்கமைத்துக் காட்டுவதற்கு மாணவர்களிடம் சிறந்த மொழித்திறன் காணப்படல் வேண்டும்.

இக்கட்டத்தில் இடம்பெறும் தொடர்பாடலினை மாணவர் தமது சகபாடிகளுக்கிடையில் அல்லது தனக்குள்ளே ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இக்கட்டத்திலும் மாணவர்கள் குழுக்களாகச் செயலாற்ற முடியும். இதன்போது மாணவர்கள் தமது அபிப்பிராயங்களை, அவதானிப்புக்களை, வினாக்களை, கருதுகோள்களை வெளிப்படுத்துவதனால் அவர்கள் குறித்த பாடத்தில் அடைந்து கொண்ட விளக்க அடைவினை மற்றவர்களுக்களித்து உதவுபவர்களாக மாறுவார்கள். இங்கு மாணவர்கள் மேலும் குறித்த விடயங்களை விளக்கிக் கொள்வதற்கு தொடர்பாடல் ரீதியான அடையாளங்களை தமது மொழியினூடாகப் பயன்படுத்த வேண்டும். கருத்தியல் ரீதியாக விளங்கிக் கொண்டவற்றை இதன் மூலம் மேலும் விளங்கிக் கொள்ளமுடியும். இங்கு மாணவர்கள் இனங்காண்பவற்றுக்கும் நிகழ்வுகளுக்கும் உரிய மொழிப் பிரயோகம், பின்னணி, வரலாறுகளை ஆசிரியர் எடுத்துக் காட்டி விளக்க வேண்டியிருக்கும். இதில் பின்வரும் விடயங்களும் இடம்பெறும்.

01. மாணவர்களின் பகுப்பாய்வும் விளக்கமளித்தலும்.
02. தமது கருத்தியல் ரீதியான விடயங்களுக்கு ஆதாரங்களை முன்வைத்தல்.
03. கட்டமைக்கப்பட்ட வினாக்களை முன்வைத்தல்.
04. வாசித்தலும் கலந்துரையாடலும்.
05. சிந்தனை விருத்திச் செயற்பாடுகளை முன்வைத்தல்.
06. மாணவர்கள் ஏற்கனவே பெற்றிருக்கும் அனுபவங்களை தற்போது விளக்கப்படும் எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்த வழிகாட்டல்.

Elaboration - விரிவாக்குதல்

மாணவர்கள் தாம் கற்றுக் கொண்ட எண்ணக்கருக்களை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் கட்டம் இதுவாகும். அதாவது கற்ற எண்ணக்கருக்களை பாட அலகுடன் தொடர்புபட்ட ஏனைய எண்ணக்கருக்களுடன் தொடர்புபடுத்தி நோக்கி அவர்களின் விளக்கங்களை தம்மைச் சூழவுள்ள உலகிற்குப் பிரயோகிப்பவர்களாக மாறுவர்.

அதே போன்று கற்றல் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை, எண்ணக்கருக்களை அன்றாட உலக நிகழ்வுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதும் இக்கட்டத்திலேயாகும். முன்னைய கட்டங்களில் கற்றுக் கொண்ட அனுபவங்களை எண்ணக்கருக்களை அதே விடயத்துடன் தொடர்புடைய ஏனைய அம்சங்களுடன் பொருத்தி ஆராய்வதே இக்கட்டத்தின் பிரதான நோக்காக உள்ளது. இதனால் மேலதிக கற்றல் விசாரணைகளும், புதிய விளக்கங்களும் மாணவரைச் சென்றடையும்.

Evaluation - மதிப்பிடல்

5E மாதிரியில் இறுதிக் கட்டம் இதுவாகும். இது பாட அலகினை மாணவர்கள் கற்கத் தொடங்குவதிலிருந்தே நடைபெறுவதாயிருக்கும். மதிப்பீடு மற்றும் கணிப்பீடு மூலம்

மாணவர்கள் குறித்த எண்ணக்கருக்களையும் அறிவினையும் விளங்கிக் கொண்டுள்ளார்களா? என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கும். கற்றல் கற்பித்தலின் போது தொடர்ச்சியான செயன்முறையாக இடம்பெறும். இதனைப் பின்வரும் விடயங்கள் மூலம் மதிப்பிடலாம்.

- ✳ கணிப்பீட்டு மதிப்பீட்டு உபகரணங்களைத் தயாரித்து பயன்படுத்தல்.
- ✳ அவதானிப்பு
- ✳ செவ்வை பார்த்தல் பட்டியல்
- ✳ நாட்குறிப்புப் பதிவு
- ✳ செயலடைவுக் கோவை
- ✳ உற்பத்திக் கணிப்பீடு
- ✳ மாணவர் நேர்காணல்
- ✳ கலந்துரையாடல்
- ✳ திறந்த வினாக்களை முன்வைத்தல்.

ஆகவே 5E மாதிரியிலான கற்றல் கற்பித்தல் செயன் முறை இடம்பெற வேண்டியது முதன்மைப்படுத்தப்படுகிறது. கற்பிக்கப்படும் விடயங்களை இரசனையுடனும் மகிழ்ச்சியுடனும் கற்றலை முன்னெடுத்துச் செல்லவும் வகுப்பறைக் கற்பித்தலை உயிரோட்டமுடையதாக்கவும் இந்த 5E மாதிரி உதவுகின்றது. இந்த முறையிலான கற்றல் கற்பித்தல் முறையை 2007ம் ஆண்டு முதல் அமுலாகும் புதிய கல்விச் சீர்திருத்தமும் முன்வைத்துள்ளது. ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்ள 5E முறை பற்றிய முன்னறிவு தேவை. ஆசிரியர்களினால் கையாளப்பட வேண்டிய நிலைமாற்று வகிபாக செயற்பாடுகளை இந்த 5E மாதிரியில் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. அறைகூவல்கள் கொண்ட நவீன உலகை ஆக்கபூர்வமாக எதிர்நோக்கும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் சமூகத்தையும் உருவாக்க வேண்டிய கருத்தியல் வலிமையுடன் இணைந்த கல்விச் செயற்பாடுகள் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளன. இதற்கு 5E மாதிரி கற்றல் கற்பித்தல் முறை பயனுள்ளதாக இருக்கும்.

ஆகவே சமகால அறிவுப் போக்கிலும், கற்பித்தல் போக்கிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. ஆசிரியர்களும் சமகால கல்வி தொடர்பான பல பரிமாணங்களை அறிந்திருத்தல் வேண்டும். கற்பித்தலில் காலங்கடந்த தடங்களில் இருந்து முன்நோக்கி நகர்த்த வேண்டிய தேவையுள்ளது. புதிய அறிவு வீச்சுக்குப் பொதுவாக ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டியுள்ளது. இந் நிலையில் தற்போது எதிர்பார்க்கப்படும் நிலை மாற்று வகிபாகத்தின் கீழ் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை 5E மாதிரியின் கீழ் ஒழுங்கமைத்துச் செயற்படுத்த வேண்டியது புதிய தேவையாக வலியுறுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஆசிரியத்துவம், ஆவல் மிக்க மாணவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்:

01. சின்னத்தம்பி. மா. (2004) ஆசிரியர் முகாமைத்துவம் யாழ்ப்பாணம், விஸ்டம் பப்ளிகேசன்.
02. கலாநிதி. சபா. ஜெயராசா (2006) சமகாலக் கல்வி வளர்ச்சி, கொழும்பு, அகவிழி வெளியீடு.
03. கலாநிதி. சபா. ஜெயராசா (2006) கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் - ஒரு விளக்க நிலை நோக்கு, கொழும்பு, அகவிழி வெளியீடு.
04. பால சுப்பிரமணியம் தனபாலன் (2003) கற்பிக்கும் கலை - புதிய பிரவேசங்கள், யாழ்ப்பாணம்.
05. அகவிழி சஞ்சிகை ஆசிரியத்துவ நோக்கு - மே 2006 கொழும்பு.
06. அகவிழி சஞ்சிகை ஆசிரியத்துவ நோக்கு - பெப்ரவரி 2007 கொழும்பு.
07. குடியியல் கல்வி தரம் - 9 ஆசிரியர் வழிகாட்டி நூல் கருணாரத்ன அன்ட் சன்ஸ்

திரு. க. நிதிகரன் B.A. (Hons.)
விரிவுரையாளர் (கல்வியியல்)
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி.

மரணப் படுக்கையில் மனிதம்

மண்ணிலே மதிநிலையில்
மாபெரும் நிலைக்கு நாங்கள்
விண்முட்ட உயர்ந்து விட்டோம்
விரைந்து நாம் அறிவைப் பெற்றோம்.

என்றுதான் மார்பு தட்டி
இங்கு வாழும் மனிதர்களே
நன்றா நீர் சொல்லும் இந்த
நயவஞ்சகச் சொற்கள்

மண்ணிலே வாழும் மற்ற
ஜீவன்கள் மனிதன் தன்னை
உண்மையாய்ப் பார்க்கின்றன
புதுமையாய் வைகின்றன

வையகத்தோரை ஏய்த்து
வார்த்தையால் ஜாலம் பேசி
பையதைப் பணத்தால் நிரப்ப
பாவமாய்ப் பல சொற்கள்

குடி என்றும் குட்டி என்றும்
குதூ கலமாய் சிலர் அலைய
மடி மீது உதித்த பிள்ளை
மரிக்கிறதே உண்வு இன்றி

பணத்தின் மேல் பணம் அடுக்கி
படுக்கையில் தூக்கமின்றி
பிணத்தினைப் போல வாழும்
பேராளர் எத்தனை பேர்

உண்ணவே உணவு இன்றி
உருக்குலைந்து எம்மோர் வாட
இன்னலை அறிந்தும் பலர்
இரங்கவே மறுக்கின்றாரே

எங்கும் நிறைந்த ஊழல்
எதிலுமே ஈனச் செயல்
அங்கமே கூசும் வண்ணம்
அவலட்சண ஆடை நிலை

பசி கொண்ட சிங்கம் போல
பணம் பதவி என்று ஏங்கி
நிசி பகல் பாராமல்
நிறையவே வஞ்சனைகள்

எண்ணரிய உயர்ந்த உயிர்
எத்தனை இன்று இந்த
மண்ணிலே தினம் தினம்
மாயமாய் மறைகிறதே

பகை தொகை தெரியா வண்ணம்
கொலை கொள்ளை நித்தம் நிதம்
சிகை மயிரை எண்ணிடலாம்
சிறிதும் இயலா சிக்கல் எண்ண

மற்றவர் மன உணர்வை
மலினப் படுத்தியே தாம்
பெற்றதன் இன்பம் பலர்
பெரியவர் என வாழ்கிறார்

அரசியல் பிழைத்தவர்க்கு
அறம் கூற்றாகும் என்பர்
அனைத்துமே இங்கு பிழை
அறம் எங்கே கூற்றன் எங்கே

மரணப் படுக்கைக்குள்
மனிதம் கிடக்கிறது
புனிதம் ஏதும் இல்லை
போகும் உயிர் வெகுவிரைவில்.

நெ. ஜெயமோகன்
2ம் வருடம்.

அளவையியலில் நியமமில் போலிகள்– ஓர் அறிமுகம்

(An Introduction to Informal Fallacies in Logic)

அளவை இயல் என்பது அளவை + இயல் என்று பிரிக்கப்பட்டு அளந்துஅறிதல் என்று பொருள் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. அளந்து அறிதல் என்னும் போது பௌதிகப் பொருட்கள் பற்றிய ஆய்வு அல்ல, மாறாக சிந்தனை பற்றிய ஆய்வை அது குறிக்கும். மேலும் சிந்தனையின் வெளிப்பாடாக மொழிவிளங்குவதனால் மொழி பற்றிய பகுப்பாய்வையும் அளவையியல் நிகழ்த்துகின்றது. அளவையியல் ஆங்கிலத்தில் Logic என்று அழைக்கப்படும். இச் சொல் Lagos என்னும் கிரேக்க சொல்லில் இருந்து பிறந்தது. Lagos என்னும் சொல்லின் அர்த்தம் சிந்தனையோடும், மொழியோடும் தொடர்புபட்டதாக இருப்பதனால் அளவையியல் என்பதற்கு சிந்தனை பற்றிய அல்லது மொழி பற்றிய பகுப்பாய்வியல் என்று பதவியல் ரீதியாக வரைவிலக்கணம் கொடுக்கப்படுகின்றது. ஆனாலும் இன்று மொழி பற்றிய ஆய்விலேயே அளவையியல் அதிக அக்கறை செலுத்துவதனால் மொழியில் ஏற்படும் சிக்கல்களும் பொருத்தப்பாடு இன்மைகளுமே போலிகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன.

அளவையியல் போலிகள் என்பது வாதங்களிலோ அல்லது உரையாடலிலோ ஏற்படும் தவறான தர்க்கித்தலைக் குறிக்கும். இத்தகைய போலிகளை அரிஸ்ரோட்டில் மொழிசார்ந்த போலிகள், மொழிசாராப் போலிகள் என்று வகைப்படுத்தியிருந்தார். குரைட்டனும் ஸ்மாட்டும் விளக்கப் போலிகள், மொழிசாராப் போலிகள் என்று வகைப்படுத்தினர். அதே வேளை நவீன அளவையியலாளர்கள் நியமப் போலிகள் (Formal Fallacies) நியமமில் போலிகள் (In Formal Fallacies) என்று வகைப்படுத்துகின்றனர் இத்தகைய வகைப்பாடே இன்று அதிகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி நியமப் போலி என்பது வாதங்களின் நியமத்தை (வடிவத்தை) கவனத்தில் கொள்ளாததனால் ஏற்படும் தவறான தர்க்கித்தலாகும். அதாவது நியம விதிகள் மீறப்படுவதனால் வாதங்களில் ஏற்படும் தவறுகள் நியமப் போலியை ஏற்படுத்துகின்றன. அதேவேளை நியமமில் போலி என்பது உரையாடலில் ஏற்படும் தவறான தர்க்கித்தலாகும். அதாவது நாம் ஒருவரோடு ஒருவர் உரையாடுகின்றபோது அனுபவத்திற்கு (யதார்த்தத்திற்கு) ஏற்றவைகளையே உரையாடுவோம். ஆனால் சில வேளைகளில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ யதார்த்தத்திற்குப் பொருந்தாத பொருளற்ற நியாயங்கள் உரையாடலில் முன் வைக்கப்படுவது உண்டு. இவ் வேளைகளில் நியமமில் போலிகள் ஏற்படுகின்றன. இப்போலிகளை பொருள் சார்ந்த போலிகள் (Matrial Fallacies) என்றும் கூறலாம்.

நியமமில் போலிகள் பல்வேறு வழிகளில் இடம் பெறுகின்றன. ஆகையால் இப் போலிகளை ஒரு ஒழுங்கு முறையில் வகைப்படுத்திக் கூற ஆரம்ப காலங்களில் முயற்சி எடுக்கப்படவில்லை. ஆனால் சமகாலத்தில் கொபி போன்றோர் ஐந்து பெரும் பிரிப்புக்களாக வகைப்படுத்தி விளக்க முற்பட்டுள்ளனர். கொபி பிரித்துக் கூறும் ஐந்து பிரிவுகளுமாவன;

(அ) பொருந்தாமைப் போலி (Fallacy of Irralavancy)
(ஆ) நலிவு தொகுத்தறிப் போலி (Fallacy of weak Induction)
(இ) மொழி ஒப்புவமைப் போலி (Fallacy of Language Ampiquty)
(ஈ) முற்கற்பிதப் போலி (Fallacy of Pure Soppsition)
(உ) வரைவிலக்கணப் போலி (Fallacy of Devinition) என்பனவாகும்.

(அ). பொருந்தாமைப் போலி

பொருந்தாமைப் போலி என்பது பொருத்தமற்ற நியாயங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முன்வைக்கப்படுவதால் ஏற்படும் தவறான தர்க்கித்தலாகும். இதில் 5 வகையான போலிகள் உள்ளன. அவையாவன:-

(1) ஆள் நியாயம் (2) மக்கள் நியாயம்
(3) தடியடி நியாயம் (4) பரிவு நியாயம்
(5) கௌரவ நியாயம் என்பனவாகும்.

01. ஆள் நியாயப்போலி

ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ ஒரு கருத்தை முன்வைக்கின்றபோது அக்கருத்து சரியானதா அல்லது பிழையானதா என்று ஆராய்ந்து பார்க்காமல் அக்கருத்தை முன்வைத்தவர்களின் கடந்த காலக் குறைகள், சமூகப் பின்னணி, உளவியல் நிலை இவைகளைக் கவனத்திற் கொண்டு அவர்கள் முன்வைத்த கருத்தை நிராகரிக்கின்ற ஒரு பொருத்தமற்ற நியாயித்தல் ஆள் நியாயப் போலியாகும். அதாவது கருத்தை கவனத்தில் எடுக்காமல் ஆளைக் கவனத்தில் எடுக்கும் ஒரு தவறு இப்போலியில் இடம்பெறுகின்றது.

உதாரணம்:-
காதலித்துத் திருமணம் செய்வதே புரிந்துணர்வான குடும்ப வாழ்க்கைக்கு உதவும் என்று மேற்படி நபர் கூறும் கருத்தை நாம் ஏற்க முடியாது. ஏனெனில் இவர் நான்கு பெண்களைக் காதலித்துத் தோல்விகண்டவர். மேலும் இவருக்கு இறுதியில் நடந்தேறியது பேச்சுத் திருமணம்தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

02. மக்கள் நியாயப்போலி

பொதுமக்களின் உணர்வினை அல்லது மனப்பாங்கினை அறிந்து அதனைத் தூண்டும் வகையில் கவர்ச்சிகரமாக வாதிட்டு தங்கள் கருத்தைச் சாதித்துக் கொள்கின்ற ஒரு பொருத்தமற்ற நியாயித்தல் மக்கள் நியாயப் போலியாகும். அதாவது மக்களைப் பயன்படுத்துகின்ற ஒரு முயற்சி இதுவாகும்.

உதாரணம்:-
டார்வினின் பரிணாமக் கொள்கையை நாம் ஏற்கமுடியாது. ஏனெனில் அது நம் முன்னோர்கள் குரங்கின் வழியாக வந்தவர்கள் எனக் கூறுவதன் மூலம் மனித இனத்தின் புனிதத்துவத்தைக் குறைக்கின்றது.

03. தடியடி நியாயப் போலி

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒருவர் தனது பலாத்காரத்தை வெளிகாட்டி அதன் மூலம் தனது கருத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒரு பொருத்தமற்ற நியாயித்தல் தடியடி நியாயப் போலியாகும்.

உதாரணம்:-
சரத் உனது சைக்கிளை எனக்கு இன்று நீ தருவாய் என்பது எனக்கு நன்கு தெரியும். ஏனெனில், நீ இன்று காலை பாடசாலை செல்லவில்லை. என்பதை உனது தாய் அறிவதை நீ விரும்ப மாட்டாய்.

04. பரிவு நியாயம் அல்லது அனுதாப நியாயம்

ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ ஒரு கருத்தை முன்வைக்கின்ற போது அக்கருத்திற்குரிய பொருத்தமான நியாயங்களைக் காட்டாமல் அனுதாப வார்த்தைகள் மூலம் கேட்பவரைப் பரிவுபடுத்தி தங்கள் கருத்தை நியாயப்படுத்துவது பரிவுநியாயப் போலியாகும்.

உதாரணம்:-
நேர்முகப் பரீட்சையில் அமர்ந்திருக்கும் அதிகாரிகளே, தயவு செய்து நான் கூறுவதைக் கேளுங்கள். நான் யுத்தம் காரணமாக இருக்க வீடு வாசல்களை இழந்து உடுக்க உடையோ உண்ண உணவோ இல்லாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்ட எனக்கு தயவு செய்து இந்நியமனம் கிடைப்பதற்கு ஆவன புரியுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

05. கௌரவ நியாயம்

ஒரு கருத்தை மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதற்கு கௌரவத்திற்குரியவர்களின் நாமங்களை அல்லது அவர்களது மேற்கோள்களை எடுத்துக்காட்டி நிறுவுவது கௌரவ நியாயப் போலியாகும்.

உதாரணம்:-
வீவா சிறந்த பானமாகும். ஏனெனில் "குமார்சங்கக்கார" அதனை விரும்பிப் பருகுவதனாலாகும்.

குறிப்பு:-
கௌரவ நியாயப் போலியுடன் நெருங்கிய தொடர்புடையதாக அதிகார நியாயப் போலியும் காணப்படுகின்றது. அதிகார நியாயப் போலி என்பது ஒருவர் ஒரு கருத்தை மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதற்காக அக்கருத்தோடு தொடர்பில்லாதவர்களின் நாமங்களையும் மேற்கோள்களையும் எடுத்துக் காட்டி நிறுவுவதாகும்.

உதாரணம்:-
வெற்றிலை சப்புவதால் வாய்ப்புற்று நோய் வரும் என்று இரசாயனவியலாளர்கள் கூறுகின்றனர். அக்கூற்றில் உண்மை இருத்தல் வேண்டும்.

(ஆ) நலிவுத் தொகுத்தறிவு நியாயப் போலி

உரையாடலின் போது தொகுத்தறி நியாயத்துக்குரிய அம்சங்களில் ஒன்றோ அல்லது பலவோ குறைந்து காணப்படுவதான தவறான தர்க்கித்தல் நலிவுத் தொகுத்தறி நியாயித்தல் ஆகும். இதில் நான்கு வகைப் போலிகள் உள்ளன. அவையாவன:-

1. காகதாலிய நியாயம்
2. அசித்த நியாயம்
3. தடத்த நியாயம்
4. அறியாமை நியாயம்

1. காகதாலிய நியாயம்

தொகுத்தறி நியாயித்தலில் எடுகூற்றுக்கும் முடிபுக் கூற்றுக்கும் இடையில் காரண காரியத் தொடர்பு இருக்கின்றது என்று J. S. Mill கூறுகின்றார். ஆனால் காகதாலிய நியாயம் என்பது காரணம் அல்லாத ஒன்றை தவறான காரணமாகக் கொள்வதால் ஏற்படும் போலியாகும்.

உதாரணம்:-
தற்போது வெளிவந்த க. பொ. த. உயர்தர பரீட்சையில் நான் நல்ல பெறுபேறு எடுக்காததற்குக் காரணம், எனக்கு நல்ல நினைவு இருக்கின்றது முதல் நாள் பரீட்சை எழுதப் போகும் போது கறுத்தப் பூனை குறுக்கே போனதே அகும்.

2. அசித்த நியாயம்

ஒரு முடிவானது எடு கூற்றில் இருந்து தர்க்கரீதியாகப் பெறப்படாது போவது அசித்த நியாயம் ஆகும். அதாவது எடு கூற்றிற்கும் முடிவிற்கும் இடையில் மேலோட்டமான தொடர்புகள் இருப்பினும் இன்றியமையாத் தொடர்பு காணப்படாததனால் இத்தவறு ஏற்படுகிறது.

உதாரணம்:-
இன்று இருப்பது போல் இதற்கு முன்னர் வீதிவிதிகள் அதிகம் இருந்தது இல்லை. இன்று இடம்பெறுவது போல் இதற்கு முன்னர் வீதி விபத்துக்கள் அதிகம் இடம்பெற்றதில்லை. எனவே வீதிவிபத்துக்களை குறைக்க வேண்டுமாயின் முடிந்தவரை வீதி விதிகளைக் குறைத்துவிடுதல் வேண்டும்.

3. தடத்த நியாயம்

விதிவிலக்கான அம்சங்களைக் கவனத்தில் கொள்ளாது ஒரு கருத்து எல்லா இடங்களிலும் பொருந்தும் என்று வாதிடுகின்ற ஒரு தவறான நியாயித்தல் தடத்த நியாயம் ஆகும். இது இரண்டு வகையில் இடம்பெறும்.

i நேர் வந்தேறிய தடத்தல்
i எதிர் வந்தேறிய தடத்தல்

i) நேர் வந்தேறிய தடத்தல் நியாயம்

பொதுவான ஒரு விதி சிறப்பான சில இடங்களில் விலக்காக இருக்கும். அத்தகைய விதி விலக்கை கவனியாது எல்லா இடங்களிலும் அந்த விதி பின்பற்றப்படலாம் என்று வாதிடுவது நேர் வந்தேறிய நியாயமாகும்.

உதாரணம்:-
யாரேனும் ஒருவர் எவரேனும் ஒருவரது குரல்வளையைக் கத்தியால் வெட்டினால் அவர் கைது செய்யப்படுவார். அறுவை வைத்தியர் வைத்திய சிகிச்சையின் போது இதைத்தான் செய்கிறார். ஆகவே அறுவை வைத்தியர்கள் அனைவரும் கைது செய்யப்படுதல் வேண்டும்.

ii) எதிர் வந்தேறிய தடத்தல் நியாயம

சிறப்பான ஒரு விதி பொதுவான இடங்களில் விலக்காக இருக்கும். அத்தகைய விதிவிலக்கைக் கவனியாது எல்லா இடங்களிலும் அந்த விதி பின்பற்றப்படலாம் என்று வாதிடுவது எதிர் வந்தேறிய தடத்தல் நியாயமாகும்.

உதாரணம்:-
அறுவை வைத்தியர் சிகிச்சையின் போது நோயாளியின் உடலை வெட்டுகின்றார். எனவே எவரும் எவரது உடலையும் கத்தியால் வெட்டுவது தப்பில்லை.

4. அறியாமை நியாயப்போலி

உரையாடலில் அறிவு குறைவு காரணமாக (நியாயமான நிருபணங்கள் காட்டப்படாமல்) ஏற்படுகின்ற தவறான தர்க்கித்தல் அறியாமை நியாயப் போலியை ஏற்படுத்துகின்றது.

உதாரணம்:-
பிரபல்யமான சினிமா நடிகை சிம்ரன் ஒவ்வொரு நாளும் பல் விளக்குகிறாள் என்று இதுவரை எந்த இயக்குனர்களோ அல்லது அவரது பெற்றோரோ எந்த ஒரு இடத்திலும் கூறவில்லை. இதிலிருந்து சிம்ரன் ஒரு போதும் பல் விளக்குவதில்லை என்ற உண்மை வெளிவந்துள்ளது.

(இ) மொழியொப்புவமைப் போலி

உரையாடலின் போது நிகழ்ச்சிகள் தொடர்பாக மொழியைத் தவறாக ஒப்புவமிப்பதனால் ஏற்படும் தவறு மொழி ஒப்புவமைப் போலியை ஏற்படுத்துகின்றது. இது இரண்டு வகைப்படும். அவை:-

1. சமுதாயப் போலி
2. பிரிப்புப் போலி

1. சமுதாயப் போலி

ஒரு தனியனுக்குப் பொருந்தும் ஒன்றை அத்தனியன் உள்ளிட்ட சமுதாயத்திற்கும் பொருந்தும் என்று வாதிடுவது சமுதாயப் போலியாகும்.

உதாரணம்:-
முட்டை உணவுவகைகளுள் ஒன்று அது இல்லாமல் உயிர் வாழ முடியும். ஆகவே உணவே இல்லாமல் உயிர்வாழ முடியும்.

2. பிரிப்பு போலி

ஒரு சமுதாயத்திற்குப் பொருந்தும் ஒன்றை அதனுள் உள்ளடங்கும் பிரிவுகளுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது பிரிப்புப் போலியாகும்.

உதாரணம்:-
உணவில்லாமல் உயிர்வாழ முடியாது. முட்டை உணவு வகைகளுள் ஒன்று. எனவே முட்டையில்லாமல் உயிர்வாழ முடியாது.

(ஈ) முற்கற்பிதப் போலிகள்

முற்கற்பிதமற்ற எடுகோள்களை முற்கற்பிதமாக நிறுவ முற்படுவதால் ஏற்படும் தவறான தர்க்கித்தல்கள் முற்கற்பிதப் போலியை ஏற்படுத்துகின்றன. இது நான்கு வகையில் இடம்பெறும்.

1. பொருந்தாமுடிவுப் போலி
2. முடிவு மேற்கோள் போலி
3. சக்கர நிருபணப் போலி
4. சிக்கல் வினாப் போலி

1. பொருந்தாமுடிவுப் போலி

எடுகூற்றில் இருந்து பெறப்பட்ட முடிவானது எந்தவகையிலும் அனுபவத்திற்குப் பொருத்தமற்றதாக இருப்பது பொருந்தாமுடிவுப் போலியாகும்.

உதாரணம்:-
நான்கு கால்கள் உடையன எல்லாம் வேகமாக ஓடும். மேசைக்கு நான்கு கால்கள் உண்டு ஆகவே மேசை வேகமாக ஓடும்.

2. முடிவு மேற்கோள் போலி

மேற்கோளோ அல்லது மேற்கோளின் ஒரு பகுதியோ முடிவாக நிறுவிக்காட்டப்படுவது முடிவு மேற்கோள் போலி எனப்படும். இதனை கூறியது கூறல் போலி என்றும் அழைப்பர்.

உதாரணம்:-
அந்த பஸ் அதிவிரைவாகச் செல்கிறது ஏனெனில் அது கடுகதி பஸ்.

3. சக்கர நிரூபணப் போலி

தரவெடு கூற்றே இடையிடையே கூட்டி குறைத்து முடிவாகவும் நிறுவப்படுவது சக்கர நிருபணப் போலியாகும். இதனை வட்டச் சிந்தனைப் போலியெனவும் அழைப்பர்.

உதாரணம்:-
விஞ்ஞானமுறை என்ற பாடம் விஞ்ஞானத்தில் முறைகளை ஆராய்கின்றது. விஞ்ஞான முறைகள் விஞ்ஞான ரீதியானவை ஆகவே விஞ்ஞான முறை என்ற பாடம் விஞ்ஞான ரீதியானது.

4. சிக்கல் வினாப் போலி

எந்த விதத்திலும் குற்றமற்ற ஒருவரை குற்றவாளியாகக் காண்பிப்பதற்காக வினவப்படுகின்ற சிக்கலான வினாவே இதுவாகும்.

உதாரணம்:- உனக்கு இப்பவும் மது அருந்தும் பழக்கமுண்டா?

(உ) வரைவிலக்கணப் போலி

உரையாடலின்போது கையாளப்படும் பதத்தின் பொருளைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதன் மூலம் வரைவிலக்கண விதிகளை மீறும் நியாயித்தல் வரைவிலக்கணப் போலியாகும். இது நான்கு வகையில் ஏற்படுகின்றது. அவையாவன:-

1. இரட்டுற மொழிதற் போலி
2. கவர்பாட்டுப் போலி
3. சொல்லணிப் போலி
4. உச்சரித்தற் போலி

1. இரட்டுற மொழிதற் போலி

உரையாடலின் போது ஒரு வாக்கியத்தை இரு பொருள்படக் கூறுவதால் ஏற்படும் தவறான நியாயித்தல் இதுவாகும்.

உதாரணம்:-

1. ஆடை நீக்கிப் பால் கொண்டுவா.
2. அறிவில்லாதவன்.

2. கவர்பாட்டுப் போலி

(கவர்பொருட்பாட்டுப் போலி) கவர்பாடான சொற்களைக் கொண்டு வாதிடும்போது ஏற்படும் தவறான தர்க்கித்தல் இதுவாகும்.

உதாரணம்:-

கொழுப்புகள் எல்லாம் வெயிலில் உருகும். அவள் சரியான கொழுப்பு. ஆகவே அவள் வெயிலில் உருகுவாள்.

3. சொல்லணிப் போலி

சொல்லோசைக்காக கருத்துள்ள சொற்களோடு கருத்தற்ற சொற்களையும் உபயோகிப்பதனால் ஏற்படும் தவறான தர்க்கித்தல் இதுவாகும்.

உதாரணம்:-

1. தோசைக்குத் தொட்டுக் கொள்ள சட்டினி, கிட்டினி இல்லையோ?
2. எனக்கு இருக்கும் கவலைக்குள்ள பாட்டும் கீட்டும் பாடச் சொல்லலாமா?

உச்சரித்தற்போலி (அழுத்தற் போலி) ஒரு வாக்கியத்தைக் கூறும் போது அதில் எச்சொல்லை அழுத்தி உச்சரிக்கின்றோமோ அதற்கேற்ப அவ்வாக்கியத்தின் பொருள் அமையும் என்று வாதிடுவது இதுவாகும்

உதாரணம்:-

அயல் வீட்டானுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி கூறாதே.

மேற்குறித்த கருத்துக்களை நாம் கவனத்திற் கொள்ளும்போது நியமமில்போலிகள் தொடர்பாக இன்று நடைமுறையிலிருக்கும் ஐந்து பெரும்பிரிப்புக்களையும் அப்பிரிப்புக்கள் ஒவ்வொன்றினுள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ள உபபிரிப்புக்களையும் கவனத்திற் கொண்டு அதனைக் கற்க முற்படுவோமானால் போலிகளின் பிரிப்புக்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உசாத்துணை நூல்கள்:

01. Copi lrving M. : Introduction to Logic; Macmillan Company, London, 1961.
02. வெல்டன் ஜேம்ஸ் மொனகன் ஏ. ஜே : இடைநிலை அளவையியல் (தழிழ் மொழி பெயர்ப்பு, இலங்கை அரசகரும மொழி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு)
03. க. கேசவன் : அளவையியலும் விஞ்ஞானமுறையும் பகுதி I (கோபிகா பதிப்பகம்)

திரு. K. விஜயநாயகம் B.A (Hons),Dip.in.Edu
விரிவுரையாளர் - மெய்யியல்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.

புகழ் பரவட்டும்

ஒவ்வொரு கணமும் உருகிக் கொண்டிருக்கும் பனிக்கட்டி போன்ற மனித வாழ்வில் அது உருகி முடிவதற்கு முன்னர் பிறருக்குச் சேவை செய்ய நேரத்தை ஒதுக்குதல் மனித வாழ்வில் மகத்தான பண்பாக வேண்டும் என்பதற்கு அமைவாக கிழக்கு மக்களுக்கு 1997இல் சூரியனாக உதித்து, சுடர் விட்டுப் பிரகாசித்து, பேரொளி வீசி, பெருமையுடன் என்றும் கற்றோர் பேர் பெறுவதற்கு, பெரு வழி காட்டி, பேறு பெற்று உய்ய பிரான்சிஸ் ஐயா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கல்வி நிலையமே கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரியாகும்.

வெட்டுப்புள்ளியால் பல்கலைக்கழகத்தை தவற விட்டவர்களுக்கும், பொருளாதார சிக்கலால் உயர்கல்வியை இடைநிறுத்தி தொழில் புரிவோருக்கும், பல்வேறு நிலைகளினால் கிழக்கிலிருந்து வேறு பல்கலைக்கழகங்களில் உள்வாரியாகவோ அன்றேல் வெளிவாரியாகவோ கல்வி கற்க முடியாதிருந்தோருக்கும் மிகப் பெரும் வரப்பிரசாதமாய் இருந்தது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக் கற்கை ஆரம்பிக்கப்பட்டமையாகும். (1997) அதன் மூலம பெருந்தொகையான மாணவர்களுக்கு உயர்கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இக்கற்கை நெறிக்கான பாடங்களை எங்கு கற்பது என்று நாம் ஏங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிந்தோம்.

அங்கு கல்வி கற்ற காலத்தில் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகக் கற்பது போன்ற அனுபவத்தை எம்மாற் பெறமுடிந்தது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் இங்கு கல்வி கற்றனர்.

இந் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.ஆ.கி.பிரான்சிஸ் அவர்கள், கல்வி மேம்பாட்டிற்காக விடுமுறை தினங்களிலும் விசேட தினங்களிலும் துறை சார்ந்த விரிவுரையாளர்களையும், வாளவாளர்களையும் அழைப்பித்து பாடங்கள் கற்பிக்கப்பட வழி சமைத்தார். கல்வி நடவடிக்கைகளுக்குப் புறம்பாக தனிப்பட்ட முறையில் மாணவர் நலனில் அக்கறையுடன் அவர் செயற்பட்டார்.

சரஸ்வதிப் பூசை, வருட இறுதி நிகழ்வுகள், புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வுகள், கல்விச் சுற்றுலாக்கள் ஆகியன இனிதே நடத்தப்பட்டமை சிறப்பம்சமாகும்.

எந்தை நல்கூர்ந்தார்க் கிரப்பார்க்கீந்தென்றவர்
மைந்தர் தம்மீகை மறுப்பரோ - பைந்தொடுகி
நின்றுபயனுதவி நில்லா வரம்பையின்கீழ்
கன்றுமுதவும் கனி

என்ற நீதிப் பாடலுக்கிணங்க குறிப்பினில் கனி கொடுத்த வாழையைப் போல் என்றும் கல்வி ஊட்டும் இனிய பிரான்சிஸ் ஐயா அவர்களும், அவருக்கு உறுதுணையாய் நின்று இந் நிறுவன வளர்ச்சிக்கு உதவும் அவர்தம் பாரியாரும், சிரேஷ்ட விரிவுரையாளர்களுமான திருமதி.றூபி பிரான்சிஸ் அவர்களும் நீடு வாழவும் இந்நிறுவனத்தின் புகழ் பாரெங்கும் பரவவும் வாழ்த்துகிறேன்.

திரு. S. தர்மபாலன் (B.A)
(பழைய மாணவன் - கிழக்கிலங்கை
வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி)
அதிபர், கண்ணகிபுரம் மகாவித்தியாலயம்
அக்கரைப்பற்று.

வெளிச்சம்

கல்வியே கருந்தனம்
காலத்தின் பெருஞ் செல்வம்
உள்ளவாறு கல்வி
பல்கலைக் கழகங்களில்
மேற்கொள்ளப் படாததனால்
பல்வேறு பிரச்சினைகள்.....

பொருளாதார சுமையில் சிக்கித்
தொழில் தேடி அலையும் சந்ததிக்கு
நம் நாட்டில் பட்டம் எடுத்தால்தான்
தொழில் என்ற நிலை
கல்வியை முதன்மைப்படுத்தி
பட்டம் பெற முனைகையிலே
எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்.....

பொருகி வரும் பட்டதாரிகளுக்கு
ஏற்றாற் போல் எம்மிடையே
வேலைவாய்ப்பு இன்மையும்
பல்கலைக்கழக கல்வியாண்டுகள்
இழுத்தடிக்கப்பட்டுச் செல்வதும்
காலம் வீணே புரண்டோடுவதும்
பட்டம் பெற வந்த சந்ததிக்கு
கொடுக்கும் பிரச்சினைகள் ஏராளம்.....

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என
ஓது முதுமொழிக்கு
ஏற்றாற் போல் நாட்டினிலே
வேற்றுமையற்று ஒற்றுமையாக
பிறகலாசாரம் பண்பாடுகள் தன்னை
உறவாடி அறிய ஆவல் கொள்கையிலே
பல்வேறு பிரச்சினைகள்
உள்வந்து நுழைந்து விடும்.....

வேறு இனத்தாருடன்
மாறுபாடு இல்லாமல்
ஒன்றாகக் கல்வி கற்க
உள்ளத்தால் அஞ்சுவதும்
எம்மிடையே எந்நாளும்
இருக்கின்ற பிரச்சினைகள்.....

பல இன்னல்களுக்கு இடையிலே
பல்கலைக்கழகங்கள் பயன்தரு
பட்டதாரிகளை உருவாக்கினாலும்
வேலை வாய்ப்பு இன்மையும்
வெளிநாட்டு மோகமும்
நாட்டுப் பிரச்சினையும்
காரணமாய்க் கொண்டு
கணக்கற்ற வகைகளிலே - பட்டதாரிகள்
புலம் பெயர்ந்து செல்வதும்
வேலை தேடிச் செல்வதும்
எதிர்காலச் சந்ததிக்கு
இந்நாளில் இருக்கின்ற பிரச்சினைகள்
என்பதை நாமறிவோம்.

ஆதலால் அறிவு சார்ந்தோர்
சாதனைகள் செய்யும் பொருட்டு
அவர்கள் சிறப்புகளை
மென்மேலும் வளர்ப்பதோடு
பல்கலைக் கழகங்களிலே
தொழில் சார் பாட நெறிகளைப் புகுத்தி
கல்வியாண்டுகளை செவ்வனே
வழிநடாத்தி

சமாதானம் எனும் வெளிச்சத்தின்
மத்தியிலே
நிலைமைகளுக்கேற்ப
பட்டதாரி மாணவர்கள்
உருவாகிப் பெருகுவதற்கு
குறைபாடுகள் அனைத்தும்
விரைவாக அகற்றிவிட
வழி காண வேண்டுமென்று
வாஞ்சையுடன் வேண்டுகின்றோம்.

R. சிறிஸ்கந்தராஜா
1ம் வருடம்

உலகில் மிகப் பெரியவைகள்

சமுத்திரம்	-	பசுபிக்சமுத்திரம்
பீடபூமி	-	பமீர்பீடபூமி
பாலைவனம்	-	சகாராப்பாலைவனம்
சிகரம்	-	எவரெஸ்ட்
கட்டிடம்	-	ஸேன்ஸ்டவர் (சிக்காக்கோ)
கண்டம்	-	ஆசியா
உயிரினம்	-	திமிங்கிலம்
தீவு	-	கிறின்லாந்து
கடல் (பரப்பளவு)	-	கஸ்பியன்
துணைக்கண்டம்	-	இந்தியா
நீர்வீழ்ச்சி	-	ஏஞ்சல்ஸ்
அணை	-	டோல்பர்
சமவெளி	-	ரஷ்யச்சமவெளி
நகரம்	-	இலண்டன்
மியூசியம்	-	பிரிட்டிஸ் மியூசியம்
பூங்கா	-	யெலோஸ்போன்ரவர்க்
சிலை	-	லிபேர்ட்டி
நூலகம்	-	லெனின் தேசிய நூலகம்
தேவாலயம்	-	சென்பீற்றர் தேவாலயம்
ரயில்மேடை	-	சோண்பூர்
கூரை	-	பமீர்
பறவை	-	தீக்கோழி
அரண்மனை	-	வத்திக்கான்
கோபுரம்	-	பிரான்ஸ்ஈபில்
வைரச்சுரங்கம்	-	சிம்பலி

தொகுப்பு
K. சந்திரமதி
1ம் வருடம் (B)

கலை பற்றிய எண்ணக்கரு

கலை என்ற சொல் கலா என்ற சமஸ்கிருத சொல்லினடியாகப் பிறந்தது. இது ஆங்கிலத்தில் Art என்று அழைக்கப்படும். Art என்ற ஆங்கிலப்பதத்திற்கு Skill என்பது கருத்தாகும். Skill என்பது திறன் என தமிழில் அழைக்கப்படுகின்றது. Skill என்பது மனிதனைப்பற்றி ஆராய்வதாகும். அதே நேரம் இந்த Skill னுள் இயற்கை வடிவங்கள் வருவதில்லை. இயற்கை வடிவங்கள் கலையல்ல.

கலை என்றால் என்ன என்பதற்குத் திட்டவட்டமான சரியான வரைவிலக்கணம் கூறமுடியாது. இது ஒரு திறந்த எண்ணக்கருவினுள் உள்ளடங்குகின்றது. எடுத்த எடுப்பிலே இதுதான் கலை என்று வரைவிலக்கணப்படுத்த முடியாது. ஏனெனில் இன்றைய அறிவியில் உலகில் ஒரு தேடலை நோக்கியதாகவே இது வளர்ந்து வருகின்றது. சமூகத்தில் காலத்திற்குக் காலம் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியும் மாற்றமும் அச்சமூகத்தின் அனைத்துக் கூறுகளையும் மாற்றுவதனால் மனித உணர்விலும் மாற்றம் ஏற்படுகின்றது. இந்நிலையில் கலை பற்றிய வரைவிலக்கணமும் மாற்றமடைகின்றது. ஒரு மனிதனது சூழல், அறிவு தத்துவம், மனம்,இரசனை போன்ற காரணிகளுக்கேற்ப கலையானது சமூகத்தில் வெவ்வேறுபட்டதாக வளர்ந்து வருகின்றது. கலை பற்றிப் பல அறிஞர்கள் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவ்வரைவிலக்கணங்களை கலை பற்றிய பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு ஓரளவு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அந்த வகையில் இயற்கையானவை தவிர மனிதனால் ஆக்கப்படுகின்ற செயற்பண்டங்களே கலையாகக் கொள்ளப்படுகின்றன. அதாவது மனிதத்திறனின் வெளிப்பாடே (Human Skill) கலையாகும். இதுவே அதன் முதல் தத்துவமாகும். இன்பத்தை அல்லது ஆனந்தத்தைத் தரவல்லதாகவும் இது இருக்கும்.

கலை என்பதற்கு Conigman என்பவர், "மனித முயற்சியால் உருவாக்கப்படுகின்ற அழகியல் அம்சத்தைத் தன்னுள்ளே கொண்டதான உணர்வினை வெளிப்படுத்தக் கூடியதாக அல்லது தூண்டக்கூடியதான படைப்புக்கள் கலைப்படைப்புக்கள் எனப்படும்" என விளக்கமளிக்கின்றார்.

அழகு எனக் குறிப்பிடுவது முக்கியமான கலைப்பெறுமானமாகும். இதனைக் கொண்டே கலையை வரைவிலக்கணப்படுத்த முற்படுகின்றோம். கலைப்படைப்புக்கள் எல்லாம் அழகிய அம்சத்தைக் கொண்டிருக்கும், ஆனால் அழகானலையெல்லாம் கலைப்படைப்பல்ல. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், முகில்கள், கடல்கள், மலைகள், பூங்காக்கள், வானவில் போன்ற எல்லாமே அழகானவையாக (Beauty) இருக்கின்றன. மனிதர்கள் இயற்கை என்றே அவற்றை ரசிக்கின்றார்களேயன்றி எவரும் கலைப்படைப்புக்கள் என்று இவற்றைக் கூறுவதில்லை.

இயற்கையை ஓவியமாக அல்லது சிற்பமாக அல்லது வர்ணனைக் கட்டுரையாக அல்லது திரைப்படமாக அல்லது கவிதையாகப் படைக்கின்ற பொழுது அது கலைப்படைப்பு ஆகின்றது. எனவே இதிலிருந்து கலை என்பதற்கு மனித முயற்சியும் அவனது திறனும் எந்தளவிற்கு இன்றியமையாததாக விளங்குகின்றன என்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

சுருக்கமாக் கூறின் கலை என்பது மனித முயற்சியாலே உருவாக்கப்பட்ட, அழகியல் அம்சத்தைத் தன்னுள்ளே கொண்ட, மனித உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் தூண்டுகின்ற வகையிலும் படைப்பாளியின் திறனால் உருவாக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கலை பற்றிய விளக்கம், அடிப்படையில் அனுபவத்தின் தன்மையில் இருந்து தோன்றியது என்பது மாற்றமுடியாத கருத்தாகும். இந்த உணர்வுக்கு மிகவும் அடிப்படைக் கர்த்தாவாக அமைவது சமூக அனுபவமாகும். காலம் காலமாக சமூகத்தின் சிந்தனைப்பதிவுகள் வலுப்பெற்று குறிப்பிட்ட சமூகத்தின் கலை என்றால் என்ன என்பது பற்றிய கருத்தாடலை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் இது பிரத்தியேகமான விளக்கத்திற்கு உட்பட்டுள்ளது. இந்திய மரபில் ஆய கலைகள் 64 என்ற மரபு உண்டு. தனிப்பட்ட மனிதனின் திறனை அல்லது செயற்பாட்டை குறிப்பதாக இது அமையும்.

வரலாறு என்பது சமுதாயத்தின் இயங்கியலோடு தொடர்புடையது. அதேவேளை கலையானது சமூகத்தோடு நெருக்கமான தொடர்பு கொண்டது. இதனால் கால ஓட்டத்தில் சமூக மாற்றத்திற்கேற்ப கலையும் மாறுகின்றது. கலை பற்றிய எண்ணக்கரு மாறிக்கொண்டிருப்பதற்குக் காரணம் தனிமனிதனின் அறிவு, அனுபவம், தத்துவம் என்பன வேறுபடுவதாகும். கலையானது மனித வாழ்வோடு இணைந்து காத்திரமான விளக்கங்களைத் தந்து சமூகத்தை இயக்குகின்ற சக்தியாகக் காணப்படுவதுடன் குறியீட்டுத் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது.

இயற்கையில் சமூகத்தில் கண்ட விடயங்களை, சம்பவங்களை கலைஞன் கைத்தேர்ந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்தும்போது அது குறியீடு நிறைந்ததாக இருக்கின்றது. அந்தக்கலை பல உள்நோக்கத்தையும் அர்த்தத்தையும் கொண்டிருக்கின்றது.

கலைப்படைப்பு கலைதான் என உறுதிப்படுத்துவதற்கு சுவைஞர் அல்லது ரசிகர் மிக முக்கியத்துவம் பெறுகிறார். கலைஞர் இல்லாமல் எப்படி கலையில்லாமல் போகிறதோ அவ்வாறே சுவைஞர் இல்லாமலும் கலையில்லை என்பது புலனாகிறது. சுயதிருப்திக்காகவும் கலை படைக்கப்படுகின்றது.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பண்பாடும் தனது பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்த கலை ஒரு ஊடகமாக விளங்குகின்றது. பண்பாட்டு மாற்றம், அதன் சிதைவு அதன் முக்கியத்துவம் எனப் பல விடயங்களை கலை காலத்திற்குக் காலம் வெளிப்படுத்துகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. கலை என்பது ஒரு மொழியாகும். மொழியைப் போலவே கலையும் கருத்தை வெளிப்படுத்துகின்றது. பண்பாட்டிற்குப் பண்பாடு இதன் உள்ளடக்கம் மாறும் தன்மையுடையது. எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டு கலையின் உள்ளடக்கத்திற்கும், ஐரோப்பிய கலையின் உள்ளடக்கத்திற்கும் வேறுபாடு உண்டு. மேலும் கலை உணர்வை ஊட்டக்கூடியதாகவும், மானிடம், மானிடக்கதை தழுவியதாகவும், மனிதனின் உயிர்ப்பின் தேடலைக் கொண்டதாகவும் இருக்கும். இதனால் தான் மனிதனின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே கலை எனப்படுகிறது.

கலைஞன் கொடுக்கின்ற அல்லது வெளிப்படுத்துகின்ற உணர்வு பார்ப்போர் அல்லது கேட்போர் மத்தியில் போய்ச் சேர்கின்றது. அவ்வாறு அவ்வுணர்வு அவர்கள் மத்தியில் அப்படியே சேர்முடியாது. சுவைஞனின் திறன், சூழல், அனுபவம், மனம், அளவு, கண்ணின் அமைவிடம், ஆளுமை என்பவற்றைப் பொறுத்து நுகரும் தன்மையும் மாற்றமடையும்.

கலையின் வகைப்பாடுகள்

கலை பல வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. கலைஞன் ஒருவன் எந்தக்கலையை எந்த நோக்கத்தோடு படைக்கின்றான் என அறிவது அவசியமாகும். அதனை அறிவதன் மூலமே கலையின் தன்மையினை விளக்கமுடியும் என Nelsan Goodnan என்பவர் விளக்குகின்றார் அந்தவகையில் கலைஞன் என்ன நோக்கத்திற்காகக் கலையைப் படைக்கின்றானோ அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கலையைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. நுண்கலை
2. பயன்கலை

நுண்கலை

இதனை அழகுக்கலை, கவின்கலை என அழைப்பர். நுண்ணிய வெளிப்பாட்டைக் கொண்டதும், அழகை முதன்மைப்படுத்திப் படைக்கப்படுகின்றதுமான கலை நுண்கலை எனப்படும். இது மிக நுட்பமாகச் செய்யப்படும் பொருட்களைக் குறிக்கின்றது. இந்த நுண்ணிய தன்மையை வெளிப்படுத்துபவர், அந்த அழகில் லயித்து தனது கற்பனையால் அதனை உருவாக்குகின்றான்.

இத்தகைய கலைகளே நுண்கலைகள் என்று அழைக்கப்படுகின்றன. நுண்கலைகள் எடுத்த எடுப்பிலே பொருள் கொள்ளத்தக்கனவாகவோ புரிந்து கொள்ளத்தக்கனவாகவோ அமைந்து விடுவதில்லை. நுண்கலைகள் படைக்கப்படும் போதிலிருந்து சுவைஞனால் அனுபவிக்கப்பட்டு அது தாக்கம் செலுத்தும் வரை அழகியல் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. இதுவே நுண்கலையாகும். நுண்கலைகளை கட்டிடக்கலை, சிற்பக்கலை, கூத்து, நாடகம், நடனம் எனப் பலவகைகளாகப் பிரித்து நோக்கலாம்.

பயன்கலை

பயனை முதன்மையாகக் கொண்டு படைக்கப்படும் கலைகள் பயன்கலைகள் எனப்படும். உதாரணம் நெசவு, நகைத்தொழில், பழைய அலங்காரம் செய்யப்பட்ட கடகம், தாம்பாளங்கள் மட்பாண்டங்கள்.

கலைகளை அவற்றை நுகருகின்ற புலன்வாயில்களின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. கட்புலக்கலை
2. செவிப்புலக்கலை
3. கட்புல, செவிப்புலக்கலை (இருபுலக்கலை)

1. கட்புலக்கலை

கண் என்கின்ற புலன் அங்கத்தால் மட்டும் நுகரப்படுகின்ற கலைப்படைப்புக்கள் கட்புலக்கலைகள் எனப்படும். உதாரணம் : கட்டிடம், சிற்பம், ஓவியம்.

2. செவிப்புலக்கலை

செவி என்கின்ற புலன் அங்கத்தால் மட்டும் கேட்டு நுகரக்கூடிய கலைப்படைப்புக்கள் செவிப்புலக்கலைகள் எனப்படும். உதாரணம் : இசைக்கலை, வானொலியில் ஒலிபெருக்கில் கேட்கும் இசை, வாத்திய இசை.

3. கட்புல, செவிப்புலக்கலை

கண், செவி என்ற இருபுலன் அங்கங்களாலும் நுகர்கின்ற கலைகள் கட்புல செவிப்புலக் கலைகள் எனப்படும்
உதாரணம்: நாடகம் கூத்து, கவிதை, இசைக்கச்சேரி, நடனம்

கலைகளை மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கலைகள்
2. கைவினைகள்

இவற்றை மீளுருவாக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

கலைகள்	**கைவினைக்கலைகள்**
மீளுருவாக்கம் செய்ய முடியாது.	மீளுருவாக்கம் செய்யலாம்.
புதிதாகப் படைக்கப்படுவது.	அவ்வாறில்லை.
அழகை அடிப்படையாகக் கொண்டது.	பயனை அடிப்படையாகக் கொண்டது.
மீண்டும் மீண்டும் செய்வது இல்லை.	மீண்டும் மீண்டும் செய்யப்படுவது.
உயர்வானவை, தெளிவானவை, சுத்தமானவை	அவ்வாறில்லை.
மனிதனுக்கு இன்பது பயப்பது.	இலாபம் பயப்பது.
கண்ணினால் பார்த்தும் காதினால் கேட்டும்,	அவ்வாறில்லை
உள்ளத்தால் உணர்ந்தும் ரசிக்கப்படுபவை.	
உணர்வைத்தூண்டுவது.	அவ்வாறில்லை.
இதற்கு வடிவம், வரலாறு கற்பனை இருக்கவேண்டும்.	இதற்குத் தேவையில்லை

கலைகளை கலைஞன் அக்கலைப்படைப்போரை (படைத்தவருக்கும் கலைக்குமான உறவு) எவ்வாறான நிலையில் இருக்கின்றன என்கின்ற அடிப்படையில் அவற்றினை ஆற்றுக்கைக்கலைகள், ஆக்கு கலைகள் எனவும் வகைப்படுத்தி பார்க்கும் பாரம்பரியமும் உள்ளது.

ஆற்றுகைக்கலை / அவைக்காற்றுக்கலை

ஆற்றுகைக்கலை என்பது கலைஞனும் அக்கலைஞனால் படைக்கப்பட்ட படைப்பினையும் ஒன்றிலிருந்து ஒன்று தனித்து அல்லது வேறுபடுத்த முடியாத கலைகள் என்றோ அல்லது அக்கலைஞன் இன்றி குறித்த கலைப்படைப்பினை நுகர (ரசிக்க) முடியாத கலைகள் என்றோ கூறமுடியும். அதாவது "ஒருவர் இன்னொருவருக்கு ஆற்றிக் காட்டுவது" அவைக்காற்றுக் கலையாகும். அவைக்காற்று என்பது "Performance" என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. இங்கு Perform என்பதை யாரோ ஒருவர் பார்ப்பதாகவோ அல்லது யாரோ ஒருவருக்கு ஆற்றிக் காட்டுவதாகவோ கருதுகின்றோம். எனவே அவைக்கு ஆற்றப்படும் கலை அவைக்காற்று கலை எனப்படும். இவ்வாறு சிலர் பார்க்க இன்னும் சிலர் நிகழ்த்தும் கலைகளும் விளக்குகின்றன. உதாரணமாக கூத்து, நாடகம், நடனம், நாட்டியம், இசை நிகழ்ச்சி, ஒபேரா, பலே முதலான கலைகளைக் குறிப்பிடலாம்.

அவைக்காற்றுக்கலையின் பண்புகள்

அவைக்காற்றுக்கலைகள் ஏனைய கலைகளிலிருந்து முற்று முழுதாக வேறுபட்டவையாகும். கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலான நுண்கலைகளிலும் சினிமா, தொலைக்காட்சி, இணையம், புகைப்படம் முதலான தொழில்நுட்பக் கலைகளிலும் இருந்து இவை வேறுபட்டன. அவைகாற்றுக் கலைகளின் பண்புகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

01. இது கட்புல, செவிப்புல கலையாகும். அதாவது பார்த்தும், கேட்டும் ரசிக்கக்கூடிய கலை அவைகாற்றுக்கலையாகும். உதாரணமாக நாடகக் கலையைக் குறிப்பிடலாம். ஆனால் சிற்பம், ஓவியம், கட்டிடம் என்பன பார்த்து மட்டும் ரசிக்கக்கூடிய கலைகள். இசை கேட்டு மாத்திரம் ரசிக்கக்கூடிய கலை.

02. நேரடியாகப் பார்வையாளர்களுடன் தொடர்புபட்டாலும் அவர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப கணப்பொழுதில் மாற்றமடையும் பண்பு அவைக்காற்றுக் கலையில் மாத்திரமே காணப்படுகின்றது. நாடகம், கூத்து சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் சினிமா, கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் பார்வையாளர்களின் நேரடித் தொடர்பு இல்லாமல் படைக்கப்படும் கலைகளாகும். சினிமா விசில் அடித்தாலும் ஓடியே முடியும். அங்கு அது பார்ப்போரின் விருப்பு வெறுப்புக்கு உட்படுவதில்லை என்பது புலனாகிறது.

03. தொன்று தொட்டு எம்மத்தியில் நிலவிவரும் ஓர் அற்புதக்கலை அவைக்காற்று கலையாகும். அத்துடன் பல கலைஞர்களும், கலைகளும் சங்கமிக்கின்ற ஒரு கூட்டுக்கலையாக காணப்படுவது இதன் முக்கியமாக பண்பாகும். உதாரணம் : நாடகக்கலை

04. அவைகாற்றுக் கலையை அளிக்கை செய்யும் போது குறிப்பிட்ட இடம் தேவைப்படுகிறது.

05. கதைக்கருவினை வெளிக்காட்டுவதாகவும், இரசனையினைத் தோற்றுவித்து உணர்வுகளைத் தூண்டுவதாகவும் காணப்படுவது இதன் முக்கிய பண்புகளில் குறிப்பிடத்தக்கதாகும்.

06. பொழுது போக்கம்சம் நிறைந்ததாகவும், சமூக விழுமியங்கள், பண்பாட்டம்சங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதாகவும் காணப்படுவது.

07. ஒரு குறித்த நேரத்திற்குள் அதிகளவு பார்வையாளர்களைக் கவரும் கலையாகக் காணப்படுகிறது.

08. இக் கலையானது இரு வழித் தொடர்புகளைக் கொண்டதுடன் உடனேயே எதிர்வினைகளும் காணப்படும். பார்ப்போரின் விமர்சனத்திற்கேற்ப மாற்றமடையும் தன்மையுடையது.

09. ஆற்றுவோரை ஸ்தானமாகக் கொண்டது.

10. இக்கலையானது பிறக்கும் கணத்தில் இருந்து மீண்டும் புதிதாய் பிறக்கும் தன்மை கொண்டது. அதாவது பார்வையாளர் பார்த்துக் கொண்டிருக்கும் போது மறைந்து கொண்டிருக்கும் கலை. மீண்டும் அதைப்பார்க்க முடியாது. அப்படியென்றால் புதிதாகவே பார்க்க முடியும்.

11. சமூகத்தினை ஒன்றிணைக்கும் தன்மையுடையதாய் விளங்குகிறது. அதாவது சமூகத்தில் உள்ள உயர்ந்த, தாழ்ந்த வர்க்கத்தினரை ஆண், பெண் ஆகிய இருபாலாரை நகர கிராம மக்களை பல்வேறு சாதியினரை ஒன்றிணைக்கும் ஊடகமாக இக்கலை விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக கிராமப்புறத்திலே கூத்து

நிகழ்த்தப்படும் போது மேற்குறிப்பிட்ட எல்லா சமூகத்தினரும் ஒன்றிணைந்து பார்ப்பர். இதுவே இக்கலையின் பலமாகும்.

12. இது உயிருள்ள மனிதர்களால் உயிருள்ள மனிதர்கள் முன் நிகழ்த்தப்படும் கலையாகும். சினிமா உயிரற்ற மனிதர்களால் உயிருள்ள மனிதர் முன் போடப்படுகிறது.

13. அவைகாற்றுக்கலை கால வெளிக்கலையாகும். குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழ்த்தப்படும கலையாக இது விளங்குகின்றது. உதாரணம் கூத்து வட்டக்களரியில் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்த்தப்படும்.

14. ஆற்றுவோரிடமிருந்து கலையைப் பிரிக்கமுடியாததாய் இருக்கும் கலை அவைக்காற்றுக்கலையாகும். நடிகன் என்றால் அந்த நடிகனிடம் இருந்து அக்கலையைப் பிரிக்க முடியாது.

15. சிறுகுழு ஒன்று பெரும்குழு ஒன்றின் முன் ஆற்றும் கலை.

16. கலைஞன் ஒருவன் தன்னைத்தானே ஊடகமாகக் கொண்டு வெளிக்கொணரப்படும் கலை ஆற்றுக்கலையாகும். உதாரணம் : நடனம், நாடகம், கூத்து என்பன

ஆக்குகலைகள்

நுகர்வோர் ஒரு கலையினை நுகரும் போது அக்கலையினைப் படைத்த படைப்பாளியின் தொடர்பு இல்லாமல் இருக்கும் கலை ஆக்குகலை எனப்படும். அதாவது கலையையும் அக்கலையைப் படைத்த படைப்பாளியையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கக்கூடிய கலை ஆக்குக்லைகள் ஆகும். ஆனால் அவைக்காற்றுக்கலையில் படைப்பாளியின் தொடர்புக்கும், படைப்புக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு. ஆக்குகலைக்கு உதாரணமாக கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் போன்றவற்றை குறிப்பிடலாம். ஓவியத்தை ரசிக்கும் போது படைத்தவர்கள் எங்கோ இருப்பார். நுகர்வோர் அதைப்பார்த்து ரசிப்பர். லியனாடோ டாவின்சியின் "மொனாலிசா" ஓவியம் அப்படைப்பாளி இல்லாதபோது ரசிக்கப்படுகின்றது. இதுவே ஆக்குகலையாகும். காலம், வெளி, காலவெளி என்பவற்றுடன் கலை கொண்டுள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டு அதனை மேலும் மூன்று பிரிவாகப் பிரித்து நோக்கலாம்.

01. காலக் கலை
02. வெளிக் கலை
03. காலவெளிக் கலை

கேட்டுக் கொண்டிருக்கும்போது கணப்பொழுதில் மறைந்து கொண்டிருக்கும் கலை காலக்கலையாகும். உதாரணம் : இசைக்கலை

வெளிக்கலை என்பது பார்க்கும் கணப்பொழுதில் மறையாத அப்படியே படிமமாக உள்ள கலையாகும். உதாரணம்: கட்டிடம், சிற்பம், ஓவியம்

கால வெளிக்கலை என்பது பார்க்கும் போதும், கேட்கும் போதும் ஒரு கணப்பொழுதில் மாறிக் கொண்டிருக்கும் கலையாகும். உதாரணம்; நாடகம், கூத்து, இசைக்கச்சேரி, நடனம்.

கலையினை இன்னும் ஒரு வகையிலும் பின்வருமாறு பிரித்து நோக்கலாம்.

01. அவைக்காற்றுக் கலை
02. சடங்குக் கலை
03. தொழில்நுட்பக் கலை

அவைகாற்றுக் கலை : இதுபற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

சடங்குக் கலை:

சடங்கு சமூகத்தில் பின்னிப்பிணைந்து உள்ளது. எந்தவித கேள்விகளும் இன்றி தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் செயற்பாடு சடங்காகும். இவ்வாறு காணப்படும் சடங்கோடு பின்னிப்பிணைந்துள்ள கலையே சடங்குக் கலையாகும். புராதன காலத்தில் மனிதன் தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வேட்டையாடினான். இவ்வாறு வேட்டையாடிய மனிதன் மரங்கள், செடி, கொடிகள், மிருகங்கள் என்பவற்றை ரசித்திருக்கலாம். இது ரசனை வெளிப்பாட்டுக்குக் காரணமாகவும் இருந்திருக்கக் கூடும். இவ்வாறு வாழ்ந்த மனிதனுக்கு இயற்கை (புயல், கொடிய வெப்பம், மோசமான வெள்ளம், இடி, மின்னல், இவற்றுடன் கொடிய மிருகம் விசஜந்துக்கள் என்பன) எதிரியாக இருந்திருக்கக்கூடும். அவனுடைய வாழ்க்கை தொடர்பான இருப்புக்கு இவை அச்சுறுத்தலாக இருந்திருக்கக்கூடும்.

தன்னால் வெல்ல முடியாத இவற்றை மேலான சக்தியாக அவன் கருதினான். அவற்றைக் கடவுளாக எண்ணினான். இவற்றிற்கு பயந்த மனிதன் இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சடங்குகளை நிகழ்த்தினான். அவற்றைக் கட்டுப்படுத்தவும், சாந்தப்படுத்தவும் திரும்பத் திரும்பச் செய்தான். இது போலச் செய்தலைக் கொண்டு வந்தது. இதனை கலைத்தோற்றத்தின் ஆரம்பமாகக் கொள்ளலாம்.

மற்றும் இச்சடங்குகளைச் செய்யும்போது இயற்கைச் சக்திகளுக்குக் குறியீட்டு உருவங்களைக் கொடுத்தான். இச்சக்திகள் சிற்பங்கள், ஓவியங்களாகப் பரிணமித்தன. 'போலச் செய்தல்' சடங்குகளில் இடம்பெற்றதால் நடனம், நாடகம், இசை என்பன தோன்றின. இவற்றிற்காக உருவாக்கப்பட்ட ஐதீகக்கதைகள் கூட இலக்கியங்களாகப் பரிணமித்தன.

தொழில்நுட்பக் கலை:

தொழில்நுட்ப சாதனங்களினூடாக வெளிப்படுத்தப்படும் கலைகள் தொழில் நுட்பக்கலைகள் எனப்படும். உதாரணம் : சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணைய நிகழ்வுகள், புகைப்படக்கலைகள் என்பன. இவை நேரடியாக பார்ப்போருடன் தொடர்புபட்டதல்ல. படைத்தவனின் தொடர்பு காணப்படாத கலை ஆகவும் இது காணப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்:

01. மயிலை வேங்கடசாமி. சீனி (2003) தமிழர் வளர்ந்த அலகுக்கலைகள் வசந்தாபதிப்பகம் சென்னை
02. கலாநிதி கிருஷ்ணராஜா சோ (1996) "அழகியல்" தேசிய கலை இலக்கியப் பேரவை சென்னை
03. பேராசிரியர் மௌனகுரு சி "கலை இலக்கியக் கட்டுரை."
04. செல்வன் வெற்றி (1994) "இசையியல்" மாணிக்க வாசகப் பதிப்பகம் சென்னை
05. கணேசலிங்கம் செ. (1995) "கலையும் சமுதாயமும்" குமரன் பதிப்பகம் சென்னை

திரு. S. சந்திரகுமார்
விரிவுரையாளர், நாடகமும் அரங்கியலும்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி.

சுனாமி அனர்த்தத்திற்குப் பின் இலங்கையின் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்ட துரித மாற்றங்கள்

Speedy Changes in age structure in Sri Lankan Population after Tsunami disaster

சனத்தொகை என்பது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக விளங்குகின்றது. ஒரு நாட்டின் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு அந்நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றங்களுக்கு சாதகமாகவும், பாதகமாகவும் அமைவதுண்டு. பொதுவாக உயர்ந்த சனத்தொகை வளர்ச்சியானது ஒரு நாட்டுக்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்து கின்றது. அதிலும் குறைந்த மூலதனத்தைக் கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தங்கள் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு சனத்தொகை வளர்ச்சி வீதமானது ஒரு தடையாக விளங்குகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வறுமைக் கோட்டுக்குள் முடங்கி இருப்பதற்குப் பிரதான காரணமாக அமைவது சனத்தொகை வளர்ச்சியின் அதிகரிப்பு ஆகும்.

இவ்வகையில் மொத்தமாக சனத்தொகை வளர்ச்சி வீதம் பொருளாதாரத்தில் பல விளைவுகளை ஏற்படுத்துவது போன்று சனத்தொகையிலுள்ள வயதமைப்புப் பிரிவினர்கள் பல்வேறு சிறப்பான தாக்கங்களை பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தலாம். பொதுவாக சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பைப் பின்வருமாறு மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1) 0 - 14 வயதிற்குட்பட்டோர்.
2) 15 - 64 வயதிற்குட்பட்டோர்.
3) 65 வயதிற்கு மேற்பட்டோர்.

இவற்றுள் 14 வயதிற்குட்பட்டவர்கள் தங்கி வாழும் சிறுவர்கள் என்றும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கி வாழும் முதியவர்கள் என்றும், 15 - 64 ஆகிய வயதிற்கு இடைப்பட்டவர்கள் வேலை செய்யும் வயதுச் சனத்தொகையினர் எனவும் கூறப்படுகின்றனர். இதில் அண்மைக்கால இலங்கையின் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பானது, ஒரு கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. அதாவது இங்கு சிறுவர்களின் பங்கு குறைவடைந்து வருவதனையும், முதியவர்களின் பங்கு அதிகரித்து வருவதனையும் அவதானிக்க முடிகிறது.

இதற்கு இலங்கையின் பல்வேறுபட்ட சமூக, பொருளாதாரக் காரணிகள் பங்களிப்பு செய்த போதிலும், 14 வயதுக்குட்பட்ட சிறார்களின் பங்கைக் குறைவடையச் செய்த மிக முக்கியமான ஒரு காரணியாக இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தம் என்பது முக்கியமானதாக பொருளியலாளர்களால் ஆராயப்படுகிறது.

இயற்கை அனர்த்தமான சுனாமியுடனும், இலங்கையின் பல்வேறு சமூக பொருளாதார மாற்றங்களும் இணைந்து 14 வயதுக்குட்பட்ட சிறார்களின் சார்பு முக்கியத்துவத்தினைக் குறைத்து வருவது இலங்கையின் பொருளாதாரத்தில் எதிர்வரும் தசாப்தங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஏனெனில் நாடு ஒன்றின் குடித்தொகைப் பண்புகள் அந்நாட்டு அபிவிருத்தியின் அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. இவ்வகையில் குடித்தொகைக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் அந்நாட்டின் அபிவிருத்தியில் பெருமளவுக்குத் தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

உலக நாடுகள் தத்தமது குடித்தொகைக் கட்டமைப்பைச் சிறந்த முறையில் பேணி வர கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார அடிப்படையில் விருத்தியடைந்துவரும் நாடாகக் கருதப்படுகின்ற போதும், அதன் குடித்தொகைப் போக்கு விருத்தியுற்ற நாடுகளின் பண்புகளை நோக்கி விரைவாக முன்னேற்றமடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனைப் பின்வரும் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆண்டு	20வயதுக்கு உட்பட்டவர்கள் ('000)	20-64 வயதிற்கு இடைப்பட்டவர்கள் ('000)	64 வயதிற்கு மேற்பட்டவர்கள் ('000)
1990	7,817	8,442	734
1995	8,333	8,997	782
2000	8,906	9,618	835
2003	7,009	11,010	1,233

அத்துடன் 15 வயதுக்கு உட்பட்டவர்களின் அளவு 1997இல் 28% இலிருந்து, 2021இல் சுமார் 19%மாக வீழ்ச்சியடையும் என்றும், தொழில் செய்யும் வயதுப் பிரிவினர்களின் அளவு 1997இல் காணப்பட்ட 63% இலிருந்து 2021இல் சுமார் 65% ஆக அதிகரிக்கும் எனவும், 60 வயதினரும் அதற்கு மேற்பட்டவர்களினதும் அளவு 1997 இற்கும் 2021 இற்கும் இடையே 9% இலிருந்து 18% வரையும் அதிகரிக்கும் எனவும் மொத்த சனத்தொகையில் 5%இல் இருந்து 2010இல் 13% ஆகவும், 2025இல் 21% ஆகவும் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் 2050ஆம் ஆண்டில் 50 வயதிற்கும் மேற்பட்டவர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பார்கள் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த அடிப்படையில் குடித்தொகை நிலை மாற்றத்தில் 3ம் கட்டத்தில் தற்போது இருக்கும் இலங்கை, 2050ஆம் ஆண்டளவில் விருத்தியுற்ற நாடுகளை ஒத்ததான இறுதிக் கட்டமைப்பாகிய நான்காம் கட்டத்தை அடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வகையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி, சுகாதாரம், மருத்துவ, குடும்பத் திட்டமிடல் சேவைகள் மற்றும் சமூக அபிவிருத்தி சேவைகள் போன்றன மேற்குறிப்பிட்ட குடித் தொகைக் கட்டமைப்பினை அடைய வழிவகுத்தன எனலாம்.

இந்தக் காரணங்களினாலேயே குடித்தொகைக் கட்டமைப்பில் இளைய தலைமுறையினரின் சதவீதம் குறைவடைந்து வருவதனையும், முதியோர் சதவீதம் அதிகரித்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. இக்கட்டமைப்பு மாற்றத்திற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக கருவள வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பிடுகின்றது. ஆயினும் சுனாமி இயற்கை அனர்த்தமும் இக்கட்டமைப்பு மாற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது எனலாம்.

இவ்வாறாக அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வரும் இலங்கையின் குடித் தொகைப் பண்பு மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைந்த பல்வேறு காரணிகளை விரிவாக நோக்குவோம்.

ஆரம்பகாலங்களில் இலங்கை விவசாய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடாக இருந்தது. இந்நிலையில் அதிகளவான பிள்ளைகளைப் பெறுவது கௌரவமாகவும், இறைவனது கொடையாகவும் கருதப்பட்டமையினாலும் விவசாய வேலைக்கு அதிகளவில் மனிதவலு தேவைப்பட்டமையினாலும் பிள்ளைகளை ஒரு வளமாக, செல்வமாகக் கருதி அதிகளவில் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்பட்டது. ஆயினும் காலப்போக்கில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களின் விளைவாக குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை

வீழ்ச்சியடைந்து பாரிய குடும்பங்கள் என்ற நிலையிலிருந்து சிறிய அளவான குடும்பங்களாக மாற்றம் அடைந்தன.

இவ்வாறான நிலைமைக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்தமை.
02. பெண்களின் திருமண வயது உயர்வு.
03. வரதட்சணைப் பிரச்சினைகள்.
04. அரசாங்கத்தின் குடும்ப திட்டமிடல் நடவடிக்கைகள்.
05. நவீன மற்றும் பாரம்பரிய கருத்தடை முறைகள்.
06. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு.
07. சுனாமி இயற்கை அனர்த்த பாதிப்பு.

இனி இக் காரணிகள் எவ்வாறு கருவள வீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தி இளைய தலைமுறையினரின் சதவீதத்திலும் தாக்கத்தைச் செலுத்தும் என்பதை விரிவாக நோக்குவோம்.

1) பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்தமை.

இலங்கையில் பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்தமை கருவள விகிதத்தைக் கட்டுப்படுத்துவதில் பிரதான காரணியாக விளங்குகிறது. இவ்வகையில் பெண்களின் அண்மைக்கால கல்வியறிவு வீதம் பற்றிய தரவுகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

கல்வி அறிவு வீதம் (2003 / 2004)

மொத்தம்:- 92.5%
ஆண்:- 94.5%
பெண்:- 90.6%

பெண்களின் கல்வி அதிகரிப்பு பிறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக உள்ளது. அதாவது பெண்கள் கல்வி கற்கும் போது திருமணம் செய்யும் வயது அதிகரித்தல். இக் கல்வி அதிகரிப்பினால் வேலை வாய்ப்பைப் பெறும்போது பிள்ளைகளைப் பராமரிப்பதில் உள்ள கஷ்டம் போன்றன பிறப்பு வீதத்தைக் குறைப்பதனூடாக இளையதலை முறையினரின் சதவீதத்தையும் குறைக்கின்றது.

பொதுவாகப் பெண்களின் திருமண வயது உயர்வு மற்றும் திருமண வீதங்களின் வீழ்ச்சி போன்றவற்றிற்கு பெண்களின் கல்வி மட்டம் உயர்வடைந்தமை பல்வேறு வழிகளில் தாக்கத்தைச் செலுத்துவதாக உள்ளது. பெண்கள் அதிக காலம் கல்வி கற்றலில் ஈடுபடுவதனால் பொதுவாக திருமணங்கள் பிற்போடப்படுகின்றன. அத்துடன் கல்வி கற்ற பெண்களிடையே தகுதியான வேலையும், வேலை செய்யும் ஆர்வமும், தமக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணை கிடைக்கும்வரை காத்திருக்கும் தன்மையும் அதிகமாகக் காணப்படும் நிலையினால் திருமணங்கள் பிற்போடப்பட்டு பிந்திய வயதுத் திருமணங்கள் அதிகரிக்கின்றன.

மேலும் படித்த பெண்களிடையே குடும்பத் திட்டமிடல் பற்றிய முடிவுகளைச் சுயமாக எடுக்கும் திறனும், விருப்பமும், கருத்தடை முறைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் அம்மா, அக்கா, மாமி போன்ற உறவினர்கள் குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் நிலை மாற்றமடைந்தது. இன்று பெண்கள் தாமே சுயமாகத் தீர்மானிக்கும் நிலை உருவாகியுள்ளமை கல்வியறிவின் ஒரு விளைவாகும்.

2) பெண்களின் திருமண வயது உயர்வு:

கருவள வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் பெண்களின் திருமண வயது பிரதான காரணியாகத் தொழிற்படுகின்றது. பெண்களின் இனவிருத்திக் காலத்தின் (15 - 44 வயது) நீட்சியினைத் தீர்மானிப்பதில் திருமண வயது பிரதான பங்கு வகிக்கிறது. பெண்களில் 20 - 30 வயது பிரிவினரே உயர் (Peak) இன விருத்தி இயலுமை கொண்டவர்கள். திருமண வயது அதிகரித்தல் இப் பிரிவினர் மத்தியில் இன விருத்தி கால நீட்சியினைக் குறைக்கின்றது. பெண்களின் திருமண வயது பிற்போடப்படுகின்றபோது குழந்தைகள் பெறுவதற்கான ஆர்வமும், இயலுமையும் வீழ்ச்சியடைகின்றது. இலங்கையில் திருமண வயது தொடர்பான சில புள்ளி விபரங்கள் வருமாறு:

ஆண்டு	பெண்களின் திருமண வயது
1946	21
1995	25
2000	28

இவ்வாறான தாக்கங்கள் கருவள வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், வயதுக் குழுக்களின் அடிப்படையில் பெண்களின் திருமண வீதங்களை எடுத்துக் கொண்டால் உயர் இன விருத்தி இயலுமை கொண்ட வயதுப் பிரிவிலடங்கும் பெண்களிடையே 1963 - 1993காலப் பகுதியில் பெரும் வீழ்ச்சியினை அவதானிக்கவும் முடிகின்றது.
உதாரணமாக:- இக்காலப் பகுதியில் வயதுக் குழுக்களின் திருமண வீதங்கள் வருமாறு;

வயதுப்பிரிவு	திருமண வீதம்
15 - 19	52%
20 - 24	33%
25 - 29	18%

இதே வேளையில் 1994க்குப் பின் இலங்கையில் திருமணமாகாத நிலையில் இருந்த வயதுப் பிரிவினரின் சதவீதங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

வயதுப்பிரிவு	திருமணமாகாத பெண்களின் சதவீதம்
15 - 19	92.9%
20 - 24	61.2%
25 - 30	33.7%

இந்த நிலைமைகள் 25 வயதின் பின்னரேயே அதிகளவு திருமணங்கள் இடம்பெறுவதை எடுத்துக் காட்டுகிறது. 15 - 24 வயதுப் பிரிவினரிடையே திருமண வீதங்கள் குறைவாகவும், 30 வயதுக்கு மேற்பட்டோர் திருமண வீதம் அதிகரிப்பதும், பெண்கள் கருத்தாங்கு இயலுமை அல்லது விருப்பு குறைவடையும் காலப்பகுதியில் அதிகளவு திருமணங்கள் இடம் பெறுவதனையும் எடுத்துக் காட்டுகின்றன. இது கருவள விகித வீழ்ச்சிக்கு வித்திட்டு இளைய தலைமுறையினரின் சதவீதத்தைக் குறைக்கின்றது.

3) வரதட்சணைப் பிரச்சினைகள்:

இலங்கையில் வரதட்சணை வாங்கும் மரபு, திருமணங்கள் பிற்போடப்படுவதற்கு மற்றுமொரு காரணியாகும் எனப் பல ஆய்வாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வால்வின் (Baldwin - 1977) தன் ஆய்வில் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமணங்கள் பிற்போடப்படலில் வரதட்சணை கணிசமான பங்கைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். வரதட்சணை பண வடிவில் முக்கியத்துவம் பெற்ற காலத்திலிருந்து பெற்றோர் தம் பெண்

பிள்ளைகளைத் திருமணம் முடித்துக் கொடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கியதால் திருமணங்கள் பிற்போடப்பட்டன. அத்துடன் இலங்கைக் குடித்தொகையில் பெண்களின் சதவிகிதம் ஆண்களை விட அதிகரித்த நிலையில் காணப்படுவதனால் திருமணச் சந்தையில் ஆண்களின் பற்றாக்குறை திருமண வயது பிற்போடப்படுவதற்கு வழி வகுத்துள்ளது.

மேலும் லக்ஷ்மன் திஸாநாயக்கா 2000ஆம் ஆண்டு மேற் கொண்ட ஆய்விலிருந்து பின்வரும் விடயங்களைக் கூறியுள்ளார். "ஆண்களுக்கான தட்டுப்பாடு வரதட்சணைப் பிரச்சினையையும் தீவிரமாக்கியதுடன் 20 - 24 வயதுப் பிரிவில் அடங்கும் 100 பெண்களுக்கான 25 -29 வயதுப் பிரிவில் அடங்கும் ஆண்களின் வீதம் 1981ஆம் ஆண்டில் 84.3 ஆகவும் காணப்பட்டது. அதாவது 20 - 24 வயதுப் பிரிவில் அடங்கும் ஒவ்வொரு 100 பெண்களிலும் 15 பேருக்கு மணமகன் பற்றாக்குறை நிலை இருந்துள்ளது" என்கிறார். இந்த நிலைமையே வரதட்சணைகளின் உயர்வுக்கும், பிற்போடப்பட்ட திருமணங்களுக்கும் காரணமாக அமைந்ததுடன் பிறப்பு வீத வீழ்ச்சியினையும் சிறு பிள்ளைகளின் வீதத்தினையும் வீழ்ச்சி அடையச் செய்துள்ளது.

4) அரசாங்கத்தின் குடும்பத் திட்டமிடல் நடவடிக்கைகள்:

இலங்கையின் அபிவிருத்திக்கு சனத்தொகைக் கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்த அரசாங்கம், 1965ஆம் ஆண்டில் குடும்பத்திட்டமிடலை ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டமாக மாற்றியதிலிருந்து கருவளத்தைக் குறைப்பதற்கான அரசின் உறுதியான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. தேசிய குடித்தொகைக் கொள்கை ஒன்றின் உருவாக்கமும், குடித்தொகைத் திட்டமிடலின் முக்கியத்துவமும், 1970களின் பிற்பகுதியில் அரசின் தீவிர கவனத்தைப் பெற்றன. 1977ஆம் ஆண்டு இலங்கையில் குடித்தொகைக் கொள்கையின் புதிய யுகமாகக் காணப்பட்டது. இக்காலத்தில் குடித்தொகைக் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டு "குடும்பத் திட்டமிடல் சேவைகளை விரைவுபடுத்தல்" என்ற கோஷத்துடன் புதிய உபாயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. 1980களில் கருவள விகிதக் கட்டுப்பாடு தொடர்பான பலமான கொள்கைகளைச் சேர்த்துக் கொண்ட 9 ஆசிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

குடித்தொகை மாற்றம் தொடர்பான ஆய்வொன்றில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான அறிவு, உபயோகம் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் குடும்பத்திட்டமிடலுக்கு அரசு வழங்கிய ஊக்குவிப்பே சிறந்த குடும்பங்களை உருவாக்கக் காரணம் என்று இக் கொள்கைக்கு ஆதரவாக இலங்கையில் 50 சதவீதமான பெண்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இவ்வாறு குறுகிய கால இடைவெளியில் குடித்தொகையில் பெரும் பகுதியினருக்கு குடும்பத் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் சேவைகளை வழங்கி கருவள வீத வீழ்ச்சியை ஏற்படுத்த முடிந்தமை அரசுக்குக் கிடைத்த வெற்றியாயினும், இதன் தாக்கம் இளைய தலைமுறையினரின் சதவீதத்தினைக் குறைவடையச் செய்துள்ளது என்பது உண்மையாகும்.

5) நவீன, மற்றும் பாரம்பரிய கருத்தடை முறைகள்.

இலங்கையில் கருவள வீத வீழ்ச்சியில் நவீன, மற்றும் பாரம்பரிய கருத்தடை முறைகளின் பயன்பாடு முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. 1975 தொடக்கம் 1982 காலப் பகுதியில் திருமணமான பெண்களிடையே கருத்தடை முறைகளின் பாவனை 72 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2001ம் ஆண்டில் கருத்தடை முறைகளைப் பயன்படுத்தும் திருமணமான பெண்களின் அளவு 10.6 சதவீதமாகக் காணப்பட்டது. அத்துடன் கருத்தடை

முறைகளை உயர் வீதத்தில் பயன்படுத்தும் விருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் திருமணமான பெண்களில் 99 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் ஏதாவது ஒரு கருத்தடை முறையையேனும் அறிந்தவராகவும், 98 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் கருத்தடை முறைகளை எங்கே பெறுவது? என்ற அறிவினைப் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். 1987 - 1993 காலப்பகுதியில் 99 சதவீதமானவர்களுக்கு குடும்பத் திட்டமிடல் பற்றிய அறிவு இருந்தது.

இலங்கையில் கருத்தடை முறை ஆலோசனைச் சேவைகள் பெரும்பாலும் இலவசமாகப் பெறக்கூடியதாகவும், அன்றில் மலிவாகப் பெறக்கூடியதாகவும் இருக்கின்றமை அவற்றின் பயன்பாட்டை அதிகரித்துள்ளது. கருத்தடைச் சேவையில் 82.7 சதவீதத்தை அரசாங்கம் இலவசமாக வழங்குகிறது. கருத்தடை சாதன விநியோகத்தில் 62.2 சதவீதத்தினையும், கிளினிக் (Climical) சேவையில் 92 சதவீதத்தினையும் அரசாங்கம் கையாளுகின்றது. கருத்தடை முறைகளைப் பெரும்பாலும் இலவசமாகவும், இலகுவாகவும் பெறக் கூடிய நிலை கருவள வீத வீழ்ச்சியில் பங்களிப்பு செலுத்தியுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள கருத்தடை முறைகளைக் கையாளுகின்ற 44 சதவீதமான பெண்கள் சிறந்த பராமரிப்பு, மற்றும் திட்டமிடலுக்கு குறைந்த எண்ணிக்கையான பிள்ளைகளின் தேவையினையே வலியுறுத்துவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திறந்த பொருளாதார அமைப்பு இலங்கையின் சமூக, பொருளாதார அடிப்படையில் பல சிக்கல்களை ஏற்படுத்தி உள்ளது. பிள்ளைகளின் எண்ணிக்கையை வரையறுப்பது அவர்களால் ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைப்பதற்கான ஒரு வழியாக பெற்றோர் கருதுகின்றனர். அதாவது அதிகளவிலான பிள்ளைகளைப் பெறுவது உயர் பொருளாதாரச் சுமையினை உருவாக்குவதுடன், பிள்ளைகளின் பராமரிப்பினையும் பலவீனப்படுத்துமாகையால் குறைந்தளவு பிள்ளைகளையே பெற்றோர் விரும்புகின்றனர்.

கருத்தடைச் சாதனங்களின் பயன்பாட்டை சமூகத்தின் சகல மட்டங்களிலும் அறிமுகம் செய்வதில் ஊடகங்களின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றது. படித்த, மற்றும் கல்வியறிவு குறைந்த மக்களிடையே கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் பாரிய வேறுபாடுகள் காணப்படவில்லை. ஊடகங்களுடனான மக்களின் தொடர்பு இலங்கையில் அதிகமாகக் காணப்படுவதால் பெரும்பாலான குடும்பத் திட்டமிடல் முறைகளை மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இலங்கையில் குடும்பத் திட்டமிடல் தொடர்பாக தொலைக்காட்சி மூலம் வழங்கப்படும் தகவல்கள் 84.9 சதவீதமான மக்களையும், வானொலி மூலமான தகவல்கள் 81.9 சதவீதமான மக்களையும் சென்றடைவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இதுவும் இலங்கையின் கருவள வீதத்தை வீழ்ச்சி அடையச் செய்து சிறுவர்களின் பங்கை மொத்த சனத்தொகையில் குறைத்துள்ளது.

6) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு:

இலங்கையில் பெண்களின் கல்வி, பொருளாதாரக் கொள்கைகளின் மாற்றம் என்பவற்றுடன் இணைந்ததாக வாழ்க்கைச் செலவுகளும் அதிகரித்த நிலையில் அவற்றிற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் பெண் தொழிலாளர்களின் தொகை அதிகரித்தது.

இவ் வகையில் பெண் தொழிலாளர்களின் அளவு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதைப் பின்வரும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ஆண்டு	பெண் தொழிலாளர்களின் அளவு
1946	21.8%
2000	33.9%

பொதுவாகப் பணிப்பெண்களாகவும், ஆடைக் கைத்தொழில், மற்றும் நிறுவனங்களில் வேலை செய்வதற்காகவும் பெண்கள் இடம் பெயர வேண்டியிருக்கிறது. 1980 களின் பின்னர் ஏற்பட்ட நகராக்கம், மற்றும் தொழில் வாய்ப்பு விருத்திகள் போன்றன பெண் தொழிலாளர் தொகையை மேலும் அதிகரிக்கச் செய்தன. ஆயினும் அண்மைக்காலங்களில் வேலை வாய்ப்பைப் பெறுபவர்களில் பெண்களின் பங்கு உயர்வாகக் காணப்படுகிறது. இப்போக்கிற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1) இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையின் பங்கு அதிகம். இதனால் சேவைத்துறை ஆண்களை விடப் பெண்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பை வழங்குகிறது.
2) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் இலகுக் கைத்தொழில்களைக் கொண்டிருப்பதால் பெண்களின் வேலை பெறும் பங்கு அதிகமாக இருக்கிறது.
3) ஆடைக் கைத்தொழில்களில் பெண்களின் வேலை வாய்ப்பு உயர்வாக இருக்கின்றமை.
4) பெண்களை சில தொழில்களில் கவர்ச்சிகரமாக வேலைக்கு அமர்த்துதல்.
5) தொழிற்சங்க நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு குறைவாக இருப்பதனால் பெண்களின் தொழில் வாய்ப்புக்கள் அதிகம்.
6) ஒப்பீட்டு ரீதியில் ஆண்களை விடப் பெண்களுக்கு கூலிகள் குறைவாக வழங்கப்படல்.
7) பெண்களின் கல்வி நிலையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பு
8) வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிலும் பெண்களின் வீதம் உயர்வாகக் காணப்படல்.

அத்துடன் இன்றைய காலகட்டத்தில் குடும்பத் திட்டமிடலில் கல்வியூட்டல் செலவும், பொருளாதாரப் பிரச்சினைகளும் கணிசமான இடத்தினை வகிப்பது கண்டறியப்பட்டுள்ளது. இன்று சிறிய குடும்பத்தை விரும்புவதற்கான காரணமாக பொருளாதார, கல்வியூட்டல் செலவுகள் குறிப்பிடப்படுகின்றன. நாட்டில் இலவசக் கல்வி முறை இருக்கின்ற போதும் 1980 களின் பின்னர் குடும்பங்களில் பிள்ளைக்களின் கல்விக்கான செலவு அதிகரித்துள்ளது. கற்றல் உபகரணங்களுக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பும் மரபு வளர்ந்து வருவதால் ஏற்படும் செலவு மலை போன்று உயர்ந்து வருகின்றது. இன்று 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளைத் தனியார் கல்வி நிலையங்களில் பிரத்தியேக வகுப்புகளுக்காக அனுப்புகின்றனர்.

உலகமயமாதலின் விளைவுகள் சமூக மட்டத்தின் சகல பகுதிகளிலும் வியாபித்து சமூகத்தின் சகல மட்டத்தினரையும் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தத் தூண்டுதல் அளித்துள்ளன. இதனால் தத்தமது வருமான நிலையையும் மீறி பிள்ளைகளின் கல்விமீது முதலீடு செய்யப் பெற்றோர்கள் முற்படுகின்றனர். குறைவான பிள்ளைகளைப் பெறுவதன் மூலம் பிள்ளைகளின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தி அவர்களை முன்னேற்ற முடியும் என்ற பிள்ளைகளின் எதிர்கால நலனின் மீதான பெற்றோரின் ஆர்வம் தமது குடும்பத்தைத் திட்டமிடுதலின் மீது செல்வாக்கு செலுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட கருவளவீத வீழ்ச்சிப் போக்கு இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி, மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கையின் ஒன்றிணைந்த விளைவாகக் காணப்படுவதனால் பிறப்புவீத வீழ்ச்சிக்கும், சிறுவர்களின் பங்கு குறைவடைவதற்கும் வழி கோலுவதாக உள்ளது.

7) சுனாமி இயற்கை அனர்த்த பாதிப்பு

மேற்கூறப்பட்ட பலவகையான சமூக, மற்றும் பொருளாதாரக் காரணிகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டு வந்த சிறு வயதினரின் பங்கு 26 - 12 - 2004 அன்று இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தின் விளைவாக மிகவும் மோசமடைந்தது. இலங்கை பூராகவும் கரையோரப் பகுதிகளை அண்டி வாழ்ந்த மக்களில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனோரில் கணிசமான பகுதியினர் சிறுவர்களே ஆவர்.

இதனை சுனாமி பாதிப்பு நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் 24 - 01 - 2005 ஆம் திகதி வரையான பின்வரும் மதிப்பீடுகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

மாகாணம்	மாவட்டம்	இடம்பெயர்ந்த மொத்த நபர்கள்	இறந்தவர்களின் எண்ணிக்கை	காணாமல் போனோர் எண்ணிக்கை	இறந்தவர்/ காணாமல்போன சிறுவர்களின் எண்ணிக்கை
வடக்கு	யாழ்ப்பாணம்	39,907	2,640	540	1,647
	கிளிநொச்சி	1,603	560	1	307
	முல்லைத்தீவு	22,657	3,000	552	2,590
கிழக்கு	திருகோணமலை	81,643	1,078	337	298
	மட்டக்களப்பு	69,000	2,840	1,033	2,375
	அம்பாறை	75,492	10,436	876	8,120
தெற்கு	அம்பாந்தோட்டை	17,723	4,500	963	2,361
	மாத்தறை	13,321	1,342	613	299
	காலி	6,135	4,216	554	2,313
மேற்கு	களுத்துறை	27,717	256	155	400
	கொழும்பு	30,652	79	12	64
	கம்பஹா	21,354	6	5	3
வடமேற்கு	புத்தளம்	66	4	3	1
மொத்த எண்ணிக்கை		407,270	30,957	5,644	20,778

மேலே அட்டவணையில் உள்ள நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் தகவல்களின்படி இறந்த அல்லது காணாமல் போன சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றமை சிறப்பாகக் குறிப்பிடக்கூடியதாகும். அது மட்டுமன்றி இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட, காயமடைந்த மற்றும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தொகையும் அதிகமாகும்.

அத்துடன் 2005 ஒக்டோபர் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையின்படி கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது 31,229 பேர் உயிரிழந்தும் 4,093 பேர் காணாமற்

போயும் 16,760 பேர் காயமடைந்தும் இருந்தனர் எனவும், இறந்தவர்களில் 50 சதவீதமானவர்கள் சிறுவர்கள் எனவும் அதில் 30 சதவீதமானவர்கள் பெண்களாகவும், 20 சதவீதமானவர்கள் ஆண்களாகவும் உள்ளனர். அதாவது இதில் உயிரிழந்தோரில் அதிகமானோர் நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப கூடிய சிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகைய பல பாதிப்புக்களின் ஒட்டுமொத்த விளைவு இளம் பராயத்தினரின் சதவீதப்பங்கு குறைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சனத்தொகை வளர்ச்சியில் இனவிருத்திக்கான அவர்களின் பங்களிப்பும் குறைக்கப்படும். தற்போதைய நிலையில் இறந்த சிறுவர்களைவிட இவ்வனர்த்தத்தால் பலவழிகளிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பராமரிப்பு, மற்றும் சிகிச்சைக்காகவும் அரசாங்கத்திற்குப் பாரிய செலவுகள் ஏற்படுவதுடன், அதற்கான சந்தர்ப்பச் செலவுகளையும் தாங்க வேண்டியிருக்கும். மாறாக இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஒழுங்காக வழிப்படுத்தாது விட்டாலும், பெற்றோர்களை இழந்த பெரும்பாலான சிறுவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய விரக்தி மனப்பான்மை, உளச்சோர்வு போன்றனவும், மற்றும் பல்வேறு காரணங்களும் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு வேறுபட்ட கோணங்களில் அமையச் செலவினை ஏற்படுத்தும் என்பது தற்போதைய பொருளாதார ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஆயினும் பொதுவாக இலங்கையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்ற சமூக பொருளாதார மற்றும் அரசியல் காரணங்கள் உட்பட அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமும் கூட சிறுவர்களின் சதவீதப் பங்கினை குறைவடையச் செய்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது. மறுபுறத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தபட்டு வருகின்ற இலவச மருத்துவ சுகாதாரத் திட்டங்களின் பயனாக ஆயுட்காலம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பிறப்புவீதமும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இலங்கை மத்தியவங்கித் தகவல்களின்படி ஆயுட்கால அதிகரிப்புப் போக்குகளைப் பின்வருமாறு காட்டலாம்.

பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (2004)

ஆண்	71.7	ஆண்டுகள்
பெண்	77.0	ஆண்டுகள்

பொதுவாக மேற்குறிக்கப்பட்ட பல்வேறு வகையான சூழ்நிலைத் தாக்கங்களின் விளைவாக இலங்கைப் பொருளாதாரத்தில் சிறுவர்களின் சதவீதப் பங்களிப்புக் குறைந்தும், முதியோர்களின் சதவீதப் பங்களிப்பு அதிகரித்தும் வருகின்ற இத்தகைய குடித்தொகைக் கட்டமைப்பு மாற்றமானது இலங்கைப் பொருளாதாரத்தின் மீது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும் என இனி நோக்குவோம்.
பொதுவாக சிறுவர்களின் பங்கு நாடளாவிய ரீதியில் குறைவடைந்து வருகின்றமையானது பின்வரும் விளைவுகளை ஒரு பொருளாதாரத்தில் ஏற்படுத்த முடியும்.

1. வீட்டுத் துறையினரின் நுகர்வுச் செலவு குறைவடையும்.
2. வீட்டுத் துறையினரின் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.
3. அரசாங்கத்தின் சமூக நலச் செலவுகள் குறைவடையும்.
4. நாட்டின் மொத்த சேமிப்பும் முதலீடும் அதிகரிக்கும்.
5. எதிர்வரும் காலங்களில் அடுத்த வயதமைப்புப் பிரிவினர் மீதான வேலையின்மை தொடர்பான தாக்கங்கள் பாரியளவு குறைவடையும்.

இவ்வாறு பல சாதகமான விடயங்களைக் கூறினாலும், சிறுவயதுப் பிரிவினரின் தொகை குறைவடைவது பின்வரும் சில பாதகமான விளைவுகளையும் ஒரு பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடும்.

1. எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாகத் தொழிற்படக்கூடிய ஊழியப்படையின் வீதாசாரப் பங்கு குறைவடைகிறது.
2. நாட்டின் அதிகரிக்கும் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற ஊழிய வளங்களில் பற்றாக்குறை ஏற்படும்.
3. இந்நிலைமை அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கான செலவினத்தை அதிகரிக்கும்.
4. அத்துடன் இந்த நிலைமை நாட்டில் பாரிய பல சமூக பொருளாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கலாம்.

மறுபுறத்தில் முதியோர் சனத்தொகையின் பங்கு இலங்கைப் பொருளாதாரத்தில் அதிகரித்து வருகின்றமையானது பின்வரும் மாறுபட்ட பொருளாதார விளைவுகள் சிலவற்றை ஏற்படுத்தும்.

1. குடும்ப ரீதியான தங்கிவாழ்வோர் தொகை அதிகரிக்கும்.
2. குடும்பங்களின் சேமிப்பு ஆற்றல் குறைவடையும்.
3. அரசாங்கத்தின் சுகாதார நலச் சேவைகளுக்கான செலவு அதிகரிக்கும்.
4. அரசாங்கத்தின் வயோதிப நலப் பராமரிப்பு மீதான செலவு அதிகரிக்கும்.
5. அரசாங்கத்தின் ஓய்வூதியச் செலவுகள் அதிகரிக்கும்.

இவ்வாறான வெவ்வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இலங்கையின் குடித் தொகைப் பண்பு மாற்றங்கள் குறிப்பாக மூத்த குடியினர் தொகை அதிகரித்து வரும் நிலையில் அவர்களுக்கான சேமநலன்கள் மீது கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையை உருவாக்குகின்றன. விருத்தியுற்ற நாடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏற்கனவே பொருளாதார ரீதியாக விருத்தி பெற்ற நிலையில் மாறி வரும் இந்த சனத்தொகைப் பண்பினுடைய சவால்களை எதிர்கொள்ள முடிகின்றது. ஆயினும் பொருளாதார ரீதியில் விருத்தியடைந்து வரும் ஒரு நாடான இலங்கை இத்தகைய குடித்தொகைப் பண்பு மாற்றங்களையும், அதன் விளைவுகளையும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது? என்பதே இன்றைய பொருளியல் ஆய்வாளர்களின் வினாவாக உள்ளது.

உசாத்துணைகள்:

1. மத்திய வங்கி ஆண்டறிக்கை 2004 - 2006
2. பாக்கியராசா ஜெயப்பிரபா, சிதம்பரப்பிள்ளை அமலநாதன்; பேரலையும் பேரழிவும் 2004
3. செல்வரெத்தினம் சந்திரசேகரன் : பொருளியல் 02 - இலங்கையின் சனத்தொகை
4. இலங்கையின் சனத்தொகை புள்ளிவிபரங்கள் - சனத்தொகை தகவல் நிலையம், சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சு.
5. www.staistics.gov.ik/tsunami/index.htm

திரு. தங்கராஜா திவ்வியராஜ் [B.Econ (Hons),EUSL),PGDE (OUSL)]
விரிவுரையாளர் - பொருளியல்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.

நீங்கா நினைவு

கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் கல்வி கற்ற அந்தப் பசுமை நிறைந்த நினைவுகள் இன்றும் என் உள்ளத்தில் நீங்கா நினைவுகளாகவே உள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைக்கலாசார பீடத்தில் கலைமாணிக் கற்கை நெறி வெளிவாரியாக ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் தொகுதி மாணவருள் ஒருவனான நானும் பதிவு செய்தேன். எனினும் அதற்கான பாடங்களை எங்கு சென்று கற்பது எனத் தெரியவில்லை. அவ்வேளையில் தான் திரு.ஆ.கி.பிரான்சிஸ் சேர் அவர்கள் கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரி என்றொரு கல்வி நிறுவனத்தை தனிநபராக நின்று ஆரம்பித்துள்ளார் என்பதை அறிய முடிந்தது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைமாணி வெளிவாரிக் கற்கை நெறிக்காக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதும், அதனை மட்டுமே போதிப்பதுமான ஒரேயொரு தனியார் கல்வி நிறுவனம் இதுவேயாகும்.

இக்கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கும் திரு.ஆ.கி.பிரான்சிஸ் சேர் அவர்கள், தூர நோக்கும் சமூக சிந்தனையும் பொது நலனில் அக்கறையும் உடையவர். ஒப்பீட்டளவில் ஏனைய தனியார் கல்வி நிலையங்களைவிட குறைந்தளவு கட்டணமே மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்டமை, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய உபவேந்தர், கலைப்பீடாதிபதி, வெளிவாரி உதவிப் பதிவாளர், கலைப்பீட வெளிவாரி இணைப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றமை, பாடங்களுக்கான விரிவுரையாளர்களாக அவ்வத் துறை சார்ந்தவர்களையே நியமித்தமை அதிலும் விசேடமாக கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய சிறப்புப் பட்டதாரிகளை நியமித்தமை ஆகியனவற்றின் மூலம் இக் கல்வி நிறுவனத்தினூடாக மாணவர்களின் மேம்பாட்டிற்கு அவர் உதவினார்.

மேலும் நாமும் உள்வாரி மாணவர்களைப் போலவே பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம். இந் நிகழ்வுகளில் கிழக்குப் பல்கலைக்கழகக் கல்விமான்கள் பலரும் கலந்து கொண்டமை முக்கியமானதாகும். இது எமக்கு உற்சாகத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

எமது அறிவு வளர்ச்சி கல்லூரி மட்டத்துடனே நின்றுவிடாது அதனை மேலும் வளர்க்கும் நோக்குடன் கல்விச் சுற்றுலாக்களும் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மாணவர் - விரிவுரையாளர்கள் - நிர்வாகம் ஆகிய மும்முனைகளும் ஒரே கோட்டில் இணைந்து ஒரே குடும்பமாக இயங்கினோம். கல்லூரியின் நிர்வாகியான பிரான்சிஸ் சேர் அவர்கள், எம்முடன் நண்பராகவும் பழகும் இயல்பு உடையவர். அவர் சொல்லும் நகைச்சுவைகள் சிரிக்கவும் அதேவேளை சிந்திக்கவும் வைப்பன.

எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் சனி, ஞாயிறு தினங்கள் எப்போது வரும் எனக் காத்திருந்து இக் கல்வி நிறுவனத்திற்கு வந்து நண்பர்களுடன் குதூகலித்த அந்த இனிய நாட்களை என்றும் மறக்க முடியாது.

இந்நிறுவனம் அதே நிர்வாகக் கட்டமைப்புடன் கடந்த பத்துவருடங்களாக இயங்கி வருகின்றது. தொடர்ந்தும் பற்பல ஆண்டும் இயங்கி எம்மைப் போன்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.மா.யோகேந்திரராஜா (M.A)
(பழைய மாணவர் - கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி)
ஆசிரியர், சென்ற். ஜோன்ஸ் வித்தியாலயம்
அக்கரைப்பற்று.

என் கண்ணான பெண் இவள்

அன்புக்கு ஒரு சின்னமாய்
அழகுக்கு ஓர் அடையாளமாய்
ஆண்டவனின் படைப்பாய்
ஆருயிரின் பெண் வடிவமானவள் பெண்

இலக்கியத்தின் சக்தியாய்
இல்லறத்தின் தாய்மையாய்
ஈன்றெடுத்த பிள்ளையின் தாயாய்
ஈருயிரின் கண்மணியானவள் பெண்

உலகின் ஒளி விளக்காய்
உலகைக் காக்கும் சக்தி வடிவமாய்
ஊரார் போற்றும் குலவிளக்காய்
ஊன்றிய கருத்தைக் கொண்டவள் பெண்

எழுத்தின் மதிப்பை (பெண்) கொண்டவளாய்
எழுதாத கல் வெட்டாய்
ஏழேழு ஜென்மத்தின் பந்தமாய்
ஏழு கடல் தாண்டிய இன்பமானவள் பெண்

ஐம்புலன்களின் கண்ணாய்
ஐம் பெருங் காப்பியத்தின் சிறப்பாய்
ஒற்றுமையைப் புலப்படுத்தும் பெண்ணாய்
ஒரு ஆணின் தாரமானவள் பெண்

ஓடும் நதியின் பெருமையாய்
ஓர் உயிரின் தூய்மையாய்
ஔவியல் பேசேல் என்ற
ஔவையும் ஓர் பெண்தான்

கல்லானாலும் கணவன் என்ற காரிகையாய்
கற்றவர் போற்றும் இலக்கணமாய்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
வேண்டும் இப் பெண் பிறப்பு.

கா. மனோரஞ்சிதம்
1ம் வருடம் (B)

"ஈழத்தில் எழுந்த முதல் அம்மானை – அர்ச். யாகப்பர் அம்மானை குறித்த நோக்கு"

அறிமுகம்:

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு தனக்கெனத் தனித்துவமான பண்புகள் பலவற்றுடன் செழுமையுள்ளதாய் தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றது. பொதுவான தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பங்களிப்புகள் அநேகமாகும்.

ஈழத்திலெழுந்த நூல்கள் பற்றி குறிப்பாக கி. பி. 19ம் நூற்றாண்டிற்கு முன்னரான நூல்களைப் பற்றி நோக்குகின்ற போது ஆய்வுக்கு அதிகம் உட்படுத்தப்படாது சில குறிப்பிட்ட தகவல்களைக் கூறுவதோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாய் சில நூல்கள் விளங்கியமையை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் அமையும் நூல்களில் ஒன்றே சந்தியாகு மாயோர் அம்மானை எனப்படும் புனித யாகப்பர் அம்மானை ஆகும். போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் எழுந்ததும், இங்கு தோன்றிய முதல் அம்மானை எனக் கருதப்படுவதுமாகிய புனித யாகப்பர் அம்மானையின் இலக்கிய முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழில் அம்மானையின் தோற்றமும் வளர்ச்சியும்:

தமிழில் அமையப்பெறும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் 'அம்மானை' என்பதுவும் ஒன்று. இதன் தோற்றம், வளர்ச்சி என்பன குறித்து நோக்குகின்றபோது பின்வரும் விடயங்கள் தெரியவருகின்றன.

அம்மானை என்பது ஒரு விளையாட்டாகும். மூன்று பெண்கள் அம்மானைக் காய்களை [1] எற்றியும், எறிந்தும், ஏந்தியும் தாளத்திற்கேற்ப துள்ளி ஆடுவர். அதன் போது பாடலும் பாடப்படும். இப்பாடல் அம்மானைவரி எனப்படும். ஒருத்தி ஒரு கருத்தை / செய்தியை அல்லது வினாவை வெளியிடுவாள். அடுத்தவள் அதற்கு விளக்கம் அல்லது விடையை அளிப்பாள். மூன்றாமவள் சமாதானம் கூறி அல்லது இரண்டையும் இணைத்துப் பாடலை முடிப்பாள். இப்பாடல்கள் சிலேடை நயம் பொருந்தியவை.

அம்மானை எனும் சொல்லின் பொருள் குறித்துப் பல விளக்கங்கள் தரப்படுகின்றன.

அம்மானை என்பது தாய் என்ற பொருளுடையது என்றும், பெண்களை அம்மா என்றழைப்பது போல அம்மானை என்றழைப்பது இலக்கிய மரபென்றும், பாட்டின் இறுதியில் பெண்களை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்ததென்றும், அவ்வாறு அம்மானை இறுதியுடன் வரும் பாட்டுக்களே அம்மானை என்று பெயர் பெற்றதென்றும் கூறப்படுகின்றது.

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்திலேயே அம்மானைப் பற்றிய தகவல்கள் முதலிற் கிடைக்கின்றன. அதாவது பெண்கள் அம்மானை ஆடி சோழனின் புகழைப் பாடுவதாக அம்மானை வரிப் பாட்டுக்கள், சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் இடம் பெற்றுள்ளன. மூன்று பெண்கள் சேர்ந்து ஆடிப் பாடும் பாடல்களாக அவை அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு.

"புறவு நிறை புக்கு பொன்னுலகம் ஏத்த
குறைவு இல் உடம்பு அரிந்த கொற்றவன் யார் அம்மானை?
குறைவு இல் உடம்பு அரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறை செய்த காவலன் காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை

(சிலம்பு: வஞ்சி வாழ்த்து 18)

கலம்பகத்தில் அம்மானை என்பது ஒரு பகுதியாக உள்ளது. அதுவும் மூன்று பெண்கள் பாடுவதாகவேயுள்ளது. பிள்ளைத் தமிழில் வரும் பருவங்களில் ஒன்றாக அம்மானை குறிப்பிடப்படுகின்றது. அதாவது பெண்பாற் பிள்ளைத்தமிழில் வரும் பத்துப் பருவங்களில் இதுவும் ஒன்று. பாட்டுடைத் தலைவியைத் தாயும் செவிலியும் அம்மானை ஆடும்படி சொல்வதாக இது அமையும்.

சோழர் காலம்வரை தொடர்நிலைச் செய்யுள்களிலும், பிரபந்தங்களிலும் ஓர் உறுப்பாக இருந்த அம்மானைப் பாடல்கள், பின்னர் நெடும் பாடல்களாகவும், தனிப் பிரபந்தங்களாகவும் உருப்பெற்றன.

ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல், கிராமியப் பாடல்களின் சாயல் காணப்படுதல், பேச்சு வழக்கு இடம்பெறுதல், எளிமையான உவமைகள் கையாளப்படுதல் முதலானவை அம்மானையின் பொதுப் பண்புகளாகும்.

அர்ச். யாகப்பர் அம்மானை:

இது சந்தியாகு மாயோர் அம்மானை எனவும் அழைக்கப்படும். இச் சொல்லின் பொருள் குறித்து முதலில் நோக்குவது முக்கியமானது. சந் என்பது Saint (புனித / அர்ச்சிஸ்ட என்பது பொருள்) ஆகும். தியாகு என்னும் பெயர் (ஆங்கிலத்தில் James) யாகப்பரைக் குறிக்கும். மாயோர் அல்லது மையோர் என்பது Major ஆகும்.

இயேசுக்கிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலர்களுள் யாகப்பர் என்னும் பெயரில் இருவர் இருந்தனர். ஒருவர் செபதேயுவின் மகனும், யோவானின் (அருளப்பர்) சகோதரருமான யாகப்பர். மற்றவர் அல்பேயுவின் மகனான யாகப்பர். இவர்களுள் முன்னையவர் பெரியவர் (Major) எனவம் பின்னையவர் சிறியவர் (Minor) எனவும் குறிப்பிடப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கிளாலி என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள Saint James என்னும் பெரிய யாகப்பர் பேரில் பாடப்பெற்றதே முற்குறித்த அம்மானை ஆகும். போர்த்துக்கேயர் காலத்தில் இயேசு சபைக்குருமார் தெல்லிப்பழையில் தமது பிரதான நிலையத்தை அமைத்து பன்னிரு ஆலயங்களை நிருவகித்து வந்தமையையும், அவற்றுள் ஒன்றே கிளாலியில் அமைந்துள்ள இவ்வாலயம் என்பதையும் அறிய முடிகின்றது.

இவ்வம்மானையைப் பாடியவர், தெல்லிப்பழையைச் சேர்ந்த பேதுருப் புலவர் ஆவார். இந்நூல் இயற்றப்படுவதற்குக் காரணமாய் இருந்தவர், நூலின் காலம், ஆசிரியர், உள்ளடக்கம், வடிவம் முதலான விடயங்கள் பொதுப்பாயிரத்திற் கூறப்பட்டுள்ளன. அது வருமாறு.

"பெரியவியாக்கோபாய்ப் பிறங்கிடுசந்தியாகாய்
அரியயாகப்பரெனும் அன்பன்றிருக்கதையை
.....

சீரியபேதுரென்போன் சிந்தைமிகக் கொண்டாடி
.....
சுவங்கறுவால்லூயிசென்னும் தூயேயானுரைப்படிக்கு
.....

ஆண்டாயிரமு மறுநூறும்மாறேழும்
மீண்டுமோரஞ்சும் விளங்கவேசென்றவந்நாள்
கார்த்திகை மார்கழியாம் காணுமிருமாதமதில்
கீர்த்தியுள்ளசெந்தமிழாற் கிளத்தினாரிக் கதையை
அந்தமுடனிதனை அம்மானைப் பாவனையாய்
.....
இக்கதையைப்பாடினது என்னுடையஆசிரியன்

தக்கமனதாய்க்கேட்டுத் தற்பரனைப்போற்றிடுவீர்"

மேற்குறித்த பொதுப்பாயிரத்தின் மூலம் பெரிய யாகப்பரின் கதையை பேதுரு என்பவர், சுவாங் கறூல் லூயிஸ் என்னும் இயேசுசபைக் குருவானவரின் வேண்டுகோளுக்கிணங்க அம்மானை வடிவத்தில் கி.பி 1647ம் ஆண்டில் இயற்றியமையை அறிய முடிகின்றது. இப் பொதுப்பாயிரம் பேதுருப் புலவரின் மாணவரொருவரால் எழுதப்பட்டதென்பதை இதன் இறுதி வரிகளிலிருந்து அறிய முடிகின்றதெனினும் அம் மாணவரது பெயர் முதலான ஏனைய விபரங்களை அறிய முடியவில்லை.

இந்நூல் அம்மானையாக அமைந்திருந்தபோதிலும் அதனைக் காவியமாகப் பாடவே நூலாசிரியர் விழைந்தார் என்பதை சிறப்புப் பாயிரத்தின் பின்வரும் வரிகள் உணர்த்துகின்றன.

"நன்தங்கையானமின்னாள் நற்சலோமைமைந்தனுக்கு
தூயதமிழாற்றெரிந்து தொல்காவியம்பாட
தாயாந்திருமரியே தயவாகமுன்னடவாய்"

இந்நூலிற்கு ஆதாரமாக இருந்தவை பற்றி இவ்விடத்தில் நோக்க வேண்டியது அவசியமாகும்.

புனிதர்களுடைய வரலாற்றைக் கூறும் நூல் Flos Sanctorum என்பதாகும். இந்நூலை முதன்முதலில் தமிழில் அச்சிட்டவர் வெறன்றிக் வெறன்றிக்குயிஸ் என்னும் பாதிரியார் (Rev.Fr.Henrrique Henrriques) ஆவர். அவர் Flos Sanctorum என்றே அந்நூலைக் குறிப்பிட்டு 1586 இல் இந்தியாவில் இதனை அச்சிட்டார். இது தமிழில் 'புலசந்தோர்' என அழைக்கப்பட்டது. புனிதர்களுடைய வரலாற்றை எழுதுவோர் இந்நூலை முதனூலாகக் கொள்வதுண்டு. சந்தியாகு மாயோர் அம்மானையும் குறிப்பாக அதிற் கூறப்படும் யாகப்பருடைய வரலாறு குறித்த முதற்பகுதி அவர் பற்றி முற்குறித்த நூலில் கூறப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கியது. அத்துடன் வாய்மொழியாக வழங்கி வந்த கதைகளும், வேதாகமச் செய்திகளும், அகவலில் பாடப்பட்டுள்ள மதுரையில் வழக்கிலிருந்த யாகப்பர் வரலாறும் இவ்வம்மானையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்த ஆதாரத்தினை சிறப்புப் பாயிரத்தின் பின்வரும் பகுதி மூலம் அறியலாம்.

"பாண்டிக்கரையதனிற் பரதர்கள்கோத்திரத்தோர்
வேண்டுசந்தியாகுகதை விருத்தப்பாவாயுரைத்தார்
வேறுமிதுவன்றி வேண்டும்பெரியோர்கள்
கூறினார்மெத்தக் குறிப்பானகாரியங்கள்
ஆனதெல்லாங்கற்றுணர்ந்த அற்பபுத்தியோடுலகர்
தானறியவிக்கதையைச் சாற்றுகிறேன் கேட்டருள்வீர்"

சிறப்புப் பாயிரத்தையடுத்து கதையின் சுருக்கம், அவையடக்கம் ஆகியன கூறப்படுகின்றன. அவையடக்கம் மூன்று விருத்தப் பாக்களையும் அம்மானைச் செய்யுள்களையும் உடையது. அவற்றுள் ஒன்று வருமாறு:

"மின்னுமொளிபோல விளங்குகதிராயிரம்விட்
டுன்னிச்சுடரோங்கு மோதரியசூரியனைச்
சின்னமதலை தெருவில் விளையாடி
மண்ணிலெழுதுகின்ற வாறதுபோற்பாடுகின்றேன்
எண்ணிக்கரைகானா தேற்றுஞ்சமுத்திரத்தை
உன்னியொருகுழவி யுற்றநண்டுப்பாழியினுள்
வைக்கமனந்துணிந்தால் வையகத்தோர்க்கென்படுமோ"

கதிர் விரித்து ஒளிபரப்பும், சொல்லிலடங்காச் சிறப்புடைய சூரியனை சிறு குழந்தை மண்ணில் வரைவது போலவும், பெருஞ்சமுத்திரத்தை சிறு நண்டுப் பொந்தினுள் வைத்துவிட முனையும் குழந்தையைப் போலவும் பெருங்கவிகள் இருக்க தான் பாடத் துணிந்ததாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். கம்பர், கம்பராமாயணத்திற் குறிப்பிடும்

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ"

என்பதுடனும் இதனை ஒப்பிட்டு நோக்கலாம்.

இதனையடுத்து மூன்று பிரிவுகளாக இவ்வம்மானை பகுத்து நோக்கப்படுவதனைக் காணலாம்.

முதற்பிரிவு - அர்ச்.யாகப்பரின் வாழ்க்கை வரலாறும் அவரது திருவுடல் எஸ்பாஞாவில் (ஸ்பெயின்) அடக்கம் செய்யப்பட்டதும்.
இரண்டாம்பிரிவு- எஸ்பாஞாவை அரச்.யாகப்பர் காத்தல்.
மூன்றாம்பிரிவு - அர்ச்.யாகப்பரின் திருக்கோயிலுக்கு யாத்திரிகள் செல்லல்.

கதைச் சுருக்கம்:

கலிலேயா நாட்டைச் சேர்ந்த செபதேயு - சலோமை ஆகியோருக்கு மகனாக யாகப்பர் பிறந்தார். இவரது சகோதரர் அருளப்பர். இயேசுகிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலர்களுள் இவர்கள் இருவரும் அடங்குவர். மீன்பிடித் தொழிலில் தந்தைக்கு உதவியாக தொழில்புரிந்து கொண்டிருந்தபோது இயேசுவால் அழைக்கப்பட்ட இவர்கள், அவரால் மிகவும் நேசிக்கப்பட்டவர்களும் நம்பிக்கைக்குரியவராக கருதப்பட்டவர்களுமான

மூவருள் இருவர் ஆவர் (மற்றையவர் திருச்சபையின் தலைமைக்குரியவராக இயேசுவால் நியமிக்கப்பட்ட சீமோன் இராயப்பர்.) இயேசுவின் பணியில் ஒத்துழைத்த யாகப்பர், இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகியவற்றின் பின்னர் வேதபோதகப் பணியில் மும்முரமாக ஈடுபடுகின்றார். எஸ்பாஞா தேசத்திற்கு (ஸ்பெயின்) சென்று பணிபுரிந்த போது அங்கு தேவதாயின் தரிசனம் கிடைக்கின்றது.

மீண்டும் ஜெருசலம் திரும்பும் அவர் பலவித இன்னல்களுக்குள்ளாகின்றார். பிறமதத்தினனான எரிமோசு தன் சீடனான பிலேத்து என்பவனை அனுப்பி அவரை கிறிஸ்துவ வேதத்தைவிட்டு தனது மதத்திற்கு வருமாறு அழைக்கின்றான். ஆனால் யாகப்பரிடம் வரும் அவன் அவரது போதனையால் மனம் மாறித் தனது குருவிடம் வந்து அவரையும் மனந்திரும்பும்படி கேட்கிறான். இதனால் கோபமுறும் எரிமோசு, பிலேத்துவை மந்திரத்தாற் கட்டுவித்து யாக்கோபுவிடம் சவால் விடுகின்றான். அக்கட்டினை அவர் அறுத்துவிடவே பிலேத்து அவரது சீடனாகின்றான். எரிமோசு மீண்டும் அவரைத் துன்புறுத்த எண்ணி பசாசுகளை ஏவிவிடுகிறான். இறையருளால் அவை நரகத்துள் மாட்டிக் கொள்கின்றன. தம்மை விடுவிக்குமாறு அவை யாக்கோபுவை வேண்டவே அவரும் அவற்றிற்கு விடுதலை அளிக்கின்றார். தம்மை ஏவிய எரிமோசுவை அவை துன்புறுத்தி அவனை யாக்கோபுவிடம் கொண்டு வருகின்றன. அவரது போதனையால் அவனும் கிறிஸ்தவத்தை தழுவுகிறான்.

இயேசுவின் சீடரான யாக்கோபுவையும் யூதர்கள் கொல்லச் சதி செய்து மன்னரான ஏரோதுவிடம் அவரைக் கைது செய்யுமாறு கோருகின்றன. ஏரோதின் படைகள் அவரைக் கைது செய்கின்றன. கொலியசு என்பவன் அவரைக் கைது செய்து அழைத்து வரும்போது கால் ஊனமுற்றிருந்த ஒருவன் தன்னை குணமாக்குமாறு வேண்டவே 'எழுந்து நட' என யாக்கோபு கூறுகிறார். அவனும் நடக்கத் தொடங்கினான். இதனைக் கண்ட கொலியசு மனம் மாறுகின்றான். எனவே கொலியசையும் கைதியாக்கி ஏரோதிடம் கொண்டு செல்கிறார்கள். இருவருக்கும் கொலைத் தீர்ப்பு அளிக்கப்படுகின்றது.

யாக்கோபுவின் உடலை எஸ்பாஞாவிலுள்ள கொம்பெஸ்தெல்லவென்னும் பட்டினத்திற்கு கொண்டுவரும் அவரது சீடர்கள், அங்குள்ள கல்லொன்றில் அவரது உடலை வைத்தபோது அக்கல் உருகி அவரது உடலைத் தன்னுள் தாங்கிக் கொள்கிறது. இப் புதுமையைப் பார்த்து அவர்கள் வியந்து போகிறார்கள்.பின்னர் அவரது உடலை அந் நகரில் அடக்கம் பண்ணுவதற்காக நகரின் அரசியான லோப்பாளிடம் செல்கிறார்கள். அவளோ தனது அனுமதி மட்டும் போதாதென்றும், இத்தேசத்தையாளும் மன்னனிடமும் அனுமதி பெற்று வருமாறும் கூறுகிறாள். அரசனிடம் சென்ற சீடர்கள் அவனால் சிறைவைக்கப்படுகின்றனர். தேவதூதன் அவர்களைச் சிறை மீட்கவே தப்பிச் செல்லும் அவர்களைப் பிடிக்க மன்னன் படைகளை அனுப்புகிறான். வழியில் உள்ள ஆற்றினை பாலத்தின் துணையால் சீடர்கள் கடந்து விடுகின்றனர். படைகள் அப்பாலத்தால் பயணிக்கும்போது பாலம் முறிவடைந்து விடவே படைகள் அனைத்தும் நீரில் மூழ்கி மாண்டு போகின்றன. செய்தியறியும் மன்னன் பயந்து அவர்களை அழைப்பித்துத் தக்க மரியாதை செய்து அவர்கள் போதனையால் மனம் மாறி ஞானஸ்நானம் பெற்றதுடன் உடலையடக்க அனுமதியும் வழங்குகிறான். மீண்டும் லோப்பாளிடம் வந்தபோது மன்னனின் மனமாற்றத்தால் வெறுப்புற்றிருந்த அவள், அவர்களை தந்திரமாகக் கொல்ல எண்ணி மலையில் வாழும் அடங்காததும் கொடியதுமான குழுமாடு ஒன்றினைப் பிடித்து அதில் யாக்கோபுவின் உடலை கல்லுடனே தாங்கிவருமாறு பணிக்கிறாள். முதலில் அவர்களை எதிர்க்கும் அக்கொடிய மிருகம் பின்னர் இறையருளால் பணிந்து, அவரது உடலைத் தாங்கிக் கொண்டு நேரே அரசியின் அரண்மனைக்கே வருகின்றது. இதனால் வியப்புறும் அரசி, மனம் மாறி அவரது நல்லடக்கத்திற்கு அனுமதி அளித்ததோடு தனது அரண்மனையை

இடிப்பித்து கோயில் கட்டுமாறும் அங்கே யாகப்பரின் திருவுடலைப் பின்னர் அடக்கம் செய்யுமாறும், தான் இறந்ததன் பின்னர் தனது உடலையும் அவ்விடத்திலே அடக்கம் செய்யுமாறும் கோருகிறாள். இவை முதற் பிரிவிற் கூறப்பட்டுள்ள விபரங்களாகும்.

இரண்டாம் பிரிவில் யாகப்பரின் திருவுடலை அடக்கம் செய்து கோயில் கட்டியமையும், எஸ்பாஞா தேசத்தில் இஸ்லாமியரின் படையெடுப்பு நிகழ்ந்தமை பற்றியும் அத் தேசத்தையும் வேத மறையையும் காப்பதற்காக யாகப்பர் வெள்ளைக் குதிரை மீதேறி வந்து இஸ்லாமியருடன் போர் புரிந்து அவர்களை வெற்றி கொண்டதான நிகழ்ச்சியும் கூறப்படுகின்றன.

மூன்றாம் பிரிவில் அவரது திருக்கோயிலுக்கு சென்றோர் பெற்ற நன்மைகள் விளக்கப்படுகின்றன.

இக்கதையினை தமிழ் மக்களுக்குப் பரிச்சயமானதும் வழக்கிலிருந்ததுமான அம்மானை வடிவில் கூறிய பேதுருப்புலவர் தமிழ் மரபினைப் பேணுவதிலும் கவனஞ் செலுத்தியுள்ளார். இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான சமயங்களின் கருத்துக்களைத் தமிழில் கூறமுற்பட்ட அவ்வச் சமயங்களைச் சார்ந்தோர், தமிழ் மரபைப் பேணுவதில் கவனஞ் செலுத்தியமையை சீறாப்புராணம், தேம்பாவணி முதலியவற்றின் மூலம் அறியலாம்.

இந்த வகையில் அர்ச்.யாகப்பர் அம்மானையிலும் தமிழ் இலக்கிய மரபில் வரும் வர்ணனைகளும், தமிழ் நாட்டுச் சித்திரிப்புக்களும், தமிழர்தம் மரபு முறைமைகளும், நாட்டார் இலக்கிய மரபும் உள்ளடங்கியுள்ளமையை அவதானிக்கலாம். இந்நூல் குறித்து பேராசிரியர். கா. சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுவார்.

"மக்கள் தங்கள் நம்பிக்கைகளை, எதிர்பார்ப்புக்களை, ஓலங்களைச் சொல்ல இலக்கியங்கள் அவசியமாகும்..... தழிழன் கிறிஸ்தவனாக இருந்தால், 'ஆண்டவரே' என்று நெஞ்சு கரையச் சொல்ல வேண்டும். அதற்கு தமிழ் கிறிஸ்தவ இலக்கியம் கட்டாயம் அவசியம். அந்தக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கிய மரபின் குறியீடுகளையும், படிமங்களையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனென்றால் தமிழ் தெரிந்த ஒருவனுடைய மனதில் தெய்வீகம் பற்றிய உணர்வு நிலையை ஏற்படுத்தவதற்கு அந்த மொழியின் குறியீடுகள் பயன்படுத்தப்படவேண்டுவது அத்தியாவசியமாகும்" [2] என்றும்

இதைப் படிக்கிறபொழுது 'சந்தியாகு மாயோர் அம்மானை' அல்ல, அல்லி அரசாணிமாரின் ஞாபகம் வரும். புலந்திரன் களவு ஞாபகம் வரும். 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலே தோன்றி, இப்போது பெரிய எழுத்து நூல்கள் என்று சொல்லப்பட்டு, கோயில் வீதிகளிலே மாத்திரம் விற்கப்படுகின்ற அந்த நாட்டார்நிலை இலக்கியங்கள் முழுவதனுடைய ஞாபகம் வரும். அந்த நாட்டார்நிலை இலக்கிய அடித்தளத்திலே நின்றுகொண்டுதான் இவர் இந்தப் பாடல்களை இயற்றினார்" [3] என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

யாகப்பரின் பிறப்பு நிகழ்ச்சியைக் கூறும் ஆசிரியர், திருநாமம் தரித்தல், தொட்டிலேற்றல், பால்ய விளையாட்டு, கலை பயில்தல், தொழில் பயில்தல், இயேசுவின் சீடனாதல் முதலான விடயங்களை விளக்கிச் செல்கின்றார். திருநாமம் தரித்தல் எனும் பகுதியில் வரும் பின்வரும் பாடற் பகுதியில் பொட்டிடுதல், கோலமிடுதல் முதலிய தமிழ் மரபு வழக்கங்கள் கூறப்படுகின்றன.

"பொட்டிட்டுக்குங்குமத்தாற் போந்தநல்கோலமிட்டு" என்பதே அப்பகுதியாகும். தொட்டிலேற்றல் என்னும் பகுதியில் வரும் தாலாட்டின் ஒரு பகுதி வருமாறு:

"மாணிக்கச்செப்பே வயிரமணிவிளக்கே
ஆணிப்பொன்னென்ன அழகுசெறிபளிங்கே
மின்னாள் சலோமை விளங்குந்திருவயிற்றின்
பொன்னேயிரத்தினமே போற்றிசெறிபுத்திரனே
கொஞ்சுகிளிக்குழந்தாய் கோகிலமேகோமளமே
அஞ்சாதேபஞ்சணையில் ஆரமுதேபள்ளிகொள்ளாய்"

தொழில் பயிலல் என்னும் பகுதியில் அவர்தம் தொழிலான மீன்பிடித்தொழில் பற்றிக் குறிப்பிடுகையில்,

"வன்மகரம்பாரை வருசுறாவஞ்சுரங்கள்
பன்மணலைகட்டாப் படுத்தனர்காணம்மானை
செம்பாரையுல்லன் செவிடன்கருங்கண்ணியும்
கும்பிளாக்கூரல் மொடுவாய்படுத்தனராம்
கீளிகிளாக்கன் கிளிமீன்வரியோரா
வாலைமடந்தை வரிழுவைதான்படுத்தார்"

எனக் கூறப்படும் மீன்வகைகள் பற்றிய விவரணம், பள்ளு இலக்கியத்தில் ஆற்றுவெள்ளம் பகுதியில் மீன்வகைகள் விவரிக்கப்படுவதனை ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எஸ்பாஞா தேசத்தின் சிறப்புப்பற்றிய வர்ணனையிலும் தமிழ்மரபு பின்பற்றப்-பட்டிருப்பதனைப் பின்வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

"அன்னம்விளையாட வஞ்சுவன்னப்புள்ளாட
வன்னப்பசுந்தோகை மயிலினங்கள்தானாட
கொஞ்சுபசுங்கிளியும் கோகிலமுந்தானாட
பஞ்சுவர்ணச்சேவல் பகர்பூவைதானாட
கீதமெனவே கிளர்சுரும்புதானாட
ஓதுமலையுள்ள ஓவியத்தையொத்தபுட்கள்
நாதகீதம்பாட நானிலமும்கொண்டாட
சேதங்களின்றிச் செழிக்குந்திருநகராம்"

பேச்சுவழக்குச் சொல்லாட்சியும், உவமைத் தொடர்களும் இடையிடையே பயன்படுத்தப்பட்டுள்ளன.

உதாரணம்: மாராயம், பவுள்சுகள், ஆக்கினை, தீபனம்(உணவு), சலிப்பு,
கோடைவடவையெனக் கொண்டல் பொழிந்தாற் போல்

பேதுருப்புலவரின் கவித்துவச் சிறப்பு பல இடங்களில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது.

அர்ச்.யாகப்பரின் திருக்கோயிலுக்கு வர்த்தகன் ஒருவனும் அவனது மகனும் யாத்திரையாக வருகிறார்கள். வரும் வழியில் இரவுப் பொழுதை ஒரு வீட்டில் கழிக்கிறார்கள். அவ்வீட்டுத் தலைவன் இவர்களது செல்வங்களைக் கவர்ந்து கொள்வதற்காக மதுவைக் கொடுத்து அவர்களைத் தூங்கச் செய்து தனது வெள்ளிப் பாத்திரமொன்றை அவர்களினது

பொதியில் வைத்து விடுகின்றான். காலையில் அவர்கள் தம் பயணத்தைத் தொடங்கியபோது அவர்கள் பின்னால் ஓடிவந்து தனது பொருளைக் களவெடுத்துச் செல்வதாகக் குற்றம் சாட்டுகின்றான். ஊரவர் முன்னால் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் எனத் தீர்ப்பிடப்படுகிறார்கள். இருவரில் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் தந்தை தன்னையும், மகன் தன்னையும் மரணத்திற்கு உட்படுத்துமாறு வேண்டுவதாக அமையும் உரையாடற் பகுதியும், மகனது இறப்பினால் துயருறும் தந்தையின் புலம்பலும் அவலச்சுவை பொருந்தியனவாக உள்ளன. அவற்றுள் சில பகுதிகள் வருமாறு.

"தந்தைதிருவடியிற் றவப்புதல்வன்தெண்டனிட்டு
எந்தையேநான்தா னிறப்பேனெனமொழிந்தான்

மைந்தாநீமாள மணந்துணிந்துமாபாவி
எந்தனுயிரிங் கிருக்குமோவையகத்தில்
மைந்தனருமையல்ல மாதாப்பிதாவருமை"

தந்தையின் புலம்பலில் ஒரு பகுதி வருமாறு:

"ஊருமுறவு முடனிருக்குமுற்றோரும்
ஆருமில்லாத அடர்ந்தபெரும்வழியில்
பாக்கியமற்றுப் பரதேசியாகவிங்கு
ஆக்கினைக்கீடா யகப்பட்டாயென்மகனே
இன்றுவரும்நாளைவரு மென்றேவழிபார்த்து
மன்றிலிருந்து மறுகுகின்றவேளையிலே
நான்பாவிபோனால் நமதுமகனெங்கேயென்று
தான்தாயார்கேட்டாலத் தாய்க்குநானென்னசொல்வேன்"

மேலும் லிவிலியத்திற் குறிப்பிடப்படும் செய்திகளையும் ஆசிரியர் ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளார்.

கலிலேயாவின் சிறப்பைப் புகழுகையில் இயேசுகிறிஸ்துவினால் அங்கு செய்யப்பட்ட புதுமைகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

".....இருமூன்றுசாடிதண்ணீர்
கர்த்தன்மதுவாக்குங் கருணையுள்ள பட்டணமாம்
வற்றாக்கடலில் வருமோடமீதேறிப்
போகும்பொழுதினிலே பொங்கிக்கடல்குமுற
அதையமர்த்தும் இனிமையுள்ள பட்டணமாம்
அப்பமைந்துகொண்டு ஐயாயிரம்பேர்க்கு
செப்பகனமீந்ததன்றி....."

தவிரவும் இயேசுவின் பணியில் அவர் ஒத்துழைத்தமை பற்றியும் விளக்கப்படுகின்றது. யாகப்பரையும் அவரது சகோதரர்ரையும் இயேசு அழைத்தமை பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"செபதேசுந் துய்யவிருபுத்திரரும்
அங்கவர்கூடி அரியவலைவீசுகையில்
முத்தச்சுவானியையும் முன்னவன்சந்தியாகுவையும்
இத்தரையிலென்கூட வின்பமுடன்வாருமென்று
கர்த்தரியம்பக் களிகூர்ந்திருபேரும்
அத்தனுடன்தாயார் ஆளடிமைதோண்துரம்
பொன்பணதியுண்டான பூதலத்தில்வாழ்வைவிட்டு
தன்பிறப்பும்யாக்கோபுந் தற்பரன்பின்போயினராம்"

இவ்வாறு வேதாகமச் செய்திகள், வாய்மொழிக்கதைகள், யாகப்பர் பற்றிய சில பாடல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வம்மானை இயற்றப்பட்டுள்ளமையைக் காணலாம். ஈழத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சியின் போது மிகக் குறைந்தளவிலான நூல்கள் எழுந்ததாகக் கருதப்படுகின்றது. கத்தோலிக்கம் சார்ந்த நூல்களாகவே அவை காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்ததும், கத்தோலிக்க மதம் சார்ந்ததும், ஈழத்தில் எழுந்த முதல் அம்மானை எனக் குறிப்பிடுவதுமாகிய அர்ச்.யாகப்பர் அம்மானை தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பாக ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது என்பதை மறுக்க முடியாது.

அடிக்குறிப்புகள்:

1. 'அம்மானைக் காய்கள் பெரும்பாலும் சுமை இல்லாத மரக்கட்டையால் உருண்டை வடிவினதாகச் செய்யப்பட்டு, பல்வேறு வண்ணங்கள் தீட்டப்பெற்றவை' என தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.
2. 'தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்' 1993 : பக் :25
3. மேற்படி நூல் : பக் : 35

உசாத்துணை நூல்கள்:

பேதுருப்புலவர் - சந்தியாகுமாயோர் அம்மானை : 1991 - திருத்திய பதிப்பு : புனிதவளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம்.
சந்திரகாந்தன் - ஏ. ஜே. வி. (தொகுப்பாசிரியர்) 1993 : 'தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்' : கிறிஸ்தவமன்ற வெளியீடு : யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஸ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.
இலங்கை.

கல்லூரி நினைவுகள்

முகவரி இழந்த காகிதமாய்
முதல் வரி இழந்த காவியமாய்
முதலில் இருந்த எம்மை
முன்னேற வழிவகுத்து - எம்
பெயரின் பின்னால் பெறுமதியைப்
பெற வைத்த கல்லூரிக்கு எம் நன்றிகள்

கலங்கிய மனதோடு கல்லூரியில்
காலடி வைத்த நாட்கள்
களிப்புடன் கழிந்த பின்வந்த
இனிய நாட்கள்

முகவரி தெரியாத முகங்களை எல்லாம்
முகம் மலர்ந்து உறவாட வைத்த
கலைமகளின் தாயகமல்லவா
எம் கல்லூரி

பட்டாம் பூச்சிகளாய் பறந்து திரிந்த காலங்கள்
பச்சிளம் பாலகர் போல் சிரிப்பூட்டும் சில்மிசங்கள்
கருணையே உருவான கண்ணியமான ஆசான்கள்
அன்பான ஆசான்களின் அறிவான கருத்துரைகள்
பொறுமையே உருவான பொக்கிஷமான பரீட்சைகள்

இவையாவும் கல்லூரி மரம் கனிந்த இதமான நினைவுகள்
இன்பகரமான காலங்களை எண்ணுகையில்
இன்று எமை கண்ணீர் சிந்த வைக்கும் கல்லூரி நினைவுகள்

கல்லூரி கட்டடங்களில் கீறிவிட்ட கீறல்கள்
காலடி வைத்து நடந்த கல்லூரி வளாகங்கள்
காலத்தின் கோலத்தால் நினைவுச் சுவடுகளாகின்றன.

மரித்தாலும் மரிக்காது : மறந்தாலும் மறவாது
மாற்றம் வரினும் மறையாதது
மனதை விட்டு சற்றும் நீங்காதது
எம் வாழ்வின் ஒரு பகுதியான கல்லூரியின் நினைவுகள்.

M. வசந்தராஜ்
S. ராஜன்
பழைய மாணவர்கள்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி.

"மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாரியம்மன் வழிபாடு"

சுப்பிரமணியவால பத்ததியை அடிப்படையாகக் கொண்ட ஒருநோக்கு

திரு. M.தயாநிதி B.A (Hons) PGDE , M.A
விரிவுரையாளர் – இந்து நாகரிகம்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி

மாரியம்மன் தோற்றம்

மாரியம்மன் தோற்றம் பற்றி வெவ்வேறாகக் கதைகள் வெளிவருகின்றன. புராணக்கதை மரபில் ஏழ்கடல்களுக்கும் அப்பாலுள்ள மணிநாகப்புற்றிலுள்ள நாகம் மூன்று முட்டைகளை இட்டதென்றும், பார்வதியின் அருளால் இந்த முட்டைகளினின்றும் பிரம்மராக்கு சக்தி, சின்னமுத்தார், பெரிய முத்தார் என்ற மூன்று பெண்கள் தோன்றினர் எனவும், மூவரும் தவம் செய்து சக்தி முனியின் அருளால் குழந்தைகளைப் பெற்றனர் என்றும், அவர்கள் அனைவரும் கைலாய மலையில் சிவபிரானை வணங்கி நாட்டிலே கொடுமைகளை அழிப்பதற்கு மூவரும் கொடும் வியாதிகளை வேண்டினர் எனவும், அவர்களது வேண்டுகோளுக்கு ஏற்ப குணமாக்கவியலாத பல நோய்களைப் பிரமராக்க சக்திக்கும், சின்னமைக்குச் சின்னமுத்தார்க்கும், பெரியம்மை பெரிய முத்தார்க்கும் சிவபிரான் வரங்களாக அளித்தார் என்றும் கூறப்படுகின்றது. இத்தகைய கொடிய நோய்களை ஏற்படுத்தும் சக்தி பெற்ற மூன்று சகோதரிகளும் தமிழ் நாட்டில் குடியேறி கொடியவர்களை தாம் பெற்ற வரங்களால் தண்டித்து வருவதாகக் கதை கூறுகின்றது.

கண்ணகி வழிபாடு எனும் நூலில் ம. பொ. சி குறிப்பிடும் போது பாண்டி நாட்டில் மாரிமழை குன்றும் போதெல்லாம் கண்ணகியின் சாபத்திற்குப் பயந்து கண்ணகிக்கு வேள்வி செய்வது பாண்டிய நாட்டு வழக்கம். இரண்டாம் பாண்டியப் பேரரசை அடுத்த காலத்தில் கண்ணகிக்குச் செய்ப்பட்ட இத்தகைய வேள்வியால் மாரி பொழியவே மாரியைத் தந்த கண்ணகி, மாரியம்ன் என அழைக்கப்படலானாள் என்று கூறப்படுகின்றது.

சடங்கு நிகழும் முறை

கிராமியத் தெய்வ வணக்க முறையைச் சிறப்பாக சடங்கு என்றே அழைப்பர். தியாலங்களில் சடங்கு கணிக்கப்படும். ஒரு நாள் இரண்டு தியாலங்களாகும். 5, 7, 9, 11, 13 தியாலங்கள் எனும் அடிப்படையில் சடங்கு நடாத்தப்படும். பூரணையை இறுதி நாளாகக் கொண்டு ஆனி, ஆவணி மாதங்களில் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. இதுவே பொது வழக்கமும். ஆனால் நாவற்குடா, கிழக்கு மாரியம்ன் சடங்கு ஆனி, ஆடி மாதம் தவிர்ந்த ஆவணி மாதத்தில் நிகழ்த்தப்படுகின்றது. இது ஒரு மாற்ற முறையாகும். பொதுவாகச் சடங்குகள் கீழ்வரும் அமைப்பில் இடம் பெறுகின்றது.

1	கும்பம் வைத்தல் சடங்கு	-	முதலாம் நாள்
2	அலங்காரச் சடங்கு	-	இரண்டாம் நாள்
3	ஊர் சுற்றும் சடங்கு	-	மூன்றாம் நாள்
4	தோரணச் சடங்கு	-	நான்காம் நாள்
5	தவநிலைச் சடங்கு	-	ஐந்தாம் நாள்
6	தீச் சடங்கு	-	ஆறாம் நாள்
7	கும்பம் பிரித்தல் சடங்கு	-	ஏழாம் நாள்
8	எட்டாம் சடங்கு	-	கும்பம் சொரிந்து ஏழு நாள் கழித்து வரும் எட்டாம் நாள்

பந்தல் போடுதல்

சடங்கின் முதல் நிகழ்வாக பந்தல் போடும் நிகழ்வு இடம் பெறும். விண்ணாங்குக் கம்பு இழைத்த பச்சோலை கொண்டு பந்தல்கள் அமையும். மாரியம்மனுக்கு வடக்கு முகம் நோக்கியும், பேச்சியம்மனுக்கு தெற்கு முகம் நோக்கியும், வைரவக்கு மேற்கு முகம் நோக்கியும் பந்தல்கள் அமையும். பந்தல் அமைப்பு முறை பக்தியைத் தூண்டுகின்ற அமைப்பில் அமைவதும் குறிப்பிடத்தக்கது. பந்தற்கால் நாட்டும் போது விநாயகப் பெருமனின் அருளுடன் அம்மனை வேண்டி நடப்படும். மாரியம்மன், வைரவர் பந்தல்கள் மேடை அமைப்பில் அமைய பேச்சியம்மன் பந்தல் நில மட்டத்துடன் அமைவது பொதுவழக்கமாகும்.

அன்றிரவு நேர்த்திக் கடனுக்கான மடைப்பெட்டி கொண்டுவரப்படும். அதில் நெல், பழங்கள், கற்பூரம் போன்ற வாசனைத்திரவியங்களும், பாக்கு, வெற்றிலை, திருநீறு, சந்தனம் போன்ற பொருட்களும் அடங்கும். அன்றைய தினம் வருகின்ற நெல்லே மாரியம்மன் கும்பத்துக்கு பரப்பப்படும். இப் பொருட்கள் யாவற்றையும் "அம்மனுக்குரிய அடையாளப் பொருட்கள்" என்று கூறுவது வழக்கமாகும்.

கும்பம் வைத்தல் சடங்கு

முதலில் விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்படும். பின்னர் அம்மனுக்கு அபிஷேகம் இடம்பெறும். அபிஷேகத் தீர்த்தத்தைக் கும்பச் செம்பில் இடுவர். அத்தோடு அச்சரம் கீறிய தகடு இடப்படும். இது 51 சக்தியையும் அடக்கி யந்திரம் பண்ணி செய்யப்படுவது. (மட்டக்களப்பு மாந்திரம் புகழ் சின்னத்தம்பி பூசாரி - அம்பிளாந்துறை) பின்னர் கும்பச் செம்பில் பத்திலும், கமுகம்பாளை. வெள்ளிப் பிரம்பு, தாமரைப்பூ என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு அம்மனுக்குரிய முகக்களை அமர்த்தப்பட்டு கும்பம் வைக்கப்படும்.

மாரியம்மன் பந்தலில் வாலத் தெய்வம், புவனத் தெய்வம், திரிபுரத் தெய்வம் எனும் மூன்று பெண் தெய்வங்களுக்கும் கும்பம் வைக்கப்படும். வாலத் தெய்வத்துக்குரிய கும்பம் நடுவில் அமைய வலது பக்கம் புவனத் தெய்வத்துக்குரிய கும்பமும், இடப்பக்கம் திரிபுரத் தெய்வத்துக்குரிய கும்பமும் அமையும். அத்துடன் அம்மனுக்கு, பரம சிவனுக்கு, துர்க்கைக்கு, விறுமனுக்கு. காட்டேரிக்கு, வீரபத்திரனுக்கு, மருளனுக்கு, சுந்தரிக்கு. காளிக்கு, ஈஸ்வரிக்கு என்று மடை அமையும்.

கும்பம் வைப்பதற்கு முதலில் நெல் பரவப்படும். அதன்மேல் சீலை விரித்து அரிசி பரப்பப்படும். பின்னர் நெல்லுக்கு கீழும் யந்திரத்தகடு வைக்கப்படும் அரிசிக்கு மேல் யந்திரம் கீறி மடை வைப்பர். முதலில் விநாயகருக்கு மடை அமையும் "ஓம் ஆம் கணபதியே நம" என்று மடை வைக்கப்படும். அம்மனுக்கு "ஓம் சந்திராயா நம சக்தி சிவாய நம ஏறு ஏறு" என்று மடை வைக்கப்படும். பின்னர் வைக்கப்பட்ட மடைகளில் அம்மனுக்குரிய கும்பம் ஏற்றப்படும். இந்த நிகழ்வு மனதைத் தொட்ட உண்மை நிகழ்வாகும். அப்போது கும்பத்துக்கு மாரியம்மன் பிரணவம் கொடுத்து ஏற்றப்படும். "ஓம் றிங்க வாடி வா லெட்சப்பிறவி வாடி வாடி சூலகபாலம் துலங்கிய பத்தினி வாடி வாடி நெற்றியில் இட்ட செந்தூரப் பொட்டும்மாய் இலங்காய் வாடியம்மா வா"

பேச்சியம்மனுக்கும், கம்பந்தடியில் ஒரு கும்பமும் கழுமரத்தடியில் ஒரு கும்பமும் வைக்கப்படும். கழுமரத்தடியில் சுப்பிரமணியருக்கான கும்பமே அமையும். ஒவ்வொரு கும்பமும் வைக்கும்போதும் மந்திரம் சொல்லப்படும். வாலைக்கு கும்பம் வைக்கும் போது

"ஓம் ஆம் அம் அவ்வும் மவ்வும் ஐயும் கிலியும் சௌவும் சௌவும் கிலியும், ஐயும் ஆங்கார தாண்டவ அரனோடு சேர்ந்த சிவாகி வா வா வாக்கு வாகினி வால பரமேஸ்வரி வருக வருகவே சுவாகா" என்று உச்சரிக்கப்படும்.

பூசை முறை

ஒவ்வொரு நாள் பூசையின் முன்பும் மடை பிரிக்கப்பட்டு புதிய மடை வைக்கப்படும். மடைப்பொருட்களாக வாழைப்பழம், பலாப்பழம், பாக்கு, வெற்றிலை, கமுகம்பாளை, தாமரைப்பூ, பத்திரம் என்பன அடங்கும். பூசையினை பிரதம பூசாரியார் நிகழ்த்துவார். அம்மனுக்குரிய மந்திரம் தமிழில் இடம்பெறும்.

பூசையின் போது தெய்வம் ஆடப்படும். தெய்வத்தின் பேரால் உருக் கொண்டவர் கால், கைகளில் சிலம்பணிந்து பத்திரக்கட்டைக் கையில் ஏந்திய வண்ணம் ஆடுவர். இதனைப் பேயாட்டம் என்பர். அப்போது தெய்வத்திற்கு ஆடுபவர்களைக் கட்டுவதும், அதனை வெட்டுவதும் இடம்பெறும். இங்கு அனுமன் வெட்டு குறிப்பிடப்படுகின்றது.

"ஓம் அனுமான் சாட்ட அனுமான் ஆதித்தனைக் கணியேன்று பாய்ந்தாப்போலே எனது சத்துரு கண்ணில் பாங்வே சுவாகா, ஓம் சீதை தூதா அங் அங் சுவாகா, ஓம் ஆதி விக்கிர வீர சூர அங் அங் அரகர ஆதி வீர பத்திராய எழும்பு" என்பதே அதுவாகும்.

பூசை முடிவில் பின்னர் சாட்டை கொடுத்து உருத்தணிக்கப்படும். மாரியம்மனுக்கு, காத்தானுக்கு, வைரவருக்கு, நாககன்னிக்கு, பால வதனனுக்கு என்று தெய்வங்கள் ஆடப்படுகின்றன.

தெய்வம் ஆடுபவர்கள் கட்டுச் சொல்வார்கள். இது தெய்வ வாக்காக ஏற்றுக்கொள்ளப்படும். இதில் அம்மன் அடியவர்கள் மீது கொண்டுள்ள சந்தோஷம், பொதுமக்களுடைய குறை, நிறைகள், வருத்தம் தீர்க்கும் முறை என்பன வெளிப்படும். பூசையின் போது "முத்துக்கு முத்து முறையோ முறையோ மோகனச் செல்வி முறையோ முறையோ....? என்று உடுக்கடித்து பாடல் இடம் பெறும். அத்தோடு

"மகமாரி என்றுனை நினைப்பவர் தமக்கு....."

என்ற பாடலும் இடம்பெறும்.

அம்மன் பூசை முடிய வணக்கம் இடம்பெறும். இதனை பத்ததியில்

"ஓம் ஆயி அனந்த வல்லி அமுக்த காதலி ஆதி பராசக்தி
வாராகி மகி மாயி மாயா சொரூபி பிடிமகி மாதங்கி
சடங்கி நாரணி நாரணத் தருளி நளின பரிமளநாத
ஓங்கார சுத்த பத்தினி யோக யோகாசளத்தி புவனேஸ்வரி
சவுந்தரி ஐயும் நமஸ்தே நம" எனக் காண முடியும்.

பூசை முடிந்ததும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு திருநீறு போடுதல், நூல் கட்டுதல், அச்சரம் போடுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல் என்பன இடம் பெறும். இந்த நிகழ்வு ஒவ்வொரு தியாலப் பூசை முடிந்ததும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

அலங்காரச் சடங்கு

இரண்டாம் நாள் நடைபெறும், இச்சடங்கில் இரண்டு தியாலப் பூசை இடம் பெறும், பூசையில் இடம்பெறுகின்ற அனைத்து நிகழ்வுகளும் நிகழும். அன்றைய தினமே தெய்வம்

ஆடுபவர்கள் முதன் முதலாக ஆடுவார்கள். இதனை சிறப்பாக "தலை சுற்றுதல்" என்பர். இப் பூசையைத் தொடர்ந்து ஒவ்வொரு பூசையிலும் தெய்வம் ஆடப்படுவதுடன் அன்றிலிருந்தே தெய்வங்களை மந்திரத்தால் கட்டுவதும் ஆரம்பமாகும்.

ஊர் சுற்றும் சடங்கு

அடியவர்களின் நலன் வேண்டி ஊர் சுற்றும் சடங்கு இடம்பெறும். ஊர் சுற்றுவதற் கென்று விசேடமாக கும்பம் ஒன்று அன்று வைக்கப்படும். அதனை "ஊர் சுற்றுக் கும்பம்" எனச் சிறப்பாக அழைப்பர். தெய்வம் ஆடுபவர்கள் ஒவ்வொருவரும் மக்களுக்கு அவர்களது படலைக்குச் சென்று ஆசி வழங்குவர். தெய்வங்களை மந்திரத்தால் கட்டுதலும், வெட்டுதலும் சிறப்பாக இடம் பெறும். இந்த நிகழ்வு மக்களை நேரடியாக தெய்வ பக்தியுடன் இணைக்கின்ற நிகழ்வாகும். உதாரணமாக தெய்வங்களைக் கட்டும் மந்திரம் ஒன்றைக் குறிப்பிட முடியும்.

"ஓம் அங்க உங்க உங்க வங்க நிங்க குருபரா
சுத்திகையில் விலங்கு என் கையில் இருக்குது
திரிபுரம் எரிப்பூட்டு ஆதி மூலமே
ஈசப்பரியானை பூட்டு"

இந்த மந்திரத்தைச் சொல்லியதும் தெய்வம் ஆடும் ஒருவர் (பெயர் குறிப்பிட்டுச் சொல்லுதல்) சுருண்டு விழுந்து விடுவார். அதற்காக பூசாரியார் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு அந்த மந்திரத்தை வெட்டி தெய்வத்தை ஆடச் செய்வார். உதாரணமாக ஒருவெட்டு மந்திரத்தையும் குறிப்பிட முடியும். இது விநாயகர் வெட்டாகும்.

"ஓம் உட்சாடி எழுந்து இருந்தோ வங் சத்தனாத
கணபதி விக்கிறச்சி நெம்புள்ளிப் பரமேஸ்வரி
நம விறயேயாம் உக்குறோணி வாசத்தாலோ
குறனாதே எம்புள்ளே அவ வாந்து
நாரயணதே தெறிசும்" என்பதாகும். அப்போது அத் தெய்வத்துக்கு ஆடுபவர் எழுந்து ஆடிவருவார். ஊர் வலம் முடிந்ததும் பூசையுடன் அன்றைய நிகழ்வு நிறைவுறும்.

தோரணச் சடங்கு

அம்மனுக்கான அடையாளச் சின்னங்களாக தோரணங்கள் கட்டப்பட்டு வருவது மரபாகும். மாரியம்மனுக்கு, விநாயகருக்கு, வைரவருக்கு, பேச்சியம்மனுக்கு என்று தோரணங்கள் கட்டப்படும். பத்ததியில் தோரணம் பற்றி குறிப்பு இல்லை. எனினும் அது மரபாகவே பேணப்பட்டு வந்துள்ளது. தோரணச்தைச் சமர்ப்பிக்காவிட்டால் தீராத நோய் உண்டாகும். என்ற பயம் மக்கள் மத்தியிலே வேரூன்றியுள்ளது. இதுவே அடையாளங்களாக தோரணங்களைச் சமர்ப்பிப்பதற்கான காரணமாகும்

இவ்வாறான தோரணச்சடங்கு படுவான்கரை பிரதேசத்தில் முக்கியமும், சிறப்பும் வாய்ந்த அடையாளப் பொருளாக சமர்ப்பிக்கப்படுகின்றது. குறிப்பாக கன்னங்குடாவும் அம்பிளாந்துறையும் தோரணத்தை அழகாகச் செய்வதில் பேர் போன கிராமங்களாகும். இந்த உண்மையை இன்று வரையும் அந்த கிராமச் சடங்குகளில் பார்க்க முடியும்.

கம்ப, கழுமரச் சடங்கு

கம்பச் சடங்கை சிறப்பாக தவ நிலைச் சடங்கு என்று அழைப்பர். அன்றிரவு கம்பத் அடியில் அதனை வளைத்து பத்துக் கும்பம் வைக்கப்படும். கம்பத்துக்கு மேலே ஒரு கும்பம் வைக்கப்படும். கம்பச் சடங்கு உமை அறுபது அடி உயரம் உடைய கம்பத்தில் இருந்து தவம் செய்தமையைக் குறிக்கின்றது. கம்பத்தின் மேலே மாரியம்மனுக்கு ஆடுபவர் ஏறிப் பூசை செய்வார். அங்கிருந்து வாழைப்பழங்களை பக்தர்களை நோக்கி எறிவார். இது ஒரு சிறப்பான நிகழ்வாகும். தவ நிலையில் ஏறும் போது தவ நிலைப் பாடல் பாடப்படும். பூசை முடிந்ததும் பிள்ளை விற்று வாங்கும் நிகழ்வு இடம்பெறும். அன்றிரவுதான் காத்தானைக் கழுமரத்தில் ஏற்றும் நிகழ்வும் கழுமரத்தடியில் இடம்பெறும். இந்தக் கும்பம் சுப்பிரமணியருக்கு வைக்கப்படுவதாகும்.

இந்தப் பத்ததிப்படி தவ நிலையில் ஏறிய பின்னே தீப்பாய்வாளர்கள். வெல்லாவெளி அம்மன் சடங்கில் தீப்பாய்ந்தே கம்பத்தில் ஏறுதல் இடம்பெறுவது, மரபு மாற்றமாகும். அன்றிரவு கற்பூரச்சட்டி எடுத்து பெண்கள் தம் நேர்த்தியை நிறைவு செய்வர். சிலர் தீக்கட்டை எழுந்தருளுகின்ற இடத்திலும் கற்பூரச்சட்டி எடுப்பர். தவநிலையில் ஏறும் போது பாடப்படும் பாடலில் ஒன்று வருமாறு.

மாறி உடலும் மிக வருந்தி
மனமும் உலங்கி அறிவழிந்தேன்
வேறு கருத்துச் செயவயர்ந்தேன்
மெம்மை அதனா அறிவழிந்தேன்
பாறும் சுடரே வெண்டலையிற்
பலிகொண்டருளும் பரஞ்சுடரே
ஆறுஞ் சுடலை காத்தவரே
அலையா முத்தை அருள்வாயே (27)

தீச்சடங்கு

தீக்கட்டை எழுந்தருளப் பண்ணிய பிறகு (எடுத்து வரல்) தீக்குழி வெட்டப்படும். மாரியம்மன் பந்தலுக்கு நேராக குழி அமையும். இதில் மடை ஒன்று வைக்கப்படும். பின்னர் கட்டைகளை அடுக்கிய பிறகு மாரியம்மனுக்கு ஆடுபவரால் தீ மூட்டப்படும். விடியற் பொழுதில் தீ மிதிப்பு இடம்பெறும். அன்றிரவு காளிக்கும் பூசை பிறிதொரு இடத்தில் இடம்பெறும். தீக் குழியோடு காளிக்குரிய சடங்கு தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது. காளிக்கு சாராயம், கள்ளு உட்பட மடைப்பொருட்கள் அனைத்தும் வைக்கப்படும்.

தீச்சடங்கு இரவு விநாயகப் பானை வைத்து பொங்கல் இடம்பெறும். இப்பானை பொங்காமல் கூட மந்திரம் சொல்லிக் கட்டுவார்கள். விநாயகப் பானையுடன் வேறு பானைகளும் வைத்துப் பொங்கப்படும்.

அன்றிரவு அம்மனின் பன்னீராயிரம் இங்கிலியப் படைகளுக்கு பரப்பு மடை வைக்கப்படுவதுடன், "பூரண கும்பமும்" வைக்கப்படும். இக் கும்பத்தைச் சுற்றி 9 எண் அடிப்படையில் பாக்கு, வெற்றிலை, கரும்பு, வாழைப்பழம், பலாப்பழத்துண்டு, அன்னாசித் துண்டு என்பன வைக்கப்படும். இக் கும்பம் பூரணையில் தீர்த்தம் ஆடுவதை நினைவு-படுத்துகின்றது. பூரண கும்பத்திற்கு நேரே பெரிய மூன்று மடைகள் வைக்கப்படும். இந்தக் கும்பத்தைப் பயன்படுத்தி மாரித்தெய்வ உரு ஏறிய அடியார்க்கு பூசை கொடுக்கலாம். (மட்டக்களப்பு மாந்திரி புகழ்பெற்ற சின்னதம்பி பூசாரி - அம்பிளாந்துறை)

தீப்பாய்ந்து முடிந்ததும் பேச்சியம்மன் பந்தலில் பள்ளயம் இடம்பெறும். இங்கு கள். சாராயம், தயிர், சோறு உட்பட மடைப்பொருட்கள் அனைத்தும் வைக்கப்படும். இதன் நோக்கம், தெரியாமல் செய்த பிழைகளைப் பொறுத்தருளச் செய்வதாகும். பள்ளயம் முடிந்தவுடன் "கும்ப ஆணை" இடம்பெறும். தெய்வம் ஆடுபவர்கள் "அடுத்த வருடம் சந்தோசமாக வருவோம்" என்றும் பூசாரியாருக்குக் கட்டுச் சொல்வார்கள். அவர் பூரண கும்பத்தில் இருக்கும் அலகை எடுத்து இவர்களது நாக்கில் சிறிதாக குத்தி உருவை தணிப்பார்." அதன் பிறகு அவர்கள் பழைய நிலையை அடைவார்கள். பள்ளயம் கொடுக்கும்போது,

"முட்டைப் பொரியலம்மா - பள்ளயப்பேச்சி
முருங்கக்காய்த் தீயலம்மா பள்ளயப்பேச்சி
அட்டப்புளுங்கலம்மா பள்ளயப்பேச்சி
ஆவரம்பூச் சுண்டலம்மா பள்ளயப்பேச்சி

எனும் பாடல் இடம்பெறும்.

அன்று பகல் சர்க்கரை அமுது இடம்பெறும். இது நவ கன்னிகளை நினைவுகூரும் நிகழ்வாகும். அவர்கள் ஆகாசக்கன்னி, அடுக்குக்கன்னி, செப்புக்கன்னி, செந்தாமரைக் கன்னி, வீசக் கன்னி போன்றவர்கள். இதற்காக 9 பெண் பிள்ளைகளை (பருவமடையாதவர்கள்) வைத்து பூசை இடம்பெறும். பூசை முடிந்ததும் கும்பம் பிரிக்கப்படும். இந்தக் கும்பத்தைக் கிளப்பும்போது,

"ஓம் சிறியும் மிறியும் கமலா சனத்தி புவன வசிகரி
வால சரஸ்வதி அரகரி தாண்டவ சிதம்பர ஈஸ்வரி
சிறியு மிறியும் கொண்டு சீக்கிரம் எழும்பம்மா
எழும்பு"

என்று எழுப்பி தீர்த்தம் ஆடக்கொண்டு செல்வர். அங்கு கும்பம் சொரியப்படும். கங்கையில் வடக்கு முகமாக நின்றே சொரிவர். நைவேத்தியம் பண்ணி "சிவ சிவா கங்கா பரமேஸ்வரியே குளிரம்மா குளிர்" என்ற மந்திரம் சொல்லி இடம்பெறும். தீர்த்தம் ஆடி முடிந்ததும் தீக்குழிக்கு பால் ஊற்றப்படும்.

பெண்கள் மடிப்பிச்சை எடுத்து வருதலும், அந்த நெல்லை அவர்களே குற்றி அம்மனுக்குப் பொங்கக் கொடுப்பதும், பரப்பு மடைக்கு றொட்டி சுடுவதும் ஆண்கள் அரிசி மா இடிப்பதும் அன்று தான் இடம்பெறும். அத்தோடு அம்மனுக்குரிய அடையாளப் பொருட்களான மடைப்பெட்டி, முகக்களை, திரைச்சீலை போன்ற பொருட்களும் நேர்த்திக்கடன் வைத்தவர்களால் சமர்ப்பிக்கப்படும். பாற் காவடி முதல் பறவைக் காவடி ஈறாக காவடி எடுப்பதும் பெண்கள் அலகு போடுவதும், அங்கப் பிரதட்சணம் செய்வதும் இடம்பெறும்.

எட்டாம் சடங்கு

கும்பம் பிரித்து எட்டாம் நாள் இடம்பெறும் சடங்கு இது. மாரியம்மன் பந்தலில் வாலக் கும்பம் மட்டும் வைக்கப்படும். வைரவர் பந்தலில் வைரவருக்குரிய கும்பமும், கம்பம், கழுமரம், காளிக்கு என்று வட்டா மடையும் வைத்து பூசை இடம்பெறும். இன்று பொங்கல் செய்த றொட்டி சுட்டு மடை வைக்கப்படும். அம்மனின் இங்கிலியப் படை பன்னீராயிரம் பேருக்கும் அன்று பலி கொடுத்து அனுப்புவார்கள். (மட்டக்களப்பு மாந்திரியப் புகழ் வே. சின்னத்தம்பி பூசாரி - அம்பிளாந்துறை)

அம்மனின் பந்தலிலும் வைரவர் பந்தலிலும் வாழி பாடப்படும். பேச்சியம்மன் பந்தலில் எந்த நிகழ்வும் இடம்பெறாது. அது பள்ளயம் கொடுத்து இறுதி நாள் நிகழ்ந்தவுடன் முடிவடைந்துள்ளது. மாரியம்மன் வாழிப்பாடல் பூசை முடிவில் பாடப்படும்.

ஆதிபரமேஸ்வரியே அயனுடைய தங்கையரே
நாத மறை ஓங்கார நற்பொருளாய் நின்ற சக்தி

இதனைத் தொடர்ந்து வைரவர் பந்தலிலும் வாழி பாடல் பாடப்படும் பூசை நிறைவுபெறும்.

மாரியம்மன் வழிபாட்டுச் சடங்கு சமூகத்திடையே ஒழுகலாறு, விழுமியங்களை ஏற்படுத்தி சமூகக் கட்டுக்கோப்பை வளர்த்துச் செல்கின்றது. கூட்டுப் பொறுப்பு, புனிதத்தன்மை என்பன பின்பற்றப்படுகின்றன. சின்னம்மாள் (சின்னம்மை), பெரியம்மாள் (பெரியம்மை) எனும் வெப்பு நோய்கள் வரும்போது அது மாரியம்மனுடைய குறைபாட்டால் வருகின்றது என்ற எண்ணத்துடன் அதற்கு மருந்தாக வேப்பம்பத்திரமும், மாரியம்மன் திவ்விய கரணியில் வருகின்ற மாரியம்மன் குளிர்த்திப்பாடலும் நாட்டு வைத்திய மருந்தும் அமைகின்றது. இந்த வைத்திய முறை ச ஈ மக்களிடையே இன்று வரை பின்பற்றப்படுகின்றது. மாரியம்மன் சடங்கு முடிந்ததும் வீடுகளில் சர்க்கரை அமுது கொடுக்கும் வழக்கமும் கிராம மக்களிடையே வழக்கில் இருந்து வருகின்றது. சர்க்கரை அமுதுப் பொங்கலுடன் கெட்ட துஷ்ட தேவதைகள் அணுகாமல் வைரவருக்கு அன்றிரவு பொங்கல் இடம்பெறுகின்றது. இதனை வைரவருக்குச் செய்தல் என்பர். (பக்தி) மாரியம்மன் காத்தவராயன் வரலாற்றை கரகாட்டமாக ஆடுகின்றனர்.

"பாசுபடா கெங்கையிலே மகனே கெங்கையிலே - அந்த
புவன நீர் ஓடையிலே காத்தான் ஓடையிலே"
கொண்டை நல்ல பெருத்தவள்ரா மகனே பெருத்தவள்ரா - நம்மட
குடிவழிக்கும் ஆகாதடா மகனே ஆகாதடா"

என்று மாரியம்மன் காத்தானுக்கு புத்திசொல்லி வழிப்படுத்துகின்ற போக்கில் அமைகின்றது. இப்பாடலை மாரியம்மன் சடங்கு நடைபெறும்போது மாரியம்மனுக்கு காத்தவராயனுக்கு உருக்கொண்டு ஆடுபவர்களுக்கு படிக்கப்படுவதும் வழக்கமாகும்.

மாரியம்மன் வழிபாடு, வழிபாட்டு மரபு கடந்து சமூக மக்களிடையே அசையாத நம்பிக்கையை உண்டு பண்ணியுள்ளது. மலையக, பிரதேசத்திற்குப் பிரதேசம் வழிபாட்டு முறையில் சிறிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாக பிரதேசங்களுக்குள்ளும் வேறுபாடு காணப்படுகின்றது. இதற்கு மாரியம்மன் வழிபாட்டை வித்தியாசங்களுடன் கூறும் மாரியம்மன் பத்ததிகளே காரணமாகும்.

ஆதாரம்:
1. இந்து தருமம் - (1993), மனோகரன். துரை (கட்டுரை ஆசிரியர்)
   "மலையகமும் முத்துமாரியம்மன் வழிபாடும்"
   இந்து மாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம்
2. சுப்பிரமணியர் வால பத்தாசி - தந்து உதவியவர்
   மட்டக்களப்பு மாந்திரிக புகழ் வெ. சின்னத்தம்பி - பூசாரியார்
3. கணபதிப்பிள்ளை சி. (பதிப்பாசிரியர்) (1970). மகமாரி தேவிதிவ்வியகரணி, அட்டப்பள்ளம்
4. மட்டக்களப்பு மாந்திரிகப் புகழ்
   வே. சின்னத்தம்பி - (பூசாரியார்)
   செ. கோவிந்தராசா (பூசாரியார்) என்பவர்களை நேர்முகம் கண்டு பெற்ற தகவல்கள்

உலகில் மனித, இயற்கை செயற்பாடுகளும் காலநிலையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் மாற்றங்களும்

இன்றைய உலகில் பல்வேறுபட்ட மனித, இயற்கைக் காரணங்களினால் காலநிலை பாதிப்படைந்து வந்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உலகின் அநேகமான நாடுகளில் இன்று வெள்ளப் பெருக்கு, வரட்சி, எரிமலைத்தாக்கம், கடல்நீர் மட்டம் உயர்தல், மண்ணரிப்பு, சூறாவளி, இடிமின்னல் போன்றன ஏற்பட்டு வருகின்றமையைக் காணலாம். இவ்வாறான நிகழ்வுகளுக்கு அடிப்படைக் காரணம் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் என்றே கூறலாம். இந்தப் பின்னனியில் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வதற்கு முன்னர், காலநிலை என்றால் என்ன என்பதை தெரிந்து கொள்வது அவசியமாகின்றது.

"குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வளிமண்டலத்தில் நிகழும் வானிலையின் நீண்டகாலத் தொகுப்பே காலநிலை" என வரையறுக்கலாம். இக்காலநிலையில் மூலக்கூறுகளாக வெப்பம், படிவுவீழ்ச்சி, ஈரப்பதன், அமுக்கம், போன்றவை உள்ளடக்கப்பட்டிருக்கும். இவற்றில் இன்று ஒழுங்கற்ற நிலைமைகளின் நீண்டகால சராசரியை காலநிலை மாற்றம் எனக்கூறலாம். உலகில் இன்று ஏற்பட்டு வருகின்ற மாற்றத்தின் விளைவு பல மக்களின் உயிர்களை காவு கொள்வதுடன், மில்லியன் கணக்கான சொத்துக்கள் சேதமடைவதுடன், இயற்கையின் அழகையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. காலநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் அண்மைக்கால மனித செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மனித செயற்பாடுகள் மட்டுமல்லாமல் இயற்கையின் செயன்முறையிலும் மாற்றங்கள் ஏற்படுவதுடன் மனிதனும் இயற்கையின் மீது அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவுமே இன்றைய உலகக் காலநிலை மாற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

இவற்றில் குறிப்பிடத்தக்க விடயங்களாக உலகளாவிய ரீதியில் அதிகரித்து கொண்டு வரும் சனத்தொகை, அதிகரித்த சனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தி, இவ்வுணவு உற்பத்திக்காக அழிக்கப்பட்டு வரும் காடுகள், மனித குடியிருப்புக்களுக்காக அழிக்கப்படும் காடுகள், கைத்தொழில் விருத்தியின் விளைவாக அதிகரித்துள்ள வளிமண்டலத்திற்கு ஒவ்வாத வாயுக்கூட்டங்களின் அதிகரிப்பு என்பன இதற்குக் காரணங்களாக அமைகின்றன. இதில் குறிப்பாக கடந்த ஆண்டுகளில் அதிகரித்துள்ள காபனீரொட்சைட் வாயுவின் அளவு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் காபனீரொட்சைட்டின் அதிகரிப்பு நவீன தொழில் நுட்ப அறிவு விருத்தியும் கைத்தொழில் விருத்தி என்பவற்றுடன் காடழிப்பினையும் கூறலாம். இதன் விளைவு 2000ஆண்டளவில் 379 PPM அளவாக அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உலகின் வளிமண்டலத்தில் இன்று 65 வீதத்திற்கு மேற்பட்ட CO_2 காபனீரொட்சைட்டு காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

உலகின் வளிமண்டலத்தில் இன்று 65 வீதத்திற்கு மேற்பட்ட காபனீரொட்சைட்டு காணப்படுவதாக கருத்துக்கள் தெரிவிக்கின்றன. இது இவ்வேகத்திலே செல்லுமாயின் 2100ம் ஆண்டில் 540 - 970 PPM வரை உயரலாம் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு காபனீரொட்சைட்டின் அதிகரிப்பிற்குக் காரணமாக கைத்தொழில்கள், போக்குவரத்து,

மின்பாவனை, சீமெந்து உற்பத்தி, இரும்புருக்கு, காடழிப்பு போன்றவற்றின் அதீத செயற்பாடுகள் என்றே கூறலாம்.

இதே போன்று வளிமண்டலத்திற்கு ஒவ்வாத வாயுக்களில் குளோரோ புளோரோ காபன், மெதேன், நைதரசன், போன்ற வாயுக்களில் ஏற்படுகின்ற அதிகரிப்பும் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது. காபனீரொட்சைடைப் போன்று குளோரோ புளோரோ காபனின் அளவும் வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளமையைக் காணலாம். இவ்வாயுவின் உற்பத்தி 1934ல் 541 தொன்களாகவும் இது பின்னர் 1945ல் 200,00 தொன்களாகவும் அதிகரித்து. 1950 களில் 400,00 தொன்களாக அதிகரித்துள்ளமையைக் காணலாம். இதன்படி வருடம் ஒன்றிற்கு வளிமண்டலத்திற்கு இவ்வாயுவின் அளவு 4 வீதம் அதிகரித்துச் செல்கின்றமையைக் காணலாம்

தொடர்ந்து மெதேன் வாயுவை எடுத்துக் கொண்டால் 10 வருடங்கள் நிலைத்து நிற்கக் கூடிய மெதேன் வாயு வருடம் ஒன்றிற்கு 1 வீதம் என்ற வகையில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதே போன்று நைதரசன் ஒக்சைட்டை எடுத்துக் கொண்டால் வளிமண்டலத்தில் 1990 களில் 310 PPM ஆகவும் வருடாந்தம் 4 வீதம் அதிகரித்து வந்துள்ளமையையும் காணலாம்.

குறிப்பாக வளிமண்டலத்தில் காணப்படும் புவியின் போர்வையாகத் தொழிற்படும் ஓசோன் படையினை அழிவடையச் செய்யும் வாயுக்களான மேற்கூறப்பட்ட வாயுக்கள் அதிகரித்ததன் விளைவே இன்று ஓசோன் வாயுப்படலத்தில் அந்தாட்டிக்காவில் துவாரம் ஏற்பட்டுள்ளமையும் இதனால் புவி மேற்பரப்பிற்கு ஒவ்வாத புற ஊதாக் கதிர்களின் வருகையும் புவி வெப்பமடைதலும் முக்கியமான செயற்பாடுகளாக அண்மைக்காலங்களில் காணக்கூடிதாகவிருக்கின்றது. பின்வரும் வரைபடம் ஓசோன் படையில் வருடாந்தம் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினைக் காட்டுகின்றது.



இதில் 1979ம் ஆண்டிற்கும் 1990ம் ஆண்டிற்கும் இடையே ஏற்பட்டுள்ள துவாரத்தின் அதிகரிப்பு இன்னும் பல ஆண்டுகளின் பின்னர் அதிகரிக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இத்துடன் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பச்சைவீட்டுத்தாக்கம் முக்கியமானதாகும். பச்சை வீட்டுத் தாக்கம் என்பதற்கு மேலே கூறப்பட்ட வாயுக்களின் அதிகரிப்பினைக் கூறலாம். இப்பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பானது காபனீரொட்சைட்டு 55 வீதமும், குளோரோ புளோரோ காபன் 25 வீதமான பங்கையும் மெதேன் 15 வீதமான பங்கினையும் நைதரசன் ஒக்சைட் 5 வீதமான பங்கினையும் கொண்டு காணப்படுகின்றன. இவ்வாறு பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பால் இந்நூற்றாண்டின் வெப்பநிலையானது ஏறத்தாள 0.4 பாகை செல்சியஸ் அதிகரித்துள்ளமையையும் கண்டு கொள்ளலாம். இது ஆயிரம் வருடங்களில் ஒட்சிசனின் தேய்வு காரணமாக 1 - 6 பாகை செல்சியஸ்

அதிகரித்துள்ளமையையும் காணலாம். அதாவது புவி பெற்ற வெயிலில் அல்பிடோவின் அளவும் அதிகரித்துள்ளமையைக் காணலாம். இவ்வாறு அதிகரித்ததன் விளைவு புவியின் வெப்பத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. வெப்பநிலை அதிகரிப்பானது 1990 தொடக்கம் 2100 வரையான காலப்பகுதியில் 1.4 - 5.8 பாகை செல்சியசால் அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. 2000ம் ஆண்டு வரை பதிவாகிய வெப்பத்தின் தரவுகள் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலை தொடருமாயின் சிறிது சிறிதாக ஏற்படும் அழிவுகள் என்ற நிலை மாறி உயிரின் மண்டலத்தையே அழித்து விடும் நிலை ஏற்படும். பின்வரும் வரைபடம் வெப்ப அதிகரிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.



இவ்வெப்ப அதிகரிப்பானது 0.6 பாகை செல்சியஸ் வரை உயர்ந்துள்ளமையும் இவ்வதிகரிப்பு நீரிலும் சரி நிலத்திலும் சரி பல உயிரினங்கள் அழிந்து விடும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. 2001ம் ஆண்டில் சீனாவில் 39 பேர் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான காலநிலை மாற்றம் காரணமாக உயிர்க்கோளத்தின் மீதான தாக்கங்கள் எண்ணிலடங்காதவை மட்டுமன்றி உயிரினங்களின் வாழ்க்கை வட்டத்திலும் கசப்பான பல நிகழ்வுகளை ஏற்படுத்தியுள்ளமையையும் காணலாம். ஓசோன் சிதைவு ஒரு புறம் பூமியைத்தாக்க மறுபுறம் பச்சைவீட்டுச் செயன்முறை வளிமண்டல வாயுக்கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த இன்னொரு புறமாக பூமியின் இயற்கைச் சமநிலையும் பாதிப்படைந்துள்ளமையைக் காணலாம். முக்கியமாக படிவு வீழ்ச்சி, வெப்பநிலை, கடல் மட்ட உயர்வு என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான வெப்ப அதிகரிப்பு புவியில் வேறுபட்ட தாக்கங்களை நாடுகளில் ஏற்படுத்தியுள்ளமையைக் காணலாம். பின்வரும் வரைபடம் உலக நாடுகளின் மாற்றத்திற்குள்ளான வெப்பத்தின் அளவினை எடுத்துக் காட்டுகிறது.



மூலம் : இணையம்



மூலம் : இணையம்

வெப்பநிலை போன்று படிவு வீழ்ச்சியை எடுத்துக் கொண்டால், 1960 களின் பின்னர் பூகோள ரீதியாக இன்று பாரிய மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. வட அரைகோள நிலப்பரப்பு குறிப்பாக மத்திய கோட்டுப் பகுதியில் 5 - 10 வீதத்தால் படிவு வீழ்ச்சியின் அளவானது அதிகரித்துள்ளது. அதே நேரம் ஆபிரிக்கா முதல் இந்தோனேசியா வரையான பிரதேசங்களில் படிவு வீழ்ச்சியின் அளவானது 3 வீதத்தால் குறைவடைந்துள்ளமை வெள்ள அனர்த்தங்களையும் வரட்சியையும் புவியில் பரவச் செய்து உயிரின மண்டலத்தை சிதைவடைய வைக்கின்றது. அத்துடன் ஐக்கிய அமெரிக்கா, ஆகியவற்றின் கிழக்குப் பகுதிகள் மேற்கைரோப்பியப் பகுதிகள் ஆகியன இன்று எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாக அமில மழைப் பொழிவுகளைக் குறிப்பிடலாம். இந்நிலைமையை இன்றுள்ள காலநிலை மாற்றத்திற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடியதாக எல்நினோ, லாநிலா என்பது பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இந்த வகையில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் சமுத்திர நீரோட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையைக் காணலாம். 1995ல் பிலிப்பைன்ஸ் நாட்டில் எற்பட்ட எல்நிலோ என்னும் பருவ மாற்றம் 600 பேரை உயிர் காவு கொண்டதுடன் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதே ஆண்டில் கருபியன் குடாப்பிரதேசத்தில் 19 புயல் காற்று அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. 1998ம் ஆண்டில் 176 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய மிச் என்னும் புயல் காற்றும் நிக்கரகுவா, எல்சல்விடோர், கவுத்தமாலா ஹொஸ்டாரிக்கோ போன்ற பிரதேசங்களை நிர்மூலமாக்கியது.

உலக காலநிலையில் வெப்பமானது கடல்நீர் மட்டம் அதிகரிக்கும்போது இது தோன்றுகிறது. இது காலநிலையில் அதாவது மழைவீழ்ச்சிப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். இந்நிலைமை உலகின் ஐக்கிய அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதி, வடமேற்குப் பகுதியின் உட்பாகம், இந்தியாவின் தென்பகுதிகள் அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் அதே வேளை மேற்குப் பசுபிக், தென்அமெரிக்காவின் வடபகுதி, தென்கிழக்காபிரிக்கா, வட இந்தியா போன்றன வரட்சிப்பிரதேசங்களாக மாறியுள்ளமையை எல்நினோவின் தாக்கமாகக் கொள்ளலாம்.

இது 1982 - 1983 காலப்பகுதியில் மத்திய மேற்குப் பசுபிக்கில் கடல் வெப்பநிலை அதிகரித்துள்ளமையின் தொடர்ச்சியாக பேரு கடற்கரையோரப் பிரதேசம் 15 - 20 சென்றி மீற்றர் வரை கடல் மட்டம் உயர்ந்ததோடு கடலின் வெப்பநிலை 32 பாகை செல்சியஸாக அதிகரித்துள்ளது. அத்துடன் கயாகுவில் என்னும் இடத்தில் 1882 நவம்பர் தொடக்கம் 1983 யூன் இடைப்பட்ட காலப்பகுதியில் 4195 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

கிடைத்தமை குறிப்பிடத்தக்க காலநிலை மாற்றமாகும்.

இதே போன்று கடல் மட்ட வெப்பநிலையானது பல தசாப்பதங்களாக 1 பாகை செல்சியஸ் அளவில் அதிகரித்து வந்துள்ளமையைக் காணலாம். இக்கடல் மட்ட உயர்வானது எல்நினோ நிகழ்வின் போது 3 பாகை செல்சியஸ் அளவில் அதிகரிக்கும் எனவும் அறியப்பட்டுள்ளது. குறிப்பாக ஆகக் கூடிய பனிப்படலம் 2-3 மீற்றர் வரை உருகி கடந்த நூற்றாண்டில் கடல் மட்டத்தை 1-2 மில்லி மீற்றர் வரை உயரச் செய்தது. இதன்விளைவு ஆக்டிக் பிரதேசத்தில் படர்ந்திருக்கும் மொத்த பனியில் இது 40 வீதமாகக் காணப்படுகின்றது. உலக நாடுகளில் வெவ்வேறு பிரதேசங்களில் இக்காலத்தில் மாற்றத்தின் தாக்கங்களை வெவ்வேறு வகையானதாக உணர்ந்து கொள்ள முடிகின்றது

இக்காலநிலை மாற்றத்தினைப் பொறுத்த வரையில் இந்தியா, வங்காளதேசம், நேபாளம் போன்ற நாடுகளில் காணப்படும் நீரேந்து பிரதேசங்களில் மிதமிஞ்சிய நீர்த்தேக்கம் பல குடிபெயர்விற்குக் காரணமாகின்றது. 1999ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் கடும் வரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட மழை வீழ்ச்சி பல்லாயிரம் ஹெக்டேயர் வயல் நிலங்களை நாசமாக்கியது. ஏறத்தாழ 50 ஆண்டு காலம் சந்தித்திராத வரட்சியை 1997ம் ஆண்டில் ஆர்ஜன்டினா சந்தித்தது. டெக்சாஸ் மாநிலம் 19 நாட்களுக்கு 100 பாகை பரனைற்றுக்கு மேல் வெப்பத்தைக் கொண்டிருந்தது. அதன் பின்னர் வீசிய அனல் காற்று தீயாக மாறி 120,00 ஹெக்டேயர் பிரதேசத்தை எரித்துச் சாம்பலாக்கியது

தொடர்ந்து பார்க்கும் போது வெப்ப அதிகரிப்பானது பாலைவனங்களின் அதிகரிப்பினை உலக ரீதியில் ஏற்படுத்தியுள்ளது. அதாவது உலகின் மொத்த நிலப்பரப்பில் மூன்றிலொரு பகுதி பாலைவனமாகக் காணப்படுகின்றது. இது தொடர்ந்து வருகின்ற வெப்ப அதிகரிப்பினால் அதிகரித்து வருகின்மையும் குறிப்பிடத்தக்க காலநிலை மாற்றமாகும். அதாவது சகாரா, கலகாரி, அரேபியா, கோபி, தார், மஞ்சூரியா. அற்றகாமா, பற்றகோனியா அரிகோனா, மேற்கவுஸ்திரேலியா போன்ற பிரதேசங்கள் மேலும் பாலைவனமாக மாறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னர் கோபிப் பாலைவனத்தில் சிறப்புற்றிருந்த டுன்ஹுங் நகரம் வரட்சிக்குள்ளாகி மண்மூடி அழிந்து போனது, ரோம் சாம்ராஜ்ஜியத்தின் தானியக்களஞ்சியமான வட ஆபிரிக்கா, மத்தியதரைக் கடற்பகுதி இன்று சகாராப் பாலைவனத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. சகாராப் பாலைவனத்தின் தென் எல்லை சவானாப் புல்நிலத்தை ஆக்கிரமித்து வருவதையும் இன்று காணலாம். நைகர், சாட், சூடான், எதியோப்பியா என்பன சகாரா பாலைவனத்தின் பிடிக்குள்ளாகின்றமையையும் காணலாம். இது அண்மைக்காலமாக மாற்றத்துக்குள்ளாகி வரும் காலநிலைத் தன்மைகளின் விளைவு என்றே கூற வேண்டும்.

மேற்காட்டப்பட்ட விளக்கங்களில் இருந்து உலகின் காலநிலை மாற்றத்திற்கு மனித செயற்பாடுகளும், இயற்கையான செயற்பாடுகளும் காரணங்கள் என்பதை அறிந்து கொண்டதுடன் இக்காலநிலை மாற்றமானது கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளமையை மேல்வரும் விளக்கங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு உலகின் காலநிலை மாற்றம் அதன் விளைவுகள் பற்றி நோக்கிய நாம் இலங்கையின் காலநிலையில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன இவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்ன என்பனவற்றை அறிந்து கொள்வோம்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட வெப்ப அதிகரிப்பானது இலங்கையின் காலநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கைக்கு சிறப்பாகக் கிடைக்கின்ற பருவக்காற்று கடந்த காலங்களில் மாறுபட்ட தன்மையைக் கொண்டமைந்துள்ளமை அண்மைக்கால காலநிலை மாற்றத்தின் விளைவு என்றே கூற வேண்டும் வடகீழ் பருவப் பெயர்ச்சிக்காற்று நவம்பர் - பெப்ரவரி மாதங்களில் கிடைக்கின்ற அதே வேளை தென்மேல் பருவக்காற்று மே - செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் கிடைக்கின்றது. ஆனால் இன்று இவ்வாறான ஒரு நிச்சயமான கால எல்லையைத் தீர்மானிக்க முடியாதுள்ளமையைக் காணலாம்.

அத்துடன் இலங்கையின் காலநிலை மாற்றத்திற்கு எடுத்துக்காட்டான சான்றுகளாக கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களைக் கூறலாம். வெள்ளம், வரட்சி, மண்சரிவு, புயல்காற்று. என்பவற்றையும் ஏற்படுத்தியுள்ளன. 1957 - 2004 வரையான காலப்பகுதியில் காலநிலை மாற்றங்களால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் 37 661 பேர் உயிரிழந்ததுடன், 1.5 மில்லியன் அமெரிக்கா டொலர் சேதமும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'வங்காள விரிகுடாவில் தும்மல் ஏற்படும் போது இலங்கைத் தீவிற்கும் ஜுரம் ஏற்படும்' என்ற பழமொழி போன்று காலநிலையில் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. அதே நேரம் அராபிக் கடலில் ஏற்படும் மாற்றம் இலங்கையின் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

இலங்கையின் வரட்சி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல் காற்று , மண்சரிவு, கடலரிப்பு என்பன காலநிலையின் மாற்றத்தால் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கடந்த காலங்களில் இலங்கையின் வெப்பநிலைப் போக்கில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக குறிப்பிட்ட சில மாவட்டங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். குறிப்பாக 2001ம் ஆண்டு இலங்கையில் என்றுமில்லாதவாறு காலநிலையின் மாற்றம் அம்பாந்தோட்டை மாவட்டத்தை அதிகளவில் பாதிக்க வைத்ததுடன் நாடு முழுவதும் 370.000 குடும்பங்கள் தாக்கத்திற்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வரட்சி தொடர்ந்து மன்னார், புத்தளம் மாவட்டங்களிலும் ஏற்பட்டமையைக் காணக்கூடியதாயிருந்தது. இவ்வரட்சி 1930ம் ஆண்டுகளின் பின்னர் 13 தடவை எமது நாட்டில் ஏற்பட்டுள்ளதாக காலநிலைத்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. 1995, 1996 ஆண்டு காலப்பகுதியில் அதிகளவு வரட்சி இலங்கையில் காணப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வெள்ளப் பெருக்கினை காலநிலை மாற்றத்தின் ஒரு விளைவாகவே பார்க்க வேண்டும். இலங்கையின் இரத்தினபுரி மாவட்டம் தொடர்ந்து வெள்ளப் பெருக்கிற்கு உட்பட்டு வருகின்றது. அதில் 2002ம் ஆண்டு மறக்கமுடியாத பாரிய உயிரிழப்பு ஏற்படக் காரணமாக இருந்தது. இது காலநிலையில் ஏற்பட்ட மாற்றமே என்று கூறப்பட்டது. இவ்வெள்ளப்பெருக்கு அதிசயக்கத்தக்க வகையில் வரண்ட வலயங்களையும் உள்வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

அதிக வெள்ளப்பெருக்கினால் பாரிய சேதத்தையும் ஏற்படுத்தும் பருவப் பெயர்ச்சி மழை உலர் வலயத்திலும் எத்தகைய பிரபல்யம் வாய்ந்தது என்பதை இவ்வாறான வெள்ளப் பெருக்கு அச்சுறுத்தல்களிலிருந்து எமக்குத் தெரிய வருகின்றது. அதாவது இலங்கையின் ஒரே தினத்தில் ஆகக் கூடிய மழைவீழ்ச்சியான 805 மில்லி மீற்றர் முல்லைத்தீவிலும் நெடுங்கேணிப்பிரதேசத்திலும் பதிவாகியது. இவை இரண்டும் உலர் வலயங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 1240 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியைப்

பெற்ற கபரணைப் பிரதேசமும் ஒரு உலர் வலயமாகும். இதிலிருந்து பார்க்கும் போது இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பல் மாற்றமடைந்து வந்துள்ளது என்பதைக் காணலாம். கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணத்தினால் பெருமளவான விவசாய நெற் காணிகள் அழிவடைந்துள்ளமையையும் நாம் காணலாம்.

இதே போன்று வெப்ப அதிகரிப்பின் காரணத்தினால் இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசத்தில் காணப்படும் காடுகள் குறிப்பாக நக்கிள்ஸ் மலைத் தொடர்களில் காணப்படும் காடுகள் அழிவடைந்து வருவதுடன் குறிப்பிடத்தக்களவு தேயிலைச் செய்கையும் வீழ்ச்சியடைந்துள்ளமையையும் காணலாம். அத்துடன் நுவரெலியா பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் குறிப்பிட்டளவு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது இலங்கையின் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் என்றே கூறவேண்டும்.

குறிப்பாக இலங்கையில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களை நோக்குவோமாயின் அவை ஏற்படும் வரை இலங்கையில் விசேடமான காலநிலை காணப்பட்டது. இது பற்றி எமது காலநிலை அறிஞர்கள் தெரிவிப்பது யாதெனில் நாம் எதிர்பார்த்ததைப்பும் விட நுவரெலியாப் பகுதியில் காலநிலை மாற்றங்கள் பெரிதும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் காலநிலை மாற்றங்கள் எமக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. இதற்குச் சிறந்த உதாரணமாக ஏற்கனவே கூறியது போன்று நுவரெலியாவில் கிழங்குச் செய்கை, மரக்கறிச் செய்கை, தேயிலைச் செய்கை என்பன வெப்பநிலையின் தாக்கத்தில் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இது இவ்வாறு செல்லுமாயின் இலங்கையின் விவசாயத்திற்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மற்றொரு காரணமாகக் கொள்ளப்படுவது கடல் மட்டத்திலிருந்து உயர்ந்த பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பு குறைவாகக் காணப்படுவது சிறப்பானதாகும். ஆனால் இன்று ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பு அங்கு நுளம்புகளின் தொல்லையை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனை வரைபடம் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

காலநிலை மாற்றமும் தேயிலைச் செய்கை பாதிப்பும் இலங்கை



இவ்வாறு இலங்கையின் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல பாதிப்புக்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளமை மேற்கூறப்பட்ட விளக்கங்களின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. உலகின் எல்லா நாடுகளும் இன்று ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களுக்கு பதில் கூற வேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்குத்

தள்ளப்பட்டுள்ளமையும் இதனால் ஏற்படும் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற தோற்றப்பாடு உலக நாடுகளுக்கு தோற்றம் பெற்றுள்ளமையும் இதனால் காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக அமேசன், கொங்கோ காடுகளை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கு அந்நாட்டு அரசாங்கம் ஏற்றுக் கொண்டமையும் இதனால் ஏற்படவிருக்கும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இலங்கைக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவு அதிகரித்ததன் விளைவினால் பெரியளவிலான மண்ணரிப்புக்குள் இன்றும் மலைநாட்டுப்பகுதியில் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக 1989ல் கொஸ்லாந்தையில் ஏற்பட்ட மண்ணரிப்பைக் கூறலாம். மனிதன் நாட்டின் அபிவிருத்தியில் தன் கவனத்தைச் செலுத்தும் அதே வேளை வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகின்றான் அதாவது நாட்டில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றத்தினை சிறப்பாகக் கூறலாம்.

இதே போன்று கடந்த காலங்களில் ஏற்பட்டு வரும் இயற்கை அனர்த்தங்கள் குறிப்பாக அதிகளவில் ஏற்பட்டுள்ள மழைவீழ்ச்சி அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு என்பனவும் மீண்டும் குறிப்பிட்ட காலங்களின் பின்னர் ஏற்பட்ட வரட்சி அசாதாரண தோற்றப்பாடாக திடீரெனக் கிளம்பும் மினி சூறாவளிகள் போன்றன எல்நினோவின் செயற்பாடாகவே கருதப்பட வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1 சா. ஜெயராம் (2005)
மானிடச் செயற்பாடுகளும் சூழல் மாசாக்கமும்
கி. அ. முஸ்லீம் அபிவிருத்தி அமைச்சு

2 எஸ். அன்ரனி நோபேர்ட் (1997)
காலநிலையியல் - தர்ஷனா பிரசுரம்

3 கலாநிதி க. குணராசா (2006)
சுற்றுச் சூழலியல் - லங்கா புத்தகசாலை

4 பூகோள காலநிலை மாற்றமும் சவால்களும்
சூழலியல் புவியியல் (2006) - கிழக்குப் பல்கலைக்கழகம்

5 வளிமண்டல காபனீரொட்சைட்டின் அதிகரிப்பும் உயர்ந்து வரும் புவி வெப்பநிலையும்
புவி அருவி - கிழக்குப் பல்கலைக்கழகம்

6 ஜனதாக்ஷன செய்திகள் (2006)
பிரக்டிக்கல்ஸ் நிறுவனம் - கொழும்பு

7 இணையம் - http://neptune.gsfe.nasa.gov/

திரு. T. இளங்கோவன் B.A.(Hons.) Dip.inEdu.
முன்னாள் விரிவுரையாளர்
புவியியல்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி

இலங்கையில் 1977 இன் பின்னர் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

1) 1977-1994 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம்

இலங்கையின் பொருளாதார வரலாற்றில் 1977ஆம் ஆண்டு குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய காலமாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியேற்றதன் பின் பொருளாதார நடவடிக்கைகளில் புதிய மாற்றங்களும், சீர்திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன:.
இக்காலப்பகுதியை பின்வரும் உப பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1978 - 1983 வரையான காலப்பகுதி
1984 - 1988 வரையான காலப்பகுதி
1989 - 1994 வரையான காலப்பகுதி

1978 - 1983 வரையான காலப்பகுதி

இக்காலப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரமாக மாற்றியமைக்கப்பட்டதுடன் பெரிய சந்தை நோக்கிய பொருளாதாரமாகவும் மாற்றப்பட்டது. இது வரை பின்பற்றப்பட்டு வந்த உள்முக நோக்கிய அபிவிருத்தி உபாயம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 'வெளிமுக நோக்கிய உபாயம்' என்பது பின்பற்றப்பட்டது.

இவ்வகையில் இங்கு காணப்பட்ட முக்கிய அம்சங்களைப் பின்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்.

1) வெளி முகம் நோக்கிய பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது
2) ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் மயமாக்கல் கொள்கை ஏற்பட்டது.
3) முகாமை செய்து மிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீத முறை ஏற்பட்டது.
4) விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.
5) வெளிநாட்டு வங்கிகள் நாட்டில் தொழிற்பட அனுமதியளிக்கப்பட்டது
6) வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்து சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டன.
7) இக்காலத்தில் சராசரியாக 6% பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது
8) துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது
9) உட் கட்டுமான வசதிகளில் அதிகளவில் அரசாங்கம் செலவீடு செய்தது.
10) ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவருத்தித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு மாறியமைக்கான காரணங்கள்

1) 1977க்கு முன்னர் இருந்த மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் பாதகமான விளைவுகள். உதாரணமாக: அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறனற்ற நிலை, பாதுகாப்பு வாதத்தின் பொருளாதாரச் செலவுகள், அரசாங்கத்தின் தனியுரிமை நிலை ஏனையவை.

2) இலங்கைப் பொருளாதாரத்தின் உட்சூழல் பல இடர்களையும் பிரச்சினைகளையும் கொண்டிருந்ததோடு அவை வளர்ந்து செல்லும் தன்மை உடையதாகவும் காணப்பட்டதால் புதிய அரசியல் கட்சியின் மாற்றம் பொருளாதாரத்தின் உட்சூழலை மாற்றியமைப்பதற்கு புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

3) இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிச்சூழல் அதாவது புதிய கைத்தொழில் மயமாகிய

நாடுகளின் வெற்றியும், அதனால் ஏற்பட்ட முன்னேற்றங்களும் இலங்கையையும் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தூண்டியது.

4) மாறி வந்த உலகப் பொருளாதார சிந்தனை உலகத்தில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் பல இக் கொள்கைக்கு மாறியதையும் தாராளமாக்கல் சிந்தனையின் மீள் எழுச்சியும் திறந்த பொருளாதாரத்தை ஊக்குவித்தது.

5) உள்நாட்டுச் சந்தையை சர்வதேச சந்தையாக விரிவாக்கி போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு திறந்த பொருளாதாரம் அவசியம் தேவைப்பட்டது.

6) மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் செல்வாக்கு அதாவது ஐரோப்பிய நாடுகளான ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் இக் கொள்ளையைக் கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தியமை.

7) இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை மக்களின் மனப்பாங்கில் ஏற்பட்ட மாற்றமும் திறந்த பொருளாதாரக் கொள்கைளை வேண்டி நின்றது

இவ்வடிப்படையில் 'திறந்த பொருளாதாரம்' என்பது பொருளாதாரத்தை கட்டுப்பாடற்ற முறையில் திறந்து விடுதல் எனப் பொருள்படுகின்றது. ஆயினும் இக்காலப் பகுதியில் 'தாராளமயப்படுத்தல்' என்பதும் முக்கிய பதமாகக் குறிப்பிடப்படுகின்றது.

1984 - 1988 வரையான காலப்பகுதி

இக்காலத்தில் இரண்டாவது தடவையும் ஐ.தே.கட்சி ஆட்சியமைத்தது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் மற்றும் இலங்கையில் 1983க்குப் பின்னர் தீவிரமடைந்து வரும் இனக் கலவரங்கள் போன்றன திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஒரு சவாலாக அமைந்ததால் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவையாவன;

1) உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் கீழ் நிபந்தனைகளுடன் கூடிய உதவிகளைப் பெற்று 'அமைப்பு சீராக்கல் நிகழ்சித்திட்டங்கள்' மேற்கொள்ளப்பட்டன.

2) உலகவங்கியின் உதவிகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் என்பவற்றின் ஊடாக 'அமைப்பு சீராக்கல்', 'உறுதிப்படுத்தல்' போன்ற கொள்கைகள் இலங்கை பொருளாதாரத்தின் மீது திணிக்கப்பட்டன.

3) பாதீட்டு பற்றாக்குறையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4) விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதுடன் கேள்வி நிரம்பலுக்கு ஏற்ப நிர்ணயம் ஏற்பட்டது.

5) தனியார் முதலீடுகள் அதிகளவு தூண்டப்பட்டதுடன், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகளவில் அதிகரித்தன.

6) தனியார் மயமாக்கம், மக்கள் மயமாக்கம் என்ற புதிய பொருளாதார சித்தாந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

7) பொதுத் துறையைப் பொறுத்த வரை அவை இலாப நோக்கத்துடன் வர்த்தக ரீதியாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

8) கடன் கொள்கைகள் இறுக்கமாக்கப்பட்டதுடன் அரசாங்கம் பெருமளவு பணத்தை அபிவிருத்தித் திட்டங்களில் அபிவிருத்தி செய்ய முனைந்தது.

9) உள்நாட்டில் உறுதியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் வேலைவாய்ப்பு, சென்மதி நிலுவை ஆகியவற்றைச் செம்மைப்படுத்தவும் மேலும் முதலீட்டு பல ஊக்குவிப்பு வலயங்களாக உருவாக்கப்பட்டன.

10) வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் பூரணமாக திறந்து விடப்பட்டன.

11) உல்லாசப் பிரயாணத் துறை கவர்ச்சிகரமானதாக மாற்றப்பட்டது.

12) அன்னியச் செலாவணி சம்பாத்தியத்தின் பொருட்டு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தீர்வையற்ற முறைகள் கொண்டு வரப்பட்டன.

1989 - 1994 வரையான காலப்பகுதி

இக்காலப்பகுதியிலும் ஐ. தே கட்சி அரசாங்கம் மூன்றாவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றுகிறது. இங்கு உலக வங்கி IBRD, சாவதேச நாணய நிதியம்IMF போன்றவற்றின் நிபந்தனைகளை ஏற்று மென் மேலும் இலங்கைப் பொருளாதாரம் தாராளயமயப்படுத்தப்பட்டது. இக் காலத்தில் நிலவிய பிரதான இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுக் கூற முடியும்

01) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
02) அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல்.
03) வரவுசெலவுத் திட்டத்திலுள்ள பற்றாக்குறையைக் குறைப்பதற்கான பல நடவடிக்கைகளை எடுத்தல்.
04) அன்னியச் செலாவணி கட்டுப்பாடுகளில் மென்மேலும் தளர்வுகளை மேற்கொண்டமை.
05) உலக வர்த்தக ஸ்தாபனத்தின் வர்த்தகச் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டமை.
06) தொலைத் தொடர்புத் துறையில் தனியார் முதலீட்டை அனுமதித்தமையும், ஊக்குவித்தமையும்.
07) வீடமைப்பு வறுமையொழிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு விஸ்தரிக்கப்பட்டமை.
08) இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் எட்டாவது உறுப்பு நிபந்தனையை ஏற்றமை.
09) பங்குச் சந்தை நடவடிக்கைகளை விஸ்தரித்தமை.

2) 1994 - 2001 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம்

இக்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் திறந்த பொருளாதாரக் கொள்கையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டது. இக் காலத்தில் காணப்பட்ட பொருளாதார ரீதியான பண்புகளாகப் பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்

01) தனியார் மயமாக்கல் விரிவுபடுத்தப்பட்டது
02) உலக வங்கி (IBRD), சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்றவற்றில் இருந்து பெரியளவிலான கடன்களை இலங்கை பெற்றது.
03) அரசாங்கச் சமூகச் செலவு குறைக்கப்பட்டது.
04) பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பு பொருளாதாரத்தைக் கடுமையாக பாதித்தது.
05) இலங்கையின் அதிகரித்த உள்நாட்டு போர் இலங்கைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைந்தது.
06) வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பங்குச் சந்தை என்பன வீழ்ச்சியடைந்தன.
07) கடன் பிரச்சினை தீவிரமடைந்தது.
08) வெளிநாட்டுச் சொத்து ஒதுக்கு மட்டத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.
09) ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்தது.

பல மில்லியன் ரூபா பெறுமதியான நிதியினை சர்வதேச சமூகம் வழங்குவதற்குத் தயாராக இருந்த போதிலும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி மீள்கட்டுமானத்தை மேற்கொள்வது இலங்கை அரசாங்கத்திற்குப் பாரிய பிரச்சினையாகவே அமைந்திருந்தது. அனர்த்தத்தை எதிர்கொண்ட தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகங்களை மனிதாபிமான ரீதியில் அவர்களுடைய தேவைகளை அறிந்து ஒத்துழைக்கும் மனப்பான்மையுடன் மட்டக்களப்பு, அம்பாரை, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஆறு கரையோர மாவட்டங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களின் துரிதமான புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பு உருவாக்கப்பட்டு செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது.

3) 2005 இலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம்

2005 ஆம் ஆண்டின் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியாக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ அவர்களின் 'மகிந்த சிந்தனை' அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 சதவீதமாக இருக்கும் என இலங்கை மத்திய வங்கி கூறியபோதும் சுமார் 31,000 பேரைப் பலி கொண்டு, சுமார் ஒரு மில்லியன் பேரை வீடற்றோர் ஆக்கிய சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் அந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி முன்னைய ஆண்டின் வளர்ச்சியிலும் பார்க்க ஒரு வீதமாவது குறையும் என இலங்கையின் பொருளாதாரச் செயற்பாட்டை மீளாய்வு செய்த சர்வதேச நாணய நிதியம் கூறியது. இவ்வாண்டின் முதல் மூன்று மாத கால வளர்ச்சி விகிதம் அதற்கு முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியின் வளர்ச்சியிலும் பார்க்கக் குறைவாக இருந்தமை இதனை நிரூபிப்பதாக இருந்தது. அபிவிருத்தி மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாக இவ்விதம் நிலைமைகள் காணப்பட்ட போதும், உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு சாதகமான சில அம்சங்கள் நாட்டில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எல்லாப் பிராந்தியங்களினதும் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய கொள்கைகளை அரசாங்கம் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். ஏனெனில் எமது நாட்டில் பெரும் பகுதியினர் கிராமப் புறத்தில்தான் வாழ்கிறார்கள். கிராமப்புறப் பொருளாதாரம் முன்னேறும் பட்சத்தில்தான் நாடு அபிவிருத்தி அடைந்து செல்லும் என்பது உறுதியான விடயமாகும். இதற்கு இலங்கையின் உள்நாட்டு யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

உசாத்துணைகள்:

1 பொருளியல் நடைமுறைகள் - இலங்கை பொருளாதாரம் (செல்வரெத்தினம் சந்திரசேகரம்) Aug 2003 பக்:134-138

2 மத்திய வங்கி ஆண்டறிக்கை 2000- 2006 இலங்கை மத்திய வங்கி வெளியீடு

3 வீரகேசரி வணிகஉலா கட்டுரைகள் (தங்கராசா திவ்வியராஜ்) 24-07-2006,25-07-2006

4 பொருளியல் நோக்கு மக்கள் வங்கி வெளியீடு 2005.

மார்க்கண்டு வரதராஜன் B.A. (Hons)
பழைய மாணவன், கிழக்கிலங்கை வெளிவாரிப்பட்டப் படிப்புகள் கல்லூரி
சிறுவர் பாதுகாப்பு பயிற்சியாளர்
TDH, மட்டக்களப்பு - அம்பாரை.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்

தமிழ்க்கவிதையில் நவீனத்துவத்தை ஏற்படுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அன்றாட அரசியல், சமூகப்பிரச்சிகைகளைக் கருப்பொருளாகக்கொண்டும், கோபுரத்தமிழைக் குடிசைத்தமிழாக்கி, ஓரிரண்டு வருடத்து நூல் பழக்கமுள்ளவர்களுக்கும் விளக்கக்கூடிய எளிமையான நடையில் கவிதை பாடி, தமிழ்க்கவிதையில் பெருந் திருப்புமுனையை ஏற்படுத்தினார் பாரதியார் எனின் அது மிகையாகாது. இதனாலேயே பாரதியாரை நவீன தமிழ்க்கவிதையின் முன்னோடி என்பர்.

ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றிலும் நவீன கவிதையின் தோற்றம், அதன் வளர்ச்சிப்போக்கு என்பன முக்கியமானவையாகும். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ்க்கவிதை வெவ்வேறுபட்ட மூன்று அடிப்படை போக்குடையதாகக் காணப்பட்டது. அவையாவன:

1. முற்றுமுழுதான மரபுக்கவிதை:- சமயம், நீதி, அறக்கருத்துக்களை கருப்பொருளாகக் கொண்டு பிரபந்தங்களாகவும், காவிய வடிவிலும் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் போன்றோர் பாடினர்.
2. மரபுக்கவிதையும் நவீன பண்புகளும் கலந்து பாடப்பட்டமை:- பாவலர் துரையப்பாபிள்ளை, சுவாமி விபுலானந்தர் போன்றோர் தேசியம், சமூக சீர்திருத்தம் என்பவற்றை கருப்பொருளாக்கிப் பாடினர்.
3. நவீன கவிதையின் எழுகை:- ஆங்கிலோயரின் காலனித்துவ ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட, நவீன மாற்றங்களின் விளைவாக ஈழத்திலும் நவீன கவிதை தோற்றம் பெற்றது. இது 1930களில் ஈழகேசரிக் குழுவினரின் பணிகளுடன் தோற்றம் பெற்றது. குறிப்பாக வேந்தனார், இதனைவிட மலையகத்தில் கோ. நடேசையர் போன்றோரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

இந்நவீன கவிதைகளின் பொருள் மரபாக அன்றாட வாழ்வுப்பிரச்சினைகள், தனிமனித அனுபவங்கள், தனிமனித உணர்வுகள், பல்வேறுபட்ட சமூகப்பிரச்சினைகள் எனப்பல அமைந்தன.

இந்நவீன கவிதை 1940 களிலேயே வேரூன்றி வளரத்தொடங்கியது. இக்காலத்தில் இயங்கிய மறுமலர்ச்சிக் குழுவினரின் பணியே இதற்குக் காரணமாகும். குறிப்பாக நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி போன்ற பலரைக் குறிப்பிடலாம். இவர்களுள் தனக்கென ஒரு கவிதைக் கொள்கையை உருவாக்கிய மகாகவி, ஈழத்து நவீன தமிழ்க்கவிதையின் முன்னோடியாகக் கொள்ளப்படுகின்றார்.

'இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று
பிறர் சொன்னவற்றை நீர் திரும்பச் சொல்லாதீர்
சோலை கடல் மின்னல் முகில் தென்றலினை மறவுங்கள்
மீதிருக்கும் இன்னல் உழைப்பு
ஏழ்மை, உயர்வு, என்பவற்றைப் பாடுங்கள்'

என்று மகாகவிபோல் ஈழத்து மகாகவி கவிப்பிரகடனம் செய்து கவிதை பாடி ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தினார்.

இதன்பின் இன்றுவரை ஈழத்தின் நாலாபுறங்களிலும் இருந்து கால ஓட்டத்தினூடாகத் தோன்றிய தமிழ்க்கவிஞர்களும், ஈழத்திலிருந்து மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க்கவிஞர்களும் இம்மரபில் அடங்குவர். கவிஞர் நீலாவணன், அப்துல் காதர்லெவ்வை, புரட்சிக்கமால், காசிஆனந்தன், இராஜபாரதி, ஆரையூர் அமரன், வ. ஐ. ச. ஜெயபாலன், சிவசேகரம், எம். ஏ. நு.ஃமான், முருகையன், சண்முகம் சிவலிங்கம், ஔவை, ஊர்வசி, புதுவைரெத்தினதுரை, சிவரமணி, மைத்ரேயி, சேரன், சாருமதி ஆகியோரின் கவிதைகளும் மற்றும் அவ்வப்போது ஈழத்தில் வெளிவரும் நாளேடுகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் எழுதப்படும் கவிதைகளும் சமூக, அரசியல் ரீதியான எதிர்ப்புக்குரலாக காணப்படுவது ஒரு முக்கிய செல்நெறியாக விளங்குகின்றது.

புகழ்வதைப்போல் இகழ்ந்து அங்கதப்பாணியில் புகழாப் புகழ்ச்சியாகப் பாடுவதையும் ஒரு முக்கிய எதிர்ப்பிலக்கியப் பண்பாக அடையாளப்படுத்த முடியும். அங்கதம் என்பதை ஆங்கிலத்தில் Satire என்பர். சமூகத்தில் நடக்கும் நேர்மாறான செயல்களைச் சுட்டிக்காட்டி, அதன் பொருந்தாமையினைக் காட்டும் வகையில் புகழாப் புகழ்ச்சியாகப் பாடுகின்ற இலக்கியமே இதுவாகும்.

எனினும் மூன்றாம் இலக்கியப்பார்வையில் முதன்மை பெறும் எதிர்ப்பிலக்கியப்போக்கு தேசிய விடுதலைப்போராட்டம் நிகழ்ந்த நாடுகளினுடைய அனுபவங்களின் பின்னணியில் உருவாகின்றது. குறிப்பாக பலஸ்தீன நாட்டைச் சேர்ந்த இலக்கிய ஆய்வாளரான ஹஷின் ஹனபானி என்பவர் எதிர்ப்பிலக்கியம் என்ற கோட்பாட்டை முன்வைத்தார். இக்கோட்பாட்டின் பின்னணியில் இலக்கியங்களை அணுகுவதும் தற்கால விமர்சன அணுகுமுறைகளுள் ஒன்றாகும். இந்த எதிர்ப்பிலக்கியப்போக்கு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தையும் பாதித்தது. இலங்கையில் நடக்கின்ற அரசியல் பிரச்சினை, மற்றும் சமூக ரீதியிலான பிரச்சினைகள் எதிர்த்தும் பாடப்பட்டதுடன் இன்றும் பாடப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ் எதிர்ப்பிலக்கிய கவிதைப்போக்கைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

1. அரசியல் சார்பான கவிதைகள்:

ஈழத்தின் நிகழ்காலம் அரசியல் ரீதியாக மிகவும் சிக்கலான போக்குடையதாக உள்ளது. சர்வதேச ரீதியில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய கண்டனங்களும் எழுந்தவண்ணமுள்ளது. அநீதி, துயரம், அறிவும் நியாயமும் கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவுக்குப் படுகொலைகள், அகதிவாழ்வு, ஆட்கடத்தல்கள், விமானத்தாக்குதல்கள், சொத்திழப்புக்கள் இவைகளே இன்றைய சூழலின் யதார்த்தம். ஈழத்தின் அரசியற்பிரச்சினை 1980களின் பின் அதிகரித்து 1990, 2000 களில் மேலும் பூதாகாரமாகக் கிளம்பி இன்றுவரை அதிகரித்தவண்ணமே உள்ளது.

அடக்கு முறையின் ஆரம்ப நிலைகளிலேயே அபாயத்தை இனங்கண்டு கலைஞர்கள் குரல் எழுப்பத்தொடங்கி விடுவது உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறுவதாகும். ஈழத்தில் தமிழ்மொழிக்குரிய உரிமைகள், தமிழ்மொழிப்பயன்பாடு மறுக்கப்பட்டபோது அதற்கெதிராக கவிதைகள் நிறையவே எழுந்தன. இனவாதப்பண்புகள், பாரபட்சம், புறக்கணிப்பு, ஒடுக்குமுறை என்பற்றுக்கெதிரான குரல்கள் மேற்கிளம்பின.

தேசிய ஒடுக்குமுறை பல்வேறுவழிகளிலும் ஸ்திரமாகிக் கொண்டு வருகின்றபோது ஒடுக்கப்படும் மக்களுக்கு தமது கலைகள், கலாசாரம் நிலம் என்பவற்றிலும் மிகுந்த

இறுக்கமான பிணைப்புக்கள் வலிமையுறுகின்றன. ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றபோது வாழ்வை மீட்பதன் அவசியத்தையுணர்த்தி, இதற்கான எதிர்காலப்போராட்டத்திற்கான அழைப்புக்குரல்களாகவும் இக்கவிதைகள் காணப்படுகின்றன. அரசியற்கவிதைகள் எனும் தோற்றப்பாடு இன்று ஈழத்தில் இருந்து எழுகின்றபோது அது நவீன தமிழக் கவிதைக்கு புதுவலிமை சேர்ப்பதாக அமைகிறது. தேசிய ஒடுக்குமுறை, இராணுவப் பயங்கரவாதம், ஆயுதப்போராட்டம், ஆட்கடத்தல், மரணம் இவையான இரத்தம் சிந்தும் அரசியலே இன்று எமது கவிதையின் பிரதான கூறாக அமைவதுடன் இவ்வரசியற்செயற்பாட்டிற்கு எதிரான கவிதைகளும் காணப்படுகின்றன.

ஈழத்து அரசில் வரலாற்றில் 1950கள் முக்கிய காலகட்டமாகும். 1956ல் பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியை முக்கியத்துவப்படுத்திய S.W.R.D பண்டாரநாயக்காவின் அரசாங்கம் அமுல்படுத்திய சிங்கள மொழிச்சட்டத்தையும், 'ஸ்ரீ' எழுத்தையும் எதிர்த்து நீலாவாணன் பாடிய,

'ஸ்ரீ என்னும் நரியை நம்குகைதனில் புகவிட்ட
சிங்கள கூலிகள் வேண்டுமா'
என்ற கவிதை தொடக்கம் அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்கவிதைகள் பல உள்ளன.

முருகையனின் 'வேலியும் காவலும்' என்ற கவிதையில்
'காடையர்கள் நூலகத்திற் கைவரிசை காட்டுதல் போல்
வேலி பயிரையெல்லாம்
மேய்ந்து விட்டுப் போயிற்றோ?'

எனவும் சோ. பத்மநாதன் 'எங்கள் நகர் ஏன் எரியுண்டு போகிறது' என்ற கவிதையில்
'எங்கள் நகரேன் எரியுண்டு போகிறது
பாதுகாப்புக்குப் படைகள் குவிந்திருக்கும்
போது தீப்பற்றும் புதினம் நடக்கிறதே'

எனவும் அரசியலை எதிர்த்தும் பாடினர். இதேபோல் எம். ஏ. நு'மான் 'அடக்குமுறைக்கு அடிபணிவதே அரசியல் அறமா' என்ற வினாவை எழுப்பினார்.
'அதை நாம் எதிர்ப்போம்.
அதை நாம் எதிர்ப்போம்'
என ஒருமனிதனுடைய வாழ்க்கை உரிமைகள், கௌரவம், வாழ்வுக்கான உத்தரவாதம் மறுப்பதை எதிர்ப்போம் எனவும் பாடினார்.

இலங்கை அரசியலில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் சர்வதேச அரங்குகளில் கண்டிப்புக்குள்ளாகியே வருகின்றன. மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா போன்ற உயர்மட்டங்கள் இது தொடர்பாக அறிவுறுத்திக்கொண்டே வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளை சு. வில்வரெத்தினம் என்ற கவிஞர்

'வீதியில் போகும் போது விபத்துக்கள் நேராதிக்க
விதிமுறை உள்ளன
ஒதுங்கியே செல்லும் பாதசாரிகளின் உயிர்களுக்கு
ஏதும் உத்தரவாதம் இல்லையே
உறுமியே செல்லும் இராணுவ உந்துகளின்
உள்ளிருந்து இயங்கும் துவக்குகளாலே
எந்நேரமும் இவர் தலை சிதறலாம்'

என்று பாடியதும் அரசியல் ரீதியாக மக்களுக்கு எதிராக நடக்கும் செயற்பாட்டின் கண்டிப்புக் கவிதையே.

ஈழமணித்திருநாட்டின் வடக்கு கிழக்கு தமிழ்மொழி பேசும் மக்களின் உயிர்கள் பறிக்கப்படுவதையும், உடமைகள் அழிக்கப்படுவதையும், அங்கங்கள் குறைக்கப்படுவதையும், கல்வி பறிக்கப்படுவதையும் எடுத்துக்காட்டி கண்டித்தும் எதிர்த்தும் கவிதைகள் பாடிய கவிஞர்களுள் சி. சிவசேகரம் என்ற கவிஞரின் உள்ளக்குமுறல்கள் பொறுத்துக் கொள்ள முடியாத உளரீதியான தாக்கங்கள் 'வடலி' என்ற கவிதைத்தொகுப்பில் அடங்கும் கவிதைகளில் உருக்கொள்கின்றன. அந்த வகையில்,

'குண்டு எறிந்து கூரைகளைப்பறித்தீர்
அங்கங் குறைத்தீர்
கல்வி பறித்தீர்
பிஞ்சிற் கருக்கிப் பிணமாகத் தேய்வித்தீர்'
என்பதும் ஒன்றாகும்.

இவரது 'கொல்லுங்கரங்கள்' என்ற கவிதையில்

'சூரிய கந்தவில் சிறுவர்களைப் புதைத்தகரங்கள் எவையோ
அவையே செம்மணியிலும் இளைஞர்களைப்புதைத்தன
கொலை செய்தோர் யார் என அறியப்பட்ட பின்னரும்
கொலைஞர்களுக்கு அபயமளித்த கரங்கள் எவையோ
அவையே செம்மணியின் புதைகுழிகளைத் தோண்டாமல் மறிக்கின்றன .

என்று அரசியல் ரீதியான நீதியின்மை, பக்கச்சார்பு, அடக்குமுறைகள் என்பன எடுத்துக்காட்டப்பட்டதுடன் அவை கண்டித்தும் பாடப்பட்டுள்ளன எனின் அது மிகையாகாது. எனவே அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடியதும், 'வேதாளம் சேருமே வெள்ளெருக்கு பூக்குமே சேடன் குடி புகுமே மன்றோரம் சொன்னோன் மனை' என ஔவையார் பாடியதும், இரட்சணியயாத்திரிகத்தின் ஆசிரியரான கிருஷ்ணப்பிள்ளை பாடிய 'மன்றோரம் சொன்னோன் மனை பாழாய்' என்ற விளைவுகள் ஈழத்து அரசியலில் காணப்படும் நீதியின்மை, பக்கச்சார்பான செயற்பாடுகள், ஒடுக்குமுறைகள், அடாவடித்தனங்கள் போன்றவற்றுக்கான பாதகமான விளைவுகளாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு' என்பது திருக்குறள்

2. சமூகச்சீர்கேடுகளுக்கெதிரான கவிதைகள்:

சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறுபட்ட சீர்கேடுகளைக் கண்ட கவிஞர்கள், அவற்றின் பொருந்தாமையைச் சுட்டிக்காட்டும் வகையில் அவற்றை எதிர்த்து முற்போக்குச் சிந்தனையுடன் பாடினர். அவையாவன:

i. சாதிப்பாகுபாடு:

உலகளாவிய ரீதியில் சமூகத்தில் பல காரணங்களால் உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடுகள் காணப்படுகின்றன. தென்னாபிரிக்காவில் வெள்ளைநிற வெறி முக்கிய பாகுபாடாகக் காணப்பட்டது. இந்தியாவில் தலித் என்ற சமூக அடக்குமுறை காணப்பட்டதால் அதற்கெதிரான கருத்துக்களும் மேற்கிளம்பின. தழிழகக்கவிஞர் பாரதியார் 'மனிதரில் ஆயிரம் சாதி என்ற வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை' என்று பாடியது போல் ஈழத்துக்கவிஞர்களும் சாதிப்பாகுபாட்டை எதிர்த்துப்பாடியுள்ளனர்.

அந்த வகையில் மகாகவி 'தேருந்திங்களும்' என்ற கவிதையில்

முந்த நாள் வான முழு நிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது'

என்று தீண்டாமை சாதிப்பாகுபாடு என்பவற்றை எதிர்த்து தன் கொள்கையை மனித நேயத்துடன் பக்குவமாகக் காட்டுகின்றார்.

இதேபோல் தனது காலத்துச் சமுதாயத்துச் சீர் கேடுகளுள் ஒன்றாக இதனை அடையாளப்படுத்திய நீலாவாணன், 'போக்கு' என்ற தனது கவிதையில்

'சாதி நூறாயிரங்கள் சரிகட்டி'
நாமுயர்ந்த சாதியென்று
காதினிக்கப்பேசி
மெல்லியரை நிஷ்டூரம்
பண்ணுகிற நினைவு கொண்ட
சரசக்காரி'
என்று பாடியுள்ளார்.

நீலாவணன் தனது 'ஏதுகாதல்' என்ற கவிதையில்

சாதியென்றுளச் சாட்சிகொன்றிடும்
சமயமென்றிடும் சதியினால்

எனச்சாதிபாகுபாட்டை சமுதாயத்தில் காணப்படும் ஒரு வகையான சாதி என்று எள்ளி, இகழ்ந்துரைக்கும் போக்கு வெளிப்படுகின்றது.

ii. சீதனப்பிரச்சினை:

இன்று வரை எமது சமுதாயத்தில் புற்றுநோய் போல் பரவிக்கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினை சீதனப்பிரச்சினை. பெண்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமேயிது. எத்தனையோ பெண்களின் வாழ்வை இது தாக்கியுள்ளது. இதனைக் கண்டு பொறுக்காத எழுத்தாளர்கள் தமது படைப்புக்களில் இதனை வெளிப்படுத்திக் கண்டித்து இலக்கியங்களை எழுதியுள்ளனர். அந்த வகையில் பல தமிழ்க்கவிஞர்களின் உள்ளத்தையும் இப்பிரச்சினை தொட்டுள்ளது என்பதை அவர்களது கவிதைகள் உறுதிப்படுத்துகின்றன. அந்தவகையில் ஓட்டமாவடி இஸ்மாயில் என்ற கவிஞர் தனது 'தூண்டில் இரைகள்' என்ற கவிதைத்தொகுப்பில் 'மாப்பிள்ளையோ' என்ற கவிதையில்

'விலையுயர்ந்த மாணிக்கம் போல்
மாப்பிள்ளைமார் கலியாணச்சந்தையில்
உத்தியோக மாப்பிள்ளைக்கு உசத்தியான
விளம்பரங்கள் மாடி வீடும் கற்றை நோட்டும்
காற்றாய்ப்பறக்கும் வாகனமும்'

என்று புகழ்வது போல் இகழ்ந்து எள்ளி நகையாடி எதிர்த்துப்பாடியுள்ளார். மேலும்,

'தொடங்கிற்றுப் பேச்சுவார்த்தை
ஊரிலும் கொழும்பிலும் இரு பங்களாக்கள்
50 பவுண் தங்கம் குளிர் வாகனம்
செலவுக்கென பத்து லட்சம் மட்டும்'

என்று சமூக நிலையை வெளிப்படுத்தியதுடன் பெண்ணைப் பெற்றவர்களின் பரிதாப நிலையைக்கண்டு ஆண் சமூகத்தின் நிலையில் மாற்றத்தைக் காணும் ஆதங்கத்துடன்

'சமூக உணர்வற்ற
எங்கள் இளைஞர்கள்
பெண்ணைப்பெற்றவர்
ஏங்கித்தவிக்கும் நிலை
மாற்ற எப்போது
மேடைக்கு வருவர்'

என்று மானிடநல வேட்கையுடன் தகது கவிதாயுள்ளத்தைச் சொல்லோவியமாகக சித்திரித்துள்ளார்.

iii. பெண்ணுரிமையும் பெண்ணடிமையும்:

மனித சமுதாயத்தில் பெண்கள் ஆணுக்கு நிகரானவர்கள், கல்வி, அரசியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், போன்ற பல்துறைகளில் புலமைபெற்று வாழ்கின்றனர். எனினும் ஆணாதிக்கத்திற்குட்பட்டு அடக்குமுறைக்குள்ளாகும் இப்பெண் சமுதாயத்தின் உரிமைகளை வலியுறுத்தி அடக்குமுறைகளை எதிர்த்துப் பாடும் பெண்நிலைவாத சிந்தனைக் கருத்துக்கள் உலகளாவிய ரீதியில் மேற்கிளம்பிக்கொண்டிருக்கும் அதேவேளை 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரதியார் 'அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க நினைப்பவர் பித்தராம்' என்று புதுமைப்பெண் என்ற கவிதையில் பாடியது போல் ஈழத்துக்கவிஞர்களும் குறிப்பாக பெண் கவிஞர்களும் பெண்ணடிமையைக் கண்டித்தும் எதிர்த்தும் பாடியுள்ளனர். அந்தவகையில் ஊர்வசி, ஒளவை, மைத்ரேயி, சிவரமணி, சங்கவி, சுல்பிகா, வானதி போன்ற கவிஞைகள் பெண்நிலைவாத சிந்தனையின் எழுச்சி காரணமாக புதுமை நோக்குடனும் புதிய ஆவேசத்துடனும் புதிய பலத்துடனும் பாலி ரீதியான சகல அடக்கு முறைகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்து 'கவிதைக்கு மெய் அழகு' என்ற உணர்வுடன் யதார்த்த பூர்வமாய் பாடினர். பெண்நிலைவாதச் சிந்தனை கொண்ட கவிதைத்தொகுப்புக்களாக சிவரமணி கவிதைகள், மறையாத மறுபாதி, கௌசல்யா கவிதைகள், விலங்கிடப்படாத மானிடம், சொல்லாத சேதிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சிவரமணியின் 'முனைப்பு' என்ற கவிதை

'பேய்கள் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டடேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால் அசுத்தப்படுத்தப்பட்டன
அவர்களின் குரோதம் நிறைந்த பார்வையும்
வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்
என்னைச் சுட்டெரித்தன'

என அமைய வானதியின் கவிதை

'ஆணாதிக்கப் புயலால்
அடுப்படியில் அகதியாகி
மௌன யுத்தம் நடத்துபவளே
புறப்பட்டு வா'

என ஆணாதிக்க எதிர்ப்பு, பெண்ணடிமை என்பன கண்டிக்கப்பட்டு, சமவுரிமை வலியுறுத்தப்படுவதாய் அமைகின்றது.

எனவே ஈழத்துத் தமிழ்க்கவிதையின் செல்நெறியில் காணப்படும் முக்கிய பண்புகளுள் அரசியல், சமூக சீர்கேடுகளை எதிர்த்தும், முற்போக்குச்சிந்தனையுடன் இவ்வாறான அடக்குமுறைகள் தவிர்க்கப்படவேண்டியதொன்று என்ற ஆதங்கத்துடன் ஈழத்துக்கவிஞர்கள் பாடிய இக்கவிதைகள் காலத்தின் கண்ணாடி மட்டுமன்று தேவையுமாகும்.

உசாத்துணை நூல்கள்:

1. இஸ்மாயில் ஓட்டமாவடி - 2005 - தூண்டில் இரைகள், யாத்ரா.
2. சித்திரலேகா.மௌ (ப-ர்) - 1993 - சிவரமணி கவிதைகள் - பெண்கள் ஆய்வுவட்டம்
3. சிவசேகரம்.சி - 1999 - வடலி (கவிதைத்தொகுப்பு) - தேசிய கலை இலக்கிய பேரவை
4. சேரன், யேசுராசா, பத்மநாப ஐயர், நடராசன்.பி - 1996 - மரணத்துள் வாழ்வோம் விடியல் பதிப்பகம்
5. நீலாவாணன் - 1976 - நீலாவாணன் வழி கவிதைத்தொகுப்பு - கல்முனை.
6. மனோகரன் - துரை - 1976 - இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி - கலைவாணி புத்தகலாயம் கண்டி
7. மௌனகுரு.சி, சித்திரலேகா. மௌ, நூ.மான் எம். ஏ - 1979 - இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் : வாசகர் சங்க வெளியீடு - கல்முனை

திரு. சோ. துளசிநாதன் B.A (Hons) Dip.in.Edu
விரிவுரையாளர் - தமிழ்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி
மட்டக்களப்பு.

"வெள்ளத்தாற்போகாது; வெந்தணலால்வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது; கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது;
கள்ளர்க்கோமிகவரிது; காவலோமிகவெளிது; கல்விஎன்னும்
உள்ளத்தே பொருளிருக்க, உலகெலாம் பொருள்தேடி உழல்வதேனோ?"

சிறப்புத் தன்மை கொண்ட சுவிஸ் சமஷ்டி அமைப்பு

உலகில் உள்ள நாடுகளில் அநேகமான நாடுகள் சமஷ்டி ஆட்சி முறையையே பின்பற்றுகின்றன. இவற்றில் சுமார் இருபது நாடுகள் ஒற்றையாட்சி முறையில் இருந்து சமஷ்டியாட்சி முறைக்கு மாற்றம் பெற்றவையாகும். அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, மலேசியா, சுவிஸ் போன்ற நாடுகளில் மிகவும் சிறப்பாக இவ்வாட்சிமுறை பின்பற்றப்படுகின்றது. சமஷ்டியாட்சி முறைக்குரிய அடிப்படைப் பண்புகளை மாத்திரம் ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமஷ்டியாட்சி முறையை சிறப்பாக கொண்டு நடத்தமுடியாது என்பதைப் பல நாடுகள் நிரூபித்துள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம் சமஷ்டி அரசியல் திட்டம் வரையப்படும் போது சமஷ்டி ஆட்சிமுறைக்குரிய அடிப்படைப் பண்புகளைக் கவனத்தில் கொள்ளும் அதேவேளையில், அந்தநாட்டின் இன, சமூக, அரசியல், பொருளாதார மற்றும் வரலாற்று அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு சமஷ்டி அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டமையே ஆகும். அப்போதுதான் அந்த சமஷ்டிமுறை சிறப்புறும். இவ்வாறு சிறப்புற்று விளங்கும் சமஷ்டியாட்சி முறைக்குப் பேர்போன நாடுதான் செல்லமாக சுவிஸ் என அழைக்கப்படும் சுவிற்சலாந்த் (Switzerland) ஆகும்.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, மலேசியா ஆகிய நாடுகளின் சமஷ்டியாட்சி முறையைவிட சுவிஸ் சமஷ்டிமுறை சிறப்புற்று விளங்க பல அம்சங்கள் காரணமாக அமைந்துள்ளன எனலாம். சமஷ்டி முறையில் ஆணிவேராகவுள்ள அதிகாரப்பங்கீடு என்ற அம்சம் அமெரிக்க சமஷ்டிமுறையிலும் கனடாவின் சமஷ்டி அமைப்பிலும் மிகச் சிறப்பாகப் பின்பற்றப்பட்டுள்ளது. மாநில அரசுகள் வெந்து போகாதபடி மத்திய அரசின் அரவணைப்புக்குள் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் இவ்விருநாடுகளிலும் அதிகாரப்பங்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமையே அமெரிக்க சமஷ்டியமைப்பும் கனடாவின் சமஷ்டியமைப்பும் சிறந்து விளங்கக் காரணமாகும்.

அவுஸ்ரேலிய சமஷ்டிமுறையில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சம் இச்சமஷ்டியமைப்பு முறையில் இணைந்துள்ள ஆறு மாநிலங்களும் விரும்பினால் விரும்பியபோது மத்திய அரசில் இருந்து பிரிந்து செல்லலாம் என அரசியல் அமைப்பில் குறிப்பிட்டுள்ளமையாகும். இது சிறப்பான ஓர் ஏற்பாடாகும். இந்த ஏற்பாடு மாநில அரசுகள் சுதந்திரத்துடன் செயற்படுவதற்கு மத்திய அரசு இறுக்கமான அன்பைப் பிரயோகித்துள்ளது என அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த ஏற்பாடே அவுஸ்ரேலிய சமஷ்டியாட்சி முறையின் சிறப்பாகும். மலேசிய சமஷ்டியமைப்பில் பொருளாதார பலம் படைத்த எண்ணிக்கையில் குறைவான சிறுபான்மை இனத்தவர்களான சீனர்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்களான மலேயர்கள் பயந்து தமது உரிமைகளை அரசியல் யாப்பில் எழுதிவைத்துள்ளனர். வழக்கமான எல்லா அரசியல் அமைப்புக்களிலும் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளையே எழுதி வைப்பது வழக்கமாகும். ஆனால் மலேசிய சமஷ்டியில் பெரும்பான்மை இனத்தவரின் உரிமைகள் எழுதப்பட்டிருப்பது மலேசிய சமஷ்டியமைப்பின் சிறப்பாகும்.

இவ்வாறாக அமெரிக்கா, கனேடிய, அவுஸ்ரேலியா, மலேசிய சமஷ்டியமைப்பில் குறிப்பிடத்தக்க சில அம்சங்களே சிறப்புடன் காணப்படுகின்றன. ஆனால் சுவிஸ் சமஷ்டியமைப்பு முழுவதுமே சிறப்பம்சம் எனலாம். மத்திய ஐரோப்பாவின் தேன்கூடு எனவும்,

உலகின் விளையாட்டு மைதானம் எனவும் போற்றப்படும் சுவிஸ் நாடு உண்மையான சமாதானம் அன்பு, சனநாயகம் என்பவற்றைப் பேணும் பல்லின அமைப்புக்கொண்ட ஒரு நாடாகும். இங்கு ஜேர்மனிய மொழி பேசுகின்றவர்கள் 65% ஆகவும் பிரான்சிய மொழி பேசுகிறவரகள் 18% ஆகவும், இத்தாலிய மொழி பேசுபவர்கள் 9% ஆகவும் வாழ்கின்றனர். அதேவேளை இங்கு கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து, யூதர் மதமும் பின்பற்றப்படுகின்றன. இங்கு மக்கள் மொழியாலும் மதத்தாலும் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் மத்தியில் இன,மத, மொழி ரீதியாகவோ அல்லது பிரதேச ரீதியாகவோ எவ்வித வேறுபாடுகளும் இல்லை. அத்துடன் கட்சி ரீதியான வேறுபாடுகளும் இல்லை எனலாம். இந்த நாட்டினுடைய தலைமை நிருவாகி கவுன்சிலர் (Councillor) என அழைக்கப்படுகின்றார். சுவிஸ் நாடு மொத்தம் 26Cantons மாநிலங்களைக் கொண்டுள்ளது.

சுவிஸ் பாராளுமன்றம் கூட்டாட்சி மன்றம் என (Federal Assembly) அழைக்கப்படுகின்றது. இம்மன்றம் இரு சபைகளைக் கொண்டதாகும். மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை நாட்டவை (National Council) காண்டல்களை (Cantons) பிரதிநிதித்துவம் செய்யும் சபை (Council of States) மாநிலங்களின் அவை எனவும் அழைக்கப்படுகின்றது. இக்கூட்டாட்சி மன்றத்தில் (Federal Assembly) மொத்தம் 246 உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சட்டம் இயற்றும் அதிகாரம் சுவிஸ் சமஷ்டி அமைப்பில் சட்டமன்றத்திற்கும் (Federal Assembly = National Council of States) கூடவே நிருவாகத் துறைக:கும் (Federal Council) 26 Cantons மாநிலங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே சுவிஸ் சமஷ்டி அமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிருவாகத்துறை உறுப்பினர்களும் பொதுமக்களும் என மூன்று பிரிவினர்களும் சட்டம் இயற்றுவதில் பங்குபெறுகின்றனர் எனலாம். சுவிஸ் கூட்டாட்சி மன்றத்தில் (Federal Assembly) மேலவையாகிய (Council of States) மாநிலங்களின் அவைக்குரிய உறுப்பினர்கள் சமபிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் 26 காண்டங்களிலும் இருந்து 46 பேர் தெரிவு செய்யப்படுகின்றனர். சுவிஸ் நாடு 20 முழுக் காண்டங்களையும் Cantons (மாநிலங்கள்) 06 அரைக்காண்டங்களையும் (Cantos) கொண்டுள்ளது. முழுக் காண்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் அடிப்படையில் 40 உறுப்பினர்களும் அரைக்காண்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிதிநி என்ற அடிப்படையில் 06 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். சுவிஸ் நாட்டில் சிறுபான்மை மக்கள் உள்ள காண்டங்களே (Contons) மாநிலங்கள் அரைக்காண்டங்கள் என அழைக்கப்படுகின்றன. அங்குள்ள சிறுபான்மையின மக்களுக்கும் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சமஷ்டி ஆட்சி முறையைச் சிறப்புறச் செய்துள்ளது எனலாம்.

மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கீழவையாகிய நாட்டவையில் (National Council) 200 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் எல்லா மாநிலங்களிலும் இருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களின் பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும். 20 வயது நிரம்பிய குடிமகன் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. மதகுருமார் தேர்தலில் போட்டியிட முடியாது. மதச்சார்பற்ற அரசிற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். அவ்வாறு மதகுருமார் தேர்தலில் போட்டியிடுவதனால் தமது சமயப்பணியைத் துறந்துவிட வேண்டும். மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டவை, ஆண்டிற்கு இருமுறை கூடும் போது சிறப்புக் கூட்டமும் நடைபெறுகின்றது. சுவிஸ் சமஷ்டி அமைப்பில் பல்லின மக்கள் வாழ்கின்ற படியால் ஆட்சி மொழிகளான ஜேர்மனிய, பிரான்சிய, இத்தாலிய மொழிகளில் பாராளுமன்றத்தில் பேசலாம். அங்கு இம்மூன்று மொழிகளும் ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இது மொழிச்சார்பற்ற அரசு என்பதை உலகுக்கு

வெளிப்படுத்தப்படுகின்றது. இச்சட்டமன்றத்தை மற்றைய நாடுகளில் நிகழ்வது போன்று அதாவது இந்தியா, இங்கிலாந்து, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுவது போன்று நிருவாகத்துறை (Federal Council) சட்டமன்றத்தை (Federal Assembly) கலைக்க முடியாது. பெரும்பாலும் சுவிஸ் சமஷ்டி அமைப்பில் சட்டமன்றத்தில் இரு சபைகளும் நிலையான அதிகாரத்தையே பெற்றுள்ளன. ஒவ்வொரு மசோதாவும் இரு அவைகளிலும் ஒரே வேளையில் கொண்டுவரப்படுகின்றன. பொதுவாக முக்கியமான மசோதாக்களை மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (National Council) கொண்டு வருகின்றது. சிலவேளைகளில் முக்கிய மசோதாக்களைத் தீட்டுமாறு கூட்டாட்சி சட்டமன்றம் நிருவாகத்துறையைக் கேட்பதும் உண்டு. மசோதா பற்றி விவாதம் சிலவேளையில் சட்டமன்றத்தில் இரு சபைகளும் ஒன்றாகக் கூடும் போது இடம்பெறுவதும் உண்டு. நிருவாகத்துறைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், நீதிபதிகளைத் தெரிவு செய்தல், படைத்துறைத் தளபதியைத் தெரிவு செய்தல், இறுதி மன்னிப்பு அளித்தல் போன்ற விடயங்கள் பற்றி இரு சபைகளும் ஒன்றாகக் கூடும்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். சட்டமன்றம் இயற்றும் சட்டங்களை நிருவாகத்துறையோ (Federal Council) கூட்டாட்சி நீதிமன்றமோ (The Federal Insurance Court) அரசியல் அமைப்பிற்கு முரணானது எனத் தள்ளிவிட முடியாது. மக்கள் குடியொப்பத்தின் மூலமே சட்டமூலம் ஒன்றை நிராகரிக்க முடியும்.

சுவிஸ் நிருவாகத்துறை கூட்டாட்சி அவை (Federal Council) என அழைக்கப்படுகின்றது. இது 10 பேர் கொண்ட ஓர் அமைச்சரவையைக் கொண்டு விளங்குகின்றது. மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டமன்றமும், மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டமன்றமும் ஒன்றாகக் கூடியதும் நிருவாகத்துறைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. இந் நிருவாகத்துறை நான்கு ஆண்டு பதவி வகிக்கின்றது. நிருவாகத்துறைக்கான உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்படுவதால், நிருவாகத்துறை பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டதல்ல. பொதுவாக ஜேர்மனிய மொழி பேசும் மாநிலங்களில் இருந்து நான்கு பேரும், பிரான்சிய மொழி பேசும் மாநிலங்களில் இருந்து இருவரும், இத்தாலிய மொழி பேசும் மாநிலங்களில் இருந்து ஒருவரும் தெரிவுசெய்யப்படுவது வழக்கமாகும். ஏனையவர்கள் சிறுபான்மை மொழி பேசும் மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். ஒவ்வொருவரிடமும் எல்லா நிருவாகத்துறை அதிகாரங்களையும் வழங்குவதிலும் பார்க்க 10 பேரும் நிருவாகத்துறை அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இதன்மூலம் ஒரு கூட்டு நிருவாகத்துறை அமைப்பே காணப்படுகிறது எனலாம். இதனால் சிறுபான்மையின மக்களும் நிருவாகத்தில் பங்கு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

நிருவாகத்துறை உறுப்பினர்கள் பின்வருமாறு காணப்படுவர்.

01. President of the Confederation
02. Vice - President
03. Federal Councilor
04. Federal Councilor
05. Federal Councilor
06. Fedaral Councilor
07. Federal Councilor
08. Federal Councilor
09. Vice - Chancellor
10. Vice - Chancellor

சுவிஸ் நாட்டின் நிருவாகத்துறைக்கு (Federal Council) உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இருந்துதான் தெரிவு செய்யப்பட வேண்டும் என அரசியல் அமைப்பு விதிகள் எவையும் இல்லை. எனினும் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டதும் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கவேண்டி ஏற்படும். நிருவாகத்துறை உறுப்பினர்கள் அனைவரும் சமமான உரிமையைப் பெற்றுள்ளனர் எனினும் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டு அதிகாரிகள் நாட்டுக்கு வருகை தரும்போது அவர்களை வரவேற்றல் போன்ற சில அலுவல்களை நிருவாகத்துறை உறுப்பினர்கள் அனைவரும் சமகாலத்தில் செய்ய இயலாது ஆகையால் அவ்வாறான விடயங்களைக் கவனிக்கும் பொருட்டு நிருவாகத்துறை உறுப்பினர்களில் இருந்து ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். இவரே (Chancellor) என அழைக்கப்படுகின்றார். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் ஓர் ஆண்டுதான் பதவி வகிக்க முடியும். பின்பு ஏனையவர்களில் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். இவ்வாறாக நான்கு வருடங்களும் 04பேர் தலைவர்களாகத் தெரிவு செய்யப்படுவதுடன் 04 உபதலைவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். மொத்தத்தில் நிருவாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தலைவர் பதவியைப் பெறுகின்றனர். இதன் மூலம் சுவிஸ் சமஷ்டி அமைப்பில் அனைத்து இனத்தவரும் தலைவர் பதவியைப் பெறுகின்றனர் எனலாம். இதன்மூலம் இங்கு சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடுகள் இல்லை எனலாம். நாட்டினுடைய பொறுப்பு தலைவரிடம் மட்டும் கொடுக்கப்படவில்லை, அனைத்து நிருவாக சபை உறுப்பினர்களிடமும் சுழற்சி முறையில் வழங்கப்பட்டுள்ளது எனலாம். நிருவாகத்துறை தலைவர் பெயரளவிலான தலைவராக இருக்கின்றாரே தவிர உண்மையில் நிருவாகத்துறைக்கு அவரே தலைவர் அல்ல. நிருவாகத்துறையின் தலைவர் (Chancellor) ஓர் ஆண்டு பதவிக்காலத்தில் மற்றைய நிருவாகத்துறை உறுப்பினர்களை விட மிகுதியாக ஊதியம் பெறுகிறார், கூட்டங்களுக்கு தலைமை தாங்குகின்றார். அவைக் கூட்டத்தில் சம எண்ணிக்கையில் வாக்குகள் அளிக்கப்பட்டால் அவ்விடத்தில் அவர் இறுதி வாக்களிப்பார். இதனால் மற்றைய உறுப்பினர்களிலும் இருந்து இவர் வேறுபடுகின்றார் எனலாம்.

கூட்டாட்சி அவையானது (Federal Council) நிருவாகத்துறை அதிகாரங்களையும் சட்டசபை அதிகாரங்களையும் செலுத்தி வருகின்றது. ஏனைய நாடுகளில் பொதுவாக சட்ட ஆக்கத்திற்கு பாராளுமன்றமே பொறுப்பாக்கப்பட்டிருக்கும். ஆனால் சுவிஸ் நாட்டில் நிருவாகத்துறை சட்ட ஆக்கத்திலும் பங்கு கொள்கின்றது. ஏனைய நாடுகளில் நிருவாகத்துறைக:கு பொறுப்பான அமைச்சர்களும் கொண்டு வரும் சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் தோல்வி அடைந்தால் நிருவாகத்துறையும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றமும் பதவி விலகவேண்டி எல்லது கலைய வேண்டி ஏற்படும். ஆனால் சுவிஸ் நாட்டில் நிருவாகத்துறை பதவி துறப்பதற்கு சட்டமன்றமோ, சட்டமன்றம் பதவி துறப்பதற்கு நிருவாகத்துறையோ காரணமாக அமைவதில்லை. சுவிஸ் நாட்டில் நிருவாகத்துறை பின்வரும் சட்டங்கள் தொடர்பாக அதிகாரம் செலுத்துகின்றது. சட்டங்களையும் உடன்படிக்கைகளையும் செயற்படுத்துதல், அயல்நாட்டு உறவுப் பாதுகாப்பு, உள்நாட்டு அமைதி, சர்வதேச விடயங்கள், நீதித்துறை போன்றவை நிருவாகத்துறையின் அதிகாரங்களுக்கு உட்பட்டவையாகும். வரவு செலவுத் திட்டத்தை வகுத்து ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றத்தில் சமர்ப்பித்தால் அதை சட்டமன்றம் ஏற்ற பின் வரிதிரட்டி அரச செலவை மேற்பார்வை செய்வதும் நிருவாகத்துறையின் அதிகாரங்களாகும். நிருவாகத்துறை சட்ட ஆக்கத்திலும் பெரும்பங்கு பெறுகின்றது. பல மசோதாக்களை நிருவாகத்துறையே தீட்டி சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை சுவிஸ் நிருவாகத்துறை இங்கிலாந்தின் அமைச்சரவையை ஒத்திருந்த போதும் அமைச்சரவை கொண்டு வரும் மசோதா பாராளுமன்றத்தில் தோல்வி

அடைந்தால் இங்கிலாந்தில் அமைச்சரவை பதவி விலக வேண்டி ஏற்படும். ஆனால் சுவிஸில் அவ்வாறு இல்லை. இதுவும் ஒரு சிறப்பம்சம் எனலாம்.

சுவிஸ் சமஷ்டி அமைப்பில் வினோதமான அம்சம் மக்கள் சட்டம் இயற்றுவது ஆகும். பொதுவாக உலகில் பெரும்பாலான நாடுகளில் மக்கள் பிரதிநிதிகள்தான் பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்றுகின்றனர். ஆனால் சுவிஸ் நாட்டில் பாராளுமன்றத்திற்கு புறம்பாக மக்களும் சட்டம் இயற்றுகின்றனர். இங்கு இரு வகையில் சட்டமியற்றுவதில் மக்கள் பங்கு கொள்கின்றனர்.

01. ஆரம்ப நிலை அல்லது தொடக்க உரிமை (Primary Aassembly)
02. குடி ஒப்பம் அல்லது மக்கள் தீர்ப்பு (Referendum)

ஆரம்ப நிலை அல்லது தொடக்க உரிமை என்பது சட்டத்தை தொடங்கும் நேரான அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதாகும். மக்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து ஒரு விடயத்தை தீர்மானம் செய்யும் நிலையினை இது விளக்குகின்றது. மக்களால் உருவாக்கப்பட்ட மசோதாவை மக்கள் அரச தலைவர் ஊடாக சட்ட மன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும் மக்களால் உருவாக்கப்பட்ட மசோதாவை பாராளுமன்றம் ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயப்பட்ட பின்னர் மக்களின் தீர்ப்புக்காக இச்சட்டமூலம் மக்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. எனவே தொடக்க உரிமையும் குடி ஒப்பமும் இணைந்தே செயற்படுகின்றது. சட்டத்தை உருவாக்குவதற்கான நேரான அதிகாரத்தை மக்கள் பெறுவதன் மூலமும் அச்சட்டமூலத்தை ஆராயும் உரிமையைப் பாராளுமன்றம் பெறுவதன் மூலமும் பின்னர் அது மக்களிடமே குடி ஒப்பத்திற்காக வரும்போது அம்மசோதாவில் உள்ள தவறுகள் திருத்தப்படுகின்றன எனலாம். தொடக்க உரிமையின் மூலம் சட்டத்தை ஆக்குகின்ற அதிகாரத்தையும் அரசியல் அமைப்பில் திருத்தங்கள் தெரிவிக்கும் உரிமையையும் மக்கள் பெற்றுவிடுகின்றனர். அரசியல் அமைப்பை முற்றிலும் மாற்றியமைப்பதற்கோ அல்லது ஒரு பகுதியைத் திருத்துவத்கோ தொடக்க உரிமையை மக்கள் பயன்படுத்துகின்றனர். அரசியல் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமானால் 50,000 மக்கள் விண்ணப்பம் சமர்ப்பித்தால் அதைக் குடிஒப்பம் மூலம் நிறைவேற்றலாம்.

குடியொப்பம் என்பது ஒரு வகையில் சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு அல்லது அரசியல் யாப்பை முற்றாக அல்லது பகுதியளவில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு மக்கள் சம்மதத்தைப் பெறுவதைக் குறிக்கும். 50,000 மக்கள் கையொப்பம் இடுவதன் மூலம் ஒருவிடயம் தொடர்பாக மக்கள் அதிகாரத்தை வழங்குகின்றனர். இக்குடியொப்பமானது கட்டாய குடியொப்பம் (Obligatory) விருப்பக் குடியொப்பம் (Optional referendum) என இருவகைப்படும். சுவிஸ் அரசியல் யாப்பின்படி யாப்பில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தையும் கட்டாயக் குடி ஒப்பத்திற்கு விடவேண்டும். கூட்டாட்சி சட்ட மன்றம் நிறைவேற்றிய எல்லா சட்டங்களும் தீர்மானங்களும் 30,00 மக்கள் அல்லது 09 மாநிலங்கள் விரும்பினால் குடி ஒப்பத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இது விருப்புக்குரிய ஒப்பம் எனப்படுகின்றது. கூட்டாட்சி மன்றம் ஒரு சட்டமூலத்தை அவசரமானது என அறிவிக்குமானால், அதை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. சுவிஸ் சமஷ்டி அமைப்பில் மத்திய அரசு மாத்திரமின்றி மாநிலங்களும் தமது சட்டமூலங்களை மக்கள் தீர்ப்புக்காக முன்வைக்கின்றது. எனவேதான் சுவிஸ் நாட்டில் மக்கள் சட்டமியற்றுவது ஒரு சிறப்பான அம்சமாகும். இவ்வம்சம் சுவிஸ் நாட்டைத் தவிர வேறு எந்தவொரு நாட்டிலும் பின்பற்றப்படுவதில்லை. சுவிஸ் நாட்டில் மக்கள் சட்டம் இயற்றுவதில் பங்கு கொள்வதால் சமஷ்டி அமைப்பு நீடித்து நிலைத்துள்ளது எனலாம்.

சுவிஸ் சமஷ்டி நீதிமன்றம் (Federal Insurance Court) என அழைக்கப்படுகின்றது. இரு சபைகளும் ஒன்றாகக் கூடும் அமர்வின் போது திறமை, அனுபவம் என்ற அடிப்படையில் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் ஆறு வருடம் பதவி வகிக்க முடியும். நடைமுறையில் திரும்பத் திரும்ப இவர்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநிலங்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்தல், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல், மாநிலங்களில் இருந்து வரும் பிணக்குகளை மேல் விசாரணை செய்தல் சுவிஸ் நீதிமன்றத்தைப் பொறுத்தவரை சட்டப் புலனாய்வு அதிகாரம் (Judicial Review) மறுக்கப்பட்டுள்ளது. கூட்டாட்சி மன்றங்கள் இயற்றும் சட்டங்களை அரசியல் அமைப்பிற்கு முரணானவை எனத் தீர்ப்பளிப்பதற்கு சுவிஸ் நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை. ஆனால் மாநிலங்களில் இயற்றப்படும் சட்டமூலங்கள் சமஷ்டி அரசியல் அமைப்பிற்கு முரணானதாகக் காணப்பட்டால் அவற்றைத் தள்ளி விடும் அதிகாரம் நீதி மன்றத்திற்கு உண்டு. ஆனால் மத்திய அரசு இயற்றும் சட்டமூலங்கள் அரசியல் அமைப்பிற்கு முரணானது எனத் தள்ளிவிடும் அதிகாரம் சுவிஸ் நாட்டில் மக்களுக்கே உண்டு எனலாம்.

கட்சிகள் இன்றி ஜனநாயகம் சிறப்பாகச் செயற்பட முடியாது. சுவிஸ் சமஷ்டி அமைப்பில் கட்சிகள் முக்கியத்துவம் பெறுவதில்லை எனினும் அங்குள்ள கட்சிகள் இனமுரண்பாடுகளுக்கோ அல்லது வேறுபாடுகளுக்கோ தூபமிடுபவை அல்ல. அங்கு பின்வரும் கட்சிகள் நடைமுறையில் உள்ளன எனலாம். Radical Free Democratic (FDP), Swiss People's Party (SPP), Liberal Party (LPS), Swiss Democrats (SD),Federal Democratic Union (EDU), Ticino League, Social Democratic Party (SPS), Worker's Party (PDA), Alliance de Gauche (ADG), Christian Democratic People's Party (CVP), Christian Social Party (CSP), Evangelical People's Party (EVP), Green Party (GPS), Independent. இவ்வாறு மத்திய அரசிலும், மாநில அரசிலும் பல கட்சிகள் செயற்பட்ட போதிலும் கட்சிகள் மக்கள் மத்தியில் சமஷ்டி கூட்டமைப்பிற்குப் பங்கம் ஏற்படாத வகையில் செயற்படுகின்றன எனலாம்.

இவ்வாறாக சுவிஸ் சமஷ்டி அமைப்பு பல்லின சமூக அமைப்பிற்கு மிகச் சிறப்பாகப் பொருந்தக் கூடிய பல்வேறு அம்சங்களைக் கொண்டமைந்துள்ளது எனலாம். இதன் சமஷ்டித் தன்மை பல்லினத் தன்மை கொண்டது எனலாம். எனவேதான் உலகில் உள்ள சமஷ்டி அமைப்புக்களில் சுவிஸ் சமஷ்டி அமைப்பு சிறப்பானதாகக் காணப்படுகின்றது, எனலாம்.

திரு. பாலையா பத்மநாதன் (B.A)
அரசறிவியல் சிறப்பு
விரிவுரையாளர்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப்
படிப்புகள் கல்லூரி.

கல்வி என்பது கலாசாரத்தை பேணியளித்தல்.
கல்வி என்பது வாழ்க்கை நடத்துவதாகும்.
கல்வி என்பது விருத்தியடைதலாகும்.
கல்வி என்பது அனுபவங்களை புதுப்பித்தலாகும்.
கல்வி என்பது சமூக நடவடிக்கையாகும்.
கல்வி என்பது ஒரு கருவி மட்டுமல்ல அது தொடர்ச்சியாக ஓர் உயிர் வாழும் வாழ்வாகும்.
கல்விக்கு கல்வியைத் தவிர்ந்த வெளிநோக்கமொன்றில்லை. - ஜோன்டூவீகி

பாடசாலைக் கல்வியில் மாணவர் இடைவிலகல்

- ஒரு நோக்கு -

எமது நாட்டின் இன்றைய பாடசாலைக் கல்வி முறையில் கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி, புலமைப்பரிசில் திட்டம், அனைவருக்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு என பல திட்டங்கள் மூலம் கல்வியின் உயரிய இலக்கை அடைவதை மையமாகக் கொண்டு பெருமளவு வளம் முதலீடு செய்யப்படுகின்றது. இருந்தபோதும் கல்வியின் இலக்கு அடையப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. பாடசாலைக் கல்விக்காக வருடந்தோறும் அரசு பெருந்தொகைப் பணத்தையும், பௌதீக மற்றும் மனித வளங்களை முதலீடு செய்கின்ற போதும் மாணவர்கள் அதிலிருந்து உச்சப்பயனைப் பெறாது பாடசாலைக் கல்வியில் இருந்து இடையில் விலகுவதும், தேசிய பரீட்சைகளில் எதிர்பார்த்த அடைவு மட்டங்களை அடையாமையும் எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு பாரிய பிரச்சினையாகவேயுள்ளது.

"கல்வி" என்பது ஒவ்வொரு மனிதனிடத்திலும் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரல் என்பதுடன், அதன் நோக்கம் சமூகப் பொருத்தப்பாடுள்ள ஆளுமைமிக்க நற்பிரஜைகளை உருவாக்குவதேயாகும். பாடசாலைக் கல்வியானது ஒன்று தொடக்கம் பதின்மூன்றாம் தரம் வரையான மாணவர்களுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட முறைசார் கல்வி நடவடிக்கையாகும். இன்று எமது நாட்டிலே 10107 பாடசாலைகள் உள்ளன. இரண்டு லட்சம் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உள்ளனர். ஆசிரியர்களுள் 85% ஆசிரியர்கள் பயிற்றப்பட்டவர்களாகவும் உள்ளனர். உலக வங்கியின் மதிப்பீட்டின் படி ஆண்டு தோறும் ஒரு மாணவனுக்கு ரூபா 6500 வரை அரசாங்கம் செலவு செய்வதுடன், ஒருவருடத்திற்கு 600 மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்விக்காக இலங்கை அரசு ஒதுக்குகின்றது. இருந்தபோதும் எதிர்பார்த்த இலக்கு அடையப்படவில்லை என்ற கருத்தே நிலவுகின்றது. இலங்கை மக்களின் எழுத்தறிவு 92% ஆகக் காணப்பட்டாலும் கல்வியறிவு வளர்ச்சி வீதம் குறைவாகவேயுள்ளது. அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் எமது நாட்டை மையமாகக் கொண்ட நவீன கல்விக் கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்துவதுடன், கல்வியில் ஏற்படும் வீண் விரயத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். அப்போதே வளர்ந்து வரும் அறிவியல் யுகத்திற்கு ஏற்றதோர் சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

கல்வியைத் தொடர்கின்ற ஒரு மாணவன் அவன் அடைய வேண்டிய அடிப்படைக் கல்விமட்டத்தை அடைய முன்னதாக கல்வியை இடை நடுவே விட்டுச் செல்லுதல் கல்வியில் இடைவிலகல் எனப்படும். ஒரு மாணவனின் நாளாந்த பாடசாலை வரவில் ஏற்படும் வீழ்ச்சியானது பின்னர் அம்மாணவனை நிரந்தர இடைவிலகலுக்கு இட்டுச் செல்கின்றது. பாடசாலைக் கல்வியைத் தொடர்கின்ற அனைவரும் க. பொ. த (சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்த அடிப்படைத் தேர்ச்சி மட்டத்தினையாவது அடையவேண்டும் என்பதே அரசின் பாரிய இலக்காகும். மாறாக கல்வியில் ஏற்படும் இடைவிலகலும், பரீட்சைகளில் ஏற்படுகின்ற அடைவு வீழ்ச்சிகளும் அரசுக்கும் நாட்டுக்கும் பாரிய செலவீனத்தை ஏற்படுத்துவதோடு சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கும் இட்டுச் செல்கின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரை பாடசாலை செல்லும் வயதிலுள்ள பிள்ளைகளில் கணிசமான அளவினர் ஒருபோதும் பாடசாலைக்கு செல்வதில்லை. இலங்கையில் பதினான்கு (14) வயதிக்குட்பட்ட சிறுவர்களில் 14% - 15% வீதத்தினர் கல்வியைப் பெறாதவர்க-

ளாகவேயுள்ளனர். வடக்கு கிழக்கில் மாத்திரம் 20,000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்வியை இழந்துள்ளனர் என்பது சமகால ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றது. எமது நாட்டின் கல்வியில் மாணவர் இடைவிலகலுக்குப் பல காரணிகள் அடிப்படையாக அமைகின்றன.

கல்வியில் இடை விலகலுக்கான காரணிகள்

1. குடும்பப் பிரச்சினைகள்:

மகிழ்ச்சிகரமான குடும்பச் சூழல் பிள்ளைகளின் கல்விக்கு அடித்தளமாகின்றது. இதனைக் கருத்திற் கொண்டால் குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வு இல்லாது தமக்கிடையே முரண்படுவதால் பிள்ளைகள் உளத்தாக்கம் அடைகின்றனர். பெற்றோரின் அன்பும், கண்காணிப்பும் தேவையான பருவத்தில் பெற்றோர் பிரிந்த வாழுதல், மதுபாவனை, பலதார திருமணங்கள், முறைகேடாண நடத்தைகள் போன்றன பிள்ளைகளின் கவனத்தினைத் திசை திருப்புகின்றன. இதனால் கல்வி பாதிப்படைவதுடன் பாடசாலையில் வரவு ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்துகின்றது. பெற்றோரின் அக்கறையின்மையும், கல்வி அறிவின்மையும் மாணவரின் கல்வியில் பெற்றோர் சார்பாக முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

2. பெற்றோர் அக்கறையின்மை:

பெற்றார் மத்தியில் கல்வி பற்றிய விழிப்புணர்வு இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் எமது நாட்டின் பெரும்பாலான பின்தங்கிய பகுதிகளில் வாழ்கின்ற பெற்றோர்களிடம் கல்வி பற்றிய விழிப்புணர்வு இல்லாமை பாடசாலைக் கல்வியைப் பொறுத்த மட்டில் பெரும் சவாலாகும். தம் குழந்தைகளை நேரிய பாதையில் வழிநடாத்தி சமூகத்தில் நற்பிரஜைகளாகத் திகழ வழி செய்ய வேண்டுமானால் பாடசாலைக் கல்வி நடவடிக்கை மட்டும் போதாது. பாடசாலைக்கும், ஆசிரியருக்கும் ஒவ்வொரு மாணவரது பெற்றோரது ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும் இன்றியமையாதது. எனவே மாணவர், ஆசிரியர், பெற்றோர், பாடசாலை ஆகியவற்றின் கூட்டுச் செயற்பாடே பிள்ளையின் உயரடைவுக்குக் காரணமாகின்றது. பெற்றோரின் அக்கறையின்மையும், கல்வியறிவின்மையும் மாணவர் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே வீடுகளில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விப் பெறுமானங்கள் மீது அக்கறை கொள்ளாவிடத்து அவர்கள் கல்வியில் இருந்து விலகிச் செல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது.

3. வேலைப் பளு:

சில பிள்ளைகள் தமது வயதிற்கும், வகுப்புக்கும் அதிகமான குடும்பச் சுமைகளையும், பொறுப்புக்களையும் சுமக்க வேண்டி நேரிடுகின்றது. பெற்றோர்கள் தொழில் நிமித்தமும், இளைய சகோதரர்களை பராமரிப்பதற்காகவும் பாடசாலை நேரங்களில் பிள்ளைகளைப் பயன்படுத்துகின்றனர். குடும்ப வறுமை நிலைமை, பணம் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம், பெற்றோர் இருவரும் தொழிலுக்கு செல்லுதல் போன்ற காரணங்களினால் குடும்ப உறவுகளை பராமரிக்க வேண்டிய பொறுப்பை மாணவர்கள் மீது சுமத்த, அது பாடசாலை வரவைப் பாதிக்கின்றது.

4. பிள்ளைகளின் தேவை நிறைவு செய்யப்படாமை:

போசாக்கான உணவு, மருத்துவ வசதிகள், சீருடை, பாடசாலை உபகரணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், விழாக்களுக்கான கட்டணங்கள், கணிப்பீட்டு பொருட்களின் தேவை என்பன உரிய காலத்தில் மாணவர்களுக்கு கிடைப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தாவிடின் ஆசிரியர்களின் தண்டனைக்குப் பயந்தும் பாடசாலைக்கு வருவதில் மாணவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

5. களியாட்ட நிகழ்வுகள்:

வீடுகளில் நிகழும் திருமணவிழாக்கள், கிராமங்களில் நிகழும் ஆலயத் திருவிழாக்கள் போன்ற பல களியாட்ட நிகழ்வுகள் காரணமாகவும் பாடசாலைக்கு மாணவர்கள் வராமல் உள்ளமையும், இதில் பெற்றோரின் கவனமின்மையும் இடை விலகலுக்கு இட்டுச் செல்கின்றது.

6. மூட நம்பிக்கைகள்:

இன்றைய நவீன உலகம் பல்வேறு வழிகளில் முன்னேறியிருந்த போதும் சமூகத்தில் இன்னும் பல் மூட நம்பிக்கைகள் இருந்து கொண்டேயுள்ளன. பெண் பிள்ளைகளிலே இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. சில பெண்பிள்ளைகள் பூப்படையும் சந்தர்ப்பத்தில்ட பாடசாலைக்குச் செல்லாது தடுக்கப்படுகின்றனர். சில குடும்பங்களில் பெண் பிள்ளைகள் அதிகம் கல்வி கற்கத் தேவையில்லை என்ற போக்கும் காணப்படுகின்றது.

7. பொருளாதார வசதியீன்மையும், வறுமையும்:

பொருளாதார ரீதியில் பலர் கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளனர். குடும்பத்தின் பொருளாதார நிலையினை சீர் செய்யும் பொருட்டு சில பெற்றோர் தம்பிள்ளைகளை வேலைக்கனுப்புகின்றனர். கூலிவேலை, தச்சுவேலை, மேசன்வேலை, மீன்பிடி, பயிர் அறுவடை, சிறுதெருவோர வியாபாரம் என்பவற்றுடன், பெண்பிள்ளைகள் சமையல் வேலை, வீட்டுப் பிராணிகளைப் பராமரித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல், பூந்தோட்டங்களைப் பராமரித்தல் போன்ற பல வேலைகளை வருமானத்தைப் பெறுவதற்காகச் செய்கின்றனர். தற்போது இலங்கையில் சிறுவர் ஊழியம் என்ற அடிப்படையில் வீட்டுப் பணியாள சிறுவர்களின் தொகையளவு சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகம் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பாடசாலைக் கல்வியைப் பலர் இழக்க நேரிடுகின்றது.

8. பாருவகாலத் தொழில் உற்பத்தி:

சமூகத்தில் குறிப்பிட்ட பருவகாலங்களில் பாடசாலை வரவு வீழ்ச்சியடைகின்றது. பயிர்நடல், விளைச்சல் காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதுடன், தோட்டவேலைகள், உற்பத்திகளை விற்பளை செய்தல், பொதி செய்தல் முதலான வேலைகளில் சிறுவர்களை ஈடுபடுத்துகின்றனர். அத்துடன் மேலும் சில பெற்றோர் தமது குலத்தொழில்களில் ஈடுபடுத்துதல் என நகைத்தொழில், பூசைத் தொழில், இசைக் கருவிகளைப் பயன்படுத்தல், விவசாயம் போன்ற தொழில்களில் தம்பிள்ளைகளை இணைக்க முற்படுவதனால் பாடசாலையில் இருந்து விலக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.

9. முரண்படும் பாடசாலைச் செயற்பாடுகள்:

பாடசாலையில் இடம்பெறும் முரண்பாடான செயற்பாடுகளும் மாணவர்களைப் பாதிக்கின்றன. ஆசிரியர், மாணவர் இடைத்தொடர்பானது சீரானதாக இருக்க வேண்டும். பாரபட்சம் காட்டல், அளவுக்கதிகமாக தண்டனைகள் வழங்குவதால் தாழ்வு மனப்பான்மை, ஒதுங்கிப் போகும் தன்மை போன்றன ஏற்பட்டு நாளடைவில் பாடசாலையில் இருந்து இடைவிலகி விடும் தன்மையை ஏற்படுத்துகின்றது. நன்கு பயிற்றப்படாத ஆசிரியர்கள் கற்பிக்கும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்குக் கல்வியில் வெறுப்பு ஏற்படும். ஆசிரியரின் கற்பித்தல் முறை மாணவரைக் கவராத போது அப்பாடம் உள்ள நாட்களில் பாடசாலைக்கு ஆர்வத்துடன் வரமாட்டார்கள். இவ்வாறான செயற்பாடுகளால் கல்வியைப் புறக்கணித்து பாடசாலையில் இருந்து விலகிவிட முனைகின்றனர்.

10. அடிக்கடி நோய்வாய்ப்படுதல்:

அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை கைக்கொள்ளாமல் விடுவதாலும், அடிப்படை சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாமையினாலும், போசணையான உணவினை

உண்ணாதிருப்பதனாலும், காலநிலை மாற்றங்களினாலும், சுத்தமான குடிநீர் வசதி இன்மையினாலும் பிள்ளைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றார்கள். இவ்வாறான காலங்களிலும் பாடசாலையின் மாணவர்களின் வரவு வீழ்ச்சியடைகின்றது.

11. காலநிலை மாற்றங்கள்:

காலநிலையில் ஏற்படும் மாற்றங்களும் மாணவர் வரவில் தளம்பல் நிலையினை உருவாக்குகின்றது. அதிகபனி, மழை, புயல், வரட்சிக் காலங்களில் மாணவர் வரவு குறைவாக இருப்பதுடன் கல்விச் செயற்பாடுகளும் தடைப்படுகின்றன.

12. இடப்பெயர்வு:

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தங்களால் பல குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் வாழ்கின்றனர். இவர்களில் நிரந்தர தொழில் இல்லாத குடும்பத்தினர் காலத்திற்குக் காலம் வெவ்வேறு தொழில்களைச் செய்வதற்காக தமது இருப்பிடங்களை மாற்றுகின்றனர். இதனால் ஒரு பாடசாலையில் கற்க முடியாது அடிக்கடி வெவ்வேறு பாடசாலைக்கு மாறவேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகின்றது. இதனால் மாணவரிடம் கற்றல் ஆர்வம் குறைவடைந்து பாடசாலைக் கல்வியை பெற ஆர்வமில்லாதவர்களாகக் காணப்படுகின்றமை இடைவிலகலுக்கு இட்டுச் செல்கின்றது.

13. போக்குவரத்து:

சில மாணவர்கள் பாடசாலைக்குத் தொலைவில் இருந்தே தினமும் வரகின்றார்கள். சிலர் நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும் வருவதுண்டு, தொலைவிலிருந்து வரும் மாணவர்களுக்கு சிற்சில தடங்கல்கள் ஏற்படும் போது பாடசாலை வரவும் பாதிப்படைகின்றது.

14. பெற்றோர் வெளிநாட்டில் தொழில் புரிதல்:

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண் தொழிலாளர்களில் 60%த்தினர் தாய்மாராதலினால் பிள்ளைகளின் பராமரிப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது. வெளிநாடு செல்லும் பெற்றோர்கள் தங்கள் சிறு பிள்ளைகளை மூத்த பிள்ளையிடம் ஒப்படைத்துச் செல்வதால் இவர்கள் இளையவர்களைப் பராமரிப்பவர்களாக மாறுவதால் கல்வியில் இருந்து விலகுகின்றனர். மற்றும் சித்தி, மாமா, அம்மம்மா போன்ற குடும்ப உறவுகளிடம் தங்கள் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு வெளிநாடு செல்லும் போது இவர்களது சீரற்ற கண்காணிப்பினலும் அக்குழந்தைகள் பாடசாலைக்கு வருவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

15. ஆயுதப் போராட்டங்கள்:

கல்வியைத் தொடரவேண்டிய பெரும் எண்ணிக்கையிலான (பதினைந்து வயதிற்குட்பட்ட) சிறார்கள் ஆயுதப் போரட்டங்களில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கல்வி கற்க ஆர்வம் இருந்த போதும் ஆயுதக் கலாசாரம், வன்முறைகள், மனதில் ஏற்படும் அழுத்தங்கள், குடும்ப உறவுகளினால் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக பாடசாலைக்கு வருவதில் நாட்டம் காட்டுவதை விடுத்து வேறு திசைகளில் செல்கின்றனர். ஆயுதப் போராட்டங்கள், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக வடகிழக்கில் மாத்திரம் சுமார் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வியில் இருந்து இடைவிலகியுள்ளதாக யுனிசெப் ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன.

16. இயற்கை அனர்த்தங்கள்:

வெள்ளம், வரட்சி, ஆழிப்பேரலை என்பவற்றினது தாக்கங்களினால் பல்வேறு உடல் உளத் தாக்கங்களை சிறார்கள் எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான இயற்கை அனர்த்தங்களின்

விளைவாக மக்கள் இடப்பெயர்வுகளுக்கு ஆளாவதுடன், சிலர் பெற்றோரையும் இழந்துள்ளனர். பரிச்சயப்பட்ட வாழ்க்கைக் கட்டமைப்புக்கள் மாற்றமுற்றதன் விளைவாக சில பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

17. இளமையில் திருமணம்:

சிறுவர் உரிமை சாசனப்படி பதினெட்டு வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாகவே கொள்ளப்படுகின்றனர். எனினும் எமது நாட்டைப் பொறுத்தவரை பின்தங்கிய பிரதேசங்களில் இளமையில் திருமணம் என்பது சாதாரண விடயமாகவேயுள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சுமை எனக்கருதி கல்வி கற்க வேண்டிய காலத்தில் பிள்ளைகளது சம்மதத்தையும் பொருட்படுத்தாது திருமணங்களைச் செய்து வைப்பது மட்டுமன்றி இளம் வயதினர் கல்வியை இடைநடுவில் விட்டு திருமணம் என்னும் பந்தத்தில் இணைகின்றனர். கிராமங்களில் காணப்படுகின்ற மரபுகள், வழக்காறுகள் போன்ற விடயங்கள் "இளமையில் திருமணம்" என்பதில் செல்வாக்கு செலுத்துவதுடன், சிறுவர்களின் கல்வியுரிமையில் மீறல்களையும் ஏற்படுத்துகின்றது.

18. பாலியல் பிரச்சினைகளுக்கு உள்ளாதல்:

சிறுவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதன் விளைவாக பாதிக்கப்பட்ட சிறார்கள் கல்வியை இடைநடுவே விட்டுவிடுகின்றனர். மனத்தாக்கம், மன உளைச்சல், தாழ்வுச்சிக்கல், சமூகப்பார்வை போன்றன இவர்களின் கல்வி நடவடிக்கைக்கு எதிராக இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் கருதுகின்றமையாகும். இலங்கையில் விபச்சாரத்தில் ஈடுபடும் சிறுமியர்களின் எண்ணிக்கை சுமார் முப்பதாயிரத்திலும் உயரளவாகும் என யுனிசெப் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கல்வியில் இடை விலகலை நிவர்த்திப்பதற்கான வழிவகைகள்

1. பொற்றோருடன் கலந்துரையாடல்:

ஆசிரியர் மாணவர், ஆசிரியர் பெற்றோர் இடையே உறவினைப் பலப்படுத்தும் வகையிலும், தம் பிள்ளைகளின் கல்விசார் நிலைப்பாட்டினை உடனுக்குடன தெரிந்து கொள்ளும் வகையிலும் பெற்றோர் சந்திப்புக்களை ஏற்படுத்துதல் அவசியம் ஆகும். மாணவரின் அடைவுமட்டம், பாடசாலை வரவு ஒழுங்கு பற்றி கலந்துரையாடல்களை நடாத்தி கல்வி ஈடுபாட்டினை மேம்படுத்த முடியும்.

2. பெற்றார் விழிப்புணர்வு கருத்தரங்குகள்:

சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் கருவி கல்வியாகும். தனிமனிதனையும், சமூகத்தையும் கல்வியினாலே சிறந்தவனாகவும், பயன்பாடுடையவனாகவும் மாற்ற முடியும் என்பதை நாட்டில் படித்தவர் முதல் பாமரர் வரை உணரப் பண்ணுதல் வேண்டும். கல்வியின் தேவை, பயன், பெறுமதி என்பவற்றையும், கல்வியில்லாவிடத்து ஏற்படும் தீய விளைவுகள் பற்றியும் மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் ஊடாக அனைத்து சிறார்களையும் கல்வியின் பக்கம் திசைதிருப்ப முடியும்.

3. பொருளாதார ரீதியான தீர்வு நடவடிக்கைகள்:

பாடசாலையின் மாணவர் வரவிலும், கல்வி அடைவிலும் பெற்றோரின் சமூகப் பொருளாதார நிலை பிரதான பங்கினை வகிக்கின்றது. இந்நிலையில் வறுமையினை அனுபவிக்கும் மாணவர்கள் இனங்காணப்பட்டு பாடசாலை ஆசிரியசங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் ஊடாக உதவிகளைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்வது ஏற்புடையதாகும்.

4. உளவியல் ரீதியான தீர்வு நடவடிக்கைகள்:

உளரீதியான தாக்கங்களுக்கு உள்ளான மாணவர்களுக்கு உதவும் வகையில் ஆசிரியர் ஒருவர் துணைப்பெற்றோராகவும், ஆலோசகராகவும் நடிபங்கினை ஏற்கவேண்டியுள்ளது. ஒதுங்கியிருக்கும் மாணவர்கள், நெறிபிறழ்வான நடத்தைகளில் ஈடுபடும் மாணவர்களை தனித்தனியாக அழைத்து ஆலோசனையும், வழிகாட்டலும் வழங்குவதன் ஊடாக கல்வியில் இருந்து ஒதுங்குபவர்களை நெறிப்படுத்தி சீரிய பாதையில் வழிநடத்த முடியும்.

5. போதனை முறையில் மாற்றத்தினை ஏற்படுத்துதல்:

கற்றலில் மாணவரின் நிலைப்பாட்டினை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் போதனை முறையினை மாற்றியமைப்பதும் அவசியமாகும். மெல்லக் கற்போர், மீத்திறன் உடையோர், சாதாரணமுடைய மாணவர்கள் என வேறுபடுத்தி அவர்களுக்கு ஏற்றவகையில் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். பாடத்தில் சலிப்பு ஏற்படா வண்ணம் கவர்ச்சிகரமாக கற்பித்தல் முறைகளையும், உத்திகளையும் மாற்றியமைக்கலாம். கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்களைப் பங்கு கொள்ளல் கற்கையில் ஈடுபடுத்துவதன் மூலம் மாணவர்களில் கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்த முடியும்.

6. போட்டிகள், நிகழ்வுகளை நடாத்துதல்:

மாணவர்கள் ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் பங்கேற்கும் வகையில் பல நிகழ்வுகளும், போட்டிகளும் நடத்தப்படலாம். மாணவர்கள் தத்தம் திறனுக்கு ஏற்ற வகையில் ஈடுபடும் வண்ணம் ஊக்குவிக்கலாம். கல்விசார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வீடியோப் படக்கட்சி, நாாடகங்கள், பேச்சுக்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலமும் மாணவர்களை பாடசாலையின் பக்கம் ஈர்க்கமுடியும்.

7. சுகாதார, போசாக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்:

பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் பல்வைத்தியர்கள் போன்றோரின் உதவியுடன் வாந்திபேதி, டெங்கு, வயிற்றுளைவு போன்ற அவ்வப்போது ஏற்படும் தொற்றுநோய்களுக்காக பாடசாலைகளில் சுகாதார சேவைகள் அளிக்கப்படல் வேண்டும். இவ்வாறான சுகாதார, போசாக்குத் திட்டங்களைக் காலத்திற்குக் காலம் ஒழுங்காக மேற்கொள்ளும் போது பாடசாலையில் மாணவரின் வரவை அதிகரிக்க முடியும்.

8. தலைமைத்துவ பொறுப்புக்களை ஒப்படைத்தல்:

பாடசாலைச் செயற்பாடுகளில் சகல மாணவர்களும் பங்கேற்கும் வகையில் தலைமைத்துவமும், பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் மாணவர்களில் ஒரு திருப்தி மனப்பான்மையும், கடமையுணர்வும் ஏற்படுவதனால் பாடசாலைக்கு வருவதற்கான ஆர்வம் தூண்டப்படும்.

9. தினவரவுக் கொப்பினைப் பயன்படுத்துதல்:

குறிப்பிட்ட கொப்பியில் மாணவர் பாடசாலைக்கு வராத சரியான காரணத்தை பொற்றோர் உறுதிப்படுத்தி அதனை வகுப்பாசிரியர் கவனத்தில் எடுப்பதன் ஊடாக பாடசாலை வரவினை அதிகரிக்க முடியும்.

10. பாராட்டுக்கள், பரிசில்கள் வழங்குதல்:

பாடசாலையில் வருடந் தோறும் இடம்பெறுகின்ற பரீட்சைகள், தமிழ்த்தினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் எனப் பல்வேறு நிகழ்வுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கும், உயர் அடைவுகளைப் பெற்றவர்கள், பாடசாலை வரவை

ஒழுங்காகக் கடைப்பிடித்தவர்கள் என்போருக்கும் பாராட்டுக்கள், பரிசளிப்புகள், கௌரவிப்புகள் போன்றவற்றை பாடசாலைகள் ஏற்பாடு செய்வதன் ஊடாக பாடசாலைக் கல்வி மீது மாணவர் நாட்டத்தை அதிகரிக்கலாம்.

11. பாடசாலைக்கும், பெற்றோருக்குமான உறவை வலுப்படுத்துதல்:

பலமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப தொடர்பாடல் இன்றியமையாதது. தங்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை சமூகத்திற்கும், தங்களுக்கும் இடையில் காணப்படும் சுமூகமான அன்னியோன்னியத் தொடர்பே அப்பாடசாலையின் முழுவளர்ச்சிக்கும் உறுதுணையாகின்றது. பெற்றோருக்கும், பாடசாலைக்கும் இடையில் பலமான உறவு காணப்படும் பட்சத்தில் பிள்ளைகளின் மீது கண்காணிப்பு அதிகமாகின்றது. அப்போது பிள்ளைகள் பாடசாலையை விட்டு வேறு திசைகளில் செல்வது தடுக்கப்படுகிறது.

12. பிள்ளை நேயப்பாடசாலைகளை நிறுவுதல்:

தற்போது சில கல்வி வலயங்களில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரனையுடன் 2006ல் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடசாலைகள் சிறுவர் நேயப்பாடசாலைகளாக செயற்பட்டு வருகின்றன. அதாவது மாணவர்களை மையமாகக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுடன் நட்புறவுடன் செயற்படுவதலைக் குறிக்கும். இங்கு ஆசிரியர் வேறு மாணவர் வேறு என்று இல்லாமல் மாணவர்களுக்கு முன்னுரிமையளித்து அவர்கள் விரும்பும் வகையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதாகும். மகிழ்ச்சிகரமான கற்பித்தலையும், மகிழ்ச்சிகரமான பாடசாலை சூழலையும் முழுப்பாடசாலைகளிலும் அமுல்படுத்தும் பட்சத்தில் பாடசாலை மீது மாணவர்களது நாட்டத்தை அதிகரிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட காரணங்களுடன் சிறுவர் துஷ்பிரயோகத்தை தேற்கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், 1 - 14 வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டிற்குச் செல்வதைத் தடுத்தல் என்பனவும் மாணவர் இடைவிலகலை ஓரளவு குறைக்கக்கூடிய அம்சமாகும். குழந்தைகளின் பள்ளிப்பருவமான 5 - 14 வரைக்குமான காலப்பகுதி "மற்றவர்களைப் பார்த்து தானும் அதுவாக நடக்கத்துடிக்கும் பருவம்" (Imitation) என்பதை ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் உணர்ந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும் போது மாணவர்களும் எம்மைப் பின்பற்றி கல்வியில் சிறந்து விளங்குவதுடன், சமூகத்தில் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் வாழ்வர்.

மாணவரது கல்வி அடைவினைப் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. பெற்றோர், ஆசிரியர் ஊக்குவிப்பு, கற்பித்தல் முறைகள், உத்திகள், கற்றல் அனுபவங்கள், குடும்பச்சூழல், பொருளாதாரப் பின்னணி, சகபாடிகளின் செல்வாக்கு, பாடசாலை களநிலை முதலான காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும் "மாணவர் வரவு" என்பது முக்கிய காரணியாக அமைந்தள்ளது. கிராமப்புற பாடசாலைகளில் குறிப்பாக மாணவர் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் அம்சங்களையும், வரவினை மேம்படுத்தக்கூடிய சில வழிகளையும் மேற்குறிப்பிடப்பட்டவற்றில் இருந்து அறிந்து கொள்ள முடியும். எனவே பாடசாலைக் கல்வியில் மாணவர் இடைவிலகல் என்பதனை இல்லாதொழித்து சமூகத்திற்கும், நாட்டிற்கும் உதவக்கூடிய நற்பிரஜைகளாக்குவதற்கு பொற்றோரினதும், பாடசாலைசார் ஆசிரிய சமூகத்தினரினதும் ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும் மிகவும் அவசியமானதொன்றாகும்.

உசாத்துணை நூல்கள்:

1. "கல்வி - ஒரு பன்முக நோக்கு" - சோ. சந்திரசேகரன் 2004 ஜனவரி
2. "கல்வியில் புதிய சீர்திருத்தங்கள்" - கலாநிதி. சபா. ஜெயராசா
3. "அகவிழி சஞ்சிகை":- 2006, 2007

திரு. இளையதம்பி சர்வேஸ்வரன் B.A
விரிவுரையாளர் (கல்வி)
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப் படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.

காலனித்துவத்திற்குப் பின்னரான வாதம்

- ஒரு சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டம்

அறிமுகம்:

காலம் (Time), வெளி (Space) ஆகிய எண்ணக்கருக்கள் சமூக விஞ்ஞானத் துறைகள் பலவற்றையும் ஊடறுத்துச் செல்வனவாய் இருக்கின்றன. சமூகவியலாளரும், மானுடவியலாளரும் இவற்றை ஆழமான பகுப்பாய்வுகளின் கீழ் பரிசீலித்துள்ளனர். கலாம் பற்றிய உணர்வும் அதனை சமூகக்கட்டமைப்பு மாற்றங்களுடனும் இணைத்து நோக்கும் பாங்கும் குறிப்பிடத்தக்க புலப்பதிவுகளையும், கோட்பாட்டுச் சிந்தனைகளையும் வெளிக்கொண்டு வந்திருக்கின்றன. அதன் வழி 'காலனித்துவம்' (Colonialism) 'காலனித்துவத்திற்கு பிந்தியவாதம்' (Post - Colonialism) என்பன சமூகவியற் தளத்தில் புதியதும், வீச்சு மிக்கதுமான சொல்லாடல்களையும், மறுவாசிப்புக்களையும் ஏற்படுத்தி, காத்திரமான விவாதங்களுக்கும் வழிவகுத்திருக்கின்றன.

"பொருளாதார, ஆட்சியியல் துறைகளில் பலவீனமான தேசங்களை மிக்க வலுவார்ந்த ஆதிக்க வல்லரசுகள் மேலாதிக்கத்துக்கு உட்படுத்தி, அத்தேசங்களின் பொருளாதார, பண்பாட்டுச் செழுமைகளை சுரண்டலுக்கு ஆளாக்கி, தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொண்ட ஒரு சர்வதேசம் அளாவிய செயன்முறையே காலனித்துவம்" என்பதாக நாம் ஒரு ஆரம்ப வரைவிலக்கணத்தை மேற்கொள்ளலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டில் பரவலுற்ற அறிவொளிக்காலச் சிந்தனைகளும், நாடுகாண் பயணங்களும், ஏகாதிபத்தியக் கொள்கையின் வளர்ச்சியுமாக இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக காலனித்துவ வாதம் முன்னெடுக்கப்பட்ட பின்னணியை அவதானிக்கலாம்.

மேலாதிக்கம் பற்றிய மீள்விமர்சன முயற்சிகள் யாவற்றிலும் காலனித்துவவாதம் பற்றிய கருத்தாக்கங்களும், கருத்துச் சமர்களும் தவறாமல் இடம்பெறுகின்றன. இன்று பிரமிப்புக்குரியதாக அல்லது மையநீரோட்டச் சிந்தனையாகப் பார்க்கப்படும் மேற்குலகின் அபிவிருத்தி என்பது சுரண்டல், பாரபட்சம், மேலாதிக்கம், அதிகார அரசியல், உறவுகள் மூலமாகவே நிறுவப்பட்டதாகக் கூறுவோர் காலனித்துவம் பற்றியும் மிகத் தீவிரமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

காலனித்துவத்துக்குப் பிந்தியவாதத்தின் கருத்தியல் அடித்தளம்:

சென்ற நூற்றாண்டுகளில் சமூகவியல் உலகில் மிகப் பெரும் கோட்பாட்டுப் புரட்சிகளும், கருத்தியல் முரண்களும் மாற்றுக் கோட்பாட்டு முயற்சிகளும் ஆக்கபூர்வமான மறுவாசிப்புகளும் ஏற்படுத்தப்பட்டு, சமூகவியலின் பொருள் நிலைப் பட்டபரப்பு, விஸ்தரிக்கப்பட்டமையை அவதானிக்கின்றோம். சமூகவியற் சிந்தனைகளின் தோற்றுவாய்க் காலகட்டமான 'தொல்சீர்க்காலப்பகுதியில்' (Classical Period) மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்த நேர்க்கட்சிவாதம் (Positivism) செயற்பாட்டு வாதம் (Functionalism), பரிணாம இயல் வாதம் (Evolutionism), கட்டமைப்பு வாதம் (Strcturalism), மார்க்சீயம் (Marx-ism) ஆகிய அதிகமான தாக்குதலுக்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகின. இதே தளத்தில்தான் காலனித்துவம் பற்றி கட்டமைக்கப்பட்ட கோட்பாட்டுச் சிந்தனைகளும் மறுவாசிப்புக்கு உட்பட்டன.

இந்த இடத்தில் 'பின் காலனித்துவம்' என்னும் பிரயோகம் பற்றியும் கலந்துரையாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. 'பின் நவீனத்துவம்' என்பது எவ்வாறு பொருள்நிலையில் தவறாகக் கருதப்பட்டு 'நவீனப் பின்னயம்' என்பது அறிமுகப்படுத்தப்பட்டதோ, அவ்வாறே 'பின் காலனித்துவம்' என்பது கருத்து நிலையில் பிழையான சார்புகளுக்கு இட்டுச் செல்வதாக அமைகிறது. பின் காலனித்துவம் என்று கூறமுடியாது, அவ்வாறெனில் 'முன் காலனித்துவம்' என ஒன்று இருந்ததாக கருத்துப் பெறப்படும். எனவே 'Post - Colonialism' என்பதன் சரியான, முழுமையான, திரிபற்ற அர்த்தப்பாட்டினை, காலனித்துவத்திற்கு பிந்திய வாதம் என்னும் தமிழ் மொழி பெயர்ப்பிலேயே பெற முடியும் என்று குறிப்பிடத்தக்க சமூக ஆய்வாளரான செல்வி. திருச்சந்திரனும் குறிப்பிடுவார். ('நிவேதினி' 2002 - பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்)

காலனித்துவத்திற்குப் பிந்திய கருத்தாக்கம் அல்லது சிந்தனைத்தளம் எப்போது ஆரம்பமானது என்பது ஒரு முக்கியமான வினா. இதற்கான ஆழமான பதிலைப் பேராசிரியர். சச்சரிதானந்தம். சுகிர்தராஜா பின்வருமாறு வழங்குவார்.

"நாம் நினைப்பது போல், ஆங்கிலேயக் கொடி இறக்கப்பட்டு, சிறிலங்காக் கொடி ஏற்றப்பட்ட நாளிலோ அல்லது மிக அண்மையில் விடுதலை பெற்ற நாடுகள் தமக்கென்று சொந்த விமான சேவையினை ஆரம்பித்த நாளிலோ காலனித்துவத்திற்குப் பின்னரான காலகட்டம் தொடங்கவில்லை. சமூகவியல் ஆய்வாளர்கள் - விசேடமான இனத்துவக் கற்கைகள் (Ethnic Studies), தேசிய வாதம் (Nationalism) தொடர்பில் புலமைமிக்க சமூகவியலாளர்களின் அபிப்பிராயப்படி - உண்மையில், இக்காலகட்டம் ஆனது, காலனித்துவத்திற்கு உட்பட்ட தேசங்களில், எப்போது, காலனியத்துக்கு எதிரான சுதேசிகளின் 'கலகக்குரல்' ஒலிக்கத் தொடங்கியதோ, அப்போதே ஆரம்பம் ஆகிவிட்டது என்கின்றனர்.

வர்க்க உணர்வுகளைக் கடந்து, நிறுவன மயப்பட்ட நிலையில், சுதேசிய நிலையிலும், உள்ளூர்த்தன்மையுடனும், வெவ்வேறு வடிவங்கள் கருத்தியல்கள், வழிமுறைகளுடன் காலனித்துவத்திற்கு எதிரான சமூக, அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகள் உலகெங்கணும் முன்னெடுக்கப்பட்டன. இந்தியாவின் மகாத்மாகாந்தி தலைமையிலான "அகிம்சை வழிச் சுதந்திரப் போராட்டம் இந்த இடத்தில் சிறப்பாக எடுத்துக்காட்டத்தக்கது.

சென்ற நூற்றாண்டுகளில் ஐரோப்பியப் புலத்தில் இருந்து நம்மை நோக்கி வந்த காலனித்துவச் செயன்முறை வர்த்தகப், பொருளாதாரச் சுரண்டல், சமய ஆதிக்கம் என்கிற வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டது. ஆயின், 'நவகாலனித்துவமோ' (Neo - Colonialism) தந்திரோபாயமாக, கருத்துகளாயும், பரஸ்பர உதவிகளாயும், பல்தேசியக் கூட்டுத்தாபனங்களின் (MNCS) பரவலாகவும் எமை நோக்கி வருவதனைச் சமூகவியலாளர்கள் பகுப்பாய்வு செய்கின்றனர்.

அடிப்படையில் காலனித்துவத்திற்குப் பின்னரான வாதம் ஓர் அறிவுக் கோட்பாடாக ஸ்தாபிக்கப்படவில்லை, மாறாக அது ஓர் எதிர்ப்புணர்வின் செயல் வடிவமாகவே முனைப்புற்றது. ஆட்சேபனை வடிவத்தை அது முதன்முதலில் வெளிப்படுத்தியது. "செந்த அடையாளங்களைத்" தேடுவோரும், அதற்காக, அதன் இருப்புக்காகப் போராடுவோரும், ஐரோப்பிய ஆதிக்கம், கருத்து நிலை, மேலாண்மை என்பவற்றின் பிடியினின்று தமது தேசத்தையும், சமூகக் குழுவையும் விடுவிக்கப் பாடுபடுவோரும் கையில் எடுத்துக் கொண்ட வலுவான ஒரு கருவியாக இக் கொள்கையை நாம் இனங்காணலாம்.

ஏனைய சிந்தனை முறைமைகளைப் போலவே, இக் கருத்தியலும் கலை, இலக்கிய

தாளத்தினூடு விருத்தி பெற்று வருகின்றமையை அவதானிக்கலாம். இந்த அணியிலே 'விடுதலை எழுத்தாளர்களாக' விபரிக்கப்படுகின்ற ஆபிரிக்க மற்றும் மேற்கிந்தியப் பிராந்திய எழுத்தாளர்களை விசேடமாகக் குறிப்பிடலாம். .ான்னன் மிமி (Mimi) காப்ரால் (Cabral), சி. எல். ஆர்.. ஜேம்ஸ் (C. L. R. James), சினுவா ஆட்சிபெ (Sinuwa Achchebey), வோல்லெ சொயிங்கா (Walle Soyinka), கூகிவா தியாங்கோ (Kookiwa Thiyako) ஆகிய எழுத்தாளர்களின் பணிகளை இங்கே சிலாகிக்கலாம். இவர்களின் காத்திரமான எழுத்துக்கள் ஆசிய சமூகம் தொடர்பிலான ஐரோப்பிய மாயையும், தகவற் குழப்பங்களையும், பிழையான பரப்புரைகளையும் திருத்தியமைத்தன. அத்துடன் காலனித்துவ செயன்முறையின் பாரபட்சங்கள், சமூக அநீதிகள், கொடூர அனுபவங்கள், அடையாள அழிப்புகளை சமூகத்தின் அடிநிலை வரையிலும் கொண்டு சேர்த்து, கூட்டான எதிர்ப்புணர்வை ஏற்படுத்தின. இலக்கிய வடிவமாகத் துளிர் விட்ட இச் சிந்தனைகள் எண்பதுகளில்தான் (இருபதாம் நூற்றாண்டில்) ஒரு கோட்பாட்டு வடிவம் பெற்று, பல்கலைக்கழக மட்டத்திலான கற்கைப்புலமாகவும் ஆகியது.

வளர்ச்சியின் பின்புலமும் வளர்ச்சியின் கதாநாயகரும்:

காலனித்துவத்திற்குப் பின்னரான வாதம் சென்ற நூற்றாண்டின் எண்பதுகளுக்கு பின்னர் விருத்தி பெற்று, உத்வேகம் அடைவதற்கு குறிப்பிட்ட சில சமூக, அரசியற் பின்புலங்கள் பங்களிப்புச் செய்துள்ளமை பற்றியும் சமூகவியல் விமர்சகர்கள் பகுப்பாய்வு செய்துள்ளனர். அதன் வழி, சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில், அணிசேரா நாடுகள், தமது 'காலனித்துவத்துக்கு எதிரான எதிர்ப்புக் குரலைக் குறைத்தமை, எண்பதுகளின் பிற்கூறுகளில் ஏற்பட்ட சோவியத் ஒன்றிய உடைவும், சோசலிசக் கருத்துகளின் சிதைவும் பின்னர், எண்பதுகளில் மேற்கிளம்பிய இனத்துவக் கற்கைகள் ஏற்படுத்திய விவாதங்களும் அத்தகைய பின்புலங்களாகக் குறிக்கப்படுகின்றன.

எனினும், ஆசிய நாடுகள் விடுதலை பெற்ற மறுகணமே இக்கோட்பாட்டாக்கம் அல்லது செயல் வாதம் முனைப்புற்று விடவில்லை. சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளில் இந்தியா, இலங்கை என்பன சுதந்திரம் பெற்றன; 1960,70களில் ஆபிரிக்க நாடுகள் சுதந்திரமடைந்தன. ஆயின், காலனித்துவத்தை விமர்சிக்கிற, மதிப்பிடுகிற கருத்துருவாக்கம் என்பதுகளில் தான் செழிப்புற்றது. காலனித்துவம், சுதந்திரத்துக்குப் பிந்திய அரசியல், சமூகக்கட்டமைப்பு, அவற்றின் போக்குகளை நிதானமாக மறுபரீசீலனை செய்யவே இவ்வாறு நீண்ட காலம் தேவைப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுவர்.

இக் கோட்பாட்டினை புலமைத்துவ உலகில் தடம்பதிக்கச் செய்தவர்கள், மூன்று பிரதான ஆய்வறிவாளர்கள் ஆவர். ஒருவர் பலஸ்தினிய ஆங்கில இலக்கியப் பேராசிரியரான எட்வர்ட் செய்த்; மற்றையவர் கொமி பாபா என்னும் சமூக விஞ்ஞானி; மூன்றாமவர் காயத்திரி ஸ்பீவக்; இவர்களுள் இறுதியாக குறிப்பிட்ட இருவரும் இந்தியர்கள். "காலனித்துவத்திற்கு பிந்திய வாதத்தின் மும்மூர்த்திகளாக" இவர்கள் வர்ணிக்கப்படுகின்றனர்.

செய்த்தும், காயத்திரியும் இதனை ஒரு எதிர்வாசிப்பு இயக்கமாக நோக்க, கொமிபாபா இதனை ஒரு 'நிலைமையாகவும்' (Conditim), தோற்றப்பாடாகவும் (Phenomena) நோக்குகிறார். எடவர்ட் செய்த்தின் "பண்பாடும் ஏகாதிபத்தியவாதமும்" (Culture and Imperialism), "கீழைத்தேய வாதம்" (Orientalism) போன்ற நூல்கள், இக்கோட்பாட்டியலின் விருத்திக்கு உதவியுள்ளன. அதிகார உறவு, ஐரோப்பியப் புலப் பார்வை, பண்பாட்டுச் சிதைவுகள், உலகமயமாக்கலின் நவீன, தந்திரோபாய அரசியல் தன்மைகள் என்பனவும் இந் நூல்களின் விரிவாக மறுவாசிப்புக்குட்பட்டுள்ளன.

முடிவுரை:

இன்று காலனித்துவத்திற்குப் பின்னரான வாதம் 'என்பது இலக்கியம், சட்டம், மானுடவியல், வரலாற்றியல், பொருளியல், பெண்ணியம் என்று பல்வேறு அறிவுப் புலங்களிலும் எடுத்தாளப் படுகிறது. எனவே அதன் 'பொருள்நிலை', கோட்பாட்டுத் தளம், வரையறைகளை எளிதில் வகுத்துரைக்க முடியாதுள்ளது.

இக் கோட்பாட்டின் முதன்மைப் பணிகளாகி, வரலாற்றை திருத்தி எழுதுதல், அதிகார உறவுகளைத் தோலுரித்தல், மீள் காலனித்துவ அபாயங்களையும், அதிலிருந்து தவிர்ந்து கொள்ளும் வழிமுறைகளையும் மக்கள் மத்தியல் பரப்புதல், ஆசிய வேர்களை, அடையாளங்களை நிலைநிறுத்தல், ஐரோப்பிய நவகாலனியம், பூகோளமயவாக்கம் என்பவற்றுக்கான வலுவான மாற்றீடுகளைத் தேடுதல் என்பவற்றைக் குறிக்கலாம்.

முடிவாக, இக்கோட்பாட்டுச் சிந்தனை மரபு, பல்கலைக்கழக மட்டத்தின் வரையறையிலிருந்து மீண்டு, மக்கள் மத்தியில் பரவலான எளிமையான அறிவுச் செயன்முறையாக ஆக்கப்படும்போது, இதன் இலக்குகள் எய்தப்படும் என்று சமூகவியலாளர்கள் வலியுறுத்துவதையும் குறித்துக் காட்டலாம். "இக் கருத்தியற் சிந்தனைகள் வகுப்பறைச் சொகுசுகளிலிருந்து வீதிகளுக்கும், சமூக அடித்தள மட்டங்கட்கும் செல்ல வேண்டும்." காலனித்துவம் என்பது முற்றுப் பெற்று விட்ட ஒரு வரலாற்றுச் செயன்முறை அன்று. அது மீள, மீள வெவ்வேறு வடிவங்களில் நம்மீது, நமது மண், மக்கள், மனங்கள், கருத்துகள், தீர்மானங்கள் மீது திணிக்கப்படுவது. எனவே அது பற்றிய ஒரு ஆரம்ப சமூகவியற் குறிப்பான இக்கட்டுரையை, இத்துறையில் முனைப்போடு ஈடுபடும் செல்வா கனகநாயகத்தின் ஒரு கூற்றோடு நிறைவு செய்யலாம்.

"காலனித்துவத்திற்குப் பிந்தியவாதம், ஆங்கிலத்தை - ஐரோப்பாவை ஒரு வழித்திரையாக, கருத்தமைவுச் சட்டகமாக முன் வைக்கின்றது; பல உண்மைகளை எடுத்துக் கூறுகின்ற அதே வேளையில் வேறு பல அம்சங்களை பரிமாணங்களை மறைக்கிறது. மொழி பெயர்ப்பு மூலமாக நாம் தாய் மொழி இலக்கியங்களை, இலக்கிய வரலாறுகளை, வரலாற்றெழுதியலாக வேறு கோணங்களில் பார்க்கின்றோம். வெளியைப் பற்றி, காலத்தைப்பற்றி, நிலத்தைப் பற்றி. நிலக்காட்சிகளைப் பற்றி மீண்டும் சிந்திக்கிறோம்.

இவ்வாறான எண்ணக்கருத்துக்களை உருவாக்கும் போது, காலனியப் பின்னியத்திற்கும், மொழி பெயர்ப்பிற்கும், இலக்கியத்தின் வரலாற்றிற்கும் கருத்துநிலை நோக்குகளுக்கும் ஒரு முக்கியமான தொடர்பு இருக்கின்றமை தெளிவாகிறது. காலனியப் பின்னியம், தாய்மொழி, இலக்கிய வரலாறு, திறனாய்வுப் பயிற்சி, எண்ணக்கரு மாதிரிகள் ஆகியனவும் ஒன்றோடு ஒன்று இடை வெட்டுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

திரு. சந்திரசேகரன் சசிதரன் B.A (Hons)
முன்னாள் விரிவுரையாளர் சமூகவியல்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக் கல்லூரி
மட்டக்களப்பு.

மலராதோ புது வாழ்வு?
புலராதோ சமாதானம்?

ஊரின்றி உறவின்றி
நாம் வாழ்கின்றோம்
உருவில்லா வாழ்வு
எம் வாழ்வாயிற்றே!
போரின்றிப் போகட்டும்
நம் வாழ்விலே மிகப்
பாரின்றி மாறிற்று
பகையுணர்வினால்.

தா என்று கேட்டாலே
தன் வாழ்வில்லை
தன் வாழ்வும் தம் பாடும்
என்றெண்ணியே சிலர்
தடுமாறி உருமாறிச்
சதி செய்கின்றனர்
வருமானம் பெற வேண்டி
தம்மினம் அழிக்கின்றார்.

கூலிக்கு மாரடிக்கும்
யுகம் போக்கிட
வஞ்சகக் கயவர் இப்
புவி தாண்டிட எல்லா
வகை கண்டும்
இறை அஞ்சிட கல்லா
சிலர் செயலால்
நல்லார் மாய்ந்திட
எல்லா வகை வேண்டி
ஆண்டவனை வேண்டிட
பொல்லாப் பகை எம்
இடையே கலைந்தோடிட
மலராதோ புது வாழ்வு?
மனம் ஏங்கிட உடன்
புலராதோ சமாதானம்?
நிஜம் என்றிட

ஆவணித் திங்களன்று படு
ஆழமான ஏரியிலே
வானம் குளத்திற் கிறைத்த நீரில்
மூழ்கியிருந்த எம் உறவின்

வேதனையை மாவலியாள்
தானறிவாள் சோதனையைத்
தான் தொடர்ந்தாள்.
மாவிலாற்றுத் தொடர்கதையால்
கடல் தாண்டி வருகையிலே
காலனவன் கரம் பிடித்து
மடிந்து கொண்ட நம் உறவும்
மனசதுவும் கசக்கிறது
மதிப்பற்ற வாழ்வையெண்ணி.

மரணித்த பின்புதானே
மடு தோண்டி புதைத்தல் தெரியும்
மடு தோண்டி வைத்து விட்டே
மரணித்த எம் உறவும்
மனசைப் பிய்க்கிறது
மங்கிப்போன வாழ்வையெண்ணி.

வானமெங்கும் புகை சூழ
நிலமெங்கும் நெல் விதைக்க
உடல் வித்து நடுகின்றார்
ஒருக்காலும் முளைக்காது
உண்மை இது என்றுணர்வீர்
பட்டியில் நின்ற மாடும்
கொட்டிலில் இருந்த மானிடனும்
கூடியே சிதறி ஓடினர்
மாட்டுக்கே புரியவில்லை.....
யார் மாடென்று.....?
யார் மனிதனென்று.....?

மட்டுமல்ல..... மட்டுமல்ல.....

சரித்திரத்தில் இடம் பிடிக்கும்
சாதனைக் கனவுகளைச்
சுமந்திருந்த இளமனங்கள்
பஞ்சணையில் உறங்க வேண்டிய
பிஞ்சுகளும் வஞ்சனைகள்
தெரியாது அலறி ஓடினர்
யார் அறிவார் இந்த நிலை?
ஏது செய்வார் வேறு நிலை?

வாழும் போதிருந்த
வகையான வர்க்கங்களும்
ஓடும்போது நிஜம்
ஒன்றுமில்லை அவைகளுமே
வைத்தியரும் வயலினில்தான்
வாத்தியாரும் வங்கருக்குள்தான்
பணத்திமிரில் இருந்தவர்கள்
பண்பிழந்து வாழ்ந்தவர்கள்
'நான்' என்று நினைத்தவரும்
நடுத்தெருவில் நின்றபோது
'வீண் இந்த வாழ்க்கை' என
விளம்பியதை நான் அறிவேன்.

'ஊரெல்லாம் கூடி அன்று
ஒரு தேர் இழுக்கிறதே'
என்றிட்ட மகாகவி
'ஊரெல்லாம் கூடி
பல முகாம்களில்' எனப் பாட
இன்றில்லையே!

ஆண்டுகள் கழியும் பல
அதில் அழிவுகளும் பல பல
மாண்டிட்ட ஆத்மாக்கள்
வேண்டிட்ட ஆசைதனை
ஈந்திடுவாய் ஆண்டவனே!
ஆதலினால் கேட்கின்றோம்
பேதலித்து நிற்கும் எம்மை
மேதினியில் வாழச் செய்ய
மலராதே புது வாழ்வு?
புலராதோ சமாதானம்?

அழகான அந்தியிலே
நண்பருடன் விளையாடி
அழுது கொண்டு வருகையிலே
அரவணைத்து நிற்பார் அம்மா.
சண்டையிட்டு நானும்
வந்த சேதி கேட்டு நின்ற
என் அப்பா தண்டிக்கவென
தடியெடுத்து துரத்திடுவார் நானும்
கோடியெல்லாம் சுற்றிவர

என்னங்க நீங்க?
ஏனுங்க அடிக்கிறீங்க?
வா மகனே என்று தலைவருடும்
அம்மாவின் மடிதனிலே
முகம் புகைத்து சுக
மூச்சிடுவேன் அந்நாளில்

மார்கழி மழையினிலே
அம்மா அப்பாவுமே
போன திசை தெரியாமல்
பக்கத்து வீட்டாக்கள்
கூடவே நான் தனியனாய்
நிற்கும் சேதி இந்நாளில்
ஆதலினால் கேட்கின்றேன்
மலராதே புது வாழ்வு?
புலராதே சமாதானம்?

ஓரினத்துள் பிரிவேது?
பாரினத்துள் ஒற்றுமைக்காய்
பல்லினமும் நம் இனம் போல்
சாதி மத பேதமன்றி
மேதினியில் வாழ்ந்திடவே
மலராதே புது வாழ்வு?
புலராதே சமாதானம்?

❋❋❋❋

'ஈச்சிலம்பதியூரான்'
திரு. சி. ஸ்ரீதரன் M.A, SLEAS III
பழைய மாணவன்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி.
மட்டக்களப்பு.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி அபிவிருத்தி,
வலயக் கல்வி அலுவலகம்,
மூதூர்.

கூபகம் தாலாட்டும்

சிறுகதை

எல்லா நாட்களையும் போல் அன்றைய காலைப் பொழுதும் விடிந்தது. சாதீக் அலுவலக வேலையில் மும்முரமாக இருந்த தருணத்தில் அவனது மொபைல் அழைத்தது. நம்பரைப் பார்த்தான், வெளிநாட்டு அழைப்பு. யாராக இருக்கும்.....?

"ஹலோ! குட்மார்னிங். நான்.....

அவனது வார்த்தை முடிவடைவதற்குள்,

"குட்மார்னிங்..... நீங்க சாதீக்கா?"

"ஓம் நீங்க"

"நான்தான் உங்க ஜெயசீலன் சேர், கனடாவிலிருந்து. எப்படி மகன் சுகமா?"
"ஓம் சேர்..... நீங்க"

"சுகம்தான். தூரத்திலிருந்து கொண்டு தூரதரிசனம் பார்ப்பதுபோல மாணவர்களையும், கல்லூரியையும் பார்க்கிறேன்."

"சேர் உங்கட குரலை நீண்டகால இடைவெளியின்பின் தொலைவிலிருந்து கேட்கிறேன். சந்தோஷமாயிருக்குது."

எதிர்முனையில் சிரிப்பு.

அந்தச் சிரிப்பும் தொடர்ந்த உரையாடலும் நிறைவுற்று நீண்ட நேரமாகியும் ஜெயசீலன் சேரையும், அவர் நடத்திய வெளிவாரிப் பட்டப்படிப்புக் கல்லூரியின் நினைவுகளும் சாதீக்கை முழுமையாக ஆட்கொண்டன.

தனது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவிய அந்தக் கல்லூரியை, அதற்கு முன்னரான தனது வாழ்க்கையை அவன் நினைத்துப் பார்த்தான்.

நெல்லும், நெய்யும், பாலும் மலிந்து இயற்கை அழகு சொட்டும் அந்தக் கிராமத்தில் வறுமையும் வயிற்றுப் பசியும் தலைவிரித்தாடும் ஒரு மீனவக் குடும்பத்தில் நான்காவது பிள்ளையாய் பிறந்தவன் சாதீக்.

உம்மாவும், வாப்பாவும் இறைவனை வணங்குவதில் அதிக ஈடுபாடுடையவர்கள். கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்த பணத்தை மற்றவர்களை அதிகம் நம்பியதால் இழந்து கடைசியில் நொந்து போனார் வாப்பா காதர். தான் பெற்ற ஆறு பிள்ளைகளில் ஒரு பிள்ளையையாவது பெயர் சொல்லுமளவிற்கு படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை கொண்டவள் உம்மா சக்கையும்மா. கூலிவேலைகள் செய்து பிள்ளைகளை வளர்த்தாலும் கூட நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பிள்ளைகள் வளர வளர குடும்பக் கஷ்டமும் நீங்கிப் போனது.

சாதீக் ஊர்ப் பாடசாலையொன்றில் கல்வி கற்றான். ஆளுமையும், ஆற்றலுமுடையவனாக அவன் இருந்தாலும் குடும்பக் கஷ்டமும், வறுமையும் அவனுக்கும் படிப்புக்குமிடையில் நீண்ட இடைவெளியை ஏற்படுத்தியது. வகுப்பிலுள்ள கெட்டிக்காரப் பிள்ளைகளில் அவனும் ஒருவன். அவன் அவ்வப்போது தலைநிமிர எத்தனிக்கும்போது

அவனது சூழ்நிலை தடுத்து விடும். அனைவரும் பைசிக்கிளில் க்ளாஸ் போகும்போது அவன் மாத்திரம் ஒரு சிறிய குளக்கட்டு நடைபாதை வழியாக நான்கு கிலோமீற்றர் நடந்து அயல் கிராமத்திற்கு க்ளாஸ் போவான். அவன் வரும் வரைக்கும் அருணாசலம் மாஸ்டர் விஞ்ஞானப் பாடத்தைப் படிப்பிக்கவே மாட்டார். அவன் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார். சாதிக் வகுப்பு முடிந்து திரும்பி வரும்போது பகலவன் மறைந்து விடுவான். இரவைக் குளிர்ச்சிப்படுத்தும் சந்திரன் கிழக்கே விழிக்க ஆரம்பிக்கும்போது அவன் வீடு வந்து சேருவான்.

அவனைக் காணும் வரைக்கும் உம்மா சக்கையும்மா இறைவனிடம் வேண்டிக்கொண்டு பாதையின் ஓரத்திலே நின்று வருகின்றவர்களிடமும் போகின்றவர்களிடமும் வினவுவாள்: அக்கினியில்பட்ட புழுவாய்த் துடிப்பாள். மகனைக் கண்டதும் முகம் மலர்ந்து வீடு வந்து விளக்கேற்றுவாள்.

இவ்வாறு வருடங்கள் கடந்து செல்ல வகுப்பேறிக்கொண்டே சென்றான் சாதீக். அவனது வாழ்க்கையின் ஓர் இலட்சியப் பாதை ஆண்டு பதினொன்றில்தான் ஆரம்பமானது.

அன்று திங்கட்கிழமை. அன்றுதான் மாகாணமட்டத்தில் நடைபெறும் தமிழ்த்தினப்போட்டி ஒன்றில் கலந்துகொள்வதற்காக சகல ஆயத்தங்களுடனும் பாடசாலைக்குச் சென்றான் சாதீக். அன்று திங்கட்கிழமையல்லவா? வாரத்தின் முதல்நாள். அதனால் அன்று காலைக் கூட்டம். காலைக் கூட்ட நிகழ்ச்சியில் அதிபர் பேசிவிட்டு தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர்களை வாசித்தார். தனது பெயரும் வாசிக்கப்படும் என்று சாதீக் ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். அவனது பெயர் அறிவிக்கப்படவில்லை. காலைக் கூட்டம் முடிந்ததும் அதிபரிடம் சென்றான். அதிபரோ அவனது மனம் புண்படத்தக்க வகையில் பேசி அனுப்பி விட்டார். அன்றைய நாள் முழுவதும் அவனுக்கு அமாவாசை நாள் போன்றிருந்தது. அவனது எதிர்பார்ப்புக்கள் முறியடிக்கப்பட்டன.

வேகமாகவும், விவேகமாகவும் படித்தான் சாதிக். O/L பரீட்சையும் நெருங்கியது.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. சாதீக்கைத் தேடி அவனது நண்பன் பாயிஸ் வீட்டிற்கு வந்திருந்தான்.

"சாதீக்... சாதீக்...

"சாதீக் இல்லை" - உம்மாவின் குரல்

"எங்க போனார்?"

"அவர் கூலி வேலைக்குப் பொயிட்டார்".

"இந்தாங்க அதிபர் தந்த லெட்டர். அவரிட்ட கொடுத்திடுங்க" பாயிஸ் போய்விட்டான்.

கடிதத்தைப் பத்திரப்படுத்திய உம்மா சாதீக் வந்ததும் கொடுத்தாள். அதில் நாளை திங்கட்கிழமை O/L பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படவுள்ளதால் காலை ஒன்பது மணிக்கு பாடசாலைக்கு வருமாறு எழுதப்பட்டிருந்தது.

மறுநாள் வெள்ளை உடை அணிந்து பாடசாலைக்குச் சென்றான் அவன். பரீட்சை எழுதும் சகல மாணவர்களும் அதிபர் அறையில் வெவ்வேறு நிற உடைகள் அணிந்து நின்றிருந்தார்கள். சாதீக் சீருடையில் வந்ததைக் கண்டதும் எல்லோரும் கூக்குரலிட்டுச் சிரித்தார்கள். பாயிஸ் அவனருகே வந்து, "என்ன மச்சான் இன்றைக்கென்ன வெள்ளை உடுப்பு? இன்றைக்குத்தான் நம்ம எல்லோருக்கும் ரிக்கட் கிடைக்குது. சரி, அதிபர் வாறதுக்கிடையில் வீட்ட போய் கலர் உடுப்பை போட்டுட்டு வா"

அவன் சொல்லி முடிக்கவும் அதிபர் வரவும் சரியாயிருந்தது. அதிபர் மாணவர்களைப் பார்த்தார். பூக்கடையைப் பார்ப்பது போலிருந்தது. வந்த கோபத்தை அடக்கிக் கொண்டார். சாதீக் மாத்திரம் வித்தியாசமாய் ஆனால் பாடசாலையிலிருந்து தோற்றும் பரீட்சார்த்தியாகத் தகுதி பெற்று நிற்பதாக அவருக்குப்பட்டது. அன்று பன்னிரண்டு மாணவர்கள் அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொண்டார்கள். இறுதியாக சாதீக்கிற்கு வழங்கும் போது முகத்தைப் பார்த்து,

"சாதீக், இம்முறை பாடசாலை உன்னுடைய கையில்தான் தங்கியுள்ளது." என்றார்.

"சரி சேர், தாங்ஸ்"

அதிபர் சொன்ன வார்த்தை அவன் மனதில் அலை அலையாக வந்த மோதிச் சென்றது. அதிபர் தன்னைச் சரியாகப் புரிந்துள்ளார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

பரீட்சையும் ஆரம்பமானது. பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் பரீட்சைக்குச் சென்றான் சாதீக். அன்றைய நாளைப் போலவே பரீட்சை நடைபெற்ற அத்தனை நாட்களும் அவனுக்கு இனிமையாக இருந்தது. நாட்கள் நகர்ந்தன. பரீட்சை முடிவுகளும் வெளிவந்தன. இந்த நிமிடத்திலிருந்து ஊரில் ஒரே பரபரப்பு. அவனது ரிசல்ட்தான் பெஸ்ட் ரிசல்ட் என்று கதை அடிபட்டது. பாடசாலைக்கு சென்ற சாதீக், விளம்பரப் பெட்டிக்குள் போடப்பட்டிருந்த முடிவுகளின் மூலம் அது உண்மை என்பதை அறிந்து அதிபரின் அறைக்குள் சென்றான். அதிபரும், ஆசிரியர்களும் அவனைப் பாராட்டினார்கள்.

வீடு வந்த அவன் பெற்றோரிடம் விடயத்தைக் கூற அவர்கள் மிக மகிழ்ந்தார்கள். தாயின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அன்றைய நாள் அந்த வீட்டிற்கு பௌர்ணமி நாள். முதலாவது படித்தரத்தில் சித்தியடைந்த அவன் இரண்டாவது படித்தரத்தில் காலடி எடுத்து வைத்தான். அதற்காக அவன் கலைத்துறையைத் தெரிவு செய்தான். தான் படித்த பாடசாலையிலேயே உயர்தரப் படிப்பினையும் சாதீக் தொடர்ந்தான். A/L வகுப்பில் ஐந்தே ஐந்து பிள்ளைகள்தான்.

காலம் நகர்ந்து செல்லச் செல்ல..... உயர்தரப் படிப்பின் மீதிருந்த நம்பிக்கையும் குறைந்தது. காரணம் அவனது சக மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை. சில நாட்களில் அவன் மாத்திரம்தான் கல்லூரிக்கு வருவான். ஏனைய மாணவர்களின் வரவுக்காய் காத்திருந்துவிட்டு இடைநடுவே வீடு வருவான். பரீட்சை நாட்களைச் சிந்தித்துப் பார்ப்பான். அவை விடை காண முடியாப் புதிராய் பயமுறுத்தும்.

கால ஓட்டத்தில் பரீட்சையும் நெருங்கியது. அன்று கல்லூரி நாட்களின் இறுதி நாள் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சியில் அவனுக்கும் பாடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. கல்லூரியில் அதிபர் உட்பட அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் குழுமியிருந்த அந்த அவையிலே, 'அம்மா என்றழைக்காத உயிரில்லையே' என்ற பாடலை அவன் பாடினான். சத்தத்தால் நிரம்பி வழிந்திருந்த அந்த மண்டபம் அவன் பாடலால் சைலண்ட் ஆனது. அனைவரது கவனத்தையும் அவன் குரல் ஈர்த்து விட்டது. அவனது இன்னுமோர் திறமை கண்டு அவர்கள் வியந்து போனார்கள். இவ்வளவு காலமும் இவனுக்குள்ளேயிருந்த இன்னுமொரு முகமா இது எனப் பேசிக் கொண்டார்கள்.

பரீட்சை எழுதத் தயாரான அவன் முழு மனத்துடன் அதை எழுதி முடித்தான். நாட்கள் மாதங்களாக பரீட்சை முடிவுகளும் வந்துவிட்டன. அவன் இரண்டு 'B', இரண்டு 'C' பெறுபேறுகளைப் பெற்றிருந்தான். அதிபர் அவனிடம்,

"சாதீக் உங்கட ரிசல்ட் நல்லம். உங்களுக்கு 243 புள்ளிகள். சொற்ப புள்ளிகளால்தான் பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை. கவலைப்பட வேண்டாம். கொலிஜ் போகலாம்" என்றார்.

எப்படியாவது பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்ற இறுமாப்போடு இருந்தவன் அவன். அதிபர் சொன்ன விடயங்களை பெற்றோரிடம் தெரியப்படுத்த வாப்பா காதர்,

"பிரச்சினையில்லை மகன். இது முதல் தடவைதானே, இரண்டாம் மூன்றாம் முறையும் முயற்சி செய்து பார்க்கலாம்தானே." என்று சொன்னார். ஆனால் அவனுக்கோ இரண்டாம் மூன்றாம் முறை முயற்சிப்பதென்பது காலத்தை வீணாக்குவது போலிருந்தது. இறுதியில் பல்கலைக்கழகம் ஒன்றில் வெளிவாரியாகப் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற முடிவுக்கு அவன் வந்தான்.

இந்நிலையில் விரிவுரையாளர் ஒருவரின் அட்வஸின்பேரில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தில் வெளிவாரியாகப் பதிந்து கொண்டு தன்னுடைய கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தான். முதலாம் வருடப் பரீட்சையும் எழுதி முடித்தான். இரண்டாம் ஆண்டு பரீட்சைக்குத் தயாராகும் போது முதலாம் வருடப் பரீட்வைக் பெறுபேறும் வந்துவிட்டது. அதில் இரண்டு பாடங்களில் அவன் சித்தியடையவில்லை. அப்போதுதான் எங்கேயாவது மேலதிக வகுப்புகளுக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது.

நண்பர் ஒருவர் மூலம் மட்டக்களப்பு அரசடியில் இதற்கென வகுப்புக்கள் நடப்பதாகத் தெரிந்து கொண்ட சாதீக், ஒரு சனிக்கிழமை அங்கு சென்றான். அது ஒரு காலைப் பொழுது. பெரிதாக மாணவர்கள் வந்திருக்கவில்லை. அவன் தடுமாறினான். அப்போது கறுப்புக் காற்சட்டையும், வெள்ளை நிற சேர்ட்டும் அணிந்திருந்த கண்ணாடி போட்ட ஒருவர் அவனிடம் வந்து,

"தம்பி நீங்க....." என வினாவினார்.

"நான் கல்முனையில இருந்து வாறன். என்ட பேர் சாதீக். ஈஸ்டன் யுனிவஸிட்டிக்குரிய எக்ஸ்ரேனல் வகுப்புகள்"

"இங்கதான். நீங்க கல்முனையில எந்த இடம்?"

"நற்பிட்டிமுனை."

"பெஸ்ட் இயரா?"

"இல்லை சேர், செகண்ட இயர்."

செகணட் இயரில பகுதி ஒன்று பேப்பர் முடிந்து விட்டது. நீங்கள் என்னென்ன பாடங்கள்?"

"தமிழ், மெய்யியல், இஸ்லாம்"

"அடடா.... இனி என்ன செய்வது?"

"சேர், எப்படியாவது எனக்கு உதவ வேணும்"

"ம்..... ம்..... சரி."

"சேர் நீங்கள்?"

"நான்தான் இக்கல்லூரியின் பணிப்பாளர். பெயர் ஜெயசீலன். தம்பி ஏழுமணிக்கு

தமிழ்ப் பாடத்திற்கு விஸ்வநாதன் சேர் வருவார், அந்தக் கொட்டிலில் இருங்கோ"

அவர் காட்டிய இடத்தில் போய் அமர்ந்து கொண்டான் சாதீக். மாணவர்கள் வரத் தொடங்கினார்கள். வந்தவர்கள் அனைவரும் ஜெயசீலன் விசாரித்தது போலவே கேட்டார்கள். அவர்களுக்குள் குலேந்திரன் அவனருகே வந்து,

"மச்சான் கவலைப்படத் தேவையில்லை. அதெல்லாம் வெல்லலாம். நான் அக்கரைப்பற்றில் இருந்து வருகிறேன்."

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே தமிழ் விரிவுரையாளர் வந்து விட்டார். விரல் விட்டு எண்ணக் கூடிய பதினைந்து மாணவர்களுள் சாதீக் வித்தியாசமாய்த் தெரிய அவரும் வினவினார்.

"பிரச்சினையில்லை படிக்கலாம், பாஸ் பண்ணலாம்" என்றார் அவரும்.

உண்மையிலேயே சாதீக்கிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்தக் கல்லூரியில் அனைவரும் அவனுடன் அன்பாகப் பழகினார்கள். ஏனைய நாட்களைவிட சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களும் அவனுக்குப் பிடித்தமான நாட்களாயின.

மூன்றாம் ஆண்டுக் கற்கையும் நிறைவுறும் காலமும் நெருங்கியது. வழக்கம் போலவே இறுதி வருட மாணவர்களை வழியனுப்பும் நிகழ்ச்சியும், புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியும் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அந்நிகழ்விற்கு கிழக்குப் பல்கலைக்கழகப் பிரமுகர்கள் சிலரும் வருகை தந்திருந்தார்கள். நடேசும், நிர்மலும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினார்கள். சாதீக்கும் ஒரு நிகழ்வில் பங்குபற்றினான். செய்தி வாசிக்கும் அந்த நிகழ்ச்சி பலரது பாராட்டையும் பெற்றது. அவன் தரமான அறிவிப்பாளராக வருவதற்கான சாத்தியங்கள் இருப்பதால் அத்துறையில் முயலுமாறும் பலரும் ஆலோசனை கூறினார்கள்.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கொப்ப அடுத்து வந்த ஆண்டில் சாதீக் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டான். தொடர்ந்து வந்து மூன்றாம் வருடப் பரீட்சையிலும் சித்தியெய்தி பட்டதாரியானான். அவனது கனவும் நனவாகியது.

அந்தக் கல்லூரி தந்த வாழ்க்கை அனுபவங்களோடு அவன் நினைவு மீண்டபோது தான் அலுவலகத்தில் இருப்பதை உணர்ந்தான்.

ஜனாப். C. தௌபீக் B.A
பழைய மாணவன்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.

அறிவிப்பாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு.

உயிர் வாழும் உரிமையைப் பாதிக்கின்ற சூழல் உரிமை மீறல்கள்

அபிவிருத்திக்கான திட்டமிடல்கள்

அபிவிருத்தி திட்டமிடல் என்பதும் அதனூடாக ஏற்படும் சூழல் மாசாக்கமும் ஒவ்வொரு தனிமனிதனுடைய சூழல் உரிமைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது பற்றி தெளிவடைவது இன்றைய காலகட்டத்தில் மிகமுக்கியமானதாக உள்ளதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கே ஆராயப்படுகின்ற மூன்று விடயங்களும் (அபிவிருத்தி திட்டமிடல் சூழல் மாசாக்கம், சூழல் உரிமை) முக்கியமானதாக உள்ளன. இன்றைய காலகட்டத்தில் இவ்விடயங்கள் பற்றிய இக்கட்டுரை அனைவரையும் விழிப்படையச் செய்யும் நோக்காகக் கொண்டது.

சூழல் மாசாக்கம், அபிவிருத்தித் திட்டமிடல் என்பதை நோக்க முன் சூழல் உரிமை எவை என்பது பற்றி தெளிவடைய வேண்டும்.

இயற்கையான வளங்கள் என்பது பொதுவானது அவ்வாறு பொதுவானவையாக காணப்படுபவை அனைவருக்கும் சொந்தமானதாகவே காணப்படும். அவ்வாறு அனைவருக்கும் சொந்தமானதை எவரும் தனிப்பட்ட சொந்தமாக்க முடியாது. அத்துடன் சொந்தம் அல்லாதவற்றுக்கு தனிப்பட்ட பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. ஆகவே அனைவரின் பயன்பாட்டில் உள்ள சூழலை மாசுபடுத்தல் என்ற செயலை எவரும் செய்யமுடியாது.

இங்கே சூழல் உரிமைகள் என்பது மனித உரிமையின் ஒருபகுதியாகக் காணப்படுகின்றது. மனித உரிமைகள் என்பது இயற்கையான உரிமையாகும். (மனிதன் பிறக்கும் போதே பெற்றுக்கொள்கின்றான்) அவ்வாறான உரிமைகளுள் மிக முக்கியமானது உயிர்வாழும் உரிமையாகும். உயிர் வாழவேண்டும் எனில் சுத்தமான சூழல் தேவை என்பது வலியுறுத்தப்படுகின்றது. ஆகவே மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படையான அம்சங்களையும் அவனது இயற்கை உரிமைகளாகவும் சுதந்திரமாகவும் கருதப்படுவதனால் அதனை மீறவோ தடுக்கவோ முடியாது அவ்வாறு செய்யவும் கூடாது. இதனை மீறினாலோ செய்தாலோ அது மனித உரிமை மீறல் குற்றமாகும். உயிர் வாழ்வதற்கான உரிமையானது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் உயிர் வாழ்வதற்கு உகந்த சூழல் அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஆகவே பாதுகாப்பான சூழலைப் பெறுவது என்பது தனிமனிதனதும் அடிப்படை உரிமையாகும்.

இலங்கையில் அதிகளவில் மறுக்கப்படுகின்ற, மீறப்படுகின்ற அடிப்படை மனித உரிமைகளுள் சூழல் உரிமையும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆனால் அது மீறப்படுகின்றது என்றோ அல்லது மறுக்கப்படுகின்றது என்றோ அநேகமானோருக்கு உடனடியாகவோ அல்லது காலம் கடந்தோ தெரிவதில்லை. அவ்வாறு தெரிந்தாலும் நீதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றி அறியாது உள்ளனர். காரணம் சில பாதிப்பு நீண்ட காலத்தின் பின்னரும், சில தொடர்ச்சியாகவும் ஏற்படுவதாலும் உடனடியாக விளங்கிக் கொள்ள முடியாது உள்ளனர்.

சூழல் உரிமைகளை அபிவிருத்தியுடனும் சூழல் மாசடைதலுடனும் தொடர்புபட்டதாக பார்க்கின்ற போது அதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனங்களான UDHR , ICCPR மற்றும் ICESCR என்பன வெளிப்படையான ஏற்பாடுகளைக் கொண்டிராத போதும் அவை உட்கிடையாக சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. அதாவது உயிர் வாழ்வதற்கான சூழல் இன்றி உயிர் வாழ்வதற்கான உரிமையைக் கோரமுடியாது. உயிர் வாழ்வதற்கான உரிமையைக் கோரமுடியாதபோது வேறு எந்த உரிமையையும் கோரமுடியாது என்பதையே குறித்த

பிரகடனங்கள் ஊடாக அறியமுடிகின்றது. ஆகவே சூழல் என்பது சுத்தமானதாகவும் உயிர்வாழக்கூடியதாகவும் இருந்தாலே ஏனைய உரிமைகளைக் கோரமுடியும். ஆகவே சூழல் உரிமை என்பது மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எனவே உயிர் வாழ்ந்தால் மட்டுமே ஏனைய உரிமைகளைக் கோரமுடியும் என்பதையே குறிக்கின்றது. எனவேதான் சூழல் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் அரசினதும் பொதுவான கடப்பாடாகக் கருதப்படுகின்றது. ஆனால் இன்று இலங்கையைப் பொறுத்தளவில் தனிநபர் தொடக்கம் அரசாங்கம் வரையும் சூழல் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை கொள்வது என்பது மிகக்குறைவாகவே உள்ளது.

1972ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனிதன், சுற்றாடல் மீதான பிரகடனம் மிகமுக்கியமானதாகும். இது ஸ்ரக்கோம் (Stakhome) பிரகடனம் என அழைக்கப்படுகின்றது. இதில் "மனிதன் சுதந்திரம் சமத்துவம் போதுமான வாழ்க்கைத் தரம் என்பனவற்றுக்கான உரிமைகளை கௌரவமாக பெறுவதுடன் அவன் அதனை அனுபவிப்பதுடன் சூழலை எதிர்கால சந்ததிக்குப் பாதுகாத்து உறுதி செய்யும் பொறுப்பையும் தன்வசம் கொண்டுள்ளான்" எனக் கூறுகின்றது. 1992ம் ஆண்டு நியோடிஜெனிறோவில் கூட்டப்பட்ட 2ஆவது புவிச் சூழல் உச்சி மாநாட்டிலும் இதே கருத்து கூறப்பட்டது அதாவது இங்கே நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்பது (Sustainable Development) என்பதையே மறைமுகமாகக் கூறுகின்றது. இந்தப் பேண்தகு அபிவிருத்தி என்பது மனிதனுடைய அபிலாஷைகளையும் தேவைகளையும் நிறைவேற்றும பொருட்டு தற்காலத்தில் வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழலைப்பாதிக்காத வகையிலும் எதிர்காலச் சந்ததிக்கும் மாசற்ற சூழலையும் வளங்களையும் பாதுகாத்துக் கொடுக்கின்றதாக அமைவதைக்குறிக்கின்றது. இதனையே ஐ. நா. பிரகடனங்களும் சுட்டி நிற்கின்றன.

இப்பிரகடனங்கள் உலக நாடுகள் தமது கொள்கைத் திட்டமிடலின் போது சூழல் பற்றிய கரிசனையை ஏற்படுத்தி பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் விதிக்க வழிவகுக்கின்றன.

இலங்கையில் சுற்றாடல் சட்டம் என்பது தனித் ஒரு சட்டமல்ல. இது அரசியலமைப்புச் சட்டத்தையும் ஏறத்தாழ 50 வரையான நியதிச்சட்டங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இச் சட்டங்களின் கீழ் ஒழுங்கு விதிகள், தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பனவற்றைக் கொண்டு பொதுச் சட்ட வழக்குகளையும், எழுத்தணைகளையும் சட்டக்கோட்பாடுகளையும் மற்றும் சர்வதேச சமவாயங்களையும் உள்ளடக்கியே இலங்கையின் சூழல் சட்டம் காணப்படுகின்றது. அரசியலமைப்பில் சுற்றாடலைப் பேணும் கடப்பாட்டை அரசு மீதும் பிரஜைகள் மீதும் சுமத்துகின்றது.

"சூழல் பாதுகாப்பு பற்றிய ஏற்பாடுகள் நாடுகளின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன" என்று கூறப்படுவது எழுத்து வடிவில் மட்டுமே காணப்படுகின்றது. சூழல் தொடர்பாக அரசாங்கம் இன்றும் சரி என்றைக்கும் சரி எந்தளவு அக்கறை கொண்டுள்ளது என்று பார்த்தால் அது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கை அரசியலமைப்பும் சரி, ஐக்கிய நாடுகள் அறிக்கைகள், சமவாயங்களும் சரி இதனை வலியுறுத்தினாலும் அவற்றினை எவரும் சரிவரக் கருத்தில் கொள்வதில்லை.

உலக நாடுகளில் மீறப்பட்டு வரும் அடிப்படை மனித உரிமைகளைக் கருத்தில் கொண்டு 1966ம் ஆண்டு அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்தும் புதிய மனித உரிமைகள் ஒப்பந்தம் ஒன்று கொண்டுவரப்பட்டதன் ஊடாக பின்வரும் இரண்டு ஆவணங்கள் உருவாகின.

1. குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச கட்டுறுத்து (ICCPR)
2. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச கட்டுறுத்து (ICESCR)

இவ்வாறு இவற்றை உருவாக்கினாலும் மேலும் மனித உரிமை வலுப்படுத்தவும் மனித உரிமை மீறல்களுக்கும் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்குமாக ICCPR ஆவணத்திற்கு இரு

பின்னிணைப்புகள் (Prodacol) விருப்புரிமைப் பின்னேடு என்ற பெயரில் கொண்டுவரப்பட்டன.

1வது விருப்புரிமைப் பின்னேடு:- இது மனித உரிமை மீறல் தொடர்பில் தனி நபர்கள் சர்வதேச மனித உரிமைக் குழுவிடம் முறைப்பாடு செய்வதை அங்கீகரிப்பதற்கான பின்னேடு.

2வது விருப்புரிமைப் பின்னேடு:- இது மரண தண்டனையை முற்றாகத் தடை செய்வது தொடர்பான பின்னேடு.

இலங்கை அரசானது 1வது விருப்புரிமைப் பின்னேட்டடை 1997ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ம் திகதி ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் உள்நாட்டில் மனித உரிமை மீறப்பட்டு உரிய நிவாரணம் கிடைக்காத அல்லது திருப்தியுறாத எவரும் சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவிடம் (International Human Right Commison) முறையீடு செய்வதன் மூலம் நிவாரணத்தைப் பெறலாம் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றது. இங்கே சந்ததி அடிப்படையில் பிரிக்கப்பட்ட 3ம் சந்ததி உரிமைகளான சுத்தமான அல்லது ஆரோக்கியமான சூழலைப் பெற்றுக்கொள்வதங்கான உரிமை, அபிவிருத்திக்கான உரிமை என்பன தொடர்பாகவும் IHRC (International Human Right Commison) செய்யமுடியும் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

இலங்கையின் இன்றைய அரசியலமைப்பில் சுற்றாடலைப் பேணும் கடப்பாட்டு அரசு மீதும் பிரஜைகள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாட்டில் இருப்பதால் நீதிமன்றத்திற்கு வலுப்படுத்த முடியாது. ஆனால் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகளான பாரபட்சத்திற்கு எதிரான உரிமை (இலங்கை அரசியலமைப்பு அத்தியாயம் iii) தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கான உரிமை (இலங்கை அரசியலமைப்பு அத்தியாயம் iii 14 (1)ஏ) தான் விரும்பும் தொழிலை செய்வதற்கான உரிமை (இலங்கை அரசியலமைப்பு அத்தியாயம் iii 14 (1) எ) ஆகியவற்றை சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பயன்படுத்தலாம். இந்த வகையில் இலங்கையில் தீர்க்கப்பட்ட முக்கியமான வழக்காக எப்பாவல பொஸ்பேற்று வழக்கு காணப்படுகின்றது. இது பொதுமக்கள் அக்கறை வழக்காகக் காணப்படுகின்றது. இதேபோல் இந்திய உயர்நீதிமன்றம் பல வழக்குகளில் உயிர் வாழ்வதற்கான உரிமை என்பது ஆரோக்கியமான சுற்றாடலுக்கான உரிமை என்பதையும் உள்ளடக்கும் எனத் தீர்ப்புக் கூறியுள்ளது. ஆனால் இலங்கை அரசியலமைப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமை என்பது வெளிப்படையாகக் கூறப்படாவிடினும் அரசியலமைப்பில் அத்தியாயம் iii இல் கூறப்பட்டுள்ளதனடிப்படையில் மனித உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பில் அதனைக் கோரலாம்.

இலங்கையைப் பொறுத்தளவில் இன்று பல்வேறு வழிகளில் சூழலை மாசடையச் செய்யும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இது அரசாங்கத்தாலும் தனியார் துறையாலும் மேற்கொள்ளப்படுகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் அரசியல் நோக்கத்திற்காக சில திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது அவை எதிர்காலத்தில் சூழலைப் பாதிப்பதாக இருக்கும் என்பதை முற்றாக மறந்துவிட்டார்களா? அல்லது தெரிந்தும் தெரியாதவர்கள் போல் இருக்கிறார்களா? என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது.

தமது சொந்த நலனை நோக்காகக் கொண்டு தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் காலப் போக்கில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதுமான திட்டங்களை முன்னெடுக்கத் தலைப்படுவதைக் காணலாம். உதாரணமாக புத்தளத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நுரைச்சோலை அனல்மின் திட்டம், திருகோணமலை சம்பூரில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் திட்டம் என்பன தற்காலத்தில் மின்சாரத் தேவையை நிறைவு செய்வதாகக் காணப்பட்டாலும் நீண்ட காலத்தில் பாரிய சூழல் பாதிப்பை ஏற்படுத்துவதோடு இன்றைய நிலையில் அப்பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகளை (விரும்பிய இடத்தில் வசிப்பதற்கான உரிமை - இலங்கை அரசியலமைப்பு உறுப்புரை 14 (1)ஏ) மீறுவதாகக் காணப்படுவதுடன் காலப்போக்கில் மேலும் பல அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் காணப்படும். இதே போல் சேதுசமுத்திரத்திட்டத்திற்கான இலங்கை அரசின் ஆதரவும் காலப்போக்கில் இலங்கை மக்களிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும். இதேபோல் மேல்கொத்தமலைத்திட்டத்தின் மூலமும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. இவ்வாறான அரசு சார்ந்த செயற்பாடுகளும்

அரசு ஆதரவுடனான தனியாரின் கைத்தொழில் நடவடிக்கைகளும் மனித உரிமை மீறல்களில் முக்கியம் பெறுகின்றன.

எந்த ஒரு நாட்டிலும் அபிவிருத்திக்கான திட்டமிடலின் போது அது பெரியதோ, சிறியதோ அவ்வாறான திட்டம் தனியார்துறையோ அல்லது பொதுத்துறையோ? அடையப்போகும் இலக்கு ஒன்றோ பலவோ? எது எவ்வாறு இருப்பினும் ஒழுங்கு முறைகளினூடாக அமையும் சில படிநிலைகளின் மூலமாகவே இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதாவது கருத்திட்டத்தை இனங்காணல், சாத்திய ஆய்வு, வடிவமைப்பு, விரிவான திட்டத் தயாரிப்பு என்பன ஆரம்ப கட்டத்திலும் மதிப்பாய்வு, அமுலாக்கம், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பன திட்ட அமுலாக்கத்தின் போதும் திட்டப் பிந்திய ஆய்வு திட்டம் முடியும் போதும் மேற்கொள்ளப்படுவதை படிநிலை அமைப்பாகக் கொள்ள வேண்டும். ஆனால் இலங்கை உட்பட வளர்முக நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களின் போது இம்முறை ஒழுங்காகப் பின்பற்றப்படாமைக்கு அரசியல் அக்கறைகள் என்பதையே சுட்டிக் காட்டப்படுகின்றது. இப்படியான நிலைகள் ஒவ்வொன்றிலும் சுற்றாடல் தொடர்பாக சாதக பாதக நிலை கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமாக உள்ளது. முன்னர் கூறப்பட்ட திட்டங்களில் முதலாவது மேற்கொள்ளப்படவேண்டிய படிநிலை சரிவர மேற்கொள்ளப்படாது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இது தொடர்பில் எவரும் கவனம் எடுத்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு எடுத்திருந்தாலும் இடையில் கைவிடப்பட்டதாகவே காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை இப்படியே விட்டால் காலப்போக்கில் மனிதன் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக நேரிடும்.

ஆகவே இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தில் காணப்படும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக நிவாரணம் கோரி பின்வரும் வழிகளில் வழக்குத்தாக்கல் செய்யமுடியும். அதாவது அடிப்படை உரிமை மீறல் வழக்கு, பொதுத்தொல்லைகள் வழக்கு (குற்றவியல்), பொதுச் சட்ட நடவடிக்கை (தீங்கியல்), என்பனவாகும். சூழல் பாதுகாப்பு தொடர்பான வழக்குகள் ஏனைய வழக்குகளிலிருந்து வேறுபடுவதால் நீதிமன்றங்களில் வழக்கிடு தகமை தொடர்பில் நெகிழ்வான போக்கைக் கடைப்பிடிக்கின்றன. உதாரணமாக பொதுமக்கள் அக்கறை வழக்காடல் அதாவது பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அவர்களின் சார்பில் அக்கறையுள்ளவர்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் வழக்கிடலாம். எனவே சூழல் உரிமை மீறப்படுவது தொடர்பில் நீதிமன்றத்தில் (உயர்நீதிமன்றத்தில்) வழக்கிடுவதன் மூலம் எனது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வழிகள் உள்ளது என்பது மட்டும் தெளிவாகக் காணப்படுகின்றது.

உசாவியவை:-

1) Barham J.P : 1995
"Environmental Needs and Social Justice
Bio Diveity and Conservation. Vol 4
2) Sri Lanka Contitution
3) I.H.R.C Report
4) U.N Human Right Law
5) Asian Institute of Technology
Rural Development Planning Bangok, Thiland
6) Karunaratne. S.A
Concepts and Methods of Development Planning
DEPS, Battaramulla.

க. கேசவரூபன்
பழைய மாணவன்,
கிழக்கிலங்கை வெளிவாரி
பட்டப்படிப்புகள் கல்லூரி.

கிராம அபிவிருத்தித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

நெறியாள்கையும் நெறியாளரும்

நாடகம் சமூகத்தில் இருந்து பிறந்து, சமூகத்தினால் வாழ்ந்து சமூகத்தை வாழ வைக்கிறது. இக்கலைவடிவம் மதக்காரணங்களில் இருந்து பிறந்தது. இது மனிதனது தேவையை நிறைவு செய்யும் பொருட்டு தோன்றிய கலை வடிவம். ஆகவே பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக நாடகம் அமைகிறது. இயற்கையை வெற்றி கொள்ள வேண்டிய தேவை காரணமாக கரணம் தோன்றியது. இக்கரணத்தினடியாக நாடகம் தோன்றியது என்ற உண்மை மறுக்க முடியாதது ஆகும்.

சமூகத்தில் வழங்கும் மொழி, பண்பாடுகள், மரபுகள், வழமைகள், பாரம்பரியங்கள், மூட நம்பிக்கைகள் யாவும் நாடகத்தின் மூலங்கள். மக்களிடம் இருந்து பெற்றதை மக்களிடம் வழங்குவதுதான் கலை என்பதாகும். இந்த வகையில்தான் பேணாட்சா சோஷலிச சமுதாயத்தையும் பிறெச்ற் பொதுவுடமைச் சமுதாயத்தையும் உருவாக்க முற்பட்டனர் எனக் கூற முடியுமா?

> தேசம் ஒன்று தனக்கு முன்னிலையிலேயே வெளிப்படையாக
> நின்று சிந்திக்கும் இடம்தான் அரங்கு.
>
> - Martin Esslin

எஸ்லின் கூறும் இக்கூற்று எத்துணை பொருத்தப்பாடுடையது உணவோடு மட்டும் மனிதன் வாழ்வதில்லை. நீர், நித்திரை, அன்பு, ஆதரவு என உடல் என உடல் சார்ந்த தேவைகள் என்பதோடு மனிதனுக்கு கருத்துக்களும் உணர்வுகளும் அவசியம். அரங்கு என்பது மக்கள் கூடி நின்று செறிவான உணர்வுகள், கருத்துக்கள், அணுகூலங்கள் என்பனவற்றைப் பகிர்ந்து கொள்ளும் இடம். கலை என்பது கலைஞரது வாழ்வு பற்றிய புலக்காட்சியின் தரிசனம் என்பர். நாடக ஆசிரியர், நெறியாளர், நடிகர், மற்றும் ஏனைய அரங்க கலைஞர்களின் கூட்டுச் சேர்க்கையாக நாடகம் இருப்பதால் பல சிக்கல்களும் ஏற்பட வாய்ப்புண்டு. அதே நேரம் ஒன்றுபட்ட கலைத் தேடலில் கலைஞர்கள் ஈடுபடும் போது நாடகம் அதியுன்னத வெற்றியடைந்து விடுகிறது. மனித அனுபவமே அனைத்து அரங்க நடவடிக்கைகளுக்கும் காரணம். பார்வையாளர் கூட தமது வரவை மட்டும் அரங்கத்திற்கு கொண்டு வருவதில்லை அனுபவத்தையும் சுமந்து வருகின்றனர். இத்தகைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் மிகப் பிரதான பங்கை எடுத்துக் கொள்பவர் நெறியாளர் ஆவார். கிட்டத்தட்ட முழுப்பொறுப்பும் நெறியாளருடையது என்று கூறுவது பொருத்தமுடையது ஆகும்.

நாடக நெறியாளரை மேடையின் சிருஷ்டி கர்த்தா என்பர். நாடகாசிரியரின் எழுத்துருவை மேடையில் இயக்குபவர் இவரே. ஆகவே மேடைப்படைப்பாளி எனக்கூறமுடியுமா? படைப்பாக்கம் என்பது இரண்டு நிலைகளில் வரும் என்பர். ஒன்று படைப்பாக்க மனநிலை. (Creative mood), மற்றையது படைப்பாக்க அனுபவம் (Creative experience) படைப்பாக்க மனநிலை என்பது எழுத வேண்டும் போல இருக்கிறது. எழுதினேன், இவ்வாறு நடிக்க வேண்டும் என இருந்தது நடித்தேன்; இவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என நினைத்தேன். செய்தேன் என்பனவற்றின் அடிப்படையில் கொள்ளப்படுவது.

படைப்பாக்க அனுபவம் என்பது அவரது ஆளுமையால் பெறப்படுவது. அந்த அனுபவம் பொதுமையாக்கப்பட்ட அனுபவமாக படைக்கப்படல் வேண்டும். (மற்றவரின் அனுபவத்துடன் அடங்குதல் வேண்டும்) ஆகவே நாடக நெறியாளர் இரு நிலைகளிலும் செயற்படலாம். நெறியாளர் தனது படைப்பாக்கத்தின் போது இரண்டு சாதனங்களைப் பயன்படுத்துவார். ஒன்று நடிகர் (Acctor / Acctress) மற்றையது மேடை / களம் (Stage / Space) நாடகம் என்பது நடிகரின் கலை எனக் கூறினாலும் கூட நெறியாளரின் ஆளுகைக்குட்பட்ட நடிகன் தன் படைப்பாற்றலை மேற்கொள்ள முடியும். அவ்வாறாயின் நடிகரின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறதா?

நடிகர் கலைஞராக இருந்தாலும் நெறியாளர் கையில் அவர் ஒரு சாதனம் (Tool) தான். நெறியாளர் தனது படைப்பாக்கத்திற்காக நடிகரை பயன்டுத்துகிறார். நடிகரின் ஆற்றலை, கற்பனையை, ஆர்வத்தை படைப்பாக்க உந்து சக்தியை நெறியாளர் கட்டுப்படுத்துவதில்லை. அவற்றை நல்ல முறையில் தனது படைப்பிற்கேற்ப வழிகாட்டி (Guide) சிறந்த வெளிப்படுத்தலைக் கொண்டு வருகிறார். இவ்வாறு தான் நடிகர் பயன்படுத்துகிறார். நடிகர் பார்வையாளர் தொடர்பு கொள்ளும் முறைமை இவ்வாறு அமையும். (படச்சட்ட அரங்கில் நிற்கும் நடிகரை அடிப்படையாகக் கொண்டு)



A - முன்பக்க நிலை (Front Position)
B - கால்பங்கு திரும்பிய நிலை (Quarter Turn Position)
C - அரைப்பங்கு திரும்பிய நிலை (Half turn Position)
D - முக்கால்பங்கு திரும்பிய நிலை (Three Quater Turn)
E - பின்பக்கம் திரும்பிய நிலை (Full Back)

நடிகரின் உடல் நிலை பார்வையாளருடன் நெருங்கியே தொடர்புள்ள நிலை ABCED என ஒழுங்கு படுத்தப்படும். C,E இரண்டு நிலைகளும் சமமான பலமுள்ள நிலைகள் D ஏன் ஐந்தாவதாக குறிப்பிடப்படுகிறது? நடிகர் அரங்கைவிட்டு வெளியேறத் தயாராகிறார் என்பதாலா?

இவ்வாறான நிலையின் அடுத்தகட்டமாக நெறியாளர் கவனிக்க வேண்டிய விடயம் அசைவுகள். ஆகவே இனி அந்த அசைவுகளின் பின்னணியில் மேடையை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைக் கவனிக்கலாம் (படச்சட்ட அரங்கை அடிப்படையாகக் கொண்டு) படச்சட்ட அரங்கைப் பிரிக்கும் போது 6 அல்லது 9 அல்லது 12 பிரிவுகளாகப் பிரிக்கும் முறை உண்டு. பெரும்பாலும் 9 பிரிவுகளையே கற்பித்தலில் பயன்படுத்துவர்.

மே.வ 8 UR	மே.ம 7 UC	மே.இ 9 UL
ம.வ 5 CR	ம.ம 4 CC	ம.இ 6 CL
கீ.வ 2 DR	கீ.ம 1 DC	கீ.இ 3 DL

UR - Up Right	மே. வ	-	மேல் வலது
UC - Up Centre	மே. ம	-	மேல் மத்தி
UL - Up Left	மே. இ	-	மேல் இடது
CR - Centre Right	ம. வ	-	மத்தி வலது
CC - Centre Centre	ம. ம	-	மத்தி மத்தி
CL - Centre Left	ம. இ	-	மத்தி இடது
DR - Down Right	கீ. வ	-	கீழ் வலது
DC - Down Centre	கீ. ம	-	கீழ் மத்தி
DL - Down Left	கீ. இ	-	கீழ் இடது

படத்தில் குறிப்பிட்டபடி படச்சட்ட அரங்கின் பரப்புகள் பின்வரும் ஒழுங்கில் முக்கிய இடம் பெறுகின்றன.

1.	DC	2.	DR	3.	DL	4.	CC	5.	CR
6.	CL	7.	UC	8.	UR	9.	UL		

ஏன் இடது பக்கத்தை விட வலது பக்கம் மிக முக்கிய பரப்பாக அமைகிறது? எமது வாசிப்பு முறைமை வலதில் தொடங்கி இடதாக அமைகின்ற காரணத்தாலா? பண்பாட்டில் வலதுக்கு முக்கிய இடம் என்பதாலா? ஆனால் அணிவகுப்பு இடம்பெறும்போது இடம் எனத்தானே தொடங்குகிறது. அப்படியாயின் ஏன் இடது முக்கியப்படவில்லை? எமது பார்வைக்கோணம் எப்பொழுதும் வலதில் இருந்தே ஆரம்பிக்கிறது. ஆகவே வலது முக்கியமாயிற்று. இதன் காரணமாக மத்தி, வலது, இடது எனும் அடிப்படையில் மேடையின் பரப்புகள் (Areas) முக்கியமாயின.

மேற்கூறப்பட்ட ஒழுங்கு நிலையில் பலமான பரப்புகளை நெறியாளர் பலவீனமாக்கவும் பலவீனமான பகுதிகளை அவர் பலமாக்கவும் முடியும். அதுதான் அவருடைய நெறியாள்கைத் திறன் ஆகும். மாறுபாடுகளை (மட்டங்கள் - Levels, வேடஉடை - Costume, ஒப்பனை - Makeup, ஒளி - Light, நிலைகள் - Poses, பொருட்கள் - Props, அசைவுகள் Movements, சத்தங்கள் - Sounds) பயன்படுத்தியும் குவிவு (focus) முறைமையை பயன்படுத்தியும் அதனை சாத்தியமாக்கலாம்.

பெரும்பாலும் (எப்போதுமல்ல) மேல் வலது, மேல்மத்தி, மேல் இடது பகுதிகள் காட்சிப் பொருட்களால் நிரப்பப்படுவதுண்டு. ஆகவே முன்பகுதிகளில் தான் செயல்கள் பெரும்பாலும் இடம்பெறும். இத்தகைய செயல்களுக்கு நடிகரைப் பயன்படுத்துபவர் நெறியாளர் மேடையில் இணைப்பாகத்தை (Composition) காட்சிப்படுத்தலை (Pictunizing), அசைவினை (Movements) லயத்தை (Rhythm) கூட்டும் நாடகவாக்கத்தை (Pantomimic dramatization) உருவாக்கி கதையைப் பரிமாறக் காலாயிருப்பவர். நெறியாளரே. நடிகரினது அசைவுகள் தீர்மானிக்கப்படுவது யாரால்? கூத்தில் அண்ணாவியார் தீர்மானிப்பார். எப்போது எட்டுப் போடுவது? எப்போது பெருவட்டம் போடுவது? குறிப்பிட்ட தாளக்கட்டுக்கு ஏற்ப எவ்வாறு ஆடுவது? போன்ற அசைவுக்கான ஒழுங்குகளை அண்ணாவியாரே தீர்மானிக்கின்றார். நடிகரையும் மேடையையும் எவ்வாறு நெறியாளர் பயன்படுத்துகிறார் என்பதை இதுவரை பார்த்தோம். உண்மையில் இது நெறியாளரின் அறிவு, திறன் எனக் கூறமுடியுமா? இத்தகைய அறிவு, திறனூடாக வியாக்கியானம் செய்கின்ற மனப்பாங்கினைப் பெறுகின்றார். படைப்பாக்க மனநிலை, படைப்பாக்க அனுபவத்தினூடாக வியாக்கியானம் செய்கின்ற நிலை தோன்றுகின்றது. அரங்கிற்கான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுகின்றவராகவும் அனைத்தையும் தெரிவு செய்கின்றவராகவும் காணப்படுகிறார்.

எழுத்துரு
நடிகர்
மேடை (களம்)
காட்சி
இசை - சத்தம்
ஒளி
வேட(ஷ)உடை
ஒப்பனை
பார்வையாளர்

முழுமையான புரிந்து கொள்ளல். அவதானம், கருத்தூன்றல் ஊடாக வியாக்கியானம் இடம்பெறும். இத்தகைய வியாக்கியானம் நாடகாசிரியர் சொல்ல வந்த கருத்தை அழுத்திக் காட்ட வேண்டுமே தவிர வேறுவிதமாக சித்திரிக்கக்கூடாது. ஆரம்ப காலத்தில் நாடகாசிரியரும் நெறியாளரும் ஒருவராக இருந்த காரணத்தால் சிக்கல்கள் தோன்ற வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் இருவரும் வேறுவேறான நிலையில் வருகின்ற போது அவதானம் தேவைப்படுகின்றது. நாடகாசிரியரின் அனுமதியின் பேரில் சில மாற்றங்களைச் செய்யலாம் அல்லது பிரதியை விலைக்கு வாங்கியிருந்தால் அத்தகைய சுதந்திரம் உண்டு. நெறியாளர் தனித்துவம் மிக்கவராக விளங்கினாலும் கூட நாடக அரங்கு கூட்டு மொத்தத் தயாரிப்பு என்ற நிலையில் அந்த கூட்டு வாழ்க்கையை மிகவும் சுவாரசியமாகவும், மகிழ்வாகவும் அனுபவிக்கும் ஆளுமை அவருக்கு இருக்கும். ஏனெனில் அது அவரின் தலைமைத்துவப் பண்பாகவும் விளங்குகின்றது.

அரங்க வரலாற்றில் ஆரம்பத்தில் நாடகாசிரியரே நெறியாளராக இருந்தார். 19ம் நூற்றாண்டின் பின்னரே லோட் சேக்ஸ் மனிங்கள் கோமகன் நாடகத்தில் நெறியாள்கை என்ற விடயத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து ஸ்ரனிஸ்லவஸ்கி மிகவும் முக்கியமானவராக இருந்தார். இவரே நடிப்பில் முறைமைக் கோட்பாட்டை முன்வைத்தார். தொடர்ந்து பேட்டோல்ற் பிறெச்ற் நெறியாள்கையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவர் ஜேர்மனியைச் சேர்ந்தவர், கவிஞர், நாடகாசிரியர், நெறியாளர், நாடகக் கோட்பாட்டாளர், பொதுவுடமை வாதம் பேசியவர். போதனை அரங்கை முன்வைத்தவர். தொடர்ந்து பல நாடக அறிஞர்கள் அரங்க வரலாற்றில் இடம்பெற்றாலும் துருத்திக் கொண்டு நிற்பவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஒகஸ்ராபோல் என்பவரே இவர் விவாத அரங்கை முன்வைத்தவர்.

எமது பண்பாட்டில் கூத்தின் நெறியாளர் அண்ணாவியாரே. இசை நாடகத்திலும் அவ்வாறே.

மேற்படி நெறியாளர் அரங்கில் பல்வேறு பணிகளைச் செய்கிறார். நாடக எழுத்துருவை வாசித்து, வியாக்கியானம் செய்து, நடிகர்களைத் தெரிவு செய்து, தெரிவு செய்த நடிகர்களுக்குப் பாத்திரங்களை வழங்கி, ஒத்திகைகளை மேற்கொண்டு நாடக அளிக்கைவரை பல செயற்பாடுகளையும் இணைத்து நாடகம் ஒன்றினை முழுமையாக பார்வையாளருக்கு வழங்குவதே அவரது பணியாகும்.

திரு. கயிலைநாதன் திலகநாதன்
B.A. (Hons) Dip . in Edu
முன்னாள் விரிவுரையாளர்
நாடகமும் அரங்கியலும்
கிழக்கிலங்கை வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி, மட்டக்களப்பு.

விரிவுரையாளர்,
தேசிய கல்வியியல் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

போ
சிப்பதல்லவா
உன்வேலை

◆ எத்தனை துறைகள்
◆ இருந்தாலும்
◆ நீ ஈன்றெடுத்த
◆ பிள்ளைகள்
◆ அத்தனை துறைகளிலும்
சரித்திரம் படைத்திடும்
சாதனையாளர்களாய்.....

இமயம் போல்
உயர்ந்து நிற்கும்
எமது கல்லூரியே.....
இமயத்தை விடவும்
உயரந்து விட்டாய்
சாதனையில் நீ.....!
உனை கவியெழுத
ஆசை கொண்டேன்
எனை எழுதப் பழக்கியவளும்
நீ தானே.....
புகழ்ந்து பேசிட
எத்தனித்தேன்
எனைப் பேசப்பழக்கியவளும்
நீ தானே.....

வாழ்த்துகின்றேன்!
வணங்குகின்றேன்!
எத்தனையோ ஜீவன்களுக்கு
கல்விச் சுவாசத்தை
கொடுத்து உயிர்ப்பித்த உன்னை!

பெருமைக்குரியவளே
இப் பிரதேசத்தவர்களின்
வைர மானவளே
பத்து ஆண்டுகள்
கடந்து வந்து விட்டாய்
பல்லாண்டுகள் பாரில் மிளிர்வாய்
வாழ்கவென வாழ்த்துகின்றேன்
சதாப்த வரி கொண்டு.....!

திரு. கெங்கேஸ்வரன் உதயகுமார்
பழைய மாணவன்
கிழக்கிலங்கை வெளிவாரிப்பட்டப்
படிப்புகள் கல்லூரி
மட்டக்களப்பு.
ஆசிரியர்
நு/ ராகலை த.ம.வி.
கல்கிறனோயா.

காலத்தின்கவலை இல்லாமல்!

◗ எதிர்காலத்தின்
◗ ஏக்கங்களுக்காக,
◗ எம்மை வருத்துதல் எதற்காக!
◗
◗ யாரையும் கோபப்படுத்தாத
இயந்திரமாய் எம்மால்
வாழ முடியாதா?

கல்விக் கடல்,
ஏட்டிக்குப் போட்டியாய்
உலக ஓட்டத்தில்.....
இணைத்து கொள்ள முடியாமல்
ஒரு தத்தளிப்பு.

ஆசான்களின் கௌரவங்கள்
கலைத்தெறியப்பட்டு
மண், மக்கள், பண்பாடென்ற
கவலையின்றி மாணாக்கரின்
கேவலங்கள்

உபாதைகளுக்கான
வாழ்க்கையை
உணரத் தலைப்படுதலேயின்றி
உணர்ச்சிகளே முக்கியமாகிறது.

காலங்கள் காட்டும் வழியில்
ஞானிகளால் செல்லமுடிகிறதா?
அதுமட்டும் எப்படி!

நாம் என்ன.....!
என்கிற கேள்வியை விடுத்து
கோலங்களின் கேவலங்களை
களைந்து
நாட்களை, நாழிகையைக்
கணக்கெடுத்துக் கழிக்க
எத்தனை யுகம் செல்லும்.

சோகத்தை மாத்திரம்
கட்டி வைத்திருக்கும்
சமூகம்.....?
கையேந்தியிருக்கிறது .....!

என்னதான் செய்யலாம்
யாத்து வைத்த மகிழ்ச்சியைக்
கொட்டிக்கொடுக்கலாமா?

இலட்சுமணன் தேவஅதிரன்
பழைய மாணவன்
கிழக்கிலங்கை வெளிவாரி பட்டப்படிப்புகள்
கல்லூரி, மட்டக்களப்பு.

முதல் தொகுதி மாணவர் சிலருடன் இயக்குனரும்
விரிவுரையாளர்கள் திரு. கே. திலகநாதன், திரு. ஸ்ரான்லி பிரபாகரன், திரு சசிதரன் ஆகியோரும்

ஒன்றுகூடல் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக அதிதிகள், இயக்குநர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.

இயக்குநரும் விரிவுரையாளர்களும்:

இ.வ: திரு. P.பத்மநாதன் (அரசறிவியல்), திரு. ஆ.கி. பிரான்சிஸ் (இயக்குனர்)
திரு. K.திலகநாதன், (நாடகமும் அரங்கியலும்), திரு. S.துளசிநாதன் (தமிழ்),
திரு. E.ஜெயராஜா (மூகாமைத்துவம்), திரு. T. தேவராஜ் (பொருளியல்)
திரு. S. சந்திரகுமார் (கணிதம்)

ஒன்றுகூடல் நிகழ்வில் இயக்குநர் ஆ.கி. பிரான்சிஸ் அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்.

கல்விச் சுற்றுலா 1999

கல்விச் சுற்றுலா 2000

எமது கல்லூரி விழாவில் (2003) கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள் உதவிப் பதிவாளர் திருமதி. S. பரராஜசிங்கம் அவர்கள் உரையாற்றுகிறார்

எமது கல்லூரியின் விழாவில் (2003) கலாநிதி திருமதி அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள் (முன்னாள் கலைப்பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்) உரையாற்றுகிறார்.

இயக்குநர், விரிவுரையாளர்களுடன் மூன்றாம் தொகுதி மாணவர்கள்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதன் முறையாக வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 29-12-2007 அன்று மட்டக்களப்பு, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்றது.

இதில் 107 கலைப்பட்டதாரிகளும் 43 வணிக நிர்வாகப் பட்டதாரிகளும், 02 வர்த்தகப் பட்டதாரிகளும் 07 விஞ்ஞானப் பட்டதாரிகளும் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டார்கள்.

கலைப்பட்டதாரிகளுள் எண்மர் (08) 2ம் தரத்தில் (கீழ்ப்பிரிவு) சித்திடைந்தார்கள் என்பதும் இவர்களுள் எழுவர் எமது கல்லூரியில் கற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின்வரும் படங்களில் எமது கல்லூரி மாணவர்கள் இருவர் நிகழ்வில் பட்டம் பெறுவதைக் காணலாம்.

தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
கூடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

இதயபூர்வ நன்றிகள்

- ஆசிச் செய்திகளை வழங்கிய வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள்.
- வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெருந்தகையோர்.
- ஐரோப்பாவில் இருந்து கொண்டு அடிக்கடி ஆலோசனைகளைக் கூறி ஊக்கப்படுத்தி உதவிய திரு. ஆ.கி. பிரான்சிஸ்.
- இச்சஞ்சிகை வெளியீடு தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி வழிப்படுத்தி நெறிப்படுத்திய திருமதி றூபி பிரான்சிஸ்.
- ஆக்கங்களைத் தந்துதவிய இக்கல்லூரியின் விரிவுரையாளர்கள், மாணவர்கள், முன்னாள் விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள்.
- சஞ்சிகையின் முன் அட்டைப்படத்தை அழகுற வரைந்தளித்த திரு. S. இரவீந்திரன்.
- ஆக்கங்களைக் கணனி மயப்படுத்துவதில் உதவிய திரு. M. வரதராஜன்.
- நூலாக்கக் குழுவுடன் இணைந்து செயற்பட்ட திரு. M. யோகேந்திர ராஜா, ஜனாப் C. தௌபீக், திரு M.வசந்தராஜ், திரு.L. தேவஅச்சுதன்
- கட்டுரைகளைத் திருத்தி செம்மை பெற வைத்த கலாநிதி செ.யோகராஜா, திரு.R. கிருபைராஜா, திருமதி. றூபி பிரான்சிஸ்
- விளம்பரம் தந்துதவிய அக்கரைப்பற்று எம்.சுரேஸ் குஷன் வேர்க்ஸ் நிறுவனத்தார்.
- மலரை மலரவைத்த ஆதவன் அச்சகத்தார்

ஆகியோருக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-- மலர்க்குழு.

M. SURESSH CUSHION WORKS

SAGAMA ROAD,
AKKARAIPATTU - 08.

எம். சுரேஸ் குஷன் வேர்க்ஸ்

எம்மிடம் அனைத்து வாகனங்களுக்கும்,
வீட்டுத் தளபாடங்களும் குறைந்த விலையில்
குறித்த நேரத்தில் நேர்த்தியாகவும் சொகுசாகவும்
குஷன் செய்து தரப்படும்.

Contect : 0779583605, 0674923047 E-mail: m_suressh@yahoo.com

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. 0652222076